கல்கி

தீபாவளி
சிறப்பிதழ்

KALKI
9-11-80
90 காசு



வாழ்வின் இணையிலா இனிமைகள்
அவை என்றென்றும் புதுமைகள்



நீங்கள் எப்போதும்
விரும்பும் சுகந்த மணம்

HTM-PIL-2133



புதிய டெஸ்ட் ஹீரோ!

✖ புதல்வி சுபாவுடன்

பாட்டி குமுதவல்லி ஜெபம் செய்த படியே, ''எடுத்தானா? எடுத்தானா?'' என்று கேட்டுக் கொண்டிருந்தாள். டி. ஈ. சீனிவாசன் பாட்டிக்கு ஏமாற்றமளிக்கவில்லை. இரானி கோப்பையிலே செஞ்சுரி எடுத்தார். ''அண்ணாவுக்குப் பாட்டியின் ஆசி கிடைச்சது; கூடவே ஆஸ்திரேலியாவுக்கு அண்ணாவை எடுத்த செய்தியும் கிடைச்சது!'' என்று பூரிப்புடன் சொன்னாள் சீனிவாசனின் தங்கை குமாரி நிரஜா. டாக்டர் எஸ். ராமநாதனிடம் வீணை பயிலும் குமாரி நிரஜா பி.ஏ. பட்டதாரி.

டி. ஈ. சீனிவாசனின் தந்தை வரதன் 'பவளக்கொடி.', 'கன்னிகா' போன்ற படங்களில் திரைப்பட ஹீரோ. அவர் மகன் சீனிவாசனோ கிரிக்கெட் ஹீரோ! ஆஸ்திரேலிய செலக்ஷன் நியூஸ் கிடைத்தவுடனே திரு வரதன் திருப்பதி வேங்கடாசலபதிக்கு அமந்தரண உற்சவம் (மந்திர உச்சாடணமின்றி இறைவனை வணங்குதல்.) செய்வதாக வேண்டிக் கொண்டார்! திரு வரதனுக்குப் பாராட்டி வந்த முதல் டெலிபோன் கால் கிரிக்கெட் நன்கு ஆடத் தெரிந்த ஜெமினி கணேசனிடமிருந்து!

மாலதி எஸ். ஐ. ஈ. டி. கல்லூரி மாணவி. கர்நாடக கோஷ்டிக்கு எதிராக ரஞ்சி கோப்பைப் பந்தயத்தில் டி. ஈ. சீனிவாசன் செஞ்சுரி எடுத்தபோது தன் தோழிகளுடன் பாராட்டுக் கடிதம் எழுதி மகிழ்ந்தார். நாளடைவில் அது காதலாக மலர்ந்து பெற்றோர் அனுமதியுடன் திருமணத்தில் முடிந்தது.

இரு ஆண்டுகளுக்கு முன் டி. ஈ. சீனிவாசனுக்கும் மாலதிக்கும் திருமணம் விமரிசையாக நடந்தேறியது. ''என் பெண் சுபா பிறந்த வேளை ஆடிப் பூரம் வெள்ளியன்று. சுக்ரதசையாம்! சுபா என் கணவருக்கு அதிர்ஷ்டத்தைக் கொணர்ந்து சேர்ப்பாள் என்றார்கள். பலித்துவிட்டது!'' என்று சொல்லி, டி. ஈ. சீனிவாசனும் குழந்தை சுபாவும் உள்ள புகைப்படத்தைப் பெருமகிழ்வுடன் எடுத்துக் காட்டுகிறார் மாலதி. இவர் பொருளாதாரப் பட்டதாரி.

டி. ஈ. சீனிவாசன் விவேகானந்தா கல்லூரி பி. காம் பட்டதாரி. இன்று இந்தியா பிஸ்டனில் விற்பனை அதிகாரி.

இவர் இதுவரை முதல் தர பந்தயங்களில் போட்ட செஞ்சுரிகள்:.. ஏழு. —**குண்டுமணி**

✖ மனைவி மாலதியுடன்



Kalki Shopping Page





தீபமங்கள ஜோதி...

திருமுருக கிருபானந்த வாரியார்

உள்ளம் உயர்ந்தவன் தெய்வமாகிறன்!

வெள்ளம் உயர்ந்தால் மலர் உயரும்; அது போல் உள்ளம் உயர்ந்தவன் தெய்வம் ஆகிறான்.

மக்களாகப் பிறந்த எல்லோரும் உயர்ந்த நிலை பெற வேண்டும் என்றுதான் எண்ணுகிறார்கள்.

மனிதனுடைய உயர்வுக்குச் செல்வமும், கல்வியும் பதவியும் குலமும் காரணங்கள் ஆகமாட்டா.

''பொருட் செல்வம் பூரியார் கண்ணும் உள'' என்கிறார் திருவள்ளுவர்.

''கற்றாரை யான் வேண்டேன்'' என்கிறார் மணிவாசகர்.

''கல்லாதவரே நல்லவர்'' என்கின்றார் தாயுமானார்.

எனவே மனிதர்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் உள்ளத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும். உள்ளம் உயர்வது என்றால் அது என்ன? எப்படி? என்று தோன்றும்.

ஒரு பொருளை விளக்கமாகச் சொல்ல வேண்டும். சிலர் விளக்கமின்றிக் கூறுவார்கள். இதற்கு ஒரு உதாரணம் கூறுகிறேன்.

''அண்ணா நீங்கள் எந்த ஊர்?''

''மதுரை.''

''மதுரையில் தங்கள் வீடு எங்கே?''

மதுரையில் மீனாட்சி கோவிலுக்கு வடக்கே அல்லது கிழக்கே என்று கூறினால் கேட்பவனுக்கு விளங்கும்.

''மதுரையில் என் வீடு வெற்றிலை பாக்குக் கடை வீராசாமி வீட்டுக்கு மூன்றாவது வீடு'' என்றான்.

''ஓ! வீராசாமி வீடு எங்குளது?''

''என் வீட்டுக்கு மூன்றாவது வீடு.'' என்றான். இதுதான் விளக்கமில்லாத சொல்.

இனி, உள்ளம் உயர்வது என்றால் எவ்வாறு? தன்னை நிந்திக்கும் பகைவனுக்கும் வாழ்க என்று பகைவனுக்கும் நலம் புரிவது. பகைவனுடைய பாவ மன்னிப்புக்கு இறைவனிடம் முறையிடுதல். இத்தகைய உள்ளந்தான் உயர்ந்த உள்ளம்.

''இறைவனே! அறியாமையால் என்னை அகாரணமாக நிந்திக்கிறான். என்னை நிந்தித்த வினை வசத்தால் அவனுக்கு நரகம் வருமே? தேவரீர் என்னை நிந்தித்தவனுடைய பாவத்தை மன்னித்து என்னைப் பகைக்கின்றவனுக்குக் கருணை செய்'' என்று ஆன்றோர்கள் வேண்டுவார்கள்.

தம்மை இகழ்ந்தாரை தாம்பொறுப்ப தன்றியே
எம்மை இகழ்ந்த வினைப் பயத்தால்—உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் என்று
பரிவதூஉம் சான்றோர் கடன்

—நாலடியார்

ஒரு மனிதனுக்கு மனைவிதான் சிறந்த துணை. இதனால் திருவள்ளுவர் ''வாழ்க்கைத் துணைநலம்'' என்கிறார். மனைவி மறுமைக்குந்



பட்வாரி இவர்கள் போல் இருந்தால்..

பிரபுதாஸ் பட்வாரி பதவி விலக்கப்பட்ட பிறகு கீழ்க்கண்டவர்களின் குணத்தைக் கொண்டிருந்தால் இப்படித்தானே சொல்லி யிருப்பார்!



எம். ஜி. ஆர். போல்: ''இமய மலையை அது இமய மலை இல்லை என்று சொல்லி விட்டால் அது இமயமலையாக இல்லாமல் போய்விடுமா? அது போலத்தான் என்னைக் கவர்னர் இல்லை என்று சொன்னாலும் மக்கள் என்னைக் கவர்னர் ஆகத்தான் எப்போதும் நினைப்பார்கள். மக்கள் என் பக்கம். இதை மத்திய அரசு புரிந்து கொள்ள வேண்டும்.''



கருணாநிதி போல்: ''உடன் பிறப்பே! செய்தி கேட்டாயா? நான் கவர்னர் இல்லையாம். சூழ்ச்சி செய்து விட்டார்கள். இதைக் கேட்டுக் கோபம் கொள்ளாதே... ரகளை செய்யாதே... பஸ்கள் மீது கல்லை வீசாதே! கதவடைப்பு செய்யச் சொல்லாதே! அமைதியாக இரு. என்னைவிட சாதிக் அலி என்ன சாதிக்கப் போகிறார் என்பதைக் காலம் அவர்களுக்குக் காட்டிப் பாடம் புகட்டி விடும்.''



''சோ'' போல்: ''தமிழ் மக்களுக்கு சந்தோஷமான செய்தி. நான் இனி கவர்னர் கிடையாது. அம்மையார் இது போல் பலருக்குப் பல 'பரிசுகள்' தந்திருப்பது உலகு அறிந்த விஷயம். எனக்கு இப்போது 'தீபாவளி போனஸ்' ஆக பதவி நீக்கம் தந்து விட்டார். நிம்மதியாகச் சொந்த ஊருக்குப் போய்த் 'தீபாவளி' கொண்டாடப் போகிறேன்...ஹையா... ஜாலி.... ஜாலி...''

—விஜயா கண்ணன்

துணையாக வருகின்றான் என்று மகாபாரதத்தில் யட்சப் பிரச்னையில் தருமர் கூறுகின்றார்.

''பொற்றொடியோடு எவையும் போம்'' என்பது ஔவையார் திருவாக்கு.

இத்தகைய உத்தம பத்தினியைப் பத்து மாதம் சிறை வைத்த பரம பாதகனாகிய இராவணன் முதல் நாள் போரில் வில் இழந்து, வீரன் என்ற சொல்லிழந்து குடையிழந்து, மிடுக்கான நடை இழந்து, சதுரங்கப் படை இழந்து, மார்பிலே இருந்த தொடை இழந்து, தேர் இழந்து, சீர் இழந்து, ஆலமரத்தில் விழுதுகள் தொங்குவது போல் இருபது கரங்களையும் தொங்கவிட்டு, கால் விரலால் நிலத்தைக் கீறித் தலை குனிந்து போர்க்களத்தில் பரிபவப்பட்டு நிற்கின்றான்.

அவனுடைய அவல நிலையைக் கண்டு உள்ளம் உயர்ந்த வள்ளல் இராமபிரான் இரக்கம் காட்டினார்.

அங்கதனை ஏவி இவன் தலையில் குட்டுங்கள் கயிற்றால் கட்டுங்கள்; இவனை வெட்டுங்கள்; என்று வெகுண்டு கூறினாரில்லை.

''இளைத்த உன்னை நான் கொல்ல விரும்பவில்லை. தேய்ந்த சந்திரனை ராகு கேதுக்கள் பற்றுவதில்லை. பாம்புகட்கு இருக்கின்ற அறிவுகூட எனக்கு இல்லையா?

அறத்தினால்தான்ஒருவனுக்கு வெற்றி உண்டாகும். மற்றதால் வராது. கண்கூடாகக் கண்டனை.

உன்னை மன்னிக்கின்றேன்.

இன்று போய் நாளைவா!''


என்று பரம கருணாமூர்த்தியாகிய இராமச்சந்திரமூர்த்தி கூறினாரே இந்த அருளுரையை உலகம் மறக்குமா?

பகைவனுக்குக் கருணை காட்டிய இராமருடைய உள்ளம் உயர்ந்த உள்ளம். இதனால் இராமரை உலகமெல்லாம் போற்றுகின்றன.

நீற்றறையில் இட்டும், நஞ்சு தந்தும், மத யானையை ஏவிக் கொல்ல வைத்தும், கல்லில் கட்டிக் கடலில் பாய்ச்சியும் தீமைகள் செய்த மகேந்திர பல்லவன், தான் செய்த குற்றத்தைக் குறித்து வருந்தி, உள்ளம் திருந்தி, திருநாவுக்கரசைப் பொருந்தியபோது, தனக்குச் செய்த குற்றங்களை யெல்லாம் மன்னித்து மறந்து அவனை ஆட்கொண்டார்அப்பரடிகள், ஆதலால் அப்பரடிகளின் உள்ளம் உயர்ந்த உள்ளம்.

தன்னைக் கொலைக் குற்றம் சாட்டி சிலுவையில் அறையுமாறு செய்தவர்களின் பாவ மன்னிப்புக்காக ''பரமண்டலத்தில் உள்ள ஞானப் பிதாவே, என்னைக் கொல்லுமாறு செய்த அன்பர்களின் பாவத்தைத் தேவரீர் மன்னித்துக் கருணை புரிவீராக'' என்று வேண்டிக் கொண்ட ஏசு நாதரின் உள்ளம் உயர்ந்த உள்ளம்.

எனவே நாம் நம் உள்ளத்தை உயர்த்திக் கொண்டு தெய்வமாம் பெற்றியைப் பெறுதல் வேண்டும்.


தீபாவளி



தலை தீபாவளி



ஐ. வி. சசி - சீமா

ஒரு சராசரி மனிதன் கூட குடும்பத்தாருடன் ஒன்றுசேர்ந்து புதுத் துணியும் பட்டாசும் வாங்கித் தீபாவளியைக் கொண்டாடிவிட முடியும். அவர்களுடன் சேர்ந்து இனிப்புச் சாப்பிடும்போது ஏற்படும் மகிழ்ச்சியே தனிதான். ஆனால் இந்த எளிய மகிழ்ச்சி கூட சீமாவுக்குக் கிடையாது என்றால் வியப்பாக இல்லை?

''திருமணம் செய்து கொண்ட பிறகு நாங்கள் பதினைந்து நாட்கள் அமெரிக்கா சென்றிருந்தோம். அதுதான் நாங்கள் ஒன்றாக இருந்த நாட்கள். சென்னை திரும்பியதும் விமான நிலையத்திலேயே இருவரும் வெவ்வேறு திசையில் பிரிந்து போய்விட்டோம், அவரவர் பணியைக் கவனிக்க! இரவு நான் சீக்கிரம் வந்தால் அவர் நேரம் கழித்து வருவார். அவர் வருவதற்குள் நான் தூங்கிவிடுவேன். இரவு சீக்கிரம்வந்த நான் விடியற்காலையிலேயே சீக்கிரம் எழுந்து ஸ்டுடியோவுக்குப் போய்விடுவேன். இப்படி ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்வது கூட கஷ்டமான நிலையில் எப்படித் தலை தீபாவளியைக் கொண்டாட முடியும்? தீபாவளியன்று எங்களில் ஒருவர் திருவனந்தபுரத்திலும் மற்றொருவர் படப் பிடிப்புக்காக ஊட்டையாம் பட்டியிலும் இருப்போம். மனமிருந்தாலும் தலை தீபாவளியைச் சேர்ந்து கொண்டாட மார்க்கமில்லையே? யூனிட்டில் உள்ளவர்களுக்கு ஞாபகமாக இனிப்பு வாங்கித் தருவேன்'' என்கிறார் சீமா.



திருமுருகன் - வசந்தி


● ''தீபாவளியைப் பணக்காரன் படாடோபமாகக் கொண்டாடுகிறான் என்றால் பாமரன் பட்ஜெட்டுக்கு (அப்படி ஒன்று இருந்தால்) ஏற்பக் கொண்டாடுகிறான். திருமணத்துக்கு முன்பு பண வரவைப் பற்றிக் கவலையே இல்லாமல் செலவுகளை மாத்திரம் அதிகம் செய்தோம். 'கால் கட்டுப் போட்டால் குடும்பப் பாங்கு வந்துவிடும்' என்று தெரியாமலா பெரியவர்கள் சொன்னார்கள்? முன்பு பஸ்ஸில் போக வேண்டிய இடத்துக்கு டாக்ஸியில் சென்றோம். இன்று டாக்ஸியில் போக வேண்டிய இடத்துக்கு ஆட்டோவைத் தேடுகிறோம். இந்த வருடத் தீபாவளியைப் பொறுத்தவரை நான் இவளுடன் அவ்வளவாக அலைய முடியாது. காரணம் புது வருடத்துக்கு முன்பே எங்களது வீட்டில் புது ரிலீஸ் எதிர்பார்க்கப் படுகிறது!'' என்பவர் திருமுருகன்.

பாக்கியராஜ் – ப்ரவீணு

''தீபாவளியைக் கொண்டாட வசதியில்லையே என்று நினைத்த நாட்களும் உண்டு. அதே தீபாவளியைக் கொண்டாட இன்று நேர மில்லையே என்று ஏங்கும் நாளிது! 5ம்தேதி இரவு முழுக்க நடித்து விட்டு 7ம் தேதி காலை சீக்கிரமாகவே கால்ஷீட் கொடுங்கள் என்று கேட்கும் படத் தயாரிப்பாளர்கள் தான் அதிகம். இந்த நிலையில் இரவு முழுக்க நடித்துவிட்டு எப்படிக் காலையில் தலை தீபாவளி கொண்டாடுவது?'' ஏதோ ஒப்பேற்றலாம்.

''தீபாவளியன்று எல்லோரையும் போல் பட்டாசு கொளுத்த வேண்டும். புதுத் துணி உடுத்த வேண்டும் என்று ஆசைதான். இவை எல்லாவற்றையும் விட வேறொரு புது ஆசையும் உண்டு. அன்றாவது நாங்கள் இருவரும் தனியாக சினிமாவுக்குப் போகவேண்டும் என்பது தான். காரணம் நாங்கள் இருவரும் தனியாக சினிமாவுக்குப் போவதே கிடையாது!'' என்கிறார் பாக்கியராஜ்.






விஜயன் - மஞ்சுளா

''பண்டிகைகள் வருவதே நாளும் அயராது உழைக்கும் மக்களுக்கு உற்சாகம் தருவதற்காகத் தான். அந்த நாளிலாவது பிரச்னைகளையெல்லாம் மறந்து மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். ஆனால் நாமெல்லாம் மகிழ்ச்சிக்குப் பதிலாக அந்த நாளைச் சுட்டிக் காண்பித்துப் பிரச்னைகளை அதிகமாக்கிக் கொள்கிறோமே ஒழிய குறைப்பதில்லை. தீபாவளி, பொங்கல், ஓணம் என்று பண்டிகை நாளுக்காக, படாடோபமாகச் செலவு செய்ய வேண்டும் என்பதற்காக, மற்றவர்களை விட நாம் அந்தஸ்தில் உயர்ந்தவர்கள் என்று காட்டிக் கொள்வதற்காகக் கடன் வாங்கி அதிகமாகச் செலவு செய்து கஷ்டப்படுகிறோம். செலவு செய்வதுதான் இன்பம் என்றால் அதை நல்ல வழியில் செலவு செய்தால் பேரின்பமல்லவா? வீட்டுக்காக இந்த வருஷமும் வழக்கம்போல் புதுத் துணி, பட்டாசு வாங்கிக் கொடுத்தாலும் உண்மையான மகிழ்ச்சி நிறைவுக்காக ஒரு தொகையை இரண்டாக்கி, ஒரு பாகத்தைக் கோயிலுக்கும், ஒருபாகத்தை அநாதை இல்லங்களுக்கும் தரலாம் என்று இருக்கிறேன்'' என்கிறார் விஜயன்.

பேட்டி : சலன்



கமான்.. கமான் கமான் கமான்
கார்ட்டர்
ரீகன்
ஜனநாயக கட்சி
குடியரசுக் கட்சி
ஈரான்-ஈராக் போரில் மத்தியஸ்த முயற்சி
அஸ்ஸாமில் மத்தியஸ்த முயற்சி
தமிழர்கள்
பட்...பட்...பட்
பட்
பட்வாரி
பட்வாரி
பட்வாரி
பட்வாரி
பட்வாரி

பட்வாரி

பிரபுதாஸ் பட்வாரி அவர்களுக்குப் பிரியாவிடை கொடுக்கிறோம்.

ராஜினாமா செய்யுமாறு கோரப்பட்டார்; ராஜினாமா செய்யவில்லை; அதனால் பதவி நீக்கம் செய்யப்பட்டார் என்பதற்கு அதிகமாக, ராஜினாமா கோரப்பட்டதற்கோ பதவி நீக்கம் செய்யப்பட்டதற்கோ காரணம் ஏதும் தரப்படவில்லை. எனவே இந்திரா காங்கிரஸ் அரசுக்கு வழக்கமாகிவிட்ட ஒரு யதேச்சாதிகாரப் போக்குக்கு மற்றொரு உதாரணம் என்றே இந்த நள்ளிரவு உத்தரவையும் கருத வேண்டியிருக்கிறது.

குடியரசுத் தலைவர் விரும்பினால் மட்டுமே ஆளுனர் பதவியில் நீடிக்கலாம்; குடியரசுத் தலைவர் விரும்பவில்லையானால் பதவி நீக்கம் செய்ய அவருக்கு உரிமை உண்டு என்பது அரசியல் சாசன ரீதியான உண்மைதான். ஆனால் இந்த உரிமையை மட்டுமல்ல, எந்த உரிமையையுமே துஷ்பிரயோகம் செய்யக் குடியரசுத் தலைவருக்கோ ஆட்சியில் உள்ள பிறருக்கோ அதிகாரம் கிடையாது. ஆட்சி மாறினாலும் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு நிற்கும் ஆளுனர்கள் மாறுவதில்லை.

'ஒரு கட்சியினர் பதவிக்கு வந்ததும் தங்களுடைய மதிப்பைப் பெற்றவர்களை ஆளுனர்களாக நியமிக்கிறார்கள்; நியமிக்கும்போது கட்சிக் கண்ணோட்டத்துடன் செயல் படுகிறார்கள்; இது தவறு; ஆளுனர் என்ற பதவிக்கு ஏற்றவரையே நியமிக்க வேண்டும்' என்ற கருத்து நியாயமானது. ஆனால் இக்கருத்துக்கு மாறாகத்தான் ஆதிநாள் காங்கிரஸ் ஆட்சியிலிருந்தே நடந்து வந்திருக்கிறது. தமிழகத்தில் ஆளுனராக நியமிக்கப்பட்டவர் ஜனதா தலைவர்களின் மதிப்புக்குரியவராக இருக்கலாம். ஆனால் நியமனம் ஆனபிறகு அவர் ஆளுனர் என்ற முறையில் கட்சிக் கண்ணோட்டத்துடன் பாரபட்சமாக நடந்து கொண்டாரா என்று பார்க்க வேண்டும். பட்வாரி அவ்வாறு நடந்து கொள்ளவில்லை என்று உறுதியாகக் கூறலாம். அல்லது வேறு ஏதாவது குற்றம் புரிந்து விட்டாரா என்றால் நாமறிந்தவரை இல்லை. மாறாக, அறிவாளி, காந்திய ஒழுக்க சீலர், கடமை வீரர், சாந்த சொரூபி, ஆடம்பரம் அறியாதவர் என்று தமிழ் மக்களின் அன்பையும் நன் மதிப்பையும் பெற்றிருந்தார். அதிக பட்சமாக அவர் மீது சுமத்தக் கூடிய பழி அவர் அயல்நாட்டுப் பிரமுகர்கள் வந்தபோது ராஜ்பவனில் அவர்களுக்கு மது வழங்கவில்லை; சிகரெட் தரவில்லை; மாமிச உணவு படைக்கவில்லை என்பதுதான். இந்தக் குறையைக் கூட அறியாமையால் நம்மில் சிலர்தான் கூறிக் கொண்டிருக்கிறார்களே தவிர அயல்நாட்டுப் பிரமுகர்களில் யாரும் கூறவில்லை. நமது வீட்டுக்கு ஓர் அமெரிக்கர் வருகிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் என்ன சொல்வார்? ''ஐயா! எனக்காக உமது பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ளாதீர்! எனக்கு மதுவோ புலாலோ தேவைப்பட்டால் வெளியே சாப்பிட்டுக் கொள்கிறேன்'' என்பாரா மாட்டாரா? இதைத்தான் பண்பாளர்களான அயல் நாட்டுப் பிரமுகர்களும் பட்வாரியிடம் கூறினர். அவர் அளித்த தமிழக உணவு, குஜராத்தி உணவு முதலியவற்றை மன மகிழ்ச்சியோடு சாப்பிட்டனர். அவரது காந்திய நெறிகளை மதித்து நடந்து கொண்டனர். மதிக்கத் தெரியாதவர்கள் நாம்தான்.

பட்வாரி தாம் பதவி நீக்கம் செய்யப்பட்டது குறித்து நீதி மன்றம் செல்லப் போவதில்லை என்று அறிவித்து விட்டார். தமக்குப் பதவி ஆசை இல்லை என்று நிரூபிக்க அவர் அப்படி சொன்னபோதிலும் ஓர் அநீதிக்கு எதிர்ப்புக் காட்டாமல் இருக்கலாமா என்ற தார்மீகக் கேள்வியும் எழுகிறது. ஆளுனர் மட்டுமென்ன, மத்திய அரசின் உயர் உத்தியோகஸ்தர்கள் எல்லாருமே குடியரசுத் தலைவர் விரும்பினால் மட்டுமே பதவியில் நீடிக்க முடியும். அவ்வாறுதான் அவர்களுக்கு நியமன உத்தரவே தரப்படுகிறது. பட்வாரிக்கு நேர்ந்த கதி நாளை எந்த அரசு உயர் அதிகாரிக்கும் நேரலாம் — ஆமாம் சாமிகளாக இருக்க அவர்கள் அனைவரும் உறுதி பூண்டாலொழிய. அரசியல் அகராதிப்படி ஜாலரா அதிகார வர்க்கம் என்பது சர்வாதிகாரத்துக்கு மாற்றுப் பெயரே.

1980 நவம்பர் 9

ரௌத்திரி ஐப்பசி 24

மலர் 39 : இதழ் : 15

கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

வெந்து தணிந்த காடுகள்

இந்திரா பார்த்தசாரதி



அத்தியாயம் 1

இது எந்த இடம்?

பாலைவனமா? எங்கு பார்த்தாலும் மணல் மணல்... கூழாங் கற்களாக இருக்கக்கூடாது? யாரோ ஒருவன் கூழாங் கற்கள் பொறுக்குகிறேன் என்று அடக்கமாகச் சொன்னாலும்... கூழாங் கற்கள் கடற் கரையில் அல்லவா இருக்கும்? இது கடற்கரை இல்லை... பாலைவனம்.. மணல், மணல்... பொடிப் பொடியாக, துகள், துகளாக... வெய்யிலில், ஒளித் துணுக்குகளாக மின்னுகின்றன...

யார் இவர்கள்? முன் பின் தெரியாத முகங்கள். ஒரு முகத்துக்கும் இன்னொரு முகத்துக்கும் வித்தியாசமில்லை..கண்ணுக்குத் தெரியாத சாட்டைக்குப் பயப்படுகிறவர்கள் போல் வேலை செய்கிறார்கள்.

என்ன செய்கிறார்கள்?

மை காட்! நானும் அவர்கள் செய்யும் வேலையைத்தான் செய்து கொண்டிருக்கிறேன்.... பார வண்டியில் மணலை மூட்டை மூட்டையாகக் கட்டி ஏற்றி... இறக்கி, மூட்டையை அவிழ்த்து மணலைக் கீழே கொட்டி... மறுபடியும் மூட்டையாகக் கட்டி, ஏற்றி, இறக்கி, கொட்டி... மறுபடியும் கட்டி, ஏற்றி....'

விம்மி திடுக்கிட்டு எழுந்தாள். என்ன சொப்பனம் இது? உடம்பு தெப்பமாக நனைந்திருந்தது வியர்வையில்.

பக்கத்தில் அருண் தூங்கிக் கொண்டிருந்தான். இரவு 'பார்ட்டி' முடிந்து உறங்கச் சென்றபோது இரண்டரை மணி.

இப்பொழுது என்ன மணி இருக்கும்?

வெளியே, திரைச்சீலையின் இடைவெளியில் கருமை இலேசாகக் கலைந்து மேகத்துண்டுகள் ...விடிய ஆரம்பித்து விட்டது.

விம்மி எழுந்து சென்று திரைச் சீலைகளை மெதுவாக விலக்கினாள்.

தில்லியின் பனிக் காலத்து வானம். தூக்கமும் கனவும் கலையாத முகத்தில் காலையில் எழுந்ததும் பெண்கள் லேசாகப் பவுடர் பூசிக்கொள்வது போல் மேகங்களும் துயிலெழுந்ததும் 'மேக்-அப்' செய்து கொள்கின்றனவோ? திட்டுத் திட்டாக அசட்டு வெள்ளை நிறம்...

பனிப் போர்வையை விலக்கி வெளியே வர சூரியனின் தீவிர முயற்சி... ஏன் மழை பெய்யக் கூடாது என்று யோசிக்கும் வானத்தின் மனப் போராட்டம், கருமை நிறச் சந்தேகங்களாக ஆங்காங்கே தெரிந்தது.

விம்மியின் மனம் சந்தோஷத்தால் நிறைந்தது. சில கணங்கள் அப்படியே மெய் மறந்து நின்றாள்.

அருண் புரண்டு படுத்ததனால் கட்டிலின் 'ஸ்பிரிங்கு'கள் லேசாக முனகின. விம்மி திரும்பிப் பார்த்தாள்.

அருண் அவள் மேல் கொள்ளை ஆசை வைத்திருந்தான். வாஸ்தவந்தான். ஆனால்.. அந்த ஆசை அவள் அழகுக்காக, அவன் கோரிக்கைகளை மௌனமாக நிறைவேற்றி வைப்பதற்காக, இயந்திரமாக, புன்னகையுடன். விருந்தின்போது அவன் செய்து கொள்ளும் அலங்காரத்தைப் போல், புன்னகையும் ஓர் அலங்காரம்தான். அருண் அவளைக் கல்யாணம் செய்து கொண்டதே இதற்காகத்தான்.

அவன் பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவன். கைநிறையச் சம்பளத்தை வாங்கித் தரும் படிப்பு. நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்த அவளை அவன், தான் கணக்கு வைத்திருந்த பாங்கில் சந்தித்தான். அங்கு அவள் வேலையாக இருந்தாள். முதல் சந்திப்பின்போதே அவளை விரும்பி, அவளையும் தன் கணக்கில் சேர்த்து விட்டான்.

சிறு வயதிலேயே அப்பாவை இழந்த அவள் தன்னுடைய அபிப்பிராயம் என்று எதையும் வெளிப்படையாகச் சொன்னது கிடையாது. அம்மாவின் தியாகங்கள் அவளை மௌனியாக்கிவிட்டன. அருணின் பெற்றோர்கள் பெண் கேட்டு வந்தபோது, அவளுடைய அம்மா இதைப் பற்றி அவள் என்ன நினைக்கிறாள் என்று உபசாரத்துக்குக் கூடக் கேட்கவில்லை. பெரிய வீட்டுப் பிள்ளை, அழகன், நல்ல வேலையில் இருக்கிறான். அவள் இதை வரவேற்காமல் எப்படி இருக்க முடியுமென்று அவளுடைய அம்மா நினைத்திருக்கலாம்.

திருமணமான பிறகு அவள் வேலையை விட்டுவிட்டாள். அருணுக்கு ஒரு பெரிய நிறுவனத்தில் மிக உயர்ந்த உத்தியோகம். வாரத்துக்கு ஒரு முறை வீட்டிலேயோ, ஐந்து நட்சத்திர ஹோட்டல்களிலேயோ விருந்துகள். அவளுக்கு ஏற்பட்ட புதிய உத்தியோகம், விருந்தினர்கள் பாராட்டும் மிஸஸ் அருண்.

அருண் மீது குறை சொல்வதற்கு ஒன்றுமில்லை. சுறுசுறுப்பான இளைஞன். உத்தியோகத்தில் நல்ல பெயர். விருந்துகளில் அவன் இருக்கும் இடத்தில் சிரிப்புக்கும், கொம்மாளத்துக்கும் குறைவே இருக்காது. 'கம் ஆன், அருண், டெல் அஸ் அபௌட் திஸ்....' 'ஏய், ஹாவ் யு ஹேர்ட் அருண் டெல்லிங் திஸ் ஜோக் அபௌட்....' பெண்களிடத்தில் பேசும்போது அவன் குரலில் காணும் கனிவும், குழைவும்!... இவ்வளவுக்கும் அவன் எத்தனை குடித்தாலும் பெண்களிடத்தில் தப்பாக நடந்து கொண்டான் என்ற பேச்சே கிடையாது. அழகான பெண்கள் அவளிடம் 'நீ அதிர்ஷ்டசாலி' என்று சொல்லும்போது அவள் நியாயமாகப் பெருமைப்பட வேண்டும்... ஆனால்...

இந்த 'ஆனால்' அடி மனத்தில் எழுந்து அவளை உறுத்துகிறது. இதற்குக் காரணம்தான் தெரியவில்லை....அவளுக்கு என்ன குறைவு?—

அவள் கண்ட கனவுக்கும் அவள் வாழ்க்கைக்கும் ஏதாவது சம்பந்தமிருக்கிறதா?—

அடிக்கடி நடக்கும் இந்த விருந்துகள் அவளுக்குப் பிடித்திருக்கின்றனவா? அவள் இதைப் பற்றி யோசித்ததேயில்லை. ஒரு நாடகத்தில் அவள் ஏற்றிருக்கும் பாத்திரத்தை அவளிடமிருந்து மற்றவர்கள் என்ன எதிர்பார்க்கிறார்களோ அந்த அளவுக்கு நடித்துக் காட்டியிருக்கிறாள். பார்க்கப் போனால், எதுவுமே அவளுக்கு நாடகமாகத்தான் படுகின்றது.

ஒவ்வொரு விருந்தும் ஒரு நாடகம். வருகின்ற விருந்தினர்கள் அனைவரும் அவரவர் பாத்திரத்தை உணர்ந்து நடிக்கின்றனர். இந்த விருந்துகள் எதற்காக ஏற்பாடாகின்றன என்பதும் அவளுக்குத் தெரிந்த விஷயம்தான். மனித உறவுகளை விலை பேசும் சந்தர்ப்பங்கள்.... ஒவ்வொருவருடைய பலத்தையும் பலவீனத்தையும் புரியவைக்கும் தருணங்கள்.

விருந்து ஆரம்பிக்கும்போது ஒவ்வொருவரும் மற்றவர்கள் தங்களை இனம் கண்டு கொள்ளக் கூடாது என்ற ஜாக்கிரதை உணர்வு. ஆகவே தேய்ந்துபோன பாதையில் செல்லும் பூர்வ பீடிகைப் பேச்சுக்கள்!

'நவம்பர் வந்து விட்டது. இன்னும் குளிர் ஆரம்பிக்கவில்லை'

'தில்லியின் சீதோஷ்ண நிலை மாறிக் கொண்டே வருகிறது என்கிறார்கள்'

'இத்தனை உப கிரகங்கள் விண்வெளியில் சுற்றிக் கொண்டே வந்தால் சீதோஷ்ண நிலை மாறத்தான் செய்யும்.'

'ராஜஸ்தான் பாலைவனம் விரிந்து கொண்டே வருகிறதாம், தெரியுமா!'

'இயற்கையுடன் மனிதன் நடத்தும் போராட்டத்தில் யார் வெற்றியடைய முடியுமென்பதை வருங்கால வரலாறுதான் சொல்ல வேண்டும்.'

'நாம் அப்போது இருக்கப் போவதில்லை... நிகழ்காலத்தைச் சிறப்பாகக் கொண்டாடுவோம்....சீயர்ஸ்'

'மிஸஸ் சாவ்லா, உங்கள் சால்வை மிகவும் நன்றாக இருக்கிறது. எங்கே வாங்கினீர்கள்?'

'நீங்கள் நம்ப மாட்டீர்கள். இதன் விலை நூறு ரூபாய்தான். கரோல் பாக்கில், 'மண்டே மார்க்கெட்டில்' வாங்கினேன். கனாட் ப்ளேஸில் இதன் விலை இருநூறு ரூபாய்!'

'உங்களுக்குத் தெரியுமா, அமெரிக்காவில் நம் சால்வைகளுக்கு நல்ல மதிப்பு.'

'ரியலி?... போன மாதம் அவர் வாஷிங்டனிலிருந்து எனக்கு ஒரு கோட் வாங்கிக் கொண்டு வந்தார். நூறு டாலர்... இங்



கேயே ஒரு சால்வை வாங்கியிருக்கலாம்!'

விருந்து 'சூடு' ஏற ஏறக் கூட்டம் தனித் தனிக் குழுக்களாகப் பிரியும்.

விம்மிக்குச் சிரிப்பு வந்தது. நேற்றிரவு நடந்த விருந்தில் அரசாங்க உயர்தர உத்தியோகஸ்தர் ஒருவர் விம்மியின் அருகில் உட்கார்ந்து அழாக் குறையாக அவருடைய அந்தரங்க அபிலாஷைகளை அவளுடன் பகிர்ந்து கொண்டிருந்தார். அவரைப் பார்த்தால் அவளுக்குப் பரிதாபமாக இருந்தது.

''நான் ஐ. ஏ. எஸ். தேர்வில் வெற்றி யடைந்திராவிட்டால் இன்று ஒரு பெரிய கிரிக்கெட் ஆட்டக்காரனாக இருந்திருப்பேன்... நான் கல்லூரியில் படிக்கும்போது வேகமாகப் பந்து வீசுவதில் எனக்கு இணையே கிடையாது. இந்தியா ஒரு தாம்ஸனை இழந்து விட்டது. இப்பொழுது ஃபைல்கள்தான் என்னால் வேகமாக நகர்ந்து கொண்டிருக்கின்றன. என் ஆசையைக் குழி தோண்டிப் புதைத்தவர் என் அப்பாதான். அவரை என்னால் மன்னிக்கவே முடியாது.''

அவர் வேகமாகப் பந்து வீசுவதை எடுத்துக் காட்டுவதற்காக வலது கையை உயர எழுப்பிக் கீழே கொண்டு வந்தார். அவரெதிரே இருந்த கண்ணாடி டம்ளர் நொறுங்கியது அவருடைய கனவைப்போல.

அருண் வேலை பார்த்த கம்பெனியின் ஒரு முக்கிய பைல் அவரிடம் இருந்தது. அருண் அவரிடம் வேகமாக வந்து அவர் கைகளைக் குலுக்கினான். கண்களில் ஒரு மின்னல்.

'ஒண்டர்ஃபுல்... இந்தியா ஒரு தாம்ஸனை இழந்து விட்டது... வாஸ்தவம்தான்... ஒன் மோர் ட்ரிங்(க்) ப்ளீஸ்.'

இந்த மாதிரி எத்தனை சம்பவங்கள்!...

அலுப்புச் சலிப்பு இல்லாமல் நடந்து கொண்டிருக்கின்றன. இன்னும் எத்தனை நடக்கப் போகின்றன! அருண் தன் ஆசையின் எல்லையை உணரப் போகும்வரை நடந்து கொண்டே இருக்கப் போகின்றன!... அருணின் ஆசைக்கு எல்லையே கிடையாது... முன்னேற வேண்டும் என்ற ஒரு வெறி வந்து விட்டால், மலையின் உச்சியை அடைந்தாலும், மலையின் உச்சியை அடைந்துவிட்டோம் என்ற நினைவே இருக்காது. வெறியே வாழ்க்கையின் குறிக்கோளாகி விடும்...

''குட்-மார்னிங் டார்லிங்...''

வெளியே ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டே யோசித்த நிலையிலிருந்த விம்மி திரும்பிப் பார்த்தாள்.

அருண் எழுந்துவிட்டான். படுக்கையில் உட்கார்ந்து சோம்பல் முறித்துக்கொண்டிருந்தான்.

''குட்-மார்னிங்...''

அவனைப் போர்த்தியிருந்த கம்பளிச் சுகத்தினின்றும் மீள அவனுக்கு விருப்பமில்லை.

''The rough made kiss of a blanket'' என்றாள் விம்மி.

''எஸ்?'' என்று புருவத்தை உயர்த்தியவாறு ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான் அருண்.


''அப்படின்னு ராபர்ட் ஓவன் பாடியிருக்கான். பேனா பிடிக்க வேண்டிய கை துப்பாக்கியைப் பிடிக்கப் போன போது, பாடின கவிதை இது...''

''ஐ ஸீ... காஃபி எங்கே?''

விம்மி அவனை ஒரு கண நேரம் உற்றுப் பார்த்துவிட்டு, அறையை விட்டு வெளியே சென்றாள்.

சமையலறையில் அவளை இன்முகத்துடன் வரவேற்றாள் பூர்ணிமா. அறுபது வயதில் இவளால் எப்படி இவ்வளவு சுறுசுறுப்புடன் இருக்கமுடிகிறது என்று யோசித்தாள் விம்மி. நான்கு மணிக்கே எழுந்துவிடுவாள். தான் தேநீர் போட்டுக் குடித்த பிறகு குளித்துவிட்டு ஒரு மணி நேரம் பூஜை செய்ய ஆரம்பித்து விடுவாள்.

பூர்ணிமாவை அருண் கௌஹாத்தி சென்ற போது யாரோ சிபார்சு செய்தார்கள் என்று அழைத்து வந்தான். பிச்சுப் பிடுங்கல் இல்லாத ஒண்டிக் கட்டை. வந்ததிலிருந்து ஐந்து வருஷங்களாக அவள் தன்னை அக்



குடும்பத்துடன் ஐக்கியப்படுத்திக் கொண்டு விட்டாள். விம்மிதான் அவளுக்குக் கற்றுக் கொடுத்தாள் என்றாலும் தென்னிந்திய உணவு வகைகள் சமைப்பதில் விம்மியை விஞ்சிவிட்டாள் பூர்ணிமா.

விம்மி பல் விளக்கிய பிறகு, பூர்ணிமா கொடுத்த காப்பி டம்ளரையும் தினசரித் தாளையும் எடுத்துக் கொண்டு படுக்கை யறையை நோக்கிச் சென்றாள்.

காப்பியைக் குடித்துக் கொண்டே தின சரித் தாளைப் படித்து முடித்த பிறகுதான் அருண் கட்டிலை விட்டு இறங்குவது வழக்கம். விம்மிக்கு அருணின் இந்தப் பழக்கம் ஆரம் பத்தில் அருவருப்பாக இருந்தது. ஆனால் இப்பொழுது பழகிவிட்டது. கல்யாணமான புதிதில் அவள் அவனிடம் அவளுக்கு இது பிடிக்கவில்லை என்று சொன்னபோது, அருண் சிரித்துக் கொண்டே சொன்னான்: ''இது மத்யதர வகுப்பு மனப்பான்மை... நீ உன்னை எனக்கு அனுசரணையாக மாற்றிக் கொள்ள வேண்டும்....''

விம்மி காப்பியைக் கலந்து அவனிடம் நீட்டினாள்.

''தாங்க்யூ மேடம்'' என்றான் அருண் புன் சிரிப்புடன்.

அவன் தினசரித் தாளைப் படிக்கத் தொடங்கி விட்டான்.

அவள் தன்னுடைய காப்பிக் கோப்பை யைக் கையில் எடுத்துக் கொண்டு ஜன்ன லருகே சென்றாள். திரைச் சீலைகளை விலக் கினாள்.

சூரியன் செம்பிழம்பாகக் கீழ் வானத்தில் உதயமாகியிருந்தான். பனித் திரை அகன்று, உலகம் மஞ்சள் வெய்யிலில் குளித்துக் கொண்டிருந்தது.

பள்ளிக்கூடம் செல்வதற்காகச் சிறுவர்கள் தூக்கத்தைக் கண்களிலிருந்து விரட்டிக் கொண்டு, பஸ் நிலையத்தில் நின்றுகொண் டிருந்தார்கள். சில குழந்தைகளின் பக் கத்தில் 'ட்ரெஸ்ஸிங்-கவுனி'ல் தந்தைகள்.

அருணை அந்த இடத்தில் மானசீகமாக நிறுத்தி வைத்துப் பார்த்தாள் விம்மி. கல்யாணமாகி ஆறு வருஷங்களாகிவிட்டன. திருமணமாகி முதல் மூன்று வருடங்கள், குழந்தையே கூடாது என்று அருண் பிடி வாதமாக இருந்தான். ஆனால் அதற்கு அடுத்த மூன்று வருடங்களைப் பார்க்கும் போது இது அவனுடைய பிடிவாதத்தைப் பொருத்த விஷயமில்லை என்று தெரிந்தது.

அருண் அவளை இரண்டு மூன்று டாக்டர் களிடம் அழைத்துச் சென்றான். அவளிடம் எந்தக் குறையும் இல்லை என்று அவர்கள் கூறினார்கள். ஆனால் அவன் தன்னைப் பரி சோதித்துக் கொள்ளத் தயாராக இல்லை.

'உங்களையும் பரிசோதித்துப் பார்த்துக் கொள்ளுங்களேன்' ,என்று சொல்லலாமா என்று அவள் நினைத்ததுண்டு. ஆனால் இதை அவன் எப்படி எடுத்துக் கொள்வானென்று அவளால் யூகிக்க முடியவில்லை. அவனுக்குத் தன்னைப் பற்றி அசாத்திய நம்பிக்கை. உத்தி யோகத்தில் அவன் ஏற்று, செய்து முடிக்காத சவால்கள் எதுவுமே இல்லை. 'நான் விரும்பி அடையாத பொருள் எதுவுமில்லை' என்று அவன் அவளிடம் முகத்தில் பெருமை பொங் கப் பலதடவை கூறியிருக்கிறான். 'ஆனால் பெண்களைப் பொறுத்தவரையில் நான் உன் னைத் தவிர வேறு யாரையும் விரும்பக் கூடாது என்பதே நான் எனக்கே விதித்துக் கொண்ட கட்டுப்பாடு....' அத்தகைய கட் டுப்பாட்டை அவன் தனக்குத்தானே விதித் துக் கொண்டிராவிட்டால் உலகத்திலுள்ள அத்தனை அழகான பெண்களும் அவன் காலடி யில் விழுவார்களாக்கும்! 'என்ன விகவுருப மான கற்பனை' என்று யோசித்தபோது அவளுக்கு வேடிக்கையாக இருந்தது.

தனக்குக் குழந்தை இல்லை என்பதை அவன் ஏன் ஒரு சவாலாக ஏற்றுக் கொள்ளவில்லை? 'குழந்தை இல்லாவிட்டால் பரவாயில்லை... நாம் இருவரும் என்றும் இளமையாக



அருள்வாக்கு

உடையவர்

நாம் வீடு, வண்டி போன்ற சில சொத்துக்களைப் புதிதாக உண்டாக்கின தாக நினைக்கிறோம். விஞ்ஞானிகள் புதிது புதிதாக இயந்திரங்கள் செய் கிறார்கள். ஆனால் இதற்கெல்லாம் அடிப் படையில் எந்த மூலப் பொருள்களை வைத்துக் கொண்டு செய்கிறோமோ, அவை ஸ்வாமி செய்ததுதான். நாம் அவர் சொத்தை எடுத்து வேறு ரூபத் தில் ஆக்குகிறோமே தவிர புதிதாக எது வும் செய்யவில்லை. மூலப் பொருளை செய், அணுவை உண்டாக்கு என்றால் எந்த விஞ்ஞான நிபுணராலும் அது முடியாத காரியம். இத்தனை மெஷின்கள், குண்டுகள் செய்கிற விஞ்ஞானியால் ஒரு சின்னஞ்சிறிய இலையைச் செய்ய முடியுமோ?

எல்லாவற்றையும் செய்கிற ஒரே ஒருத்தருக்குத்தான் அவையெல்லாம் சொந்தம். அதனால்தான் அவர் உடை யவர், ஸ்வாமி என்று அழைக்கப் படுகிறார்!

— ஸ்ரீ காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள்

இருக்கலாம்... நான் அப்பாவாகவோ தாத்தாவாகவோ ஆகப் போவதில்லை என்று நினைக்கும்போதுதான் என் இளமையின் எல்லையின்மை எனக்குப் புரிகிறது!... இது மனச் சமாதானமா அல்லது உண்மையாகவே அவன் தான் கூறுவதைத் தானே நம்புகிறானா என்று அவளுக்குப் புரியவில்லை.

அவள் அவனிடம் எதைப் பற்றியும் மனம் விட்டு விவாதிப்பது கிடையாது. யாரிடந்தான் விவாதித்திருக்கிறாள்? அவள் சிறு வயதிலிருந்தே இப்படித்தான் இருந்து வந்திருக்கிறாள். இருபத்தைந்து வயதிலேயே கணவனை இழந்துவிட்ட காரணத்தால் பெண்தான் தன்னுடைய ஒரே உடைமைப் பொருள் என்றளவில் ஒரு தீவிர உணர்வில் அவளை ஆக்கிரமித்து அவளுக்கென்று ஒரு தனி உள்ளுருவம் இருக்க முடியுமென்று நம்ப மறுத்த அவள் அம்மா அவளை ஒரு 'பனிப் பாறை'யாக ஆக்கிவிட்டாளோ என்று பல தடவை விம்மி சிந்தித்திருக்கிறாள். கல்யாணமான பிறகு, அம்மாவுக்குப் பதிலாக வரையறையில்லாத தன்முனைப் பார்வையுடைய கணவன். எப்பொழுதாவது அவளை, 'விம்மி, நீ இதைப் பற்றி என்ன நினைக்கிறாய்?' என்று கேட்டிருக்கிறானா? அவள் ஒரு 'பனிப் பாறை' தான், சந்தேகமில்லை...

அவள் மனத்துள் நிகழ்கின்ற சிந்தனைகளைப் பற்றியும், கற்பனைகளைப் பற்றியும் அவள் கணவனுக்கு என்ன தெரியும்? அவனுக்கு அவளைப் பற்றித் தெரிந்த ஒரே முகம் அழகான மனைவி, அவனுடைய விருந்தினர்கள் பாராட்டும் இல்லத்தரசி...அருண் யு ஷுட் பி ப்ரௌட் ஆஃப் யுவர் சார்மிங் வொய்ஃப், ரியலி'.... இந்தப் பட்டத்தைப் பெறுவதற்காக அவள் புரிந்த பொய்ப் புன்னகைகள் எத்தனை! மனத்துக்குள் ஒரு விம்மியாகவும், வெளியில் ஒரு விம்மியுமாக இருப்பது ஒரு பெரிய மனச் சுமைதான்... 'சுமை' தாங்க முடியாத நிலையை அடைந்து விட்டால்?....

''ஸோ, டார்லிங், இன்னொரு நாள் ஆரம்பிச்சாச்சு'' என்று சொல்லிக்கொண்டே கட்டிலை விட்டு இறங்கினான் அருண்.

விம்மி அவனைப் பார்த்துப் புன்னகை செய்தாள்.

''இன்னிக்கு ஆஃபீஸிலே ஏகப்பட்ட வேலை இருக்கு... நேத்து ராத்திரி நடந்த 'பார்ட்டி'யோட 'ஃபாலோ அப் ஆக்ஷன்'...''

அவன் டிரெஸ்ஸிங்-கவுனின் நாடாவை இறுகக் கட்டிக்கொண்டான்.

''டாண்டன் நேத்துக் கூட்டிண்டு வந்தானே, அந்தப்பொண்ணு யாரு தெரியுமா?''

விம்மி படுக்கையைச் சரிசெய்துகொண்டே அவனைப் பார்க்காமல் சொன்னாள்: ''தெரியாது.''

அவள் யாராயிருந்தால் என்ன. 'ஹாஃப் கோர்ஸ்'! அலங்காரப் பொம்மை மாதிரி இருந்தாள். வாயைத் திறக்காதவரை. பேச ஆரம்பித்தவுடன் தெரிந்தது. இத்தகைய விருந்துகளில் அவளுடைய பங்கு என்னவென்று.

''சித்தி கேர்ல்.... டாண்டன் பொண்டாட்டி; அவனை விட்டுப் போயிட்டா தெரியுமா?''

''ஐ ஸீ....''

''பட் திஸ் கேர்ல்.... டாண்டன் எங்கேயிருந்து கூட்டிண்டு வந்தான் தெரியலை, 'எ ரியல் ஃப்ளர்ட்'; நான் ரொம்ப ஜாக்கிரதையா இருக்க வேண்டியிருந்தது.... நீ இல்லாம இருந்திருந்தா ஷி வுட் ஹாவ் ஈவன் ட்ரைட் டு ரேப் மி...''

அருண் இவ்வாறு சொல்லிக் கொண்டே வாய் விட்டு உரக்கச் சிரித்தான்.

''மிஸஸ் டாண்டன் ஏன் அவரை விட்டுப் போயிட்டா?''

''டாண்டன் பெரிய 'வுமனைஸர்.' அவனாலே எத்தனை நாளைக்குத்தான் பொறுத்துக்க முடியும்? எல்லாரும் என் மாதிரி இருப்பான்னு பார்த்தியா? பணமும் சந்தர்ப்பமும் இருந்தா போதும், ஒருத்தன் சுலபமாகக் கெட்டுப்போக.... என்னைப் பத்தி உனக்குப் பெருமைதானே டார்லிங்?''

''எஸ்.... எஸ்... ப்ரேக்ஃபஸ்டுக்கு என்ன சாப்பிடப் போறீங்க? ஆம்லெட் அண்ட் டோஸ்டா இல்லாட்டா.....''

''ஆம்லெட் அண்ட் டோஸ்ட்...''

அருண் அறையை விட்டு வெளியே சென்றான். படுக்கையைச் சரிசெய்துவிட்டு சமையலறையை நோக்கிச் சென்றாள் விம்மி.

''ஆம்லெட் அண்ட் டோஸ்ட். சா(ஹ)ப்புக்கு மட்டும் போதும்.... எனக்கு ஒன்றும் வேண்டாம்'' என்றாள் விம்மி பூர்ணிமாவிடம்.

இதைச் சொல்லும்போது, அவளுக்குத் தான் காலையில் கண்ட கனவு நினைவுக்கு வந்தது.

(தொடரும்)



கே. இந்திரா அவர்களை சர்வாதிகாரப் போக்குடையவர் என்று பலர் கூறுகிறார்களே. அவர் ஜனநாயகவாதியே என்று எதனால் நீங்கள் நம்புகிறீர்கள்?

பதில்: இந்தியாவில் ஜனநாயகம் வேரூன்றி அசைக்க முடியாதபடி நிலைத்து நிற்பதற்கு யார் காரணம் என்று யோசித்தால் ஜவாஹர்லால் நேருவை யாராலும் மறக்க முடியாது. இதை யாரும் மறுக்கவும் முடியாது. மூன்று நான்கு தலைமுறைகளாக தேசியத்தை வளர்ப்பதிலும் தேசத் தொண்டாற்றுவதிலும் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட குடும்பம் பண்டிட்ஜியின் குடும்பம். அந்தக் குடும்பத்தில் வந்த இந்திரா காந்தி ஜனநாயகப் பாதையிலிருந்து விலக மாட்டார் என்றே கருதுகிறேன். இடையில் அவர் எமெர்ஜென்ஸி கொண்டு வந்ததும் நாட்டு நன்மையை உத்தேசித்துத் தான். அதனை விரைவில் நீக்கித் தேர்தலுக்கு உத்தரவிட்டதே அவரது ஜனநாயகப் பற்றுதலைப் பறைசாற்றும்.



கே. நீங்கள் முதன் முதலாக இந்திரா காந்தியைச் சந்தித்தது எப்போது?

பதில்: நான் தஞ்சாவூர் மாவட்ட காங்கிரஸ் தலைவராக இருந்தபோது. அப்பொழுது திருமதி காந்தி செய்தி ஒலிபரப்பு அமைச்சராக இருந்தார். அன்று பார்த்ததுதான். அதன்பின் எனக்கு அதிகமாகத் தொடர்பு இருக்கவில்லை. கட்சியில் பிளவு ஏற்பட்டது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரை நாங்கள் யாவரும் காமராஜுடன்தான் இருந்தோம். சில காலத்துக்குப் பிறகு மத்திய அரசில் ஏற்பட்ட சில மாறுதல்களினால் எங்களுக்குள்ளேயே ஒரு சிந்தனை, பிரிந்திருப்பதை விட இணைந்து ஒரே காங்கிரஸாக இருப்பதுதான் நல்லது. என்று. இதை மறைந்த பெருந் தலைவர் காமராஜரிடமே நான் பல முறை கூறியிருக்கிறேன். பெருந் தலைவரும் கடைசி காலத்தில் ஒப்புக்கொண்டார். ஆனால் அதற்குள் எல்லாமே வேறு மாதிரியாகிவிட்டது.

நாங்கள் காங்கிரஸில் சேரப் போகிறோம் என்றவுடன் சிலர் திருமதி காந்தியிடம் சட்ட திட்டங்கள் பேசிவிட்டீர்களா இல்லையென்றால் அவர்கள் எதுவும் கொடுக்க மாட்டார்கள், நீங்கள் ஏமாந்து போவீர்கள் என்று சொன்னார்கள். ஆனால் நாங்கள் நிபந்தனைகள் ஏதும் அவரிடம் போடவேயில்லை. எங்களுக்கு ஏமாற்றமும் ஏற்படவில்லை. அவர் நடந்து கொண்ட முறை எல்லோரையுமே கவர்ந்தது. கட்சியின் மீதும் மக்களின் மீதும் மெய்யான அன்பு கொண்டு எங்களை உற்சாகப்படுத்தினார்; ஊக்குவித்தார்.

கே. கட்சிக்குள் ஜனநாயகம் இல்லை இந்திராகாந்தியின் சர்வாதிகாரப் போக்குத்தான் தெரிகிறது என்ற குற்றச்சாட்டுக்கு என்ன சொல்கிறீர்கள்?

பதில்: நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். காமராஜ் காலத்தில் கூட ஒவ்வொரு முடிவுக்கும் எல்லாக் கமிட்டி மெம்பர்களையும் அவர் கூட்டி வைத்துக் கொண்டு முடிவெடுத்தார் என்று சொல்ல முடியாது. தம்மைச் சுற்றியுள்ள நம்பிக்கையானவர்கள், தம்மைச் சந்திக்க வரும் பொது மக்கள் எல்லோரது அபிப்பிராயத்தையும் கேட்டார். கடைசியில் அவர் எடுக்கும் முடிவு எல்லோரும் ஒப்புக்கொள்வது போல் ஏகமனதாக இருக்கும். தலைவர் கூறிவிட்டாரே என்பதற்காக எல்லோரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். பொது மக்களின் நன்மையை உத்தேசித்து எடுத்த முடிவாக இருக்கும். அதனால் எல்லோருமே ஒப்புக்கொள்வார்கள். ஓட்டுக்கு விட்டால் என்ன முடிவு கிடைக்குமோ அதே முடிவையே தலைவரும் கூறினால் எப்படி அவரை நீங்கள் சர்வாதிகாரி என்று சொல்ல முடியும்? இந்திராவும் அப்படித்தான். எல்லோரையும் கலந்து ஆலோசிக்கிறார். அவர் கூறும் முடிவு எல்லோரது எண்ணங்களையும் பிரதிபலிப்பதாக இருக்கிறது. ஓரிரு சந்தர்ப்பங்களில் அவரையும் மீறித் தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன என்றே வைத்துக் கொள்ளுங்கள். அத்தவறுகளுக்குக் காரணம் அந்தந்த மாநில, மாவட்டத் தலைவர்களே ஒழிய இந்திரா அம்மையார் அல்ல. டெல்லியில் இருந்து கொண்டு தூத்துக்குடியிலோ அல்லது ஏதாவது ஒரு கிராமத்திலோ நடப்பதை அவர் எப்படி அறிய முடியும்? அவர் நம்பிக்கைக்குப் பாத்திர

மூப்பனார் பேட்டி —

மான சிலர் கூறுகின்ற தகவல்களின் அடிப்படையில் தானே அவர் செயலாற்ற முடியும்? அந்தத் தகவல்களே தவறாக இருந்தால் அவர் தவறு செய்து விட்டதாக எப்படி கூறமுடியும்?

கே. சமீப காலமாக அவர்மீது சாட்டப்படும் குற்றச்சாட்டுக்களில் ஒன்று துரித முடிவெடுக்க மாட்டேன் என்கிறார் என்பது. உதாரணம் ஆந்திரா முதல்வர் நியமனம். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பொதுச் செயலாளராக நான் அடைந்த அனுபவத்தைக் கூறுகிறேன். நாங்கள் ஒரு ஃபைலை அவர் பார்வைக்கு 8ந் தேதி காலை அனுப்புகிறோம். இது கையெழுத்தாகி 9ம் தேதி மாலையே எங்களுக்கு வந்து விடுகிறது. இப்பொழுது சொல்லுங்கள். அவர் சீக்கிரம் முடிவு எடுக்காமல் இருக்கிறாரா என்ன? ஆனால் பல பிரச்னைகளில் கால தாமதந்தான் நல்ல முடிவு எடுக்க உதவும் என்றால் கால தாமதம் செய்துதானே தீர வேண்டும்? ஒரு பிரச்னையில் காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணமே பல பேர்களிடம் அந்தப் பிரச்னை குறித்து அபிப்பிராயங்கள் கேட்க வேண்டும் என்பதுதான். இதை ஏன் பலர் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறார்கள்? 10 பேர் கூடி 4 பேர் அந்தப் பிரச்னையை எதிர்த்தும் 6 பேர் அதற்குச் சாதகமாகவும் வோட்டுச் செய்தால் பிரச்னை அங்கேயே முடிந்துவிடும். ஆனால் நாலு பேரும் சரி ஆறுபேரும் சரி தங்கள் பிரச்னையைக் கூறிவிட்டு நீங்கள் என்ன முடிவு செய்தாலும் அதை ஏற்கிறோம் என்று சொன்னால் திருமதி காந்தியின் பொறுப்பு அதிகமாகிறது. ஆதலால் ஒவ்வொருவரிடமும் தனியாகப் பேசி விவரத்தைத் தெரிந்து கொண்டு எல்லோரும் ஏற்கும் ஒரு முடிவைக் கூறுகிறார். இதற்கு நேரமாகாதா என்ன? பெரும்பான்மையான மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் ஜனநாயகவாதியாக இருப்பதால்தான் சில பிரச்னைகள் பல நாட்கள்வரை இழுக்கடிக்கிறது. சர்வாதிகாரம் செய்பவராயிருந்தால் இத்தனை கால தாமதம் ஆகவே ஆகாது!

கே. இந்திராகாந்தி ஒருவரால்தான் தேசத்தை முன்னேற்ற முடியும் என்ற இ.காங்கிரஸ் கட்சியின் கருத்து பல சந்தர்ப்பங்களில் பரிகாசத்துக்கு உள்ளாகிறதே!

பதில்: அந்தக் கருத்தைப் பரிகசிப்பவர்கள் அறியாமையால் சொல்கிறார்கள். அக்கருத்தில் தவறே இல்லை. நம் தேசத்தில் உள்ள ஏராளமான பிரச்னைகளை எதிர்த்துச் சமாளித்து நீக்கும் திறமை, சக்தி, திருமதி இந்திரா காந்தி அவர்களுக்குத்தான்உண்டு என நினைக்கிறேன். வேறு யாருக்கும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. இந்திரா காந்தி மீண்டும் பதவிக்கு வர வேண்டும் என்று நினைத்ததற்குப் பதவி மீது கொண்ட மோகமோ, ஆசையோ காரணமல்ல. ஏனென்றால் இதற்கு முன்பே பதினோராண்டு காலம் பிரதமராகத்தான் இருந்திருக்கிறார். பதவி அவருக்குப் புதிதல்ல. மக்களுக்கும் நாட்டுக்கும் தொண்டாற்ற வேண்டும் என்ற தூய எண்ணம் தான் அவரை இயக்கியது. அவர்தான் தேசத்தை உயர்த்த முடியும் என்பதற்கு வேறு நிரூபணம் தேவையில்லை — ஜனதா ஆட்சியின் அலங்கோலங்களே போதும். மக்களும் அவ்வாறு நம்பித்தான் அவரை மீண்டும் பதவியில் அமர்த்தினார்கள்.

கே: ஜனதா ஆட்சிக்கு வந்து நூறு நாட்களுக்குள்ளாகவே என்ன சாதித்தது? என்று பத்திரிகைகள் உள்பட பலர் கேட்டனர். இப்போது இந்திரா காங்கிரஸ் பதவிக்கு வந்து ஒன்பது மாதங்கள் ஆகி விட்டன, என்ன சாதித்தது?


பதில்: நாட்டின் பொருளாதாரத்தில் இடைக்காலத்தில் சரிவு ஏற்பட்டிருந்தது. அதைத் தடுத்து நிறுத்துவதுடன் உயர்த்தவும் வேண்டும். இப்பொழுது இருக்கிற நிலை சந்தோஷமானது என்று நான் சொல்ல மாட்டேன். பொருளாதாரம் மட்டுமில்லை, ஒரு காங்கிரஸ்காரன் என்ற நிலையில் கூட நான் சந்தோஷமாக இருப்பதாகக் கூற முடியாது. கட்சிக்குள் எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன. தேசத்தின் முன் எவ்வளவோ பிரச்னைகள் உள்ளன. திட்டங்கள் எல்லாம் நாம் நினைத்த வேகத்தில் நிறைவேறவில்லையே என்ற ஏக்கம் மக்களிடையே இருக்கிறது. எங்களிடமும் இருக்கிறது. இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால் ஒன்று, உடனடியாகப் பலனை மக்களுக்கு நாங்கள் காட்ட முடியாமலிருந்தாலும் பலனைக் காட்டக் கூடிய சரியான பாதையில் இன்று அரசு போய்க் கொண்டிருக்கிறது. அதற்கு நமக்குச் சரியான பிரதமர் கிடைத்திருக்கிறார். மாநில அளவிலும் சரி, மத்திய அளவிலும் சரி, சாதாரண மனிதனின் நம்பிக்கைக்குகந்த, பெருவாரியான மக்களால் விரும்பப்படுகின்ற ஒரே தலைவர் திருமதி காந்திதான். எனவே அவரால் ஊக்குவிக்கப்படும் மக்கள் நம் நாட்டை வளமான நாடாக உயர்த்துவார்கள் என்று திடமாக நம்புகிறேன்.

அரசாங்கம் பல திட்டங்களை வகுக்கிறது. அத் திட்டங்களை ஒரு சராசரி மனிதன் பயன்படுத்திக் கொண்டால் அவன் முன்னேறலாம். ஆனால் இதைத் தெரிந்து கொள்ளும் சக்திகூட அவனுக்கு இல்லை. எனவே பிரதமர் கூறுவது போல் கிராமப் புறங்களில் பாதயாத்திரை செய்து அரசின் திட்டங்களை அந்தச் சாதாரண மனிதனுக்கு அவன் பயனடையும்படி எடுத்துச் சொல்ல வேண்டும்.

கே. இந்திராகாந்தி மீது ஜனதா ஆட்சியில் தொடுக்கப்பட்ட பல வழக்குகளையெல்லாம் இன்றைய ஆட்சி வாபஸ் பெற்றுக்கொண்டு விட்டதே? ஆட்சி மாறினும் நீதி நிலைக்க வேண்டாமா?

பதில்: முந்தைய அரசு வேண்டுமென்றே திருமதி காந்தியவர்களைக் கொடுமைப் படுத்தினாலும் பதவிக்கு வந்த பிறகு பழிக்குப் பழி வாங்குவது போல் அவர்களைத் திரும்பக் கொடுமைப்படுத்தும் எண்ணம் திருமதி காந்திக்கு இல்லை என்பதே இதற்குப் பதில்.

பேட்டி: **சலன்**



விட்டில் அணைத்த விளக்கு

மகரிஷி

1

சுமங்களா கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோதே, அருணாசலம் விநியோக உரிமை பெற்று வியாபாரம் செய்த சோப் கம்பெனியை இழுத்து மூடிக் கொண்டு போய்விட்டார்கள். வியாபாரச் சந்தையில் நல்ல பெயரும் புகழும் இருந்தும் உற்பத்தியைத் திறம்படச்செய்து விநியோக முறையை ஒழுங்குபடுத்த அவர்களால் முடியவில்லை.

சோப் கம்பெனியை மூடிவிட்ட பின் அருணாசலம் மிகவும் சிரமப்பட்டார். அவர், தன்னுடைய தனிப்பட்ட வியாபாரத் திறமையால் தன்னைச் சுற்றி ஒரு பெரிய வட்டத்தை உண்டாக்கிக் கொண்டிருந்ததால் பிரதான கம்பெனி மூடப்பட்டதும் நிலைமை மோசமாகி விட்டது. சொந்தத் திறமையால் தான் பெற்ற நற்பெயரை இழக்க அவர் மனம் தயாராக இல்லை.

மூடப்பட்ட கம்பெனியின் பெயருக்கு முன்னால் 'நியூ' என்ற ஆங்கில பதத்தைச் சேர்த்தார். பிரபலமான துர்க்கா சோப் இப்பொழுது 'நியூ துர்க்கா சோப்' என்றாயிற்று. கடன் வாங்கி ஒரு சிறு மூலதனம் போட்டுத் தாமே சோப் மற்றும் பவுடர் கம்பெனி ஒன்றைத் தொடங்கி விட்டார். உள்ளூர்க் கடைகளின் தேவைகளை மட்டும் சரிவரக் கவனித்து நிதானமாக அவரால் வியாபாரம் செய்ய முடிந்தது.

அந்த உண்மையான உழைப்பு அவருக்குக் கைகொடுத்தது. அதை மேலும் விஸ்திரணப் படுத்த வேண்டும் என்கிற எண்ணம் வந்தது. வியாபாரமும் பெருகியது. அதைத் தொடங்குவதற்காக ஆரம்பத்தில் வாங்கியிருந்த கடன்களை யெல்லாம் தீர்த்தார்.

லாபம் என்பது, அவர் தம்முடைய கடந்த காலப் பொருளாதாரச் சிக்கல்கள் எல்லாவற்றிலிருந்தும் தன்னை முழுமையாக விடுதலைப்படுத்திக் கொண்டதே ஆகும்.

ஒரு சரியான உதவியும் மூலதனத்துக்கு நம்பகமான கூட்டாளியும் கிடைத்தால் மேலும் அதை விஸ்தரிக்கலாம் என்று அருணாசலம் ஆசைப்பட்டபோது அறிமுகமானவன் தான் பரசு என்று எல்லோராலும் அழைக்கப்படும் பரமேஸ்வரன்.

ஒரு பட்டதாரி.

கலா ரசிகனைப் போன்ற 'பளிச்'சென்ற தோற்றம்! எப்பொழுதும் முகத்தில் தேங்கி நின்றுகொண்டிருக்கும் வசீகரப் புன்னகை! எதிரே இருப்பவர் எதைச் சொன்னாலும் கையை முன்புறம் கட்டிக் கொண்டு செவி மடுக்கும் விதம்... அதில் மிகத் துல்லியமாகத் தன்னை வெளிக்காட்டிக் கொள்ள முடிகிற அபூர்வத் தன்மை.

''இவள் என் தங்கை மாதிரி, நான்தான் கார்டியன். சுமங்களா பி.எஸ்.ஸி! சுமங்களா, இவர்தான் மிஸ்டர் பரமேஸ்வரன்.'

பரஸ்பர அறிமுகங்கள்.

அருணாசலம் தம் வியாபாரம் சம்பந்தப்பட்டவர்களை இதுவரை யாருக்கும் அறிமுகப்படுத்தி வைத்ததே இல்லை. அது ரொம்ப அவசியம் என்றோ அல்லது, அவசியமற்றது என்றோ நினைத்ததில்லை.

இப்பொழுது பரசுவைத் தனக்கு அறிமுகப்படுத்தி வைத்தது சுமங்களாவுக்கு வியப்பாக இருந்தது. இதற்காக அவரை அவள் சினந்து கொண்டதில்லை. 'அவர் ஒரு தனி ரகம்' என்றுதான் கருதியிருந்தாள்.

புதியவனை அறிமுகப்படுத்தியபோது 'பரவாயில்லை... அருணாசலம் மெதுவாக மாறிக் கொண்டு வருகிறார் போலிருக்கிறது' என்று எண்ணிக் கொண்டாள்.

''நம்முடைய நியூ துர்க்கா சோப் இண்டஸ்ட்ரியை இவரைக் கொண்டு விரிவுபடுத்தலாம் என்றிருக்கிறேன். இவரும் அதற்குச் சம்மதம் தந்திருக்கிறார்'' என்றார், உற்சாகத்துடன்.

இதை எதற்காகத் தன்னிடம் சொல்கிறார் என்று ஆரம்பத்தில் அவளுக்குப் புரியவில்லை. ஒருவேளை.... அந்தப் புதிய வாலிபர் முன்னால் தன்னை ஒரு பொறுப்புள்ள போஷகராகக் காண்பித்துக்கொள்ள முயற்சி செய்கிறாரோ? அதற்கு அவசியமில்லையே! வெளி விவகாரங்கள் இதுநாள் வரை குடும்பத்தாருடன் அதிகமாகப் பகிர்ந்து கொள்வதில்லை என்பதால் அவரைப் 'பொறுப்பற்றவர்' என்று சொல்லிவிட முடியாது. வீட்டுத் தேவைகளை உடனுக்குடன் கவனித்து எவ்விதத் தட்டுப்பாடுகளுக்கும் இடம் தராமல் பார்த்துக் கொண்டார்.

அருணாசலத்தின் செய்கை மெதுவாகப் புரிய ஆரம்பித்தது. மங்களாவுக்கு. அவள் டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது பார்வதம் ஆரம்பித்தாள்.

''பரமேஸ்வரன் வசதி படைத்த பையனும்....''

டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்த சுமங்களா பார்வதத்தைப் பார்த்தாள்.

அவள் அடுப்பின் பக்கம் திரும்பிக்கொண்டிருந்தாள். கல்லில் இருந்த தோசையைத் திருப்பியில் எடுத்து அப்படியே சூடாகச் சுமங்களாவின் தட்டில் போட்டுவிட்டு...

''அவருக்கு ஒரு அண்ணன் உண்டாம். கல்யாணமாகிப் பத்து வருஷமாகியும் குழந்தையே கிடையாதாம். தாய், தகப்பனார் கிடையாது'' — மீண்டும் பார்வதம் அடுப்புக்குப் போய்விட்டாள்.

ஒரு நபரைப் பற்றிய விவரங்களை அறிகிற சாதாரண முனைப்பைத் தவிர வேறு எவ்வித ஆர்வமும் இல்லாமல் கேட்டுக் கொண்டிருந்தாள் சுமங்களா.

''இரண்டு பேர்கள்தானாம். வேறு பிடுங்கல் கிடையாது. தகப்பனார் இருக்கும்போதே இரண்டு பிள்ளைகளுக்கும் உண்டானதை மிகக் கச்சிதமாகப் பிரித்து எழுதி வைத்து விட்டாராம்.''

தோசையைத் தின்று விட்டுக் கையலம்பிக்கொண்டு பார்வதத்தின் அருகில் வந்து நின்றாள் சுமங்களா.

''நீ எடுத்துக்கோ... நான் தோசை வார்த்துப் போடறேன்'' என்று தோசை திருப்பியை அவள் பார்வதத்திடமிருந்து வாங்கிக் கொண்டாள்.

சுமங்களா அலம்பி வைத்த தட்டிலேயே அவளும் உண்ண ஆரம்பித்தாள்.

மிகச் சாதாரணமாகத் தொடங்கிய பேச்சு மெதுவாக ஆழம் பெறலாயிற்று. சாப்பிட்டுக் கொண்டிருந்த பார்வதம் சுமங்களாவைப் பார்த்தாள்.

அவளுடைய பின் உருவம் உயரமாகத் தெரிந்தது. அபூர்வமான வளர்ச்சி! எவ்வளவு உயரமாக வளர்ந்து விட்டாள். உடம்பும் கழுத்தும் முதுகும்தான் எப்படி இருக்கிறது! அகலமான முதுகும் அதற்குக் கீழே இடை குறுகி... சற்றே இடுப்பு பருத்து....

அவை பார்வதத்தைச் சில கணங்கள் பேசமுடியாமல் செய்து விட்டன.

வளர்ச்சியின் பரிபூர்ணமான வெளிக் கோடுகள் அழுத்தமாகத் தெரிந்தன.

நீளமான கேசம் இல்லாவிட்டாலும் அடர்த்தியான கேசம். நல்ல வெளிர் சிவப்பு உடம்பு!

'இவள் யார்? யாரைக்கொண்டு பிறந்திருக்கிறாள்? இருபதாண்டுகளுக்கு மேலாக இவளைக் கட்டிப் பாதுகாத்து, அரவணைத்து, செழிக்க வைத்து...

கடைசித் தோசையைத் தட்டில் போட்டாள், சுமங்களா.

மண்டியிட்டபடி அவள் முன் உட்கார்ந்தாள்.

''அவரோட சுயசரிதம் பூராவும் உனக்கும் அவருக்கும் அத்துப்படி போல இருக்கே?''

''ஒரு காரியத்தில் இறங்கு முன் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளவேண்டாமா?''



''உங்களுக்கு வேண்டியது அவருடைய பாங்க்பேலன்ஸ் மட்டும்தானே? மற்றதெல்லாம் எதற்கு?''

''பிறகுதானே எல்லாமும். முதலில் பாங்க் பேலன்ஸை மட்டும்தான் பார்ப்பதாக இருந்தோம். பிறகு எல்லாவற்றையுமே பார்த்தால் என்னவென்று தோன்றியது. பார்க்கத் தொடங்கினோம். பாங்க் பேலன்ஸ் போலவே மற்றதும் அனுசரணையாகவே இருந்தன. ஒரு உல்லாசமான பேர்வழி. அதற்காக அவர் எவ்வளவு வேண்டுமானாலும் செலவிடத் தயாராக இருக்கிறார்.''

''நீ, நேற்று லைப்ரரிக்குப் போயிருந்தபோது அவர் வந்தார். ரொம்ப நேரம் உனக்காகக் காத்துக் கொண்டிருந்தோம். நான் மட்டும் அவருடன் தனியே பேசிக் கொண்டிருந்தேன். பணத்தை எது எதற்கெல்லாமோ வாரி இறைப்பதைப் பற்றிச் சொன்னபோது எனக்கே பேராசையாக இருந்தது. இவரை வசப்படுத்திக் கொண்டால் எவ்வளவு சௌகரியமாக இருக்கும் என்று எண்ணினேன். நாளைக்கு வருவதாகச் சொல்லியிருக்கிறார்.''

கமலாங்கனா பெருமூச்சு விட்டாள். பார்வதத்தின் பேச்சில் வெளிப்பட்ட உணர்ச்சிகள், தாபங்கள் எல்லாம் புரிந்தன. அவளுடைய ஆசை கமலாங்கனாவுக்கு நன்றாகவே விளங்கியது.

பல்வேறு சந்தர்ப்பங்களில் கமலாங்கனாவின் மனத்தில் ஒரு குழப்பம் அவளைச் சூழ்ந்து கொள்வதுண்டு. அந்தக் குழப்பமும் சலனமும் பார்வதத்தின் பேச்சினாலும் செய்கைகளினாலும் உண்டாவதுதான்.

''நீ வெளியே போயிட்டு வா. சினிமாவுக்குப் போறதா இருந்தாப் போ. அவரும் போகணும்னு சொன்னாரு. உன் கூடத்தான் போகணுமாம்'' என்று பரமேஸ்வரனைக் குறிப்பிட்டு பார்வதம் கூறும் போது கமலாங்கனாவுக்குக் குழப்பமாக இருக்கும்.

எல்லாரையும் எல்லா நேரங்களிலும் சந்தேகிப்பது ஓர் ஆரோக்கியமான தன்மையல்ல என்பது அவளுக்கும் தெரியும்.



ஆகவே அவள் யாரையும் சந்தேகிக்கத் தயாராக இல்லை.

''நான் எப்படி பார்வதம் அவருடன் போவது?''

''போனா என்ன?''

''போனா என்னன்னு நீ ரொம்பச் சுலபமாச் சொல்லிட்டே. எனக்கு மனசு ஒத்துக்க வேண்டாமா?''

''அட நீ ஒரு அசட்டுப் பெண்ணா இருக்கியே. ஊர் உலகத்திலே என்னென்னமோ நடக்குது... அவங்கவங்க எவ்வளவோ அக்கிரமங்களை யெல்லாம் பண்றாங்க...''

''பார்வதம்...!''

பார்வதம் ரொம்ப அழகாகச் சிரித்தாள். சுமங்களாவின் செழுமையான தோள்பட்டையில் கைவைத்து....

''ஊர் உலகத்தைப் பற்றி அதிகமா நினைச்சுக்கிட்டே இருக்கக் கூடாது. நமக்குன்னு சில தேவைகள்... அவசியங்கள் ஆசைகள் வரும்போது அதை அந்தந்த நிலையிலேயே அப்படி அப்படியே ஏத்துக்கக் கத்துக்கணும். ரொம்பப் பேசிக்கிட்டுக் குழம்பக் கூடாது....'' என்று கூறிவிட்டு அப்பால் போய்விடும் பார்வதத்தை அவள் புரிந்து கொள்ளக் கொஞ்ச நாள் ஆகிவிட்டது.

பார்வதத்தை அவள் சில சமயம் 'அம்மா' என்று அழைத்திருக்கிறாளே தவிர அந்த அம்மா என்ற அழைப்பினுள் தன் தாயாரை முன்னிருத்தி அழைப்பது போல என்றுமே நினைத்துக் கொண்டதில்லை. அம்மா என்கிற வயதான பெண்பாலின் குறியீடு இருந்தது. அதே போலத்தான் 'அப்பா' என்று அருணாசலத்தை அழைக்கும் அழைப்பும்!

ஆரம்பத்திலிருந்தே அவளிடத்தில் சுமங்களா ஓரளவு முன் ஜாக்கிரதையுடனேயே இருந்தாள் என்று கூற முடியாது. காரணம்: அப்படி இருக்க முடியவில்லை அவளால். அப்படிப்பட்ட சூழ்நிலை ஒன்றின்போதுதான் பார்வதத்திடம் வந்தாள்.

அவளுடைய வாழ்க்கை பூராவும் ஆதியோடந்தமாகப் பார்வதத்துக்குத் தெரியும். சுமங்களாவின் பிறப்பு தெரியும். அரைகுறை வளர்ப்பு தெரியும். வறுமை தெரியும்; சிறுமை தெரியும். எனினும் சுமங்களாவைப் பார்வதம் எந்தச் சூழ்நிலையிலும் உதாசீனம் செய்யவில்லை; ஏழை என்று எட்டி உதைக்கவில்லை. மாறாக அன்பு காட்டினாள்; பாசத்துடன் பாதுகாத்தாள்.

ஊரில் வளர்ந்த விடலைகளுடன் சேர்ந்து கெட்டலைந்த சுமங்களாவின் அப்பன் ஒரு பெரிய திருட்டில் அகப்பட்டுக் கொண்டு ஜெயிலுக்குப் போனான். ஜெயிலுக்குப் போன பின்பாவது ஒழுங்காக இருந்திருக்கலாம். அதுவும் இல்லை. அதே காலிக் கூட்டம் உள்ளே அவனைத் தூண்டி, ஜெயிலிலிருந்து வெளியே தப்பிக்கத் திட்டம் போட்டது. மூன்று பேராகச் சேர்ந்து ஒரு நாள் ஜெயிலை விட்டு வெளியே வர முயன்று ஜெயிலுக்கு உள்ளே உள்ள பெரிய மரத்தின் மேலே ஏறி அதன் கிளை வழியே உயரமான ஜெயில் மதில் சுவரை எட்டிப் பிடிக்க முயன்றபோது கால் தடுக்கிக் கீழே விழுந்து.....

உள்பக்கம் மதில் சுவர் ஓரமாக இருந்த கல் ஒன்றில் தலை மோதி இரண்டு நாட்கள் ஆஸ்பத்திரியில் பிரக்ஞையற்றுக் கிடந்து மூன்றும் நாள் காலையில் உயிரை விட்டு,

சுமங்களாவை அநாதையாக்கிவிட்டுப் போய்ச் சேர்ந்தான்! ஏற்கனவே அவளுக்குத் தாய் இல்லை.

''வீதியிலே நின்னு அழுதுக்கிட்டிருந்தா அப்பன் வந்திருவானா? உள்ளே வா! யார் யார் விதி எப்படியோ அப்படித்தான் நடக்கும். இருக்கும்போது மட்டும்தான் அப்பன் என்னத்தைச் செஞ்சுப்புட்டான்?'' உனக்கு இப்போ ஏன் அழுவறே? வா போகலாம். இதுவும் உன் வீடுதான் என்று அவள் முதுகில் கையை வைத்துத் தன் வீட்டுக்குள் அழைத்துக் கொண்டு போனாளே அவள் சுமங்களாவின் அப்பாவுடன் சில நாட்கள் இருந்தவள்.

கொஞ்ச நாள் அவனுடன் இருந்துவிட்டுப் பின்பு அவனை விட்டு விட்டுப் போனவள். என்றாலும் சுமங்களாவின் மேல் அவளுக்கு அன்பு உண்டு; அக்கறையுண்டு.

சுமங்களாவை எவ்வித மனக் கிலேசமும் இன்றி, யாருடைய குறுக்கீடுமின்றித் தானே வளர்த்து ஆளாக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள், பார்வதம்.

நெருங்கிய உறவினர்கள் என்று கூறக் கூடிய ஒன்றிரண்டு பேர்களும் பொறுப்புகளிலிருந்து தப்பித்தால் போதும் என்று ஒதுங்கிக் கொண்டனர்.

எனவே, அவள் இருப்பிடம் என்பது பார்வதத்துடன் இங்கே நிரந்தரப்பட்டு விட்டது.

பார்வதத்தின் சொந்த வாழ்க்கையின் தன்மை பற்றி அவளுக்கு ஆரம்பத்தில் ஒன்றும் தெரியாது.

தன் தகப்பனாரிடம் சில நாள் அவள் ஏன் இருந்தாள்? அம்மா செய்யும் பணிவிடைகளை யெல்லாம் செய்வாள், அம்மாவைப்போலவே அப்பாவுக்குக் குளிக்கத் தண்ணீர் எடுத்து வைப்பாள். சோப்பு எடுத்துக் கொடுப்பாள்; டவல் கொடுப்பாள்; சாதம் போடுவாள்; இரவில் நடு ஜாமத்தில் கண் விழித்துக் கொள்ளும்போது அப்பாவுக்கு அருகில் நெருக்கமாகப் படுத்துக் கொண்டிருப்பாள்.

அப்பாவிடம் அம்மா சண்டை போடுவது போல் இவளும் சண்டை போட்டிருக்கிறாள். எவ்வளவுதான் சண்டை போட்டாலும் அம்மா எங்கும் போனதில்லை.

ஆனால் பார்வதத்தின் கோபம்...?

அப்பாவுடன் சண்டையென்றால் அடுத்த சில மணி நேரங்களில் அவள் வெளியே போய்விடுவாள். பிறகு ஒரு வாரம் வரை பார்வதத்தை வீட்டின் பக்கமே பார்க்க முடியாது. ஒரு வாரம் போன பின் ஒன்று, அவளாகவே உள்ளே வருவாள்... அல்லது வெளியே போன அப்பாவுக்குப் பின் மறைந்து மறைந்து வந்து கொண்டிருப்பாள்.

அதுதான் அவளுக்குத் தெரியும். அதன் பின் நடந்த ஒரு 'சண்டையில் வெளியே போய்விட்ட பார்வதம் ரொம்ப நாள் திரும்பி வரவேயில்லை,

(தொடரும்)

வளரும் வயதில் குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்



காம்ப்ளான்®

ஒன்றில்தான் அவர்களுக்கு அன்றாடம் தேவைப்படும் 23 ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன.

வளரும் குழந்தை-களுக்கென்றே சிறப்பான சில தேவைகள் உள்ளன—வளரும் வயதிலே உடம்புக்குத் தேவைப்படும் மிகச் சிறந்த புரதம், 22 மூலாதார ஊட்டச் சத்துக்கள் —அளிக்கிறது காம்ப்ளான். மறவாதீர்கள், டாக்டர்களின் சிபாரிசு பெற்ற, திட்டமிட்ட உணவு காம்ப்ளான்.

இலவசம்! 32 பக்கங்கள் கொண்ட கைப் புத்தகம்.


"குடும்பத்திற்கான பரிபூரண ஊட்டச் சத்துணவு வழிகாட்டி"
50 பைசா தபால்தலை இணைத்து இம் முகவரிக்கு எழுதிப் பெறுக:
தபால் பை நம்பர் 19118, (Comp) G-79, பம்பாய் 400 025.

லின்டாஸ்—GLC-6-2012 TH

திட்டமிட்ட பரிபூரண உணவு — காம்ப்ளான்®

போட்டிக்கதை—10

உருவங்கள் மாறலாம் உணர்ச்சிகள் மாறுவதில்லை!



ஜெயகாதா

அது ஒரு மார்ச்சுமாதத்து இரவு.

புழுக்கம் தாளாமல், தனது இரும்புக் கட்டிலை எடுத்து வீட்டுக்கு வெளியே தோட்டத்தில் கொண்டு வந்து போட்டுக் கொண்டு படுத்தான், எக்ஸ் பயாலஜி புரொபஸரான பிரபு. படுத்தவுடனேயே ஆட்டோமேடிக்காக அவனுடைய விழிகள் அண்ணாந்து வானத்தை உற்றுப் பார்க்கலாயின.

வானம் அடர்ந்த கருநீல நிறத்தில் துல்லியமாக இருந்தது. நிறைய நட்சத்திரங்கள் தெரிந்தன. நடு வானில் அரைச் சந்திரனும் அதற்கு மிக அருகே பளீரென்ற வெண்ணொளியுடன் வியாழ (Jupiter) கிரகமும் மந்தமான மஞ்சள் நிறத்தில் செவ்வாய் (Mars) கிரகமும் தென்பட்டன. வட திசையில் கண்ணை ஓட்டியபோது, கேள்விக் குறி வடிவில் சப்தரிஷி மண்டலம் (Great Bear) பார்வைக்கு அகப்பட, அதில் ஆறாவது நட்சத்திரமான வசிஷ்ட நட்சத்திரத்தைப் பார்த்துவிட்டு, அவனது வழக்கப் பிரகாரம் அதனருகே அருந்ததி நட்சத்திரத்தைத் தேடினான். சற்று நேரம் கூர்ந்து கவனித்துத் துழாவிய பிறகு, வசிஷ்டருக்கு அரையங்குலம் கீழே, சின்னஞ் சிறு புள்ளியாக அருந்ததி மினுக்கிக் கொண்டிருப்பதைக் கண்டு திருப்திப் பட்டுக் கொண்டான் —'ஹாப்பி! என் கண் பார்வை இன்னும் நார்மலாகத்தான் இருக்கிறது. சிறிது குறையிருந்தாலும் இந்த அருந்ததி நட்சத்திரத்தைக் காண முடியாதே!'

இன்னும் புழுக்கமாகத்தானிருந்தது. சற்றுப் புரண்டு திரும்பிப் படுத்தான். தென் கிழக்கு மூலையில் தேள் கொடுக்கு வடிவில் விருச்சிக ராசி நட்சத்திரக் கூட்டம் கிளம்பி விட்டிருந்ததைக் கண்டான்.

முப்பது வயது நிரம்பிய எக்ஸ் பயாலஜி புரொபஸரான டாக்டர் பிரபு, இந்த இள வயதுக்குள் வான சாஸ்திரத்தைக் கரைத்துக் குடித்திருந்தான். அதில் மேலும் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தான்.

எக்ஸ்பயாலஜி என்றால் — பூமியைப் போலவே மற்ற கிரகங்களிலும் உயிரினங்கள் இருக்கின்றனவா இல்லையா என்பது பற்றி ஆராயும் படிப்பு. பூமியைத் தவிர வேறு எந்தக் கிரகத்திலும் ஜீவராசிகள் இருக்க முடியாது என்று பல விஞ்ஞானிகள் கலபமானதொரு முடிவுக்கு வந்துவிட்டிருப்பதை நினைத்து அவன் அதிருப்தி கொண்டான்.

பிரபு தற்பொழுது வெள்ளி கிரகத்தில் (Venus) உயிரினங்கள் இருக்கின்றனவா என்பது பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தான். 'எடையிலும் சைஸிலும் நெருங்கிய ஒற்றுமை இருப்பதால் பூமியின் இரட்டைச் சகோதரி என வீனஸ் கிரகம் கருதப்பட்டாலும், அதன் அட்மாஸ்பியர் மாறுபட்டுத்தான் இருக்கிறது. அங்கு பிராண வாயுவும் நீராவியும் இல்லை. கரியமில வாயுவோ அளவு கடந்து இருக்கிறது.—பூமியில் இருப்பதைப் போல் இருநூற்றைம்பது மடங்கு. அதனால் வெப்பமும் அதிகம் ஆனால் நைட்ரஜன் இருக்கிறது. வீனஸ் ஒரு புழுதிக் கிண்ணமாகவோ அல்லது முற்றிலும் நீரால் சூழப்பட்டு நிலமற்றதாகவோ இருக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் நினைக்கிறார்கள். ஸ்வான்தே அரேனியஸ் என்கிற ஸ்வீடிஷ் விஞ்ஞானி அங்கு ஊர்வன இருக்கலாம் என்று சொல்லியிருக்கிறார். ஊர்வன இருக்கும்போது வேறுவித ஜீவராசிகளும் இருக்கக் கூடாதா என்ன? ஏன்? போன நூற்றாண்டு வரை சிலசமயம் வெள்ளியைச் சுற்றித் தெரியும் அரை வட்டப் பிரகாசத்தை அங்கு வசிக்கும் மக்கள் திருவிழாக் காலங்களில் பெருங் காடுகளை எரித்துக் கொண்டாடுவதால் ஏற்படும் ஒளியே அது என்று நம்பியிருக்கவில்லையா?

இதை நினைத்துக் கொண்டபோது இந்த நேரத்தில் வெள்ளிக் கிரகம் மேற்கு அடிவானத்தில் தெரிய வேண்டுமே என்று எண்ணியவாறே, அங்கு தன் பார்வையைச் செலுத்தினான் பிரபு.

அங்கு பெரியதொரு டைனமோ விளக்கு போல, ஒளி வீசிப் பிரகாசித்துக்கொண்



டிருக்கும்போதே பச்சை, சிவப்பு, நீலம், பச்சை என மாறி மாறி வர்ண ஜாலங்களை இறைத்துக் கொண்டிருந்தது. 'ஆஹா! இவ்வளவு தூரத்திலிருந்து பார்க்கும்போதே வெள்ளி எவ்வளவு அழகாக இருக்கிறாள்! இன்னும் அவள் மேனியிலேயே போய் வாசம் செய்ய முடிந்தால்....? வெள்ளி தேவியை நன்கு ஆராய இதுவே உகந்த தருணம். பூமிக்கு மிக அருகில் இரண்டரைக் கோடி மைல் தூரத்தில்—எப்போதையும் விட மிக நெருக்கத்தில் வந்திருக்கிறாள்.

அப்போது—

வெள்ளிக் கிரகத்தின் திசையிலிருந்து டீ.ரென்று ஒளி மிகுந்ததோர் வெண்புள்ளி புறப்பட்டு, சற்று நேரத்தில் வெண் புறாவாகி விரைவிலேயே பிரம்மாண்டமான வெள்ளைப் பருந்தாவதைக் கண்டான் பிரபு. அது அழகாக அசைந்து அசைந்து பறந்து வந்ததையும், தனது தலைக்கு மேலே வானில் ஒரே இடத்தில் நின்று கொண்டு சுழன்று சுழன்று ஆடியதையும் கவனித்தான். அதிலிருந்து கிளம்பிய ஒளி அவனது கண்களைக் கூசச் செய்து மூட வைத்தன. மூளை நரம்புகளில் சில அதிர்வுகளைப் பதிய வைத்தன.

மறு கணம் அவன் தனது இரும்புக் கட்டிலோடு மெதுவாக — மிக மிக மெதுவாக — மேலே எழும்பிக் கொண்டிருப்பதை உணர்ந்தான். அந்த எழுச்சி, அவனால் தவிர்க்க முடியாததாக இருந்தது. அந்தப் பருந்து போன்ற அமைப்பிலிருந்து வெளிப்படும் காந்த அலைகள், தன் இரும்புக் கட்டிலைக் கவர்ந்து இழுக்கிறது என்று புரிந்துகொண்டான். சில விநாடிகள் மெதுவாக, எழும்பிக் கொண்டிருந்தவன், படிப்படியாக வேகம் கூடி மிக மிக வேகமாக ஈர்க்கப்படுவதை அறிந்தான். அந்தப் பருந்தமைப்பை நெருங்கியவுடன் அதன் அடிப் பாகத்தில் சிறிய கதவு ஒன்று திறப்பதும், அதனுள் கட்டிலோடு தான் புகுந்து கொள்வதும், மறு கணம் அது மூடிக் கொள்வதும் புரியும் போதே அவன் மயக்கத்தைத் தழுவினான்.

மறுபடியும் உணர்வு வந்தபோது—

அவனது விஞ்ஞான மூளையில் அது உறைத்தது.

'தான் ஒரு விண்வெளிக் கலத்தில் படுத்திருக்கிறோம். அந்த விண்வெளிக் கலம் அகண்டாகாரப் பெருவான்வெளியில் பிரயாணித்துக் கொண்டிருக்கிறது.'

அப்படியென்றால்...?

'தான் கடத்தப்படுகிறோமா! யாரால்? எங்கு?'

கண்களால் ஒரு திசைப்போடு விண்வெளிக் கலத்துள் நுழைவியபோது—

பளீரென்று ஜொலிக்கும் இரு உருவங்களைக் கண்டான் பிரபு. அவை மிக இலகுவாகக் கலத்தினுள்ளே மிதந்து அலைவதைக் கண்ணுற்றான். அதிலொன்று பெண்ணுருவம் போலவும், மற்றது ஆணுருவம் போலவும் தென்பட்டது. ஆனால் நிர்மாணமான மனித வடிவங்களாக அவை தோன்றவில்லை.

மனித வடிவங்களை மெழுகில் அப்படியே முக்கியெடுத்து மெழுகுப் படிவங்களாகச் செய்தது போன்று — மொழுக் மொழுக்கென்று — இருந்தது.

ஆனால், அவற்றின் இயக்கங்கள் அவை உயிரினம்தான் என்று புரிய வைத்தன. அவன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, அந்த ஆணுருவம் மெள்ள மெள்ளப் பெண்ணுருவத்தை அணுகி அணைத்து, சிறுகச் சிறுக அதனுடன் சங்கமமாகியது. சற்று நேரத்தில் அந்தச் சங்கமத்தின் இறுக்கத்தில் அவை முனைந்து செயல்பட்டபோது, இரு வேறு இடத்திலிருந்து கிளம்பிய சாம்பிராணிப் புகை ஒன்று கலக்கும்போது இனம் பிரித்து அறிய முடியாதது போல், ஒன்றுடன் ஒன்று ஊடுருவிக் கலந்து விட்டன.

பௌதிக தத்துவப்படியே ஓர் உருவமாகி விட்டன.

பிரபு வியந்து போனான்.

அப்படியானால் — இது — இவை — ஐ மீன்.. இவர்கள் யார்? வேறு கிரக வாசிகளா? எந்த கிரகத்தைச் சேர்ந்தவர்கள்? இரு உருவங்கள் ஒன்றுக்குள் ஒன்று புகுந்து ஒன்றேயாகிவிடுவது எவ்வாறு சாத்தியம்?

அவன் சிந்தனைக்கு விடை தருவது போல் அந்த உருவங்கள் மெள்ள மெள்ளப் பிரியலாயின. மீண்டும் இரு வேறு உருவங்கள் ஆகிவிட்டன; ஆணுருவாகவும், பெண்ணுரு

வாகவும் பழையபடி அலைய ஆரம்பித்தன. அவனைச் சுற்றிச் சுற்றி வந்தன.

சற்றே துணிவு கொண்டவனாக, ஒரு முறை அந்தப் பெண்ணுருஅருகே நெருங்கிய போது, சட்டென்று அதன் கையைப் பற்றி இழுக்க, அது எதிர்த்துச் செல்லும் வேகத்தில் ஜவ்வு போல் நீள ஆரம்பிக்க, அவன் பயந்துபோய்க் கையை விட்டபோது, அது மீண்டும் தன்னிலை அடைந்து விட்டதைப் பார்த்த பிரபு அசந்து போனான்.

திடீரென்று அந்த உருவங்களிடம் ஒரு பரபரப்புத் தெரிந்தது. கலத்தின் பக்கவாட்டில் சிறிய ஜன்னல் போன்றதோர் அமைப்பைத் திறந்தார்கள்; பார்த்தார்கள். பிரபுவும் அதன் வழியே பார்க்க முடிந்தது. அப்படிப் பார்த்தபோது—

இந்த விண்வெளிக் கலம் வீனஸ் கிரகத்தைச் சேர்ந்தது. இவர்கள் வீனஸ் கிரகவாசிகள். பெண்ணே, உனக்கென்ன பெயர்? நீதான் வெள்ளி தேவியா? சகோதரா! உன் பெயர்? நீதான் சுக்கிர தேவனா!

அடுத்து—

அந்த உருவங்கள் இரண்டும் கேபினுக்குள் புகுந்து கொண்டன. கண்ணாடி போன்ற தடுப்பின் வழியாக உள்ளே பல விதக் கருவிகள் இருப்பது பிரபுவுக்குத் தெரிந்தது. அவற்றை இயக்குவதில் அவை மிகவும் மும்முரமாகி விட்டது புரிந்தது.

வீனஸைச் சமீபித்த வெள்ளைப் பருந்து' அதைச் சுற்றி ஒரு முறை வலம் வந்தது. பின் எற்கனவே தேர்ந்தெடுத்துத் நிர்மாணிக்கப்பட்டிருந்த ஓரிடத்தை அடையாளம் கண்டுகொண்டு அங்கேயே வட்டமிட்டது. பின்னர் கொஞ்சம் கொஞ்சமாகத் தனது ஆல்ட்டிட்யூடைக் குறைத்துக் கொண்டு மெள்ள, மெள்ள வெள்ளித் தரையில் இறங்கி, ஒரு இலேசான குலுக்கலுக்குப் பிறகு நிலையாக அமர்ந்துகொண்டது. வெள்ளி தேவியும் சுக்கிரதேவனும் வெளியேறினார்கள். மறு கணத்தில் ஏதோ விசையால் உந்தப்பட்டுக் கட்டிலோடு பிரபு வெளிக் கொணரப்பட்டான்.

அங்கு அவன் கண்ட காட்சி! ஆஹா! ஆஹா!

வெள்ளி தேவியும் சுக்கிர தேவனும் போன்ற பல உருவங்கள் அங்கே கூடியிருந்தன. இலேசாக அசைந்து மிதந்து கொண்டிருந்தன. அப்படி மிதப்பதற்குக் காரணம், அவர்களது உடம்பின் எடைக் குறைவான தன்மையும் பூமியின் ஆகர்ஷண சக்தியில் எண்பத்தைந்து சத விகிதமே உள்ள வெள்ளியின் ஆகர்ஷண சக்தியுமே காரணங்கள் என்பதைப் பிரபு உணர்ந்தான்.

'ஆக, வெள்ளியில் ஜீவராசிகள் இருக்கின்றன. இவர்கள் இருவரும் விண்வெளி விஞ்ஞானிகள். என்னைப் பூமியிலிருந்து கிளப்பி இங்கு கொண்டு வந்திருக்கிறார்கள்.'

அந்த உருவங்கள் எல்லாம் பிரபுவை அதிசயமாகப் பார்த்தன. 'செய்ங் செய்ங்' என்றொரு ஒலியில் ஏதோ பேசிக் கொண்டன.

அடுத்து அவன் கொண்டு செல்லப்பட்ட இடம் விண்வெளி ஆராய்ச்சிக் கூடம் என்று நினைத்தான்.

பிரம்மாண்டமான அறையில் பலரக எலக்ட்ரானிக் சாதனங்களின் சூழலில் பிரபு இருத்தப்பட்டான். சுற்றிலும் பல கிரகங்களின் படங்களும் இருப்பதைக் கண்டான்.

மேலும் பார்த்தபோது—

சில இடங்களில் செவ்வக வடிவங்களில், டி.வி. போலத் தொடர்ந்து படங்கள் தெரிந்து கொண்டிருந்தன. அவற்றில் ஒன்றைக் கண்ட பிரபு பிரமித்துப் போனான். அது பூமியில் — ரஷ்யாவில் — நடைபெற்றுக் கொண்டிருக்கும் மே தின விழா அணிவகுப்பு ஆகும். அப்படியென்றால், பூமியில் நிகழ்வது அனைத்தும் இங்கே யிருந்தே இவர்கள் பார்க்க முடியும் என்றாகிறதே! அதுவுமின்றி மற்றொன்றும் பிரபுவுக்கு உரைத்தது. ஆக இது மே மாதம். தட்மீன்ஸ், அவன் வீனஸ் கிரகத்துக்கு வந்து சேர இரண்டு மாதங்கள் ஆகியிருக்கின்றன.

அது சமயம் வெள்ளி தேவியும் சுக்கிர தேவனும் உள்ளே வந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து மேலும் பத்து ஆணுருவங்கள்!

பிரபுவைப் படுக்க வைத்து, அவனது தலை முதல் கால்வரை பல ஒயர்களால் பல்வேறு சிக்கலான கருவிகளுடன் அவனைப் பிணைத்தனர். அவர்கள் அனைவரும் விஞ்ஞானிகள் என்பதையும் தன்னை ஸ்டடி செய்யப் போகிறார்கள் என்பதையும் புரிந்து கொண்டான் பிரபு.

சுக்ரதேவன் அவனை நெருங்கி நின்று ஒரு தட்டில் உணவு போன்ற ஒன்றை எடுத்து வாயிலிடுவது போல் பாவனை செய்தான்.

'ஓ... என்னை உணவு உட்கொள்ள வைத்து ஆராய விரும்புகிறார்களா?'

பிரபுவுக்கு நல்ல பசி.

அவன் அந்த உணவை உட்கொண்டான்.

அடுத்து—

சுக்ரதேவன் தரையில் படுத்துக்கொண்டான். பிரபுவும் 'உறங்கச் சொல்கிறார்கள்' என்பதைப் புரிந்து கொண்டு, விழிகளை மூடினான். உண்ட மயக்கம், உறங்கியே போனான்.

மீண்டும் கண் விழித்தபோது வெள்ளி தேவியையும் சுக்கிர தேவனையும் தவிர அறையில் வேறு யாருமே இல்லை. அவன் விழித்துக் கொள்வதையே எதிர்பார்த்துக்

டாக்டர் : உங்களுக்குக் குளிர், ஜுரம் ஒன்னும் இல்லியே ஏன் இப்படி நடுங்கறீங்க?

வந்தவர்: ஆட்டோவில் வந்தேன் டாக்டர்.

-எஸ். மாரியப்பன்



காத்திருந்தவன் போலக் காணப்பட்ட சக்ரதேவன் அடுத்துச் செய்த காரியம் பிரபுவைத் தர்மசங்கடத்தில் ஆழ்த்திற்று. சக்ரதேவன் வெள்ளி தேவியை அணைத்துக் கொண்டான். பிரபு வெட்கப்பட்டுக் கண்களை மூடிக் கொண்டான். ஆனால் சக்ரதேவன் அவனை உசுப்பிவிட்டு, மீண்டும் மீண்டும் அவன் பார்வைக்குமுன் வெள்ளித் தேவியைத் தழுவினான்.

'ஏன்? ஏன் இப்படிச் செய்கிறான்!'

சட்டென்று பிரபுவுக்கு அது உதயமாயிற்று – 'அப்படியானால் .... அப்படியானால் ... வெள்ளி தேவியுடன் என்னைச் சங்கமிக்கச் சொல்கிறானா? சங்கமத்தை விஞ்ஞான பூர்வமாக ஆராய விரும்புகிறார்களா?'

வெள்ளி தேவி ஒரேயடியாகப் பிரபுவிடம் மையலாகிப் போனாள். ஆராய்ச்சி தேவை ஏற்படாதபோதும், யாருமறியாமல் அவனைத் தேடி வந்து சங்கமிக்கலானாள். பிரபுவுக்கு அதில் எந்த சுகமும் கிட்டவில்லையாயினும் அவள் அன்புக்குப் பிரதிபலிப்புக் காட்டினான். அதில் உள் நோக்கமும் இருந்தது. இந்த அனுபவங்கள், அவனது காதலி வஸந்தியின் நினைவுகளை அவனுள் கிளறி, பூமிக்குத் திரும்ப அவனைத் தூண்டிக் கொண்டிருந்தன. அப்படி பூமிக்குத் திரும்ப வேண்டுமானால், இந்த வெள்ளி தேவியைத்தானே அவன் வசமாக வளைத்துக்கொள்ள வேண்டியிருக்கும்? வேறு யார் அவனுக்கு உதவுவார்கள்?

வழக்கம் போல் வந்த வெள்ளி தேவி அவனுடன் சங்கமிக்க, வழக்கத்துக்கு மாறாக ஒன்று நடந்தது! எதிர்பாராத விதமாக சக்ரதேவன் உள்ளே வந்து விட்டான். அவர்களை அந்நிலையில் கண்டும்விட்டான். வெள்ளி தேவி பதறிப்போனாள். சக்ரதேவனோ விருட்டென்று ஒரு ஆவேசத்தோடு வெளியேறினான். பிரபுவுக்குப் புரிந்தது. அறிவியல் வளர்ச்சிக்காக அந்த நோக்கில் ஒரு பூமி மகனும் வெள்ளிக் கிரகப் பெண்ணும் மன ஈடுபாடின்றி சங்கமிப்பதை விஞ்ஞான பூர்வமாக ஆராயத் தயாராயிருந்தான் சக்கிரதேவன். ஆனால் அதே பெண் பூமி மகனிடம் மையல் கொண்டு சங்கமிப்பதை அவன் சகித்துக் கொள்ளத் தயாராக இல்லை! அந்தக் கிரகத்தின் நியமம் அப்படி! இதனால் என்ன விபரீதம் நேரப் போகிறதோ என்று பயந்து கொண்டே இருந்தான் பிரபு!

ஒரு புலர் காலைப் பொழுதில், வெள்ளியின் தொடு வானில் ஆதவன் எழும்பிக் கொண்டிருக்கும் வேளையில், பிரபுவைப் பழைய வெண் பருந்து விண்கலத்துக்கு இட்டுச் சென்றார்கள். அவன் உள்ளம் களி கொண்டு துள்ளியது. கலத்துள் பிரபு நுழைந்த பின், வெள்ளி தேவியையும் அந்த விஞ்ஞானிகள் உள்ளே வற்புறுத்தி ஏற்றிய போது பிரபு புரியாமல் திகைத்தான்.

வெள்ளி தேவியோ ஒரு விரக்தி நிலையில் செயல்பட்டது போலத் தோன்றிற்று.

சக்ரதேவன் முகத்தில் ஒரு வெற்றிப் பெருமிதம் விளையாடிக் கொண்டிருந்தது. அது எதனால்? அவன் வெள்ளி தேவியை விரும்பிக் காதலித்துக் கொண்டிருந்தானே...?



முதல் மாணவன்: ''ஒரு ஐடியாவும் 'ஸ்டிரைக்' ஆக மாட்டேங்குதே!''
இரண்டாமவன்: ''எதற்கு?''
முதல் மாணவன்: ''காலேஜில் ஸ்டிரைக் செய்வதற்கு!''
-பி. பூபால்சிங்

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

விண்வெளிக் கலத்தை வெள்ளி தேவியே இயக்கினாள். கலம் வீனஸ் தரையை விட்டு எழும்பி, சடுதியில் இருட் பெருவெளியான வான் வெளியை அடைந்தது. இனி அது தன் போக்கில் பூமியை நெருங்கும்வரை போக வேண்டியதுதான். பிரபு நன்றிப் பெருக்கோடு வெள்ளி தேவியை நெருங்கினான். கலத்தில் அவர்கள் இருவர் மட்டுமே தான் இருந்தனர். வெள்ளி தேவி குலுங்கிக் குலுங்கி அழுதாள். பிரபு புரிந்து கொள்ள முடியாமல் திணறினான். தன்னைப் பிரிய நேருமென்பதால் இந்தச் சோகமோ? ஆனால் அது தவிர்க்க முடியாதது என்பது அவளும் அறிந்ததுதானே?

ஆயிற்று.

பூமி நெருங்க–

வெள்ளி தேவி கருமமே கண்ணாக கலத்தை கவனமாக இயக்கி இந்தியா மேல் பறந்து, பிரபுவின் இருப்பிடத்துக்கு மேலாக வட்டமிட்டு, விசையை இயக்கி வெண் பருந்தின் வயிற்றைத் திறந்து ஒரு அழுத்தமான முத்தத்துடன் பிரபுவுக்குப் பிரியா விடை கொடுத்துக் கட்டிலுடன் கீழே அனுப்பி வைத்த சிறிது நேரத்தில்....

பிரபு பார்த்துக் கொண்டேயிருக்கும் போது, வெண் பருந்து செம்பருந்தாயிற்று. குபீரென்று தீப்பற்றிக் கொண்டது. மறு விநாடி பஸ்பமாகி, ஒன்றுமே யில்லாமற் போனது! பிரபு அலறினான்.

''ஓ....நோ....நோ... ஓ... காட்...''

பிரபுவுக்கு இப்போதுதான் அர்த்தமாயிற்று. வெள்ளி தேவியின் அழுத்தமான சோகத்துக்குக் காரணம்.

வீனஸ் கிரக விஞ்ஞானிகள் இந்தத் தண்டனையை அவளுக்கு நிர்ணயித்துத்தான் விண்கலத்தில் ஏற்றி அனுப்பி யிருக்கிறார்கள்; வெள்ளி தேவியின் ஆழமான உண்மைக் காதலுக்கு அவள் உயிரை அவர்கள்.... காவு வாங்கிவிட்டார்கள்.

''ஓ....வெள்ளி தேவி...வெள்ளி தேவி!'' தாள முடியாத சோகத்தோடு பிரபு அரற்றிக்கொண்டே இருந்தான்.

உறவின்
வேதனைப்படுகிறோம்!



● மற்ற பெண்களிடம் தோன்றும் காம உணர்வு, உஷாவிடம் புனிதமான அன்பாக மலர்ந்தது என்று ஆரம்பத்தில் கூறியது போலவே கடைசி வரை கதையைக் கொண்டு போயிருக்கலாம்.
பம்பாய்-54 விஜயராஜன்

● கதையின் முடிவை ஜீரணிக்க முடியவில்லை!
தஞ்சாவூர்-1 ஏ.ஜி. அசோக்ராஜ்

● இதுபோல் கதையை இனி அவர்கள் எழுதி நீங்கள் பிரசுரித்தால் நாங்களெல்லாம் கீழ்ப்பாக்கத்தில் கல்யாணியுடன் போய் இருக்க வேண்டியதுதான்.
மதுரை-20 கா. கஸ்தூரி

● ''உறவின் கைதிகள்'' கதை ஆங்கிலத்திலேயே இருந்திருந்தால் மக்கள் வரவேற்றிருப்பார்களோ என்னவோ. கதையின் முடிவை நிச்சயமாகக் கல்கி வாசகர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.
தஞ்சை கே. ஆர். மனோகர்

● சினிமாவில் நடித்து நடித்து அதே பழக்கமாக இருந்து வாரம் ஒன்றரைப் பக்கம் ஆளுக்கு ஆள் கதறியிருக்க வேண்டாம்.
மைசூர்-1 ஹேமா ஜெகந்நாதன்

● ஆங்கிலப் பத்திரிகைக்கு எழுதி வைத்திருந்த கதையின் முடிவைக் கல்கி பத்திரிகைக்காக மாற்றி எழுதும்படி சொல்லாதது வருந்தத் தக்கதாகிவிட்டது.
சென்னை-38 சரோஜா ராஜாராமன்

● கேவலமான முடிவைக் கொண்ட தொடர் நாவலால் கல்கி தன் தரமிழந்து வெறுமை அடைந்து விட்டது. பிராயச்சித்தமாய் கங்கா ஸ்நானத்துக்குப் பின் தீபாவளி சிறப்பிதழில் வாரியார், கண்ணதாசன், ம. பொ. சி.யின் கருத்துக்களை அள்ளி வருவதால் மன்னிக்கிறேன்.
என். எஸ். மணியம்

● ஏதோ ஒரு மூன்றாந்தரப் பத்திரிகையில் வந்திருக்க வேண்டியது கல்கியில் வந்துவிட்டது. உங்கள் சிவப்பு மை நிரம்பிய பேனா என்ன செய்து கொண்டிருந்தது?
ஆத்தங்குடி சி. பாலசந்தர்

● அபத்தத்துக்குப் பெயர் புதுமையல்ல. தமிழ்ப் பண்பாடு உருவத்தோடு உலவுவதில்லை; உணர்வின் மூலமாகவும் வாழ்ந்து வருகிறது. இது போன்ற கதைகள் மக்கள் மத்தியில் நல்லெண்ணங்களை வளர்க்காது.
சென்னை-56 பூவை விமலன்

● பல ஆண்டுகளாகக் கல்கியைத் தொடர்ந்து படித்து வரும் என்போன்ற வாசகர்களுடைய உள்ளத்தில் மாறாத வடு ஏற்படுத்தி விட்டீர்கள்.
திருத்துறைப்பூண்டி கா. நடராஜன்

● சுவையான காதல் இழையோடிய கதை. வக்கிரமான முடிவினால் நமது வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்கிறீர்.
இராஜபாளையம் டி. கே. ஜெயராம்சிங்

● தற்காலக் கல்லூரிப் பெண்கள் சுய கட்டுப்பாடு இல்லாமல் இருந்தால் கூட இந்த அளவு கேடு கெட மாட்டார்கள். எந்த மனிதனும் எவ்வளவு மறைவாக இருந்தாலும் தான் பெற்ற பெண் என்றால் தன்னையறியாமல் பாசம் வர வாய்ப்பு இருக்கிறது. கல்லூரி மாணவியை நாயகியாக்கி எங்களை அவமானப்படுத்த வேண்டாம்.

இரத்தம் கொதிக்கக் கல்லூரி மாணவிகள் பலர் சேர்ந்து விமரிசித்துள்ளோம்.
திருநகர்-மதுரை பத்மா

● இயற்கையின் தன்மை தன்னை அறியாமலேயே ஒருவிதப் பாச உணர்ச்சியை தந்தை—மகளிடம் ஏற்படுத்தும் என்பதை ஏனோ ஜெயலலிதா அறியாமல் அபத்த முடிவைக் கதைக்குக் கொடுத்திருக்கிறார்?
விழுப்புரம் கே. சத்யவேகேசவரன்

● படு அபத்தமான — கீழ்த்தரமான — தொடர் கதை வந்த கல்கி இதழ்கள் அனைத்தும் அதன் சரித்திரத்தில் அழிக்க முடியாத கரும் புள்ளிகள்.
திருச்சி-6 எஸ்.கே. சாரி

● ஒரு நடிகை எழுத்தாளரானால் எப்படி இருக்கும்? இப்படித்தான் இருக்கும் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. தரம் வாய்ந்த பத்திரிகையில் இப்படி ஒரு தொடர் கதையா? மூச்சு விட முடியவில்லை சார்...! காப்பாற்றுங்கள்!
சென்னை-2 கருணைக் கதிரவன்

● என் கணவர் இவ்வளவு துணிந்து ஒரு பெண் எழுத்தாளரும் நமது பாரதப் பண்புகளை மீறி எழுத மாட்டார். அப்படி எழுதினாலும் கல்கி பிரசுரிக்காது என்று அடித்துச் சொன்னார். எங்களைப் போல் பலரைத் தலைகுனிய வைத்து விட்டீர்களே!
பம்பாய்-57 சத்யபாமா மணி



கைதிகள்

வாழ்த்துகிறோம்!

சினிமா நடிகையாவது கதை எழுதுவதாவது என்று ஒப்பாரி வைத்தவர்களின் முகத்தில் கரி பூசிவிட்டார், ஜெயலலிதா.
பெங்களூர்-5 ஆர். எஸ். சாவித்திரி

● நெடுகிலும் சினிமாத்தனம் வீசினாலும், பாம்பின் கால் பாம்பறியும் என்பதற்கு ஏற்ப ஒரு சினிமா நடிகரின் நிஜ வாழ்க்கையை ஒரு நடிகையால் மட்டுமே எழுத முடியும் என்பதை நிரூபித்துவிட்டார் ஜெயலலிதா. ராஜீவ்குமாரின் பாத்திரப் படைப்பு மறக்க முடியாதது. மாறுபட்ட எழுத்தாளரால் எழுதப்பட்ட வேறுபட்ட கதை.
வேலூர் வேணுகோபால்

● எடுத்த காரியத்தில் குற்றம் கூற முடியாத வண்ணம் முடித்து வைத்திருக்கிறார். ஒவ்வொரு அத்தியாயத்துக்கும் பொருத்தமான சொற்றொடர்களைத் தலைப்பில் கூறியிருந்தது பாராட்டுக்குரியது.
பெங்களூர்-5 அ. குமார்

● ஆரம்பம் முதல் நிறைவு வரை நாவலின் சுவை சிறிதும் குன்றாமல் ஜெயலலிதா படைத்திருக்கிறார். நாவல்களில் ''உறவின் கைதிகள்'' ஒரு குறிஞ்சி மலர்.
துடுப்பதி பி. ரங்கநாதன்

● ஆரம்பத்திலிருந்து நன்றாக இருந்தது. அதன் முடிவும் நன்றாக இருந்தது. அதில் உஷா கேரக்டர் மிகவும் பரிதாப உணர்வை ஏற்படுத்துகிறது. ஜெயலலிதாவின் நடை மிகவும் சிறப்பாக இருந்தது. சியலி ஐ லைக் இட்.
பரமக்குடி ஆர். விஜயலக்ஷ்மி

● பொருத்தமற்ற உறவைக் கொண்டமைக்காக ராஜீவும் உஷாவும் கொடுமையாகத் தண்டிக்கப்படுகிறார்கள். கல்யாணிக்குக் கொடுத்த முடிவும் கடுமையானது: பொருத்தமானது. படித்து முடித்த பின் அவர்கள் பட்ட வேதனையை என் நெஞ்சிலே வாள் பிளந்தது போன்ற வலியாக அனுபவித்தேன்.
சென்னை-25 சிவராம நமசிவாயம்

● ஜெயலலிதா அவர்கள் கதையைத் தெளிந்த நீரோடை போன்று கொண்டு சென்றுள்ளார். கதையின் முடிவு மனத்தில் ஓர் இனம் புரியாத நீங்காத வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.
கொடுமுடி சி. நவநீதன்

● ராஜீவ் குமார் தற்கொலை செய்துகொள்வது பொருத்தமான முடிவு.

● பெண்ணின் அர்த்தமற்ற பிடிவாதத்தினால் வாழ்க்கை எப்படிப் பாழாகிப்போகும் என்ற உயரிய கருத்தைத் தனது ''உறவின் கைதிகள்'' கதையின் மூலம் ஜெயலலிதா மிகத் தெள்ளத் தெளிவாக விளக்கிவிட்டார். உஷாவின் தாயைப் போலிருக்கும் பலருக்கு இந்தக் கதை ஒரு பாடமாகும். கதை பட்டை தீட்டிய வைரம்போல் ஜொலித்தது.
திருச்சி வாசுகி அரசு

● முன் பின் தெரியாதவர்களுடன் காதல் காதல் என்று குதிப்பது! குலம் கோத்ரம் என்று சும்மாவா சொன்னார்கள்? சரியான தண்டனை!
உத்தமபாளையம் வி.கே. ராமசந்திரன்

● கருத்தாழம் மிக்கதாகவும் மற்ற கதைகளிலிருந்து மாறுபட்டதாகவும் பிரமாதமாக அமைந்தது. ஒரு நல்ல எழுத்தாளர் நமக்குக் கிடைத்தார்.
சென்னை-33 கே. பாபு

● கதையின் முடிவு நமது கலாசாரப் பண்பாட்டுக்கு வெற்றி.
சேரகுளம் ப.ச. சிவாயசிவசுந்தரம்

● உஷாவைப் பொருத்தமட்டில் 'பாவம்' என்ற நிலை இருப்பினும் நாகரிக உலகில் வரம்புக்கு மேல் விளையாடுவது எங்கே அடித்துச் செல்லும் என்பதைப் புலப்படுத்துகிறது.

கணவனிடமிருந்து பிரிவதும் அவனிடம் உண்மைகளை மறைப்பதும் எத்தகைய விபரீதங்களை உருவாக்கும் என்பதைக் கல்யாணி படைப்பு உணர்த்துகிறது.

''அசிங்கங்கள் ஆள்வதில்லை'' என்பதைத் தெளிவுபடுத்தும் முடிவு. ஜெயலலிதாவுக்கு மனமார்ந்த நன்றி.
சமுத்திரம் பி. பி. சம்பத்

● சினிமா நட்சத்திரம் ராஜீவ் குமாரின் வாழ்க்கை நல்ல சித்திரிப்பு. கையைச் சொடுக்கினால் ஒரு பெண் படையே அவன் காலடியில் கிடக்கச் செய்பவன். அப்படி வாழ்ந்தவனுக்கு இப்படியொரு வீழ்ச்சி! எவ்வளவு பெரிய தண்டனை! எவ்வளவு பெரிய சோகம்! வேண்டும்தான் அவனுக்கு!
சென்னை-28 டி.வி. வைத்தியநாதன்

அத்தியாயம் 15

"இந்தக் கண்றாவியைப் பார்த்துக் கொண்டு இங்கே நிற்க என்னால் முடியாது... வா என்கூட...." என்று ஜெயா கூறிவிட்டு நகர்ந்தாள்.

மௌனமாக மல்லிகா அவளைப் பின் தொடர்ந்தாள். ஆஸ்பத்திரிக்கு வெளியே வந்ததும், 'அப்பன் ஒரு கிறுக்குன்னு பிள்ளை அதுக்கு மேலே... ஒரு கிழவியை இவன் தன் கையாலே தூக்கிண்டு அலைவானேன்?" என்றாள். அவளுடைய வார்த்தைகள் தன்னைப் பார்த்துச் சொல்லுவதாக மல்லிகாவுக்குப் படவில்லை. தன்னுள் வெடிக்கும் பீரங்கிகள் வெளியே கேட்பதாகப் பட்டது.

"வண்டியில் ஏறு!" சொன்ன ஜெயா கார் கதவைத் திறந்தாள்.

"நான்...நான்..."

"ஏன் தயங்கறே? வீட்டுக்குப் போகலாம் வா...."

"என் டியூட்டி நேரம் இன்னும் முடியவில்லே மாமி!" என்றாள் மல்லிகா.

"இப்ப அவர் தூங்கிண்டு இருக்கார்..."

"நாலு நாலரைக்கு நான் அவரைக் கவனிக்க வேண்டும்."

"காரில் திருப்பி அனுப்பறேன்...."

"வந்து....வந்து நான் இங்கேயே இருக்கிறேன். மாப்பிள்ளை ராஜாமணி கோபித்துக்கொள்ளுவார்!"

"நீங்களெல்லோரும் ஒரு கட்சியா?"

"அதில்லே...."

"பின் என்ன?"

"மன்னிக்கணும் மாமி. உங்க பிள்ளை ஏதாவது சொல்லுவார்..."

"உனக்கு என்ன சம்பளம்னு சொன்னே?"

"முந்நூறு."

"அவர் தூங்கறப்போ நீ என்ன வேலை செய்யறே?"

"ஒன்றுமில்லே."

"விருதாவா இருக்கிற நேரத்துக்கும் சம்பளமா?"

மல்லிகாவுக்குத் திடீரென்று கோபம் வந்தது.

"விருதாவா ஒரு மணி நேரமோ இரண்டு மணி நேரமோ போறதும் அதற்குப் பிறகு வேலை முதுகை ஒடிக்கும். மாப்பிள்ளை ராஜாமணியைப் போல உள்ளவர்களுக்கு சிசுருஷை செய்வது இருக்கே... உம் அது உங்களுக்குத் தெரியாது."

"அவர் என் புருஷர்."

"தெரியும்."

"அப்ப பேசாமல் வண்டியில் ஏறு..."

"ஒரு சின்னக் கேள்வி கேட்கலாமா?"

"சின்னது என்ன, பெரிசாவே கேளு."

"நான் உங்க வீட்டுக்கு வந்து என்ன செய்யப் போறேன்?"

"சில வேலைகள் இருக்கு. நீ இருந்தால் கூடமாட உபகாரம் செய்தால்...."

"ஸாரி, மாமி. நான் வார்டுக்குப் போகிறேன்.... தயை செய்து என்னை மன்னியுங்கள்."

சொன்ன மல்லிகா பதிலுக்குக் காத்திருக்கவில்லை.

படீரென்று கார் கதவு சாத்தப்படும் ஓசை கேட்டது.

அவள் மீண்டும் அர்ஜுனன் இருக்கும் வார்டுக்கு வந்தபோது அவனைக் காணவில்லை. அவளுடைய தகப்பனார் நடேசன் கட்டிலில் கிடக்காமல், வராந்தாவில் ஒரு ஸ்டூல் மீது உட்கார்ந்திருந்தார். நீள அகல



மில்லாத ஸ்டூலில் இரு கால்களையும் ஒடுக்கி வைத்து அமர்ந்திருந்தார்.

அருகே திருமதி பாகீரதி ராமனுதன் ஒரு எவர்சில்வர் டிபன் பாத்திரத்தைத் திறந்து மூடியை நடேசனிடம் நீட்டினுள்.

''நீங்க ரொம்பச் சிரமப்படறேன்'' என்றுர் நடேசன்.

''இது சேவை.''

மூடியில் ஒரு சிறிய ஸ்பூனுல் உப்புமாவைப் பரிமாற ஆரம்பித்தாள் பாகீரதி.

''நல்ல வேளை. என் பொண்ணே அந்த அர்ஜுனனே இப்ப இங்கே இல்லே... அது என்ன ஆவக்காயா? எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஜோரா பிளாஸ்டிக்கில் பாக் கெட்டா....''

''நான் இங்கே இருக்கிறேன், அப்பா!''

ஒரு நிமிடம் நடேசனுடைய கை ஆடியது. மூடி கீழே விழுந்துவிடும் போல இருந்தது.

''ஏம்பா இந்த வெங்காய உப்புமாவையும் ஆவக்காயையும் மோகக்கத்தான் ஜி.





GH

டி.ஏ.ஆர்

எச்.க்கு வரணும்னு படாத பாடு படுத்தி னீர்களா?''

அடுத்த கணம் அவர் கையிலிருந்த உப்புமாவைப் பிடுங்கினுள்.

''உன் அப்பாவுக்கு இப்ப உடம்புக்கு ஒண்ணுமில்லே, பொண்ணே!''

''ஒன்றுமில்லேன்னு இங்கே ஜி. எச்.ல் இருப்பானேன்?''

''நாளைக்கு டிஸ்சார்ஜ் வாங்கிக் கொடுக்கப் போகிறேன்.''

''அப்படிச் செய்ய நீங்க யார்? நீங்கதான் என் அப்பாவை ஜி. எச்.ல் அட்மிட் பண்ணினீர்களா?''

''சார், ஏன் உங்க பெண் இப்படிப் பொரியறுன்?''

நடேசன் இளித்தார்.

''சுபாவத்தில் அவள் கொஞ்சம் விருவிருக்கப் பேசுவாள். மல்லிகா, உனக்கு ஒரு சமாசாரம் தெரியுமோ?''

''தெரிய வேண்டாம்.''

''தெரிஞ்சா நீ இந்த வராந்தாவிலே டான்ஸ் ஆட ஆரம்பிச்சுடுவே... அதோ பார், சுவரிலே சாய்ந்திருக்கிற பார்சலைப் பார்....''

''அது என்ன?''

''நூலைப் பிரிச்சுப் பார், மல்லிகா!'' என்றுன் பாரதி.

ஸ்டூலுக்குச் சற்று தூரத்தில் சுவரில் சாய்த்து வைத்திருந்த பார்சலை மல்லிகா எடுத்தாள். கனமாக இருந்தது.

நூலை அவிழ்த்து, காகித உறையையும் அப்புறப்படுத்தியபோது, பளபளவென்று வார்னிஷ் அடித்த பலகை கண்ணில் பட்டது.

இரு கைகளாலும் தூக்கிப் பிடித்துப் பார்த்தாள், படித்தாள். தலை சுற்றியது.

'சோதிட ரத்னகர, வராக மிஹிர ஞான பண்டிதர், கோபி நடேசனார்.

பார்க்கும் நேரம் காலை 9—11 மாலை 3–6''

''என்னப்பா இது?''

''அவரைக் கேட்காதே மல்லிகா, என்னைக் கேளு!''

''சரி, உங்களையே கேட்கிறேன். என்ன இது?''

''என் வீடு பெரிய வீடு. வாசற் பக்கத்தில் ஒரு பெரிய பாத் அட்டாச்டு ரூம் இருக்கு. உன் அப்பா ஒரு நல்ல நாளாகப் பார்த்து..''

''புரியறது... ஏம்ப்பா, இது தேவையா?''

''பணம் யாருக்குத் தேவை இல்லே? நாளுக்கு அம்பது அறுபதுன்னு வரும். மாசம் ஆயிரத்து ஐநூறு இரண்டாயிரம்னு வந்தா, என்ன கசக்கிறதா?''

''அப்பா நீங்கள் பதில் சொல்லுங்கள். —இது தேவையா?''

''மிஸர்ஸ் பாரதி ராமநாதன் என் கிட்டே ஏதோ ஒரு திவ்ய சக்தி இருக்குன்னு நினைக்கிறர், மல்லிகா....''

''அதுக்காக....''

''நான் கற்றிருக்கிற வித்தை மணல்லே விழற தண்ணீரா இருக்கப்படாதுன்னு நினைக்கிறு....''

''டி. நகர் பங்களாவிலே கார் கராஜுக்கு மேலே ஒரு ஃப்ளாட் கட்டி வைச்சிருக்கேன். விருந்தாளிகள் வந்தா சௌகரியமாகத் தங்க. ஒரு சின்ன ஹால், ஒரு சின்ன ரூம், ஒரு சின்ன கிச்சன். இந்தக் காலத்து நிலவரப்படி குறைஞ்சது நானூறு ரூபாயாவது அந்த இடத்துக்குக் கிடைக்கும். ஆனு அதை நான் உன் அப்பாவுக்காகத் தியாகம் செய்யத் தயார்.''

''டி. நகர்லே எங்கே?''

''பனகல் பார்க் பக்கம்.''

''ஹபிபுல்லா ரோடுக்கு அது பக்கமா?''

''ஓ, உனக்கு மெட்ராஸ் புதுசு இல்லே.. ஒரு பத்து நிமிஷ நடை....''

நடேசன் ஆவலும் ஆர்வமும் ததும்பும் பார்வையில் பெண்ணைக் கெஞ்சினர்.

''முதல்லே ஒரு விஷயம்.''

''என்ன, மல்லிகா?''

''நீங்க டிஸ்சார்ஜ் வாங்கிக் கொடுக்கிறதை நான் விரும்பல்லே. என் அப்பா தீராத வயிற்று வலியால், ஹாஹான்னு ராத்திரி பெல்லாம் ரயில்லே அலறிண்டு இங்கே வந்து விழுந்தார். அந்த டெஸ்ட், இந்த டெஸ்ட்னு ஏகப்பட்ட டெஸ்ட் டெல்லாம் ஆஸ்பத்திரிலே எடுத்திருக்கா. அதன் முடிவுகள் இதுவரையில் என்னன்னு எனக்கும் சரி, இவருக்கும் சரி தெரியாது. அதெல்லாம் வந்தப்புறம், என் அப்பாவுக்கு அபாயம் ஏதும் இல்லேன்னு டாக்டர் சொன்னப்புறம்தான் . இந்த ஜி. எச். விருந்து டிஸ்சார்ஜ் ஆகும்.''

''பூ. இவ்வளவுதானே? நான் டெஸ்ட் ரிஸல்ட்டை பெல்லாம் கவனிக்கிறேன். நீ கவலையை விடு!'' என்றுன் பாரதி. உடனடியாக, ''அதோ மாப்பிள்ளையின் பிள்ளை வர்ருன்'' என்றுள்.

''இங்கே என்ன டிராமா! ஓ, மிஸர்ஸ் பாரதி ராமனுதனு?''

''ஆமாப்பா.''

''உங்க சோஷியல் ஒர்க் டே இன்னிக்கு இல்லையா?'' என்றுன் அர்ஜுன்.

''இன்னிக்கு ஜோதிட ரத்னுகர, வராக மிஹிர ஞான பண்டிதர் நடேசனுருக்கு உப்புமா டே!'' என்றுன் மல்லிகா.

அர்ஜுன் பார்த்தான். பாரதி கையில் டிபன் பாத்திரம், மல்லிகாவின் கையில் மூடி. மூடி நிறைய உப்புமா. அதன் மேல் பிளாஸ்டிக் உறையில் ஊறுகாய்.

''இதையும் பாருங்கள்.''

அர்ஜுனன் பெயர்ப் பலகையைப் பார்த்தான். ''சபாஷ்! மிஸர்ஸ் பாரதி, எக்ஸலண்ட்!'' என்றுன்.

''நீங்க இதை ஆமோதிக்கிறீர்களா?''

''ஜி. எச்சிலிருந்து டிஸ்சார்ஜ் ஆனப்புறம் நாலு காசு சம்பாதிக்க மிஸர்ஸ் பாரதி வழி காட்டுகிறர். அந்த வழியில் போனுல் என்ன தப்பா!''

''பாஸஞ்சர் ட்ரெயினுக்கும் எக்ஸ்பிரஸ் ட்ரெயினுக்கும் என்ன வித்தியாசம்...''

''பாஸஞ்சர் ட்ரெயின் மெதுவா லேட்டா வரும். எக்ஸ்பிரஸ் ட்ரெயின் ஸ்பீடா லேட்டா வரும்...!''

- கிணத்துக்கடவு ரவி





பார்த்தறியாப் புதுமை. பரவசக் கிளுகிளுப்பு. லிரில்.
அலைமோதியும் தளதள பச்சை, அதன் கூடவோ குளுகுளு எலுமிச்சை...
புதுக் குமரியாய் உங்களைப் பூரித்தெழ வைக்கும்.

லிரில்
புத்துணர்வு சோப் **மணம்கமழும் எலுமிச்சைப் புத்துணர்ச்சி வெள்ளம்.**

லிண்டாஸ்—LR.37 334 TM

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.



''அவசரப்படாதேடா தம்பி! இபங்களை ஏற்றி வைச்சுட்டுப் பட்டாக கட வரேன்!''

மேலட்டை வண்ணப்படம் எடுத்தவர் : திலீப் பானர்ஜி

''அப்படிச் சொல்லு.''

''அது சரி, ஏன் சார் நீங்க உப்புமா ஊறுகாய் எல்லாம் சாப்பிடலாமா?.''

''அவர் உடம்புக்கு எதுவும் இல்லே!'' என்றாள் பாகீரதி.

''நீங்க எம்.டி.யா இல்லே எஃப்.ஆர்.சி.பியா?''

''ஏதோ மனோ வியாகூலம். மனசு ரொம்ப ஒர்ரி பண்ணிண்டா, முதல்லே குடலைத்தான் பாதிக்கும். கவலே இல்லாமல் பத்து நாள் ஒழுங்கா சாப்பிட்டுத் தூங்கினல் பெரியவர் இன்னும் இருபது வருஷம் ராஜநடை போடுவார்!''

''இப்ப நீங்க இதையெல்லாம் எடுத்துக் கொண்டு உங்க வீட்டுக்குப் போங்கள்.''

''இன்னிக்கு எட்டாம் நாள் சுக்லபட்ச பஞ்சமி. நல்ல நாள்.... அன்னிக்கு பலகையை மாட்டிடறேன். அதுக்கு முன்னலே எல்லாப் பேப்பர்லேயும் விளம்பரம் கொடுத்திடறேன்.''

பாகீரதி புறப்பட்டுச் சென்றாள்.

அவள் போன பிறகு, ''உங்களுக்கு என்னப்பா பைத்தியமா?'' என்றாள் மல்லிகா.

அர்ஜுன் இடைமறித்தான்.

''கொஞ்சம் யதார்த்தமா யோசிச்சுப் பார் மல்லிகா. விஷயம்தெரியாத கண்ட கண்டவாளெல்லாம் ஒரு போர்டை மாட்டிண்டு மூஞ்சியை அடிக்கடி பத்திரிகை விளம்பரத்திலே காட்டிண்டு ஆயிரம் ஆயிரமா சம்பாதிக்கிறன். உன் அப்பா கையிலே சரக்கு இருக்கு. சரக்கு விற்பனையாக, நல்ல மார்க்கெட் இருக்கு. என்ன தப்பு?''

மல்லிகா மௌனமானாள். உடனடியாகப் பதில் சொல்ல அவள் விரும்பவில்லே. அவளும் அவளுடைய அப்பாவும் எதற்காகச் சென்னேக்கு வந்தார்கள் என்ற காரணமே இப்போது கேலியாகப் பட்டது.

''அப்பா, கட்டிலில் போய்ப் படுத்துக் கொள்ளுங்கள். அப்புறம் பேசிக்கலாம்.''

அப்பா மெதுவாக எழுந்து நடந்து கட்டிலே அடைந்தார்.

''உங்க அம்மா வந்திருக்கா.''

''தெரியுமே!''

''தெரியுமா? யார் சொன்னார்கள்? அப்பாவா?''

''நீதான் அவளை இந்த வார்டுக்கு அழைச்சுண்டு வந்தாயே?''

''ஓ, நாங்க வந்ததைப் பார்த்தீர்களா?''

''நான் என் அம்மாவைப் பார்த்தபோது அவள் என்னைப் பார்க்கவில்லே.''

''பெரிய கல்லுளிமங்கன்.''

''என் அம்மா ஒரு போர்.''

''இந்த அபிப்பிராயத்தை நீங்க, அவள் பிள்ளை சொல்லலாம். ஆனு நான் சொல்லப் படாது. அப்புறம்... ஹங்... ஹார்ட்டி கங்கிராஜுலேஷன்ஸ்!''

''எதுக்கு?''

''நீங்க பெண் பார்க்கப் போகிறீர்கள்!''

''அப்படியா?''

''அட்வகேட் குஞ்சிதபாதம் பெண்ணும். அம்மாவுக்கும் அப்பாவுக்கும் ஒரு பெரிய யுத்தமே நடந்தது.''

''அப்பா தோத்திருப்பாரே.''

''தெரியாது. அப்பா பாட்டிலே எடுத்தார். அம்மா என்னை அழைச்சுண்டு வெளியில் வந்தாள். அதுசரி, என்னைச் சிந்தாதிரிப்பேட்டையில் என் உறவினர் வீட்டில் கொண்டு விடுகிறீர்களா?''

''ஓ, அம்மா வந்துட்டாளேன்னு பயம் வந்துடுத்தா?''

''எனக்கு என்ன பயம்?''

''அப்ப போகாம இரு.''

''ஏற்கனவே வேம்பு மாமி வாயில் வந்ததைப் பேசுவு. என்னென்னவோ நினைக்கிறு. இப்ப உங்க அம்மா கிட்டேயும் நன்கு தூபம் போடுவா... எதுக்கு வம்பை விலே கொடுத்து வாங்கணும். நான் சிந்தாதிரிப்பேட்டைக்குப் போகிறேன்.''

''அது இருக்கட்டும். இன்னிக்குச் சாயங்காலம் ஒரு எம். பி.யும் ஒரு எம். எல். ஏயும் என் அப்பாவைப் பார்க்க வருகிறார்கள்.''

''யார் சொன்னு?''

''எம்.பி. போன் பண்ணினராம். கார்டியாலஜி பிளாக்லே சொன்னு.''

''இப்ப என்ன சொல்ல வருகிறீர்கள்?''

''அவர்கள் ஐந்தரை மணிக்கு வருகிறார்கள் எம்.பி.யும் அப்பாவும் பேச ஆரம்பித்தால் பொழுது விடிஞ்சுடும்.''

''அதனாலே?''

''அப்பா உன்னை ஐந்து மணிக்கே போயிடுன்னு சொல்லிடுவார்.... நீ ஃப்ரீ... உன் அப்பா வெங்காய உப்புமா தின்கிற அளவுக்குத் தேறிவிட்டார். அதனாலே நானும் ஃப்ரீ.''

''சரி, நாம ரெண்டு பேரும் ஃப்ரீ.... அதுக்காக?''

''சங்கர சாஸ்திரிகளைப் பார்த்துவிட்டு வருவோம்.''

''யார் சங்கர சாஸ்திரிகள்?''

''நன்னுப் பாடுவார். அதுவும் சங்கராபரணம் இருக்கே....''


''சரிசரி... புரியறது....''

''அதுக்கு அப்புறம் வீடு... அங்கே சாப்பாடு.''

மல்லிகா பதில் சொல்லவில்லே. என்ன சொல்லுவது?

(தொடரும்)

மின்னலடிக்கும்
ஸூப்பர் ரின்
வெண்மை...



...இதர, டிட்டர்ஜெண்ட் வில்லை, பார்
எதனையும் மிஞ்சும் வெண்மை.

பார்வைக்கு தப்பவே தப்பாத வெண்மை உங்கள் துணிகளுக்கு—வேலை தவறாத ஸூப்பர் ரின் சலவையின் வெண்மையே தனி.
இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சுவது ஸூப்பர் ரின் வெண்மை.
காரணம், மிகுந்த வெளுக்கும் சக்தி அடங்கியது ஸூப்பர் ரின்.



நீங்களே கண்டுகொள்வீர்கள்

இதை வெளுத்தது வேறுசில டிட்டர்ஜெண்ட பார்





இதை வெளுத்தது ஸூப்பர் ரின்

<u>அதிக</u>
வெளுப்பூட்டும் சக்தி படைத்தது
ஸூப்பர் ரின்.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

லின்டாஸ்-RIN.40-2012 TM



ஐம டியர் நீரு...!

கோமகள்

நீரஜா எம். பி. பி. எஸ்., டி.ஜி.ஓ.வை அன்று பெண் பார்க்க வருகிறார்கள்.

வீட்டில் பூ மணக்கிறது. அடுக்களையில் நெய் மணக்கிறது.

அப்பாவின் முகத்தில் பெருமிதம். பாட்டியின் முகத்தில் நிம்மதி.

கல்யாணமானால் டாக்டர் தொழிலை விடமாட்டேன்னு பிடிவாதம் பிடிக்கிறவளுக்கு ஒரு டாக்டரே வந்துட்டான். நல்ல படி முடியட்டும். ரெண்டு பேரும் டாக்டரானால் பிராப்ளம் இல்லே'' இது அத்தையின் திருப்திக் குரல்.

நீரஜாவின் மனத்தில் சந்தோஷமும் வருடவில்லை, சலிப்பும் சோதிக்கவில்லை. மெல்லிய ஊசிக் குத்தலாகக் கல்லூரியின் முதல் வருட நாட்கள் மனத்தில் மழைக்கால சாரலாகக் குமுறின. தனக்குள் லயிக்கத் துடிக்கும் நினைவுகளாகவில்லை அவை. எவ்வளவு சாதாரணமாக அந்த வினோத் சொல்லிவிட்டான்—காதல் என்பது கல்லூரிக்குள் நுழையக்கூடாது. கல்விக்குரிய பருவம் இது. நண்பர்களாய் இருப்போம். இதில் கலப்படம் வேண்டாம் என்று—உள்ளம் ஏற்க வேண்டுமே.... பழக்கத்தை நட்பாக்கி மறக்க முயன்றாலும், பிரியாத நட்பாக ஆக்கத் துடிக்கும் மனம் பற்றி யாரிடம் கூறமுடியும்?

போகட்டும்..... தனக்குள் பெருமூச்செறிந்தான் நீரஜா.

வாழ்க்கையில் சில பேருக்குத்தான் இரும்பச் சந்திக்கும் பாக்கியம் கிட்டும் போலும். அந்தக் கல்லூரியை விட்டு மருத்துவக் கல்லூரியில் சேர்ந்த பின்னர், அந்தப் புதிய சூழலில், அதன் முழு நேரப் படிப்பில், பணியில் அவள் தன்னை வெகுவாக ஆழ்த்திக் கொண்டாள். மோதிர விரலின் வைரக் கல் வெய்யில் படும்போது, கண் கூசும் வெளிச்சமிட்டுத் தன்னைக் காட்டிக்கொள்வதுபோல் சிலபோது அவள் தனிமையில் அந்த நினைவில் ஆழ்ந்து போவாள்.

வினோத்தின் சுபாவம், சிரிப்பு, பேச்சு இவைகளை அவளால் மறக்க முடியவில்லை. ஆனால் அந்த வினோத் சொன்னபடி மற்ற மாணவர்கள் இருக்கிறார்களா? ஒரு நிமிட உணர்ச்சி சலனத்தில் 'ஐ லவ் யூ' என்று கூறும் மாணவன் ஒருத்தியின் மறுப்பில் மனம் சோர்ந்து விடாமல், மற்றொரு மாணவியிடம் இதையே கூறி வெற்றி பெறுகிறான். ஆழமில்லாத இந்தக் கவர்ச்சியில் அன்புக்கு இடமில்லாமல் அழுகையே பிரதானமாகி விடுகிறது. நட்புக்கு இடமில்லாமல் நயவஞ்சகமே நடுநாயகம் வகிக்கிறது.

அப்போது அறிமுகம் ஆனவன்தான் சுரேஷ்.

நட்பின் புன்முறுவலோடு நகைச் சுவையாகப் பேசுவான் அவன். இரு பொருள் தரும் பேச்சோ, வாய் பேசக் கூசும் வார்த்தைகளோ அவனிடம் உண்டானதில்லை. சிரிப்பில் நளினம் போல், செயலில் பண்பாடு இருக்கும். படிப்பில் ஆர்வமும் பழகும் விதத்தில் நேர்த்தியும் இருக்கும்.

அவனுக்குத் தன்னிடம் ஈடுபாடு வளர்கிறது என்று தெரிந்த கணமே அவனுடனான பழக்கத்தை வெகுவாகத் தவிர்க்க முயன்றாள் அவள். ஆனால் மருத்துவக் கல்லூரியில் எந்த மூலையிலாவது அவளைத் தேடிக் கண்டு சில வார்த்தைகள் பேசினால்தான் அன்றைய விடிந்த பொழுதுக்கு அர்த்தமுண்டு என்பது போல் அவன் நடக்க ஆரம்பித்தான்.

அன்று கான்டீனில் தோசைக்கு ஆர்டர் தந்துவிட்டுக் காத்திருந்தாள் நீரஜா.

எதிரே வந்தமர்ந்தான் சுரேஷ்.

கொணர்ந்த தோசையை அவனிடம் தந்துவிட்டு மற்றொன்றுக்கு ஆர்டர் செய்தான் அவன்.

''உங்களிடம் ஒன்று பேச வேண்டும் நீரஜா!''

''நானும் உங்களிடம் ஒன்று கூறவேண்டும் சுரேஷ்!''

''அடே! நமது மனங்கள் ஒரே நேரத்தில் நினைத்தது ஒன்றாகவே இருக்கக் கூடும். நீங்களே முதலில் கூறுங்கள் நீரஜா!''

தனக்கு வந்த தோசையை விண்டு வாயிலிட்டவாறே, ''நம்மைப் பற்றி ஒரு கல்லூரிக் 'கிசுகிசு' உருவாகி வருவதாக என் தோழி சௌம்யா சொன்னாள்'' என்று அவனைக் கூர்ந்தாள் அவள்.

''ஈஸ் இட்? அன்பைத் திரையிட்டு மறைக்கமுடியாது என்பது எத்தனை உண்மை. நாம் அதை ஆமோதித்து விட்டோம் என்பது புரிந்து விட்டால் 'சப்'பென்று ஆகிவிடும். எனவே உண்மையை....''

அவனை நீரஜா இடைமறித்தாள். ''ப்ளீஸ் எக்ஸ்யூஸ் மீ சுரேஷ்! அது உண்மையா என்ன?''

''என்ன நீரஜா, என்ன சொல்றீங்க?'' அவன் கையிலிருந்த காப்பி நிறைந்த பீங்கான் கோப்பை விழுந்து நொறுங்கியது.

''சுரேஷ்! என்ன இப்படி அதிர்ச்சி அடைஞ்சுட்டீங்க? அப்படி ஒரு குழப்பமா உங்களுக்கு

இருந்தது? நட்பின் சுமுகமான பழக்கம் அல்லவா நம்மிடம் மலர்ந்திருந்தது....?''

''ஓ! மை காட்! ஒன்லி எ ஃப்ரெண்ட்ஷிப்!.. ரியலி நீரஜா! நான் கெட்ட கனவு காணலியே?''

''ப்ளீஸ் சுரேஷ்! காம் யுவர்செல்ப்.. நாம் இப்போது வாழ்வின் ஒரு குறிக்கோளை வெற்றி கொள்ளும் கட்டத்தில் இந்தத் தொழிற் படிப்பில் ஈடுபட்டுள்ளோம். அதில் முன்னேறப் பாடுபடும் நேரத்தில் மனத்தை இப்படியெல்லாம் சிதற விடலாமா?''

''ஓ நீரஜா! ப்ளீஸ் ஸ்டாப் இட்! ஐயாம் நாட் எ பேபி! நீங்கள் என்னோடு பழகியது பார்த்தது, பேசியது எல்லாமே நட்பை மட்டுமே பிரதிபலித்த ஒன்றுதானா? 'சட்'டுன்னு பதில் சொல்லிடாதீங்க நீரஜா. யோசிச்சே சொல்லுங்க....'' அவனது யாசிப்பு தான் நான்கு வருடங்களுக்கு முன் வினோத்திடம் யாசித்ததை நினைவூட்டியது.

அவள் மனத்தில் கழிவிரக்கம் பொங்கிப் பிரவகித்தது. முன்னாலேயே அவள் மனமெனும் சிப்பியில் காதல் மழைத் துளி விழுந்து மூடிக் கொண்டு விட்டது என்ற உண்மை அவளுக்கு மட்டும் தானே தெரியும்?

ஒரு வாரத்திற்குப் பின் நீரஜாவைப் பார்க்க வந்த சுரேஷ் அவள் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை வாங்கிப் பார்த்தான். அவனும் வெகு நாளாக வாங்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்த மருத்துவப் புத்தகம்! அதன் இரண்டாம் பக்கத்தில் "True friendship alone will last for ever"-நீரஜா என்று எழுதப் பட்டிருந்தது.

''தேங்க்ஸ் நீரஜா!'' முணு முணுத்தவாறே எழுந்தான் சுரேஷ். இந்த விரக்தியைச் சுமக்கத் தயாராகிவிட்டாற்போன்ற முகபாவம்.

அதன் பின் ஒரு வாரம் அவள் கண்ணில் படாமல் இருந்தான் சுரேஷ். பிறகு சகஜமான ஒரு பார்வையுடன் ஒரு மெல்லிய சிரிப்புடன் தூர விலகிக் கொண்டான்.

மாப்பிள்ளை வீட்டார் வந்து விட்டார்கள்.

ஹாலில் பேச்சும், சிரிப்பும் டிபன் தட்டுக்களும், காப்பிக் கோப்பைகளும் பல ஒலிகளைக் கூட்டொலியாக்கிக் கொண்டிருந்தன.

''என்ன ராமநாதன் ஸார்! எதற்குப் பழைய சம்பிரதாய மெல்லாம்? உங்கள் பெண்ணைக் கூப்பிட்டு, சோபாவில் உட்காரச் சொல்லுங்களேன். அவளும் ஒரு டாக்டர்! அந்த மதிப்பைத் தரணுமில்லையா?''

''நீரஜா! வாம்மா!'' அப்பா குரல் கொடுத்தார்.

நீரஜா சம்பிரதாயத்துக்காகப் பட்டு உடுத்தி, நகைகள் அணிந்திருந்தாள்.

''இந்த சோபாவிலே உட்காரும்மா! நமஸ்காரம் எல்லாம் வேண்டாம்.''

அப்படிச் சொன்ன மாப்பிள்ளையின் தந்தையைப் பார்த்துக் கைகுவித்துவிட்டு அவ்வாறே உட்கார்ந்தாள் நீரஜா. அட! இவர் ரொம்பவும் பண்பாடுள்ளவர் போல் இருக்கிறாரே என்ற விந்தை உணர்வு அவளிடம் பிரமிப்பை ஊட்டியது.

''உன் பெயர் என்னம்மா? நீரஜா தானே? ஃபைன் நேம்!.... மீட் மை ஸன் வினோத். எம். எஸ்....''


நிமிர்ந்த அவள் கண்களில் ரம்யம் சுடர் விட்டது. ஓ! மனச் சிப்பியில் பதுங்கிக் கிடக்கும் முத்தின் தலைவன்! குபீரெனத் தலை மீது ஆயிரம் புஷ்பக் குடலைகளைக் கொட்டி அபிஷேகம் செய்தாற்போல்... தளிர்களாகக் காற்றில் ஆடிக் கொண்டிருந்த பூச்செடிகள் அரும்பெடுத்து மலர்ந்தாற்போல்... மகிழ்ச்சி கரை புரண்டு கண்களில் பாய, நிமிர்ந்து வினோத்தைப் பார்க்க, இது மெய்யா, இது மெய்யா என்ற சந்தேகம் நிவர்த்தியாக, அவன் சிரிப்பில் புளகமுற்றான். அவன் பார்வையிலும் 'அட நீயா!' என்ற சிரிப்பு. ரொம்ப நேரமாகப் பிரமிக்க வைத்தாற் போல் தோன்றினான்.

என்ன எதிர்பாராத சந்திப்பு!

எதைக் கோரித் தோற்றாளோ அந்தவரம் கிட்டும் வாய்ப்பு!

''என்னடா வினோத்! வணக்கம்னு கூடச் சொல்லாமல்.... ரெண்டுபேரும் இப்படி...''

''பிரமிச்சுட்டோம்ப்பா! நீரஜா பி.யு.லே என்னோட



கிளாஸ்மேட்.இன். ஃபாக்ட் நாங்க ரெண்டு பேரும் ஃப்ரெண்ட்ஸா இருந்தோம்ப்பா!''

''ஓகோ! அப்படியா, பேஷாப் போச்சு!''

''இரண்டு பேரும் ஒரே கிளாஸ்னு, வயசு வித்தியாசம்?'' உள்ளே இருந்து குரல் கொடுத்தாள் நீரஜாவின் அம்மா.

''பயப்படாதீங்க அம்மா! உங்க பெண்ணை விட ஒரு வருஷம் பெரியவன் விநோத். ஸ்கூல் ஃபைனல் பரீட்சையின் போது டைபாய்ட்லே படுத்துட்டவும், அடுத்த வருஷம்தான் எழுதி பாஸ் பண்ணினான்.'' அபயக் குரல் கொடுத்தார் விநோத்தின் அப்பா.

நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் நீரஜா.

சுரேஷுக்கு நிச்சயம் திருமண அழைப்பிதழ் அனுப்ப வேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டாள்.

• • •

திருமண வாழ்த்துக்களைப் பார்வையிட்ட நீரஜா அதில் சுரேஷின் வாழ்த்தினைப் படித்தாள். கூட ஒரு கடிதம் வைக்கப் பட்டிருந்தது.

''நாளை மறுதினம் என் திருமணம். அதனால் உங்கள் திருமணத்தில் கலந்துகொள்ள முடியவில்லை. அழைப்பிதழ் தனியாக அனுப்பியுள்ளேன். தம்பதி சமேதராக வரவும். ட்ரூ ஃப்ரெண்ட்ஷிப் எலோன் வில் லாஸ்ட் ஃபார் எவர் — சுரேஷ்.''

நீரஜாவின் முகத்தில் புன்னகை அரும்பியது. அந்தத் தாத்பரியத்தை முதலில் உணர்த்தியவன் விநோத். அது அவன் விரும்பியபடி நிரந்தர நட்பாக, தாம்பத்ய உறவாக மலர்ந்து விட்டது. புன்னகைக் குறும்பு நகையாக மாறத் தூரத்தில் யாருடனோ சிரித்துப் பேசிக் கொண்டிருந்த விநோதைப் பார்த்தாள் அவள்.

அம்மா அவள் கையில் பாலைத் தந்தாள்.

சுற்று முற்றும் பார்த்துவிட்டு அவள் படி ஏறும்போது சித்தி பெண் சரோ வந்தாள். ''ஏ நீரஜா! இந்தப் பால்லே சித்த முன்னே சுதா தூக்க மாத்திரையைக் கலந்துட்டா, குறும்புக்காரி! குடிச்சிடாதீங்க, மனசு கேட்கலை சொல்லிட்டேன்!''

''தேங்க்ஸ்டீ!'' நீரஜா புன்னகைத்தாள்.

''அன்பான சிநேகிதியே வருக வருக!
அருமையாம் தோழியே வருக வருக!
இன்பமான நேரத்தில் இங்குவந்து
இனிதான நட்பினைப் புதுப்பிப்பாயே!''

மேடையில் சொல்லாத ஒரு கவிதையை, கட்டிலில் அமர்ந்து, கட்டியம் கூறி அவளை வரவேற்றான் விநோத்.

நீரஜா மெல்லச் சிரித்தாள். ''காலையில் தான் மூன்று முடிச்சுப் போட்டீர்கள். மாலையில் 'என் மனைவி' என்று நண்பர்களுக்கு அறிமுகப்படுத்தினீர்கள். காலை மலர்ந்து இரவிருள் படர்ந்த இந்நேரத்திலும் கூட இன்னும் கூட அன்பான சிநேகிதிதானா நான்? இன்பமான துணைவி யல்லவா?'' அவனருகில் அமர்ந்தாள் அவள்.

''உம்! உண்மைதான்! இப்படியானதற்கு யாரை நோவது? கலப்படமில்லாத நம் நட்பு இப்படி சுயநலத்தின் பாற்பட்டு விட்டதே....'' நட்புக்காக மட்டுமே உருகுவதைப் போல் கூறினான் விநோத்.

அவள் இதழ்க்கடையில் குறும்பூர்த்தது.

''இப்போது மட்டுமென்ன?... ஒன்று செய்யுங்களேன். இதோ இந்தப் பாலில் என் உறவுப் பெண் சுதா, எனக்குத் தெரியாமல் தூக்க மாத்திரையைக் கலந்து விட்டாளாம். அவள் குறும்பை அவளுக்குத் தெரியாமல் இன்னொருத்தி என்னிடம் உடைத்து விட்டாள். நட்பைக் காப்பாற்ற இதைக் குடித்து விட்டுத் தூங்குங்களேன்.....!''

''மை டியர் நீரு! நான் சொன்னதைக் குத்திக் காட்டுகிறாயா? நாம் திரும்பவும் மண மேடைக்காகச் சந்தித்தது யதேச்சையான சந்திப்பு. இன்ப இணைகளாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றோர்களே அனுமதித்த சுதந்திர வாழ்க்கை. வெறும் பாலுணர்வின் வயப்பட்டு, திசை மாறி அதை நிறைவேற்றிக்கொள்வதில்தான் உலகம் அடங்கியிருக்கிறது என்று மாணவப் பருவத்தில் மனங்குமுறி வாடினால், இருவர் வாழ்வும் திசை மாறி நசிக்கவே செய்யும். நீரஜா! புரிகிறதா?'' அவளைத் தன் கைச் சிறைக்குள் அடக்கிக்கொண்டான் அவன்.

''எனக்கு இனிமேல் உங்கள் வார்த்தைகள் எதுவுமே புரிய வேண்டாம்.... எனக்கு உங்களைப் புரிந்து கொண்டதே போதும்!''— அவன் நெஞ்சில் கோலமிட்டவாறே முணுமுணுத்தாள் நீரஜா.

ஆளை விடுவாயா?

சித்திரைத் தேரெனப் புத்திளந் தெங்குடன்
சிரித்து நடப்பவளே! - நான்
பித்து பிடித்தவன் போலுனைச் சுற்றிடப்
போதை கொடுத்தவளே!
முத்துச் சரமென முல்லை விரிப்பென
மோகினி நீ சிரித்தாய்! - நான்
மோதும் அலையினில் மூழ்கித் தவித்திட
மோக வலைவிரித்தாய்!
சாவும் நிலையினைச் சந்திக்கப் போகிறேன்
சாக விடுவாயா? - இல்லை
சஞ்சலம் நீத்தெனைக் காமனின் ராஜ்ஜியம்
ஆள விடுவாயா?
- இலக்கு. தமிழ்மகன்



✠ எஸ். ஜப்பார், சத்தியமங்கலம்

கே. யானை வெடிக்குத் தடை வந்து விட்டதே இந்த வருடம் தீபாவளி எப்படி இருக்கும்?

ப: நன்றாக இருக்கும். எல்லா பட்டாஸ் உற்பத்திக்கும் தடை விதித்தால் கூடத் தப்பில்லை. எவ்வளவு பணம் இதில் விரய மாகிறது! "ஐயோ பட்டாசு தயாரிப்பாளர்கள் பிழைப்புக்கு என்ன செய்வார்கள்?" என்று ஒப்பாரி வைக்காதீர்கள். அவர்கள் வேறு பிழைப்பைத் தேடிக் கொள்ளட்டும். பாடப் புத்தகங்களைச் சர்க்காரே வெளியிட ஆரம்பித்தார்களே, அப்போது தனியார் நிறுவனங்கள் ஓலமிடவில்லையா? நாட்டு முன்னேற்றத்துக்கும் மக்கள் நலனுக்காகவும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் சிலருக்குச் சாதகமாக அமையாது போகலாம். அவர்களும் சிலகாலம்தான் மூக்கால் அழுவார்கள். பட்டாஸ் வெடிப்பது நேஷனல் வேஸ்ட்!

✠ எஸ். மௌனீஸ்வரன், தாம்பரம்

கே. ஏதேதோ கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்கிறீர்களே ஐன்ஸ்டீனின் தியரி ஆஃப் ரிலடிவடி'யை விளக்கிச் சொல்லுங்கள்?

ப: சொல்லுவேன். உங்களால் புரிந்து கொள்ள முடியுமா என்பதே கேள்வி. இங்கு ஒரு துணுக்கைச் சொல்கிறேன். விஞ்ஞானிகள் மகாநாடு ஒன்றில் யாரோ ஒருவர் ஐன்ஸ்டீனின் தத்துவத்தை விளக்கி ஒரு மணி நேரம் உரையாற்றினாராம். உரை முடிந்த பின் ஒரு விஞ்ஞானி அவரிடம் சென்று, "நீங்கள் ஐன்ஸ்டீனை விட பெரிய மேதை. அவருடைய தத்துவத்தைப் புரிந்து கொண்டவர்கள் பன்னிரண்டு பேர்.. ஆனால் உங்கள் உரையைப் புரிந்து கொண்டவர்கள் ஒருவர் கூட இல்லை."

✠ ஜி. ஜெயராமன், கூத்தநல்லூர்


கே. மதுரா மாவட்டத்தில் பல்சான் கிராமத்தில் ஹராதேவி என்ற பெண், தன் கணவன் இறந்ததும் தானும் உயிரை விட, கணவன் உடலம் எரிக்கப்பட்ட இடத்தில் உட்கார்ந்துகங்கை நீரைத் தன் மீது தெளித்துக் கொண்டதும் உடல் முழுதும் தீ பரவிச் சாம்பலாகி விட்டாளாமே?

ப: ரீல்.

✠ கார்த்திகேயன், நங்கநல்லூர்

கே. உங்களுக்குப் பிடித்தவர், ஜானியா, வித்யா சாகரா?

ப: 'வித்யாசாகர்'கள் எனக்குத் தேவை இல்லாதவர்கள். அதனால் ஜானிக்குத் தான் ஐயாவின் ஓட்டு.



நறுக் பதில்கள்!



✠ ஆர். கிருஷ்ண ரத்னம், புதுவை-5

கே. யாரைக் கண்டு பொறாமைப் படுகிறீர்கள்?

ப: டயபடீஸ்காரர்களைக் கண்டு. சர்க்கரை தட்டுப்பாடு உள்ள இந்தச் சமயத்தில் அவர்களின்மேல்தான் பொறாமை உண்டாகிறது!

✠ கே. எம். பாரூக், சென்னை-61

கே. விசிட்டர் லென்ஸ் எப்படி?

ப: பொடி எழுத்தில் அச்சிடுகிறார்கள். இதுடன் ஒரு லென்சும் கொடுத்தால் சௌகரியமாக இருக்கும்.

✠ பூ. கோ. திருநாயகன், பூந்தோட்டம்

கே. சொல்லின் வலிமை என்ன?

ப: அபாரம். சாயங்கள் வெளுக்கலாம். கோவில்கள் இடிமாகலாம். சாம்ராஜ்ஜியங்கள் சரியலாம். ஆனால் அறிவார்ந்த வார்த்தைகள் காலத்தை வென்று நிற்கும் வலிமை படைத்தன. வார்த்தைகளுக்கு வலிமை மட்டுமல்ல, ஒரு கவர்ச்சியும் உண்டு. "ஒரு டிக்ஷனரியைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருப்பது ஒரு பாங்கில் ரூபாய் நோட்டுக்களுக்கு மத்தியில் இளைவது போன்ற சுகமான அனுபவம்" என்கிறார் அமெரிக்கக் காமடியன் எட்டி கான்டர். நானும்! அனுபவித்திருக்கிறேன்.

✠ ஸ்ரீலதா பாஸ்கரன், வேலூர்

கே. தூக்குத் தண்டனை அவசியமா?

ப: சுலபமான கேள்வி அல்ல. பல படே படே ஆசாமிகளே மண்டையை உடைத்துக்கொண்டிருக்கிறார்கள். அமெரிக்காவில் சுப்ரீம் கோர்ட்டில் தூக்குத் தண்டனை அரசியல் சட்டத்துக்கு முரணானது என்று வழக்குத் தொடுத்த காரணத்தால் சுமார் 15 வருடங்கள் (1961-76) தூக்குத் தண்டனைகள் நிறைவேற்றப்படவில்லை. தூக்குத் தண்டனை பயத்தின் காரணமாக, எவ்வளவு தூரம் பெரிய குற்றங்கள் குறைந்துள்ளன என்பதும் நிச்சயமாகத் தெரியவில்லை.

✠ ராஜேந்தர், புவனகிரி

கே. குன்றில் விளக்காகத் திகழ வேண்டியவர்கள் குடத்தில் விளக்காக இருப்பதேன்?

ப: அது என் தலைவிதி!

பரிசு பெறுவோர்:

பூ. கோ. திருநாயகன்
12. பூந்தோட்டம் வள்ளலார் தெரு
பூதாமூர் - 606109



DT/CAS-3/80 TAM

ஆசை ஆசை ஆசை

ஜெயபாலயன்

மூளையை உருக்கும் வெய்யில்.

வியர்வை உடம்பில் வாய்க்காலாய் ஓடக் கைவண்டியை இழுத்தான் பிச்சைமுத்து.

அரிசி மூட்டைப் பாரம் எமனாய்க் கனத்தது.

எதிரே வந்த ஹோட்டலை அண்ணாந்து பார்த்தான்.

பிரம்மாண்டமான ஹோட்டல். குழல் விளக்குகள்.

பர்ஸும் பாக்கெட்டும் தடித்த வசதியானவர்கள் உள்ளே போய் வயிற்றை உப்ப வைத்துவிட்டு வெளியே வரும்போது பர்ஸையும் பாக்கெட்டையும் காற்றுப் போன பலூனாக வற்ற வைத்துவிட்டுப் படி இறங்கினார்கள்.

தன்னோடு பேட்டையில் வண்டி இழுக்கும் நண்பன் மாரியப்பன் ஒரு நாள் பிச்சைமுத்துவிடம் கேட்டான், ''ஏண்டா, பிச்சமுத்து... இந்த ஹோட்டல்லே பிரியாணி சாப்பிட்டு இருக்கியா?''

''இல்ல... மாரியப்பா...''

''சாதாரணப் பிரியாணி இல்லேடா... ஸ்பெஷல் பிரியாணி!''

''இல்லே...''

''நீ மனுஷனுடா... மனுஷனாப் பொறந்தா இந்த ஹோட்டல் ஸ்பெஷல் பிரியாணியைச் சாப்பிடணும். என்னமா ஜோரா இருக்கும் தெரியுமா? ரொம்ப ரொம்ப டேஸ்டா இருக்கும்...'' என்று நாக்கில் எச்சில் சொட்டச் சொட்டச் சொன்னான் மாரியப்பன்.

''ஒரு பிளேட் ஸ்பெஷல் பிரியாணி எத்தனை தெரியுமா?''

''எத்தனே?''

''இருபது ரூபாய்டா!''

''இருபது ரூபாயா!'' – ஆடிப் போனான் பிச்சைமுத்து.

நாள் முழுதும் கஷ்டப்பட்டுக் கைவண்டி இழுத்தாலும் இருபது ரூபாயைக் கண்ணில் பார்க்க முடியாதே. இந்த இருபது ரூபாயை ஒரே நேரத்தில் ஒரு பிளேட் பிரியாணிக்காக இறைப்பதா? சிரமப்பட்டு வண்டியைஇழுத்தான் பிச்சைமுத்து.

பிச்சைமுத்துவுக்குக் கல்யாணமாகி வீட்டில் ஓர் அழகான மனைவி இருக்கிறாள். பிச்சைமுத்துவின் கூட்டாளிகள் எல்லாம் அவன்மீது பொறாமைப்பட்டார்கள்.

ஒரு நாள் மாரியப்பன் தன் கூட்டாளி ஒருவனிடம் சொன்னான், ''டேய், அதிர்ஷ்டம் என்பதுல எனக்குக் கொஞ்சம் கூட நம்பிக்கை இல்லேடா. ஆனா நான் அந்த அதிர்ஷ்டத்தை இப்ப நம்பறேன். ஏன் தெரியுமா? நம்ம பிச்சமுத்துவுக்கு இவ்வளவு அழகான மனைவி கிடைப்பாளா?''

இதையெல்லாம்கேட்கும்பொழுது பிச்சைமுத்துவுக்கு ரொம்பப் பெருமையாக இருக்கும்.

தினமும் இனிப்பு, பலகாரப் பாக்கெட்டுகள் வீட்டுக்குப் போய்க் காலியாகிக்கொண்டிருந்தன.

கல்யாணமான இந்த மூன்று மாதமும் மாரியப்பன் சொன்ன அந்த ஸ்பெஷல் பிரியாணியை அருக்காணிக்கு வாங்கிக் கொடுக்க



1981 டயரி நீங்களும் பெறலாம்! கல்கி வாசகர் பரிசுத்திட்டம் (நவம்பர்)

முதல்தரமான கிளிண் டயரிகளை அதிர்ஷ்டசாலிகளான **நூறு** கல்கி நேயர்களுக்கு அன்பளிப்பாக வழங்குகிறோம்.

நவம்பர் ஐந்து வாரக் கல்கியிலும் பிரசுரமாகும் ஐந்து கூப்பன்களை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டிய விலாசம்:

கல்கி டயரி பரிசு திட்டம்
தபால் பெட்டி எண் 3159
சென்னை-32

ஐந்தாவது கூப்பனில் உங்கள் புத்தாண்டு பிரதிக்ஞையும் விலாசமும் இடம் பெற வேண்டும்.

முடிவு தேதி டிசம்பர் 20உ.

கூப்பன் நெ: 2.

கல்கி 1981 டயரி பரிசுத்திட்டம்

என் பெயர் ....

கையெழுத்து ....

வேண்டுமென்று எவ்வளவோ ஆசைப்படுகிறான் பிச்சைமுத்து.

இதுவரை முடியவில்லை.

இன்னைக்கு இரவு பகல் மூட்டை இழுத்தாவது அந்த ஸ்பெஷல் பிரியாணியை அருக்காணிக்கு வாங்கிக் கொடுக்க வேண்டும் அவள் அதைச் சாப்பிட்டு அந்த ஜோரில்... கவையில் மயங்குவதை மகிழ்ச்சியோடு பார்க்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான்.

வேகமாய்க் கைவண்டியை இழுத்தான்.

முகத்திலும் உடலிலும் வழிந்த வியர்வையைத் துண்டால் அழுத்தித் துடைத்துக் கொண்டான் பிச்சைமுத்து. அவன் தந்த பொட்டலத்தை அப்படியும் இப்படியும் திருப்பிப் பார்த்தாள் அருக்காணி.

''இது.... என்னய்யா...?''

''ஸ்பெஷலாப் போட்ட கறி பிரியாணி.. இருபது ரூபா!''

''நெசமாவா!'' — அருக்காணி வாய் மேல் கைவைத்துக் கொண்டாள்.

''சரி... சாப்புடு அருக்காணி...''

''கையைக் கழுவிட்டு நீயும் வாய்யா... சாப்பிடுவியாம்...''

''நான் சாப்பிட்டாச்சு. நீ சாப்பிடு அருக்காணி...''முழுசாய் ஒரு பொய்யைச் சொன்னான்.

அந்தப் பிரியாணி முழுவதையும் அருக்காணியே சாப்பிட வேண்டும் என்பது அவன் ஆசை.

''நான் அப்புறமாச் சாப்பிட்டுக்கிறேன். குளிச்சுட்டுக் கோயிலுக்குப்போயிட்டு வந்து''

''கோயிலுக்கா?''

''ஆமாய்யா... ஏழு மாசம் கழிச்சு உனக்குப் பொறக்கப்போற கொழந்தை என் வயித்தில நல்லபடியா வளர வேண்டாமா... அதுக்குத்தான் கோயிலுக்குப் போறேன்.''

''அப்படின்னு...?''

''நான் ரெண்டு மாசம்..''

''சரி... சரி... அப்புறமாச் சாப்பிட்டுக்கோ...இப்ப எனக்குக் கிராக்கி வர்ற நேரம். நான் போயிட்டு வரட்டுமா அருக்காணி?''

அருக்காணி கைகளைப் பிரித்துத் தலையை ஆட்டினாள்.

கடை வீதியின் நெரிசலுக்குள் ஓரம்..' ஓரம்... என்று கூவியவாறே சோள மூட்டை பாரத்தை இழுத்து வந்தான் பிச்சைமுத்து.

ஹோட்டல் குழல் விளக்குமுன் ஒரு போலீஸ் ஜீப் நின்றிருந்தது.

கடையின்முன் ஒரே கூட்டமாய் இருந்தது.

''அங்க என்ன கூட்டம் மாரியப்பா?''— எதிரே வந்த மாரியப்பனைக் கேட்டான், பிச்சைமுத்து.

''நேத்து கடைக்குச் சாப்பிட வந்த ஒரு பார்ட்டிக்கும் முதலாளிக்கும்ஏதோ தகராறு. பழைய பகையும்கூட இருக்காம். அந்த பார்ட்டி ஆள் வைத்து பிரியாணி அயிட்டங்களில் விஷத்தைக் கலந்திருக்காங்க. இன்னிக்குப் பிரியாணி சாப்பிட்டவங்க ரெண்டு பேர் அதே இடத்துல குளோஸ். பத்துப் பேரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிருக்காங்க....''

சட்டென்று கைவண்டியைப் போட்டுவிட்டுத் தலை தெறிக்க ஓடினான் பிச்சைமுத்து.

இவன் ஏன் இப்படி ஓடுகிறான்?

புரியவில்லை மாரியப்பனுக்கு.

இந்நேரம் அருக்காணி பிரியாணியைச் சாப்பிட்டு இருப்பாள்.

எப்படிக் கதறுகிறாளோ?...துடிக்கிறாளோ?


குடிசையின் முன்னால் ஆசையோடு உட்கார்ந்து கொண்டிருந்தாள் அருக்காணி. மூச்சிரைக்க ஓடிவந்த பிச்சைமுத்து அவள் இரு தோள்களையும் பிடித்து உலுக்கினான்.

''அருக்காணி... அருக்காணி... அந்தப் பிரியாணியைச் சாப்பிட்டியா அருக்காணி?''

மெதுவாக நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் அருக்காணி.

''ஏய்யா... ஒன்ன விட்டுட்டு நான் என்னிக்காவது ஏதாவது சாப்பிட்டு இருக்கேனய்யா? உனக்காத்தாய்யா காத்துக்கிட்டு இருக்கேன். வாய்யா... நீயும் நானும் நம்ப புள்ளையும் மூணு பேருமா சேர்ந்து சாப்பிடுவோம்....''

பிச்சைமுத்து கண்களில் நீர் சிதற அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.



சென்னை தியாகராயநகர் பனகல் பார்க் அருகில் இருக்கும் நல்லி சின்னசாமி செட்டி பட்டு ஜவுளிக்கடை பார்ட்னர் ஸ்ரீ நல்லி குப்புசாமி செட்டி அவர்களின் குமாரத்தி சௌபாக்கியவதி தேசவுக்கும் காஞ்சிபுரம் முரளி ஸில்க் ஹவுஸ் ஸ்ரீ A.C. வெங்கடேசனு (சிட்டிபாபு) அவர்களின் குமாரன் சிரஞ்சீவி A.V. ஜெயசந்திரன் B.E.க்கும் 12—9—80 அன்று சென்னை நியூ உட்லண்ட்ஸ் கல்யாண மண்டபத்தில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது, மேதகு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்களும் உயர் அதிகாரிகளும் மற்றும் நகரப் பிரமுகர்களும் வியாபாரப் பெருமக்களும் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர். கலைமாமணி நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் அவர்களின் நாதஸ்வரக் கச்சேரியும் அருள் மொழி அரசு திருமுருக கிருபானந்த வாரியார் ஸ்வாமிகளின் காலட்சேபமும் நடைபெற்றன. மாலையில் சங்கீதக் கலாநிதி டாக்டர் ஸ்ரீமதி M.S. சுப்புலக்ஷ்மி அவர்களின் இன்னிசைக் கச்சேரி சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்

டா:.பே பிரதான விற்பனை உரிமை
பெருமையுடன் வழிவழியாக
வளர்ந்துவரும் ஸ்தாபனம்.



டா:.பே நிறுவனமும் அதன் பிரதான விற்பனையாளர்களும் இந்திய வேளாண்மைக்கு கடப்பாடு உடையவர்கள். அவர்களின் பரஸ்பர நம்பிக்கையால்தான், இந்தியாடு முழுவதிலும் சிறந்த முறையில் அனைத்திந்திய பிரதான விற்பனை அமைப்பின் கீழ் விற்பனை மற்றும் சேவை மையங்கள் இயங்கி வருகின்றன. அவர்களின் கூட்டு முயற்சியால்தான் பல விற்பனை மையங்கள் ஒரு தலைமுறையையும் தாண்டி இயங்கி வருகின்றன. இதில் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மையங்கள் கால் நூற்றாண்டுக்கான பணிக்கென விருதுகள் பெற்றுள்ளன.

தொழில் ரீதியாக போட்டிகள் நிறைந்த இன்றைய சூழலில் டா:.பே நிறுவனமும் அதன் பிரதான விற்பனையாளர்களும் வளர்ந்துவரும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காகத்தொடர்ந்து போராடி வருகின்றார்கள்.

இந்திய வேளாண்மையை வளப்படுத்துவதைத் தத்துவமாகக் கொண்டுள்ளது—டா:.பே.

MF
Massey Ferguson

TAFE

டிராக்டர்ஸ் அண்ட் :.பார்ம் எக்விப்மென்ட் லிமிடெட்
சென்னை

தங்கம்மா மண் பானைக்குள் மறைத்து வைத்திருந்த சுருக்குப் பையை எடுத்து அதிலிருந்த காசுகளைத் தரையில் கொட்டிப் பரப்பினாள். கணவன் வீட்டில் இல்லாத நேரமானாலும், அவன் ஊரிலேயே இல்லாத தால் வருவதற்கு இன்னும் இரண்டு நாட்கள் இருந்தன என்ற நிலையிலும் கூட அவள் படபடப்புடன் கதவைச் சாத்திவிட்டுத்தான் காசுகளைத் தரையில் கொட்டி யிருந்தாள். முந்திய நாள் கிளம்பி மதுரைக்குப் போயிருக்கும் அவன் அன்று காலையில்தான் அங்கே போய்ச் சேர்ந்திருப்பான். உடனேயே கிளம்பினாலும் கூடத் திரும்பி வர முடியாது. மதுரையில் அவன் பார்க்க வேண்டிய ஜோலியோ நிறைய இருந்தது. இரண்டு நாட்கள் கழித்துத் திரும்ப முடிந்தாலே ஆச்சரியமான விஷயம்தான். அப்படியிருந்தும், தங்கம்மாவின் கண்கள் அடிக்கடி அர்த்தமற்று வாயிற் கதவை வெறித்துக் கொண்டிருந்தன.

ஐம்பது காசு, இருபத்தைந்து காசு, பத்துக் காசு, ஐந்து காசு என்று நாணயங்களையும், ஒரு ரூபா, ரெண்டு ரூபா, ஐந்து ரூபா, பத்து ரூபா என்று பணத் தாள்களையும் வகை வகையாகப் பிரித்துக் கூறு வைத்தாள். பிறகு எண்ணத் தொடங்கினாள்.


முதலில் ஐந்து பைசாக்களையெல்லாம் எண்ணினாள். மொத்தம் அறுபது காசுகள் இருந்தன. ஒரு வெள்ளைத் தாளில் தன் கோணல் மாணலான கையெழுத்தில் ஐந்து காசு — அறுபது என்று எழுதி வைத்தாள் பிறகு பத்துக் காசு நாணயங்களை எண்ணலானாள். அவள் இருபதாவது காசை எண்ணிய நேரத்தில் வாசற் கதவு இடிக்கப் பட்டது.

"தங்கம்மா, தங்கம்மா!"

பக்கத்து வீட்டுப் பொன்னுத்தாயியின் குரல்தான். அவளுள் எரிச்சல் மூண்டது. தூங்குவதாகப் பாசாங்கு பண்ண முடியாது. ஏனென்றால் அவள் கதவைத் தாளிட்ட போது பொன்னுத்தாயி தன் வீட்டு வாசலில் நின்று பார்த்துக் கொண்டிருந்தாள். சிரிக்கவும் வேறு செய்திருக்கிறாள். அதற்குள் தூங்கிப் போய்விட்டதாகப் பாவனை பண்ணுவது அபத்தமாக இருக்கும் என்பதாலும், பொன்னுத்தாயியின் தயவு அவளுக்கு வேண்டியிருந்ததாலும் அவள் அவசர அவசரமாக எல்லாக் காசுகளையும் பக்கத்தில் இருந்த பானைக்குள் திரட்டிப் போட்டு மூடி எடுத்து அடுக்களையில் வைத்துவிட்டு, "இதோ வாரேன்!" என்று குரல் கொடுத்தபடி வாசற் கதவைத் திறக்கப் போனாள்.

"தூங்கிப் போயிட்டியோன்னு பார்த்தேன். பொழுது போகல்லே. அதான் பேசிக்கிட்டிருக்கலாமேன்னு வந்தேன்." என்று அவள் கதவைத் திறப்பதற்கு முன்னால் சன்னல் கம்பியினூடே தங்கம்மாவைப் பார்த்து அவள் சொன்னாள். வெற்றிலைக் காவிப் பற்களைக் காட்டிச் சிரித்தாள். தங்

சிறுவாடு



ஜோதிர்லதா கிரிஜா

கம்மா சிரிக்கும் மனநிலையில் இல்லாவிட்டாலும் கட்டாயம் காரணமாகச் சிரித்து வைத்தாள்.

''படுக்கலாம்னுதான் தலையச் சாய்ச்சேன். கதவு தட்டின சத்தம் கேட்டிச்சு வந்தேன்'' என்று தங்கம்மா செயற்கையான ஒரு கொட்டாவியால் அவளை விரட்ட முயன்றாள்.

வம்பு பேசுவதில்ரொம்பவும் விருப்பமுள்ள பொன்னுத்தாயி அவளுடைய நெடிய கொட்டாவியைக் கவனித்ததாகவே காட்டிக்கொள்ளாமல், ''பகல்லே தூங்கிறு. பெறகு ராத்திரியில நல்லாத் தூங்க முடியாதே?'' என்றவாறு, திறந்த கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே புகுந்தாள்.

'இனிமே காக எண்ணிருப்பலேதான்!' என்று மனசுக்குள் சடைந்தபடி தங்கம் மறுபடியும் கதவைச் சாத்தித் தாளிட்டு விட்டு உள்ளே போனாள்.

மிக்க சொந்தத்துடன் வெறுந் தரையில் உடம்பை மல்லாக்கக் கிடத்திய பொன்னுத்தாயி, ''என்ன வெஞ்சனம் வச்சே இன்னிக்கி?'' என்று தனது பேச்சைத் தொடங்கினாள்.

தன் பிள்ளை வீட்டுக்கு அடங்காமல் இருப்பது, படிக்காமல் ஊர் சுற்றுவது, அடிக்கடி சினிமாவுக்குப் போவது, கணவன் இரவுகளில் நன்றாகப் 'போட்டுவிட்டு' வருவது, கேட்டால் அடிப்பது, குடும்பத்தை நடத்தப் பணம் தராமல் இருப்பது ஆகியவற்றையெல்லாம் வரிசையாகச் சொல்லி ஒரு பாட்டம் மூக்கால் அழுது தீர்த்த பொன்னுத்தாயி, 'என் விசயம் கிடக்கட்டும். நீ எம்

புட்டுக் காக சேர்த்திருக்குறே?'' என்று தங்கம்மாவின் அந்தரங்கச் சேதிக்குத் தாவினுள்.

இந்தக் கேள்வி தங்கம்மாவுக்கு அதிகப் படியான சங்கடத்தைக் கொடுத்தது. ''குருவி சேர்க்கிற மாதிரி கொஞ்சம் கொஞ்ச மாத்தானே சேர்த்துக்கிட்டு வாரேன்? இன்னும் நெறையச் சேர்க்கனுமே?'' என்று பட்டுக் கொள்ளாமல் பதில் சொல்லிவிட்டு, ''என் சமாசாரம் கெடக்குது களுத! உன் சமாசாரம் என்ன?'' என்றுள் தங்கம்மா.

''அத்த யேன் கேக்குற? எங்கம்மா நெசமாவே என் கழுத்துச் சங்கிலியை எடுத்துக்கிட்டுப் போயிருச்சு. ஓங்களுத்தில கெடந்தா அதுவும் கள்ளுப் பானையில போயிடும்னு சொல்லி எடுத்துக்கிட்டுப் போயிருச்சு.''

''அப்ப நான் சங்கிலி வாங்கினதும் உன்னோடது எரவல் வாங்கிப் போட்டுக்கிட்டிருக்கேன்னு எம் புருசங்கிட்டச் சொல்லலாமில்லேயா? ஒன்னைய நம்பலாமில்லே? மறந்து கிறந்து போய்க் காட்டிக் குடுத்திடமாட்டியே?''

''என்ன தங்கம்மா இது? தாராளமாச் சொல்லிக்க ஆறு. அதைவிட எம்புருசன் புடுங்கிக்கிட்டுப் போயிரும்னு பயந்து ஒங்கிட்டக் குடுத்து வெச்சிருக்கேன்னு உம் புருசங்கிட்டச் சொல்லிக்க.. அப்பத்தான் நம்பிக்கை விளும்!''

''அதுவும் சரிதான்.''

''எம்புட்டுக் காசு சேந்திருக்குன்னு கேட்டேனே?''

''ஐந்நூறு ரூபா போலச் சேர்ந்திருக்கும்னு நினைக்கிறேன்...''

''அப்ப அரைப் பவுன்கூடத் தேறுதேடி? இன்னும் ஆயிரத்தைந்நூறும் கொஞ்சம் சில்லறையும் சேர்ந்தாவில்லே ரெண்டு பவுன் லயாச்சும் சங்கிலி பண்ணிக்க முடியும்?''

''ஆமா!'' — திடீரென்று தங்கம்மாவுக்கு அவள் ஏதேனும் கடன் கிடன் கேட்டுத் தன்னை தர்மசங்கடப்படுத்தி விடப் போகிறாளோ என்ற அச்சம் தோன்றியது.

பொன்னுத்தாயி விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டுப் போன பிற்பாடு தங்கம்மா மறுபடியும் வாசற் கதவைச் சாத்தி தாளிட்டுக் காசுகளைக் கொட்டி கூறு பிரிக்கத் தொடங்கினாள். அவள் காசுகளை விரைவாக எண்ணினாள். எண்ணி முடித்தவள் அயர்ந்து போனாள். மொத்தம் இரண்டாயிரம் இருந்தது. அடியம்மா! சரியாக இரண்டாயிரம் என்றில்லாமல் கொஞ்சம் சில்லறையும் இருந்தது. கணவன் வீட்டுச் செலவுக்குத் தருகிற பணத்திலிருந்து அவனுக்குத் தெரியாமல் மாதந்தோறும் இருபதும் முப்பதுமாக மிச்சம் பிடித்த காசு. அவள் கணவனுக்குச் சிகரெட் குடிக்கிறதைத் தவிர வேறு கெட்ட பழக்கம் ஏதும் இல்லை.

மறுநாளே அவள் பொன்னுத்தாயிக்குத் தெரியாமல் நகைக் கடைக்குப் போய்ச் சங்கிலி வாங்கிப் போட்டுக் கொண்டாள். ஐந்நூறு ரூபாய்தான் சேர்ந்திருக்கும் என்று பொய் சொன்னதால் சங்கிலி வாங்கியது அவளுக்கு உடனே தெரிவதை அவள் விரும்பவில்லை.

கணவன் ஊரிலிருந்து வந்ததும், சங்கிலியை அவனிடம் காட்டிய அவள், ''இது பக்கத்து வீட்டுப் பொன்னுத்தாயியோடது. எங்கிட்டக் குடுத்து வச்சிருக்குறா. அவ புருசன் தண்ணிபோட களட்டிக்கிட்டுப் போயிடுவானாம். அதுக்காக!'' என்றாள். வேலு ஒன்றும் ஆட்சேபிக்கவில்லை.

சில மாதங்களுக்குப் பிறகு தங்கம்மா சங்கிலியைப் பொன்னுத்தாயிக்குக் காட்டினாள். ''நீ உம் புருசனுக்குத் தெரியாமக் குடுத்து வச்சிருக்குறேன்னு எம்புருசங்கிட்டச் சொல்லி வச்சிருக்கேன்'' என்றாள். பொன்னுத்தாயி தலையாட்டினாள்.

மேலும் கொஞ்ச நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் தங்கம்மா சினிமாவுக்குப் போயிருந்தபோது, பக்கத்து வீட்டுப் பொன்னுத்தாயிக்குத் திடீரென்று உடம்பு சரியில்லாது போய், மிகச் சில நிமிடங்களில் மருத்துவ மனைக்குச் சென்று வழியிலேயே மாரடைப்பால் இறந்தும் போனாள். பகற் காட்சிக்காகப் பதினொரு மணிக்கே தங்கம்மா புறப்பட்டுப் போயிருந்தாள். பொன்னுத்தாயியின் முடிவு ஏற்பட்டது பன்னிரண்டரை மணிக்கு.

மனைவியின் இறுதிச் சடங்குகளைச் செய்யத் தன்னிடம் பணம் இல்லை என்று கூறி அவள் கணவன் சிங்காரம் வேலுவிடம் வந்து கடன் கேட்டான்.

வேலுவிடம் பணம் அதிகமாக இல்லை. தங்கம்மாவிடம் பணம் இருக்காது என்றுதான் அவன் நினைத்தான். இருந்தபோதிலும், எதாவது வைத்திருக்கிறாளா என்று பார்ப்பதற்காக அவன் அடுக்களையில் இருந்த சட்டி பானைகளைத் துழாவினான். அவன் அம்மா அப்படித்தானே ஐந்தறைப் பெட்டியில் வைத்திருப்பாள்!

ஒரு தகர டப்பாவைத் திறந்தபோது அதனுள் பளபளத்த தங்கச் சங்கிலி அவனது முதுகை நிமிர்த்தியது. 'பொன்னுத்தாயியின் சங்கிலியாச்சே இது? பிணத்தை எடுக்க ஒரு சல்லிக்காசுகூட இல்லை என்கிறான். அப்படி நிராதரவா நிக்கிறச்சே— எப்படியும் அவளைப் போய்ச் சேர வேண்டிய — அந்தச் சங்கிலியை இங்கே வச்சுக்கிறது நியாயமில்லே. அது சமயத்துக்கு அவனுக்குத்தான் பிரயோசனப்படட்டுமே!'

வேலு உடனே ஒரு முடிவுக்கு வந்தான். ''இந்தாப்பா சிங்காரம்! இது ஒம் பொஞ்சாதியோட சங்கிலிதான். உனக்குத் தெரியப்படாதுன்னு சொல்லி என் சம்சாரத்துக்கிட்டக் குடுத்து வைச்சிருந்திச்சு. அதை வித்துக் காரியத்தை நடத்து. அதனோட சங்கிலி அதனோட இறுதிச் சடங்குக்குப் பெரயோசனப்படட்டும்!'' என்றவாறு அந்தச் சங்கிலியை எடுத்து வந்து சிங்காரத்திடம் கொடுத்தான்.

என்னதான் குடிகாரனானாலும் கண்ணீருடன் அதை வாங்கிக் கொண்டு சிங்காரம் புறப்பட்டான்.


அன்று மாலை ஆறரை மணிக்கு சினிமாப் பார்த்துவிட்டுத் திரும்பிய தங்கம்மா பொன்னுத்தாயியின் திடீர்ச் சாவுச் சேதியைக் கேட்டு அதிர்ந்து போனாள்.

வீட்டுக்குள் நுழைந்த அவளிடம் சங்கதியைச் சொன்னான் வேலு. ''பாவம், சிங்காரம். கடன் கேட்டான். எங்கிட்ட இல்லை. நீ எதுனாச்சியும் வச்சிருக்கியான்னு அடுக்களையிலே நோண்டினேன். பொன்னுத்தாயியோட சங்கிலி கிடைச்சது. அது ஞாயமா அவளைத்தானே சேரணும்னு அதை அவன் கிட்டவே குடுத்துட்டேன். அது பொன்னுத்தாயியோடதுன்னும் சொல்லிட்டேன். நமக்கு எதுக்கு மத்தவங்க பொருளு? இல்லியா?'' என்று தலையைக் குனிந்தவாறு சொல்லிக்கொண்டு போன வேலு தடால் என்ற சத்தத்தில் திடுக்கிட்டுத் தலையை உயர்த்தினான்.

அவர்: ''இந்தக் காலேஜ் பில்டிங் ரொம்ப ஃபைனா இருக்கே!''

இவர்: இருக்காதா பின்னே! படிக்கிற மாணவர்களிடமெல்லாம் ஏதாவது குறைங்க கண்டு பிடிக்க விதிச்ச 'ஃபைன்'ல கட்டினதாச்சே...!

• பூபாலசிங்





வெற்றிக்கு ஒரு சுந்தரம்

வி ஃபார் விக்டரி என்பார்கள். வெற்றிக்கு ஒரு சுந்தரம் என்றாலும் பிசகில்லை. வி. சுந்தரம் வெற்றியைத் தவிர வேறு கண்டதில்லை.

தூத்துக்குடி துறைமுக டிரஸ்டின் தலைவர் வி. சுந்தரம், ஐ. ஏ. எஸ்., துறைமுக வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கு என்னென்ன தேவையோ அவற்றை அலசி ஆராய்ந்து செயல்படுத்தத் துடிக்கும் ஆர்வத்துடன் விளங்குகிறார்.

அவரை அவரது இல்லத்தில் சந்தித்தால் நிர்வாக அதிகாரியாகப் பார்த்த சுந்தரத்தைச் சற்றுக்கூட நினைவுபடுத்தாத ஒரு கலா ரசிகராகக் காட்சி தருவார்.

''நான் இந்திரா பார்த்தசாரதியின் மாணாக்கன். நான் ஓர் ஐ.ஏ.எஸ். என்று கூறிக்கொள்வதை விட அவரது மாணாக்கன் என்று கூறிக் கொள்வதில் பெருமை அடைகிறேன். பதவிப் பொறுப்பு இன்னும் சில ஆண்டுகளில் நீங்கிவிடும். பிறகு எனது பழைய ஆசிரியருடைய உதவியுடன் வியாபார ரீதியில் இல்லாமல் ஓர் உயர்வான தமிழ் இலக்கியப் பத்திரிகை நடத்த வேண்டும் என்கிற ஆர்வம் இருக்கிறது'' என்று தமது அபிலாஷையை சுந்தரம் வெளியிட்டார்.

சுந்தரத்திடம் ஓர் அபூர்வமான நூல் நிலையம் இருக்கிறது. பதினெட்டாம் நூற்றாண்டில் வெளியான என்ஸைக்ளோபீடியா பிரதி, கட்டபொம்மனை ஒழித்துக்கட்ட ஆங்கிலேயர் போட்ட திட்டத்தை விளக்கும் புத்தகம், தமிழில் வெளியான ஆரம்ப கால சஞ்சிகைகள், சில அபூர்வ நாட்டுப் பாடல் திரட்டுக்கள், பாரதியார் கைப்பட எழுதின, இதுவரை வெளியாகாத கவிதை—என்று இவரது நூல் நிலையத்தின் அபூர்வங்கள் நீண்டு கொண்டே போகின்றன.

தொன்மையான தஞ்சாவூர் சித்திரங்கள் இவரது இல்லத்தில் மின்னுகின்றன. அபூர்வமான உலோக தெய்வச் சிலைகள், பழைய கோயில் ரதங்களிலிருந்து கிடைக்கும் வேலைப்பாடுகள், கற் சிற்பங்கள், பல நூற்றாண்டுகளுக்கு முன் புழக்கத்தில் இருந்த நாணயங்கள் ஆகியவற்றையும் சுந்தரம் பொக்கிஷமாகப் பாதுகாத்து வருகிறார்.

''சமீபத்தில் கே. பி. சுந்தராம்பாள் மறைந்தது கர்நாடக இசை உலகுக்கு ஒரு பெருத்த நஷ்டமாகும். மோதிலால் நேரு இறந்தபோது அவர் பாடிய பாட்டைக் கேட்டிருக்கிறீர்களா?'' என்று வினவியவாறே அதே கால அளவில் விற்பனையில் இருந்த கிராமபோன் ஒன்றில் இசைத் தட்டைப் போட்டுக் காண்பித்தார். 'மோதிலால் நேருவைப் பறிகொடுத்தோமே' என்று கே.பி.எஸ்ஸின் குரல் ஒலித்தது.

கர்நாடக இசையில் நல்ல தேர்ச்சி. மிருதங்கத்தில் முறையான பயிற்சி. இலக்கியங்களில் ஆழமான ஞானம். எத்துறையை எடுத்துக் கொண்டாலும் அதில் மேலெழுந்த வாரியான அணுகுமுறை இல்லாமல் அடிப்படையை ஆராய்ந்து மனத்தில் நிறுத்திக்கொள்ளும் பாங்கு — இவை சுந்தரத்தின் சிறப்புக்கள்.


முன்பு திருநெல்வேலி கலெக்டராக இருந்தபோது பாத யாத்திரைமேற்கொண்டு ஏழைகளின் குறைகளை நேரில் கேட்டறிந்து முடிந்தவரை அவற்றைத் தீர்க்க முயன்றதை அந்த வட்டார மக்கள் இன்றும் மறக்கவில்லை.

பழகுவதற்கு மென்மையானவர். படாடோபம் இல்லாத எளியவர். ஏழை மக்களிடம் இவருக்குள்ள கருணையும், ஈடுபாடும் இவரிடம் பேசும்போது இயல்பாக வெளியாவதைக் கவனிக்காமல் இருக்க முடியாது.

நமது இளைஞர்களுக்குச் சினிமாத் துறையில் உள்ள அதிகப்படியான ஆர்வம் வருந்தத்தக்கது. சினிமாவும், முறைகேடான அரசியலும் நமது நாட்டின் இரு பெரும் எதிரிகள் என்ற இவரது கருத்து இவரது உரையாடல்களில் வெளிப்படுகிறது.

கல்கத்தாவில் 'ஹானர்ஸ்' படித்து கர்நாடக இசையும் பயின்ற இவரது மனைவி இவரது தொல்பொருள் சேகரிப்பில் பெரிதும் உதவுகிறார்.

— நாயகன்



தீபாவளி ஜோக்ஸ்
ஏன் அண்ணே, அந்த ஜவுளிக் கடையிலே திருட வேணும்கிறே?
அவன் ஐம்பது பர்சண்ட் தள்ளுபடின்னு போட்டிருக்கான். நமக்கு லாபமில்லே பாரு. அதுதான் வேணும்கிறேன்.
வாங்க உட்காருங்க காபி கொண்டாறேன். ராத்திரி என்ன சாப்பிடறீங்க டிபனா, சாப்பாடா என்ன பண்ணட்டும் குளிக்க வெந்நீர் போடவா!
NOV 2
எங்க ஆபீஸ்லே ஆறுமாச போனஸ் தரப்போறாங்கன்னு எனக்கே சாயங்காலம் தானே தெரியும் அதுக்குள்ளே உனக்கு எப்படி தெரிஞ்சுது?
—ஆர். கோபாலகிருஷ்ணன்
நீங்கதானே ஆவி பறக்க எண்ணெய் தேய்ச்சு விடச் சொன்னீங்க! .. இப்ப பயப்படறீங்களே!
ஜி.நடராஜன்
என் மாமனார் தலைமறைவாகப் போயிட்டாருங்க அவரைக் கண்டுபிடிப்பீங்களா?
முதல்லே உங்க ஹிப்பித் தலையை வெட்டித் தொலையுங்க.. எண்ணெய் விக்கிற விலையிலே எந்த மாமனார்தான் தலைமறைவாகப் போகமாட்டார்?
—ஜி.நடராஜன்
என்னப்பா இது அநியாயமா இருக்கு! சட்டைத் துணியிலே பாண்ட்டும், பாண்ட் கிளாத்திலே சட்டையும் தைச்சிருக்கே?
சாரி சார்! ஒரு மாதமா தூக்கமே இல்லாம தைச்சதுனாலே வித்தியாசமே தெரியலே!




என்னம்மா மாப்பிள்ளை முகத்தை
உம்..முன்னு வச்சிண்டிருக்கார்?
பின்னே என்னப்பா தீபாவளிக்கு
ஸ்கூட்டர் வாங்கித் தரேன்னு
வருஷா வருஷம் ஏமாத்தறீங்களே!
என்னம்மா செய்யறது?
அட்லீஸ்ட், ஹெல்மெட்டாவது
வாங்கிக் கொடுத்திடுங்களேன்.
—ஜி. நடராஜன்



எங்க கடையிலே
நூறு ரூபாய்க்கு
ஜவுளி எடுத்தா
ஒரு சூட்கேஸ்
இனாமாத் தாரோம்!
அதாவது
நல்லா
உழைக்குமா?
வ. தேனப்பன்



நம்ம நாடு
அணுகுண்டு
தயாரிக்கத்
தேவையில்லை
ஏன்?
அதுக்குப் பதிலாத்தான்
நீங்க மைசூர்பாகு
பண்ணியிருக்கீங்களே!
வ. தேனப்பன்



பாவளி கொண்டாடறதிலே
வர்ச்சி நடிகைகளுக்குத்தான்
வேலையே இல்லை!
ஏன்
ரொம்பக்
குறைவாக
டிரஸ்
எடுத்தாப்
போதும்ல?
கவர்ச்சிக்
கன்னி
வ. தேனப்பன்
ஜெயந்தி

நேஷனல் புக் டிரஸ்ட்

பரிசளிக்கவும் பாதுகாக்கவும் ஏற்ற சுமார் 100 நூல்கள் தமிழில் வெளியிட்டிருக்கிறது: சிறந்த இந்தியர்களின் சரிதைகள், எல்லா இந்திய மொழிகளிலிருந்தும் பொறுக்கிய சிறந்த நாவல்கள், சிறு கதைகளின் மொழி பெயர்ப்புக்கள், பொது அறிவு நூல்கள், குழந்தைகளுக்கான புத்தகங்கள்.

அண்மையில்	ரூ.	பைசா
ரமண மகரிஷி	8	50
புரந்தரதாசர்	6	75
ஸ்ரீ அரவிந்தர்	8	00
நாணயங்கள்		
இந்திய நாணயங்களின் கதை	20	00
உங்கள் உணவும் நீங்களும்		
சத்தான உணவுக்கு வழிகாட்டி	6	75
பூர்ண கும்பம்		
(வங்க மாதின் தீர்த்த யாத்திரைகள்	9	75
கங்கைப் பருந்தின் சிறகுகள்		
அஸாமிய நாவல்	9	50
உர்தூ கதைகள்	13	00
குஜராத்தி சிறுகதைகள்	15	00
சமீபத்திய மலையாளச் சிறுகதைகள்	9	50

ஆகிய நூல்களை உங்களுக்காகவும்

ஆறு மகான்களின் கதைகள்	1	50
ராஜா வந்திருக்கிறார்	4	50
ஆசிய நாடோடிக் கதைகள்	12	00

ஆகிய நூல்களை உங்கள் குழந்தைகளுக்காகவும் வெளியிட்டுள்ளோம்.

பிரதிகள், விவரங்களுக்கு:

1. **பாரி நிலையம்**
184, பிராட்வே, சென்னை - 600 001

2. **நேஷனல் புக் டிரஸ்ட்**
ஏ-5, கிரீன் பார்க், புது டில்லி - 110016

ஆக்ஸிடெண்ட்

ஹேமா ஆனந்ததீர்த்தன்



முழு நாவல்

"அப்பா, கதை சொல்லுப்பா."

நாலு வயது ரூபா நச்சரித்தாள்.

"ஒரே ஒரு கதைதான் சொல்வேன். எனக்கு ரொம்ப டயர்டா இருக்கு ரூபா" என்று கெஞ்சினான் சியாம்.

"ஊஹூம். மூணே மூணு கதை." பேரம் பேசினாள் ரூபா.

"முடியாது போ. ஒண்ணுதான்."

"சரி மூணும் வேணாம் ஒண்ணும் வேணாம். ரெண்டு கதை சரியா?"

"ரூபா, அப்பாவைத் தொந்தரவு பண்ணாதே. காலையில் சீக்கிரம் எழுந்திருந்து ஏர்போர்டுக்குப் போகணுமில்லையா? தம்பி எப்படிச் சமர்த்தாத் தூங்கிவிட்டான் பாரு. நீயும் சீக்கிரம் படுத்துத் தூங்கு" என்று மத்யஸ்தம் செய்ய வந்தாள் பானு.

"போம்மா, நீ பேசாம இரு. நான் அப்பாவைக் கேட்டுக்கிறேன். உனக்கென்ன வந்தது?" என்று ரூபா சிணுங்கினாள்.

"சரி, ரெண்டு கதை சொல்றேன். கேட்டுட்டுத் தூங்கிடணும். அப்புறம் இன்னொரு கதைன்னு கேட்டியானா எனக்குக் கோபம் வரும்."

"சரி, சொல்லு."

சியாம் யோசித்தான். என்ன கதை சொல்வதென்று அவனுக்குச் சட்டென்று தீர்மானிக்க முடியவில்லை.

"அப்பா, ஏர்போர்ட்டுக்கு நானும் வருவேன்."

"எல்லாரும்தான்டி போகணும். அம்மா, நீ, பாலு, நான்."

"திரும்பி வர்றப்ப நீ வரமாட்டே, இல்லியா?"

"ஊம்."

"எனக்கும் ஏரோப்ளேன்லே உன்னோட வரணும்னு ஆசையா இருக்கப்பா. கூட்டிண்டு போறயா?"

"அப்புறம் இங்கே அம்மாவும் பாலுவும் தனியா இருப்பாளே?"

"அவாளையும் கூட்டிண்டு போயிடலாம்."

"நீ சுலபமாச் சொல்லிட்டே. எனக்கும் ஆசையாத்தான் இருக்கு. உங்கப்பாவோட போகணும்னு. முடியுமா?" என்று பானு இடையில் புகுந்தாள்.

"அப்பா எங்கேம்மா போறார்? எனக்கு மறந்து போச்சு."

"நாளைக்குக் காலையிலே பம்பாய்க்குப் போறார். நாளைக்கு ராத்திரி பம்பாய் லேந்து புறப்பட்டு லண்டன். அங்கே ஒரு மாசம். அப்புறம் அமெரிக்கா. அதாவது வாஷிங்டன், நியூயார்க்குன்னு ஊருக்கெல்லாம் போயிட்டு மூணு மாசத்துக்கப்புறம் திரும்பி வருவார்."

"நீ கதை கேட்கப் போறியா, இப்படியே பேசிண்டிருக்கப் போறியா? மணி பதினொண்ணடிக்கப் போறது."

"சரி, சொல்லு."

சியாம் அவளுக்குக் கதை சொல்லத் தொடங்கினான்.

பாதிக் கதை முடிவதற்குள்ளே ரூபாவுக்குத் தூக்கம் வந்து விட்டது.

"அப்பப்பா. தூங்கினா" என்று நிம்மதியுடன் அவளைத் தூக்கிக் கீழே போட்டிருந்த படுக்கையில் பாலுவுக்குப் பக்கத்தில் படுக்க வைத்துவிட்டுப் பானு கட்டிலில் படுத்து ஆர்வத்துடன் சியாமை அணைத்துக் கொண்டாள். அவனும் அவளை இறுகத் தழுவிக் கொண்டான்.

"இனி மூணு மாசத்துக்கப்புறம்தான் இல்லியா?" என்று கணவனின் கன்னத்தை வருடினாள் பானு.

"என்ன பண்றது? கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசைங்கிற மாதிரி வெளிநாடு போகணும்னு ஆசை, பொண்டாட்டி கூடவே இருக்கணும்னு ஆசை" என்று பானுவின் உதடுகளின் மீது தனது ஆள்காட்டி விரலை வைத்து அழுத்தி ரவுண்டாகத் தேய்த்தான்.

"என்னை விட்டுட்டு உங்களாலே இருக்க முடியுமா?" — அவளது கை அவனது கன்னத்திலிருந்து நழுவிச் சென்று அவனது கிராப்புத் தலையைக் கலைத்தது.

"உன்னாலே மட்டும் என்னை விட்டுட்டு இருக்க முடியுமா?" என்று கேட்டபடியே அவளது கையை இழுத்து அவளது விரல்களோடு தன் விரல்களைப் பிணைத்துக் கொண்டான்.

"என்னால் முடியாதுதான். ஆனா எனக்கு இங்கே மனசைக் கலைக்கிறதுக்கு 'டெம்ப்டேஷன்' ஒண்ணும் கிடையாது. உங்களுக்கு அப்படி இல்லே. வெளி நாட்டுக்குப் போறீங்க. எவ்வளவோ அழகான பொண்களோட பழகறதுக்குச் சந்தர்ப்பம் இருக்கும். மனசைக் கட்டுப்படுத்தறது கஷ்டமாக இருக்கும்" என்றாள் பானு. அவள் அப்படிக் கூறும்போது சியாம் அவளுடைய விரல்களை ஒவ்வொன்றாக மிருதுவாகக் கடித்துக் கொண்டிருந்தான்.

"எவ்வளவு 'டெம்ப்டேஷன்' வந்தாலும் உன்னோட நினைவுகளிலேயே அதையெல்லாம் ஜெயிச்சுடுவேன்."

"நான் நாட்களை எண்ணிண்டே இருப்பேன்."

"நானும்தான்."


"உங்க போட்டோவைப் பார்த்துத்தான் மனசைத் தேத்திக்கணும்."

"உன் போட்டோவை என் பர்ஸிலேயே வெச்சிண்டிருக்கேனே."

"ஒவ்வொரு சமயம் நினைச்சுண்டா பயமா இருக்கு."

"ஏன்?"

"ஏற்கெனவே அவனுக்குத் தலைகனம். இதில் ஹெல்மெட் வேறு! பார்த்தும் பார்க்காதது மாதிரி போகிறான் பார்!" - பூண்டி



''பார்க்கிறவாளுக்கெல்லாம் பொறுமை யாயிருக்கு. நீங்க நல்லபடியா ஆக்ஸி டெண்ட் கீக்ஸிடெண்ட் ஒண்ணும் இல் லாமேப் போயிட்டு வந்து சேரணுமேன்னு நீங்க திரும்பி வர்ற வரைக்கும் நான் வயத்துல நெருப்பைக் கட்டிண்டே இருப் பேன்.''

''போடி பைத்தியம். ஆக்ஸிடெண்டு ஆகாது ஒண்ணும் ஆகாது. அப்படி ஆக ணும்னு இருந்தா, ப்ளேன்லதான் ஆகணு மான்னு? பஸ்லேல போறப்பக் கூட ஆக லாம். ஏன் ஒண்ணும் வேண்டாம். இந்த வீட்டிலேயே இந்தப் படுக்கையிலே படுத் துண்டிருக்கச்சே கூட ஆக்ஸிடெண்ட் ஏற் படலாம். மேலே சுத்திண்டிருக்கிற ஃபேன் இடீர்னு கழண்டு தலை மேலே விழக் கூடாதா?''

''சீ, ஏன் இப்படி யெல்லாம் தோணறது உங்களுக்கு? இன்னமே படுக்கையிலே தனி யாப் படுத்துக்கறதுக்கே எனக்கு பயமா யிருக்கும்'' என்று அவன் மார்பிலே முகத் தைப் புதைத்துக் கொண்டாள்.

''சரி அது போகட்டும். ரூபாவை மிரட் டித் தூங்க வெச்சியே. நாம தூங்க வேண் டாமா? காலையிலே ஆறு மணிக்கு ப்ளேன். அஞ்சுக்கெல்லாம் ஏர் போர்ட்லே இருக் கணும். அப்படின்னு நாலரைக்கு வீட்டை விட்டுப் புறப்பட்டாகணும். மூணு மணிக்கு எழுந்தால்தான் சரியாயிருக்கும்.''

''நான் இந்த ராத்திரி முழுக்கத் தூங்கப் போறதில்லே. மூணு மாசத்துக்குமாச் சேர்த்து இன்னிக்கே....''

''இன்னிக்கே?''

நாணத்துடன் சிரித்துக் கொண்டே பானு தன் கன்னத்தை அவன் கன்னத்தோடு ஒட்ட வைத்துக் கொண்டாள்.

''அதெப்படி முடியும்? ஒரு நாள் உணவை ஒழியென்றால் ஒழியாய், இரு நாளுக்கேலென் றால் ஏலாய். இடும்பைகூர் என் வயிறே என்று சாப்பாட்டைப் பத்திப் பாடினது இதுக்கும் பொருந்துமே?''

''மூணு மாசத்துக்கும் சேர்த்து இன் னிக்கே உங்களோட பேசிடப் போறேன்னு சொன்னேன். நீங்க வேற என்னமோ அர்த் தம் பண்ணிண்டுட்டிங்க.''

''அடடா, சின்னப் 'பாப்பா'' என்று அவன் வயிற்றில் கிள்ளினான்.

''ஹா, வலிக்கிறது'' என்று கூறி அவன் கையைப் பிடித்து அவன் கிள்ளிய இடத் திலேயே வைத்து அழுத்திக் கொண்டாள்.

''சரி விளக்கை அணைக்கட்டுமா?'' என்று கேட்டான் சியாம்.

''வேண்டாம்.''

''ஏன்?''

''விளக்கை அணைக்கணும்னு எழுந்து போகணுமே? அந்த நேரத்தைக்கூட நான் வீணாக்க விரும்பவில்லை. நீங்க எழுந்து போக வேண்டாம். இப்படியே இருங்கோ.''

சியாம் அவளை வெறியுடன் அணைத் தான். சற்று நேரத்துக்குப் பின் அசதியில் அப்படியே தம்மை அறியாமல் தூங்கிப் போய்விட்டனர்.



1950... கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போலிருந்தது. கார்ப்பொரேஷன் பள்ளியில் தமிழ் மீடியத்தில் படித்துவிட்டு, லயோலா கல்லூரி இண்டர் வகுப்புகள்! குறிப்பாகப் புதிய தாக நவீன வரலாற்றுப் பாடம் கற்பிக்க வந்த ஆசிரியர் ஆங்கிலத்தில் கேரள மணம் கமழும். வேகம் வேறு. தெரியாத சொற்களுக்கும் பொருள் கேட்டால் பட்டென்று வெடிக்கும் வார்த்தைகள் ''ரெஃபர் டு த டிக்ஷனரி!''.

ஒரு நாள் புரியாத கடின வார்த்தை.... நண்பர் எழுந்து கேட்டார்: ''ஸ்பெல்லிங் சொல்ல முடியுமா?

''வழக்கமான பதிலுடன் பிற்சேர்க்கை: Refer to the dictionary or come to my Room (அகராதியைப் பார். அல்லது என் அறைக்கு வா!)'' மாணவர் கேட்டார்: ''May I know your room number please (உங்கள் அறை எண் என்ன என்று சொல்ல முடியுமா?)''

''Refer the dictionary(அகராதியைப் பார்!)'' சொன்னது அவரல்ல.. நான் தான்! வகுப் பெல்லாம் ஆரவாரம். நான் வெளியேற்றப் பட்டதும் மன்னிப்புப் பெற்றதும் தனிக் கதை!

-ஆர்.பி. சாரதி

காலையில் அலாரம் அடித்ததும் இருவரும் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தனர்.

சியாம் அலாரத்தை நிறுத்திவிட்டு வந்து படுக்கையில் உட்கார்ந்து கொண்டான். பானுவும் எழுந்து உட்கார்ந்து கொண் டாள்.

''சியாம், குழந்தைகளை எழுப்பறதுக்கு முன்னாடி....''என்று கூறிப் பானு கணவனைத் தழுவிக் கொண்டாள்.

சில நிமிடங்கள் ஓடின.

''ஊம். போதும் பானு. அப்புறம் லேட் டாயிடும்.'' என்று கூறி சியாம் தன்னை அவளுடைய அணைப்பிலிருந்து விடுவித்துக் கொண்டு மற்றக் காரியங்களைக் கவனிக்கச் சென்றான்.

அடுத்த இரண்டு மணி நேரத்துக்குள்ளாக சியாம், பானு, ரூபா, பாலு நான்கு பேரும் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருந் தார்கள்.

'ஃப்ளைட் 1-சி. 172க்குப் போகிறவர்கள் செக்யூரிடி 'செக்'குக்குப் போகலாம்' என்று அறிவிப்பு வந்ததும் சியாம் ரூபாவையும் பாலுவையும் தூக்கி இரு கன்னங்களிலும் முத்தமிட்டான்.

''ரெண்டு பேரும் சமர்த்தா இருங்கோ. அம்மாவைத் தொந்தரவு பண்ணும

இருங்கோ'' என்றான்.

''நான் வரட்டுமா பானு? ரெண்டு நாளுக்கு ஒரு லெட்டர் எழுதிண்டே இருப்பேன். நீயும் தவறாமப் பதில் போட்டுண்டே இரு. முடிஞ்சால் ஃபோன் பண்றேன்'' என்று கூறி அவள் கையைப் பற்றி அழுத்தினான்.

பானுவின் கண்களில் கண்ணீர்.

''பைத்தியம். என்ன இது? மூணு மாசம் மூணு நாள் போல ஓடிப் போயிடும். பயப்படாதே'' என்று கூறியபடி தன் கைக்குட்டையால் அவள் கண்களைத் துடைத்தான்.

''சியாம், குழந்தைகளை கிஸ் பண்ணேனே, அந்த மாதிரி நாம பண்ணிக்க முடியாம ஒரு 'கல்சரை' நாம வளர்த்துண்டிருக்கோமே.''

''அதுதான் நமது சிறப்பு பானு. மனசைக் கட்டுப்படுத்திக்கிறதுலே இருக்கிற சுகம், மனசைத் தாரை விடறதுலே இல்லே. இது புரிஞ்சுக்கிறது கஷ்டம்தான். ஆனா யோசிச்சுப் பார்த்தியானால் புரியும்'' என்று கூறியபடியே தன் இடது கையில் வைத்துக் கொண்டிருந்த ப்ரீஃப் கேஸைக் கீழே வைத்துவிட்டு இரு கைகளாலும் அவள் தோள்கள் இரண்டையும் பற்றிக்கொண்டு அவள் முகத்தை விழுங்கி விடுவது போல் பார்த்தான்.

''யார் வேணா என்ன வேணா நினைச்சுண்டு போகட்டும். யூ கிஸ் மீ ஒன்ஸ் சியாம்'' என்று பானு இரைஞ்சினாள்.

''சீ, அசடு'' என்று அவள் கன்னத்தை மெள்ளக் கிள்ளி ஒரு தட்டுத் தட்டினான். பிறகு சட்டென்று அவள் உதடுகளைத் தன் விரல்களால் தொட்டுத் தன் உதடுகளில் ஒற்றிக் கொண்டான்.

மேலும் தாமதிப்பது ஆபத்து என்று உணர்ந்தவன் போல் ப்ரீஃப் கேஸை எடுத்துக்கொண்டு விறுவிறுவென்று 'செக்யூரிடி செக்'கை நோக்கி நடந்தான்.

விமானத்தை நோக்கி சியாம் நடந்து கொண்டிருந்தான். நான்கு அடிகள் எடுத்து வைப்பதும் திரும்பிப் பார்த்து, பானு, ரூபா, பாலு இவர்களைப் பார்த்துக் கையை ஆட்டுவதுமாக முன்னேறிக் கொண்டிருந்தான்.

அப்படியே அவன் பின்னாலேயே ஒரே ஓட்டமாக ஓடிப் போய் அவனை அணைத்துக் கொண்டு அவன் மூச்சுத் திணறுகிறபடி அவன் முகமெல்லாம் முத்தமிட வேண்டும் போல் பானுவுக்கு ஒரு வெறி. ஆனால் என்ன செய்ய முடியும்? கற்பனையிலேதான் அவள் தன் ஆசையை நிறைவேற்றிக்கொள்ள முடிந்தது.

சியாம் விமானத்தில் ஏறிவிட்டான். மற்ற பிரயாணிகளும் ஏறிவிட்டனர். விமானத்தில் ஏறும் ஏணி அகற்றப்பட்டது. விமானத்தின் கதவு மூடப்பட்டது. விமானம் மெதுவாக நகரத் தொடங்கியது. ரன்வேயின் தொடக்கத்தில் 'தம்' பிடிப்பது போல் சிறிது நின்று, வேகமாக ஓடி, உயரக் கிளம்பிப் பறந்து சென்று கண்களை விட்டு மறைந்து விட்டது.

சியாம் பறந்து விட்டான். இனி மூன்று மாசங்கள் அவன் முகத்தைப் பார்க்க முடியாது, ஃபோட்டோவில் தவிர. அவன் குரலைக் கேட்க முடியாது, ஃபோனில் தவிர. அவனை அணைத்துக் கொள்ள முடியாது, கற்பனையில் தவிர.

''வாங்கோ போகலாம்'' என்று ஒரு நீண்ட பெருமூச்சுடன் குழந்தைகளை அழைத்துக்கொண்டு திரும்பினாள்.


ரூபாவும், பாலுவும் நச்சு நச்சென்று ஏதேதோ கேள்விகளைக் கேட்டுக் கொண்டு வந்தார்கள். அவளும் அவர்களுக்குப் பதில் சொல்லிக் கொண்டே வந்தாள். ஆனால் எல்லாம் ஓர் இயந்திர கதியில்தான். அவள் மனம் எல்லாம் சியாமுடனேயே விமானத்தில் போய்விட்டாற் போன்ற ஓர் உணர்வு.

டாக்ஸியில் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது சட்டென்று பானுவுக்கு அந்தச் சம்பவம் ஞாபகம் வந்தது. தன்னையறியாமலேயே அவள் சிரித்து விட்டாள்.

''என்னம்மா சிரிக்கிறே?'' என்று ரூபா கேட்டாள்.

''ஒண்ணுமில்லேடி. என்னமோ ஞாபகம் வந்தது. சிரிச்சேன். அங்கே பார் அந்தப் பையன் எருமை மேலே உட்கார்ந்துண்டு போறான்'' என்று அவர்கள் கவனத்தைத் திருப்புவதற்காகச் சாலையில் எருமை மாட்டின் மீது கோவணமும் தலைப் பாகையும் மட்டுமே அணிந்தபடி உட்கார்ந்து கொண்டு பாட்டு ஒன்றைப் பாடியபடியே போய்க் கொண்டிருந்த மாட்டுக்காரப் பையனைக் காட்டினாள். ரூபாவும் பாலுவும் அந்த ரசனையில் தங்கள் கேள்வியை மறந்துவிட்டார்கள்.

பானு பழைய நினைவில் மூழ்கித் தன்னை மறந்தாள். அவள் அப்போது ஈரோட்டில் தாய் வீட்டில் ரூபாவைப் பிரசவித்திருந்தாள். சியாம் புண்ணியாக வாசனத்துக்கு வந்திருந்தான். பதினைந்து நாள் லீவு எடுத்துக் கொண்டு வந்திருந்தான்.



பிரசவத்துக்காக ஏழாவது மாசமே அவள் தாய் வீடு வந்து விட்டிருந்தாள். அவளை விட்டுப் பிரிந்திருக்க முடியாத சியாம் பிரசவத்துக்கு முன்பு இரண்டு தடவை நான்கு நான்கு நாட்கள் காஷுவல் லீவு எடுத்துக் கொண்டு ஈரோட்டுக்கு வந்து அவளுடன் இன்பமாகப் பொழுதைப்போக்கி விட்டுப் போனான்.

அப்பொழுது அவன் பல முறை திருப் பித் திருப்பிச் சொன்னது ''பானு, இந்தத் தடவை நான் முட்டாள்தனம் பண்ணி உன்னை இங்கே அனுப்பிச்சிட்டேன். அடுத்ததற்கு மெட்ராஸிலேயே ஏற்பாடு பண்ணிடறேன். வீட்டிலேயோ இல்லை ஆஸ்பத்திரியிலேயோ. இந்த மாதிரி மெட் ராசுக்கும் ஈரோட்டுக்கும் என்னாலெ அலைஞ் சுண்டிருக்க முடியாது.'' என்பதுதான்.

''இது நல்லபடியா முடியட்டும் முதல்ல. அப்புறம் ரெண்டாவது - எங்கே வெச்சுக் கலாம்னு யோசிக்கலாம். உங்களை விட எனக்குத்தான் இப்படிப் பிரிஞ்சிருக்கிறது கஷ்டமா இருக்கு. ரெண்டாவது வேணு மாங்கறதையே நாம முதல்லே தீர் மானிக்கணும்'' என்று அவள் பதில் சொன் னாள்.

புண்ணியாகவாசனத்துக்கு வந்த சியாம் அவளை அணுக முடியவில்லை. பச்சை



உடம்பு என்று கூறி அம்மா அவனை தூக்கி ரதையாக இருக்கும்படி கூரியதுடன் கண் காணிப்பும் செய்து கொண்டிருந்தாள்.

பகலில் இருவரையும் அறையில் உட்கார்ந்து பேச அனுமதித்தாள். அவ்வளவு தான். அதுகூடக் கதவைச் சாத்திக்கொள்ளாமல். மிஞ்சி மிஞ்சிப் போனால் கதவை ஒருக்களித்து வைத்துக் கொள்ளலாம். ரொம்ப நேரமாக அவர்கள் அறையில் இருந்து விட்டது போல அவளுக்குத் தோன்றினாலோ, அவர்கள் பேச்சுக் குரல் கேட்காததனால் அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற சந்தேகம் வந்து விட்டாலோ குரல் கொடுப்பாள். ஏதாவது ஒரு நொண்டிச் சாக்கை வைத்துக் கொண்டு! இல்லாவிட்டால் அவள் தம்பி முரளியையோ தங்கை கலாவையோ அறைக்குள் அனுப்பி வைப்பாள், எதையாவது கேட்டுக் கொண்டு வரச் சொல்லி.

சியாமுக்குத் தனி அறை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில்தான் அவனுக்கு ராத்திரிப் படுக்கை.

ஒரு மாத இடைவெளிக்குப் பிறகு சந்தித்துக் கொள்ளும் அவர்களால் விருப்பம் போல் இணைந்து இருக்க முடியாத நிர்ப்பந்தம். சியாமுக்குக் கோபம் என்றால் அப்படிக் கோபம். ஆனால் வெளியில் காட்டிக் கொள்ள முடியாது.

''இப்போது அழைச்சுண்டு போக முடியாது. நாலாவது மாசம்தான்'' என்று வேறு அம்மா சொல்லி விட்டாள்.

''வந்துவிட்டுப் பதினைஞ்சு நாள் லீவையும் இப்படி வேஸ்ட் பண்ணிட்டு நான் மட்டும் திரும்பிப் போறதா?'' என்று சியாம் முணு முணுத்துக் கொண்டே இருந்தான்.

''என்னோட பேசறதும் கூட இருக்கிறதும் வேஸ்டா?'' என்று அவள் கணவனைச் சீண்டினாள். அவளுக்குக் கணவனின் ஏமாற்றத்தைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தாலும், அந்த ஏமாற்றம் அவரை விடத் தனக்குத்தான் அதிகமாக இருந்தாலும் அதை மறைத்துக் கொள்ள அப்படிச் சீண்டி விட்டு வேடிக்கை பார்த்தாள்.

''வேஸ்ட்தான். வெறுமே பேசிட்டுப் பார்த்துட்டு வேறொண்ணுக்கும் வழி இல்லாமத் திரும்பிப் போறது வேஸ்ட் இல்லாம வேறென்ன?'' என்று பொரிந்தான்.

அவன் ஊருக்குத் திரும்பிப் போவதற்கு முதல் நாள்.

இரவு இரண்டு மணி. தூக்கம் வராமல் அவள் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள். கூடத்தில் படுத்து வீடே தூக்கிக் கொண்டு போகும்படி கேட்ட குறட்டை ஒலி சட்டென்று நின்றது. ''ஆங்!'' என்று அம்மா யாரையோ எதையோ கேட்பது போல் இருக்கவே அவள் படுக்கையிலிருந்து எழுந்திருக்காமலே பார்வையை மட்டும் கூடத்துப் பக்கம் திருப்பினாள்.

அப்பா அம்மாவை எழுப்பிக் கொண்டிருந்தார். ஏதோ சொல்லிவிட்டு அப்பா திரும்பிச் சென்றார். அம்மாவும் எழுந்திருந்து அவள் அறைப் பக்கம் ஒரு பார்வை பார்த்துவிட்டு, அவள் அறைக் கதவைப் பாதி சாத்திவிட்டு, விடுவிடுவென்று அப்பாவின் அறையை நோக்கிச் சென்றுவிட்டாள்.

''இதுதான் சரியான சமயம். அம்மா திரும்பி வருவதற்குள் சியாமின் அறைக்குப் போய்விட்டு வந்துவிடலாம்'' என்று நினைத்துக் கொண்டு அவள் படுக்கையிலிருந்து எழுந்திருந்து கொண்டிருந்தபோதே பாதி சாத்தியிருந்த கதவைத் திறந்து கொண்டிருந்த சியாம் கதவைச் சாத்திக் கொண்டிருந்தான்!

அடுத்த விநாடி இருவரும் ஒருவரின் அணைப்பில் ஒருவர் தம்மை இழந்தனர்.

''அம்மா திரும்பிப் படுக்க வர்றதுக்குள்ளே நீங்க போயிடுங்கோ'' என்று பானு கணவனை அவசரப்படுத்தினாள்.

''வயசான அவங்களாலேயே தங்களைக் கட்டுப்படுத்திக்க முடியலேன்னு நாம மட்டும் எப்படிக் கட்டுப்படுத்திக்க முடியும்?'' என்று சியாம் வாதம் புரிந்த படியே அவளைப் படுக்கைக்கு அழைத்துச் சென்றான்.


''அவங்களுக்கு இப்போ கட்டுப்படுத்திக்க வேண்டிய தேவை ஒண்ணும் இல்லே. எனக்கு அப்படியில்லையே? நாற்பது நாள் வரையிலும் உங்க ஸ்பரிசமே கூடாதுன்னு அம்மா சொல்லி யிருக்கா.''

''அதெல்லாம் பழைய கட்டுப்பெட்டிகள் நாட்க வழக்கம். வெளி நாட்டிலே யெல்லாம் டெலிவரி ஆன நாளாவது நாள் பெண்கள் எழுந்து விட்டு வேலையெல்லாம் செய்ய ஆரம்பிச்சுடறா'' என்று சொல்லித் தன் ஆசையைத் தீர்த்துக் கொண்டான்.

அயோத்தியில் ராமர் அவதரித்த இடத்துக்குப் பக்கத்தில் முகலாய மன்னன் பாபர் காலத்தில் கட்டப்பட்ட மசூதி இருக்கிறது. இப்பொழுது அந்த இடம் ஹிந்துக்களுக்குச் சொந்தமா, முஸ்லிம்களுக்குச் சொந்தமா? என்ற வழக்கு 50 ஆண்டு காலமாகக் கோர்ட்டில் நடந்து வருகிறது.

ஒருபக்கத்தில் ஹிந்துக்கள் ராமர் பிறந்த இடத்தை வணங்கிக்கொண்டு இருக்கிறார்கள். மறுபக்கத்தில் முஸ்லிம்கள் தொழுதுகொண்டிருக்கிறார்கள். இடையில் கம்பிவேலி மட்டும் இருக்கிறது. இரு மதத்தினரும் அருகருகே தொழுகின்ற காரணத்தினால் கலகம் முற்றாமல் இருப்பதற்காக அங்கு நிரந்தரமாகப் போலீஸ்காரர்கள் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

புண்ணிய பூமியில் புனித யாத்திரை வி.என். சிதம்பரம் எழுதிய நூலிலிருந்து -பி.எஸ்.எம்.



புதிய கோல்கேட் ஃப்ளோரிகார்ட் டூத்பேஸ்ட்



குழந்தைகளுடைய பற்களின் மென்மையான எனுமல் எளிதில் துவாரங்களுக்கும், சிதைவுக்கும் உள்ளாகிறது. பெரியவர்களுக்கும் பற்சிதைவுக்கு எதிராகப் பாதுகாப்பு தேவை. புதிய ஃப்ளோரிகார்ட் டூத்பேஸ்ட் பல் துவாரங்களுக்கும், பற்சிதைவுக்கும் எதிராக உங்கள் குடும்பத்தினருக்கு நிச்சயமான பாதுகாப்பைத் தருகிறது. துவாரங்களையும், பற்சிதைவையும் உண்டாக்கும் வாய் அமிலங்களுக்கு எதிராகப் பற்களை உறுதிப்படுத்துவதற்கென பல் எனுமலுடன் இணைந்து செயல்படும் விசேஷ கோல்கேட் எம்எஃப்பி ஃப்ளோரைட் அதில் உள்ளது. கோல்கேட் ஃப்ளோரி கார்ட் புல்லரிக்கும் புதுச்சுவை கொண்டது. உங்கள் குடும்பத்திற்கு இன்றே வாங்குவீர்.




உலகெங்கும் உள்ள ஆராய்ச்சி சாலைகளில் சோதிக்கப்பட்டுள்ள எம்.எஃப்.பி ஃப்ளோரைட் துவாரங்களுக்கும், சிதைவுக்கும் எதிராகப் பற்களை உறுதிப்படுத்துகிறது என்பது மருத்துவ ரீதியாக நிரூபணமாகியுள்ளது. கோல்கேட்டின் நீண்ட ஆராய்ச்சி மட்டுமே இந்த தனிப்பட்ட எம்.எஃப்.பி ஃபார்முலாவை உங்களுக்கு வழங்க முடியும்.

ஃப்ளோரிகார்டில் உள்ள எம்எஃப்பி ஃப்ளோரைட் எனுமலுடன் இணைந்து துவாரங்களுக்கும், சிதைவுக்கும் எதிராக உங்கள் பற்களை உறுதிப்படுத்துகிறது.

இப்பொழுது தமிழ்நாடு மற்றும் கேரளாவில் மட்டுமே கிடைக்கும்.

CFT-G-2 TM

நாட்டுக்கு செல்வம் முத்து!
வீட்டுக்கு செல்வம் முத்தான
தமிழ்நாடு பரிசுச் சீட்டு!!



ஒவ்வொரு வரிசைக்கும் 2 முதல் பரிசுகள்

ரூ. 50,000 வீதம்

மற்றும் ஆயிரக்கணக்கான பரிசுகள்

சீட்டின் விலை: ரூ. 1/- மட்டுமே.

குலுக்கல் நாள்: **20.11.1980**

39-வது
குலுக்கல்

இயக்குநர்,
தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம்,
அரசினர் தோட்டம், சென்னை-600 002

DIPR

தமிழ்நாடு பரிசுச் சீட்டு வாங்கிடுவீர்

அவனை மட்டும் சொல்வானேன்?' அவளுடைய துடிப்புகளும் சமாதானம் அடைந்தன.

சியாம் கதவைத் திறந்து கொண்டு வெளியே போகும்போதுதான் அவள் அம்மாவும் அப்பா அறையின் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து கொண்டிருந்தாள். மாப்பிள்ளை, மாமியார் இருவருக்குமே கையும் களவுமாகப் பிடிபட்டு விட்டது போல் ஆகிவிட்டது!

சொன்னபடியே சியாம் அவளுடைய இரண்டாவது பிரசவத்துக்கு அவளைத் தாய் வீட்டுக்கு அனுப்பவேயில்லை. சென்னையிலேயேதான் வீட்டிலேயே பிறந்தான் பாபு. அவனுடைய மாமியார் திருச்சூரிலிருந்து உதவிக்கு வந்து இருந்துவிட்டுப் போனுள். பானுவின் தாயார் வந்தால் மறுபடியும் நாற்பது நாள் தடை போட்டு விடுவாளோ என்று சியாம் அவளுடைய தாயாரை அழைக்கவும் ஒத்துக்கொள்ளவில்லை.

இதுமட்டுமல்ல. சியாமுக்கு அடிக்கடி வெளியூருக்கு 'டூர்' போக வேண்டியிருக்கும். அப்படிப்பட்ட சமயங்களிலெல்லாம் ஊருக்குத் திரும்பி வரும்போது கூடிய மட்டும் இரவில் திரும்பி வரும்படி பார்த்துக்கொள்வான். ஏன் அப்படி என்று கேட்டால், ''பின்னே என்ன, காலையில் திரும்பி வந்தால் ராத்திரி வரையில் காத்துண்டிருக்கணுமே?'' என்று சிரித்துக்கொண்டே சொல்வான்.

''நல்ல வேளையாக நம் ரெண்டு பேருடைய சுபாவமும் ஒரே மாதிரியா அமைஞ்சுட்டதுனுலே சரியாய்ப் போச்சு. இல்லாட்டா சிரமம்தான்.'' என்று அடிக்கடி சியாம் சொல்லும்போது அவளுக்கு வெட்கமாக இருந்தாலும் அது உண்மைதான் என்பதை அவளால் மறுக்க முடியவில்லை. பார்க்கப் போனுல் அவரை விட இந்த விஷயத்தில் தானே அதிகக் குற்றவாளியோ என்று கூட அவளுக்குச் சில சமயங்களில் தோன்றியதுண்டு.

இது போன்ற பழைய நிகழ்ச்சிகளெல்லாம் கவனத்துக்கு வர நீண்ட பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது அவள் அடிவயிற்றிலிருந்து.

''மூணு மாசம் எப்படித்தான் இருக்கப் போறேனே? அவரும் எப்படி நாட்களை ஓட்டப் போகிறாரோ?'' என்று நினைத்துக் கொண்டாள்.

பகல் நேரங்கள் எப்படியோ கடந்து கொண்டிருந்தன. இரவு நேரங்கள்தான் தாள முடியாத வேதனை நாழிகைகளாய் இருந்தன பானுவுக்கு. பன்னிரண்டு மணி, ஒரு மணி ஆனாலும் கூட தூக்கம் வருவது கஷ்டமாக இருந்தது.

பத்திரிகைகளை எடுத்துப் படித்தால் ஜெயராஜின் படங்களும், புஷ்பா தங்கதுரை, ராஜேந்திர குமார்போன்றவர்களின் கதைகளும் சியாமின் தேவையை உணரச் செய்து அவள் உடலிலே கணகணவென்று ஒரு ஜ்வாலையை மூட்டிவிடலாயின.



பச்சையப்பன் கல்லூரி. காலை வகுப்புகள் தொடங்கியதும் முதல்வர் கிருஷ்ணமூர்த்தி கல்லூரியை வலம் வருவார். ஏதேனும் ஒரு வகுப்பில் நுழைவார். முதல்வர் நுழையும் வகுப்பு கலகலப்பாக இருக்கும்.

நான் தமிழைச் சிறப்புப் பாடமாக எடுத்து, பி.ஏ. ஹானர்ஸ் வகுப்பில் (1954) படித்துக் கொண்டிருந்தபோது ஒரு நாள் முதல்வர் வகுப்புக்குள் நுழைந்தார். அது தமிழ் வகுப்பு. இலக்கணப் பாடம் நடந்து கொண்டிருப்பதை அறிந்ததும் ஒரு மாணவனிடம், ''எங்கே, 'நடவாமடி சீர்' சூத்திரத்தைச் ''சொல்லு'' என்று கேட்டார்.

அது நன்னூல் சூத்திரம். நன்னூலில் மனப்பாடம் செய்ய வேண்டிய முக்கியமான சூத்திரங்களில் ஒன்று. மாணவன் சொல்ல முடியாமல் திணற, ''இது தெரியாது. நான் சொல்கிறேன் பார்'' என்ற முதல்வர் அந்தச் சூத்திரத்தை பிழை இல்லாமல் முழுமையும் சொல்லி முடித்ததும் வியப்படைந்த மாணவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள். ஷேக்ஸ்பியர் நிபுணர் நன்னூல் சூத்திரம் சொன்னுல் ஆச்சரியப்பட மாட்டார்களா? வெளியேறும்போது, 'நீங்கள் மு.வ.வின் மாணவர்கள் என்ருல் நான் பின்னத்தூர் நாராயணசாமி ஐயரின் (நற்றிணைக்கு உரை எழுதியவர்) மாணவன்' என்று நெஞ்சு நிமிர்த்திச் சொல்லிவிட்டுச் சென்ருர்.

-பூவண்ணன்

லண்டன் போய்ச் சேர்ந்ததும் சியாம் அனுப்பிய கேபிளை எடுத்து வைத்துக் கொண்டு, கூடவே அவனுடைய புகைப் படத்தையும் கையில் வைத்துக் கொண்டு அவனோடு பேசுவது போலப் பாவனை செய்து கொண்டு தன் ஏக்கத்தைக் குறைத்துக் கொள்ள முயற்சி செய்து வந்தாள்.

சியாம் சென்று பதினைந்து நாட்களுக்குப் பிறகுதான் அவனிடமிருந்து முதல் கடிதம் வந்தது. நான்கு பக்கங்கள் எழுதியிருந்தான். சென்னை-பம்பாய் விமானப் பயணம், பம்பாயில் ஒரு நாள் தங்கியிருந்தபோது நடந்த நிகழ்ச்சிகள், பம்பாய்-லண்டன் விமானப் பயணம், லண்டனில் தான் தங்கியிருக்கும் குடும்பத்தினர் பற்றிய விவரம், சாப்பாடு, ஆபீஸ் அலுவல்கள் என்று எல்லாவற்றையும் விவரித்து எழுதிவிட்டு அவளை விட்டுப் பிரிந்திருப்பதுதான் மிகவும் கஷ்டமாக இருப்பதாகவும், நினைத்தால் பறந்து வந்து பார்க்க முடியாதபடி தம்மிருவரையும் பிரிக்கும் தொலைவையும், இன்னும் மீதி இருக்கும் நாட்களைத் தனிமையில் கழிக்க வேண்டியிருப்பதை நினைத்து இப்பொழுதே ஏங்கத் தொடங்கி விட்டதாகவும், கடிதம் மூலமாகத் தன்

னுடைய நூற்றுக் கணக்கான முத்தங்களை அனுப்பி யிருப்பதாகவும் எழுதியிருந்தான். அவ்வாறு அவன் எழுதியிருந்த வரிகளின் மீது நூற்றுக் கணக்கான தடவைகள் பானு தன் உதடுகளைப் பதித்து ஈரமாக்கி அந்த வரிகளை அழிந்து போகச் செய்துவிட்டாள்.

பதினைந்து நாட்கள் கழிந்து வந்தாலும் அவன் லண்டனை அடைந்து இரண்டே நாட்களுக்குப் பிறகு அவன் எழுதியதுதான் அது. அவன் கூறியபடியே அவன் இரண்டு நாட்களுக்கு ஒரு கடிதம் எழுதிக் கொண்டு தான் இருந்தான். ஆனால் அவை அவள் கையில் கிடைக்கப் பத்துப் பன்னிரண்டு நாட்கள் ஆகிக் கொண்டிருந்தன. ஏன் அவ்வளவு தாமதமாகிறது என்று அவளுக்கு விளங்கவில்லை. சில சமயங்களில் அவ னுடைய இரண்டு கடிதங்கள் சேர்ந்தாற் போல் வந்து சேர்ந்தன. அவளும் தவ றாமல் அவனுடைய கடிதம் வந்த மறு நாளே பதில் எழுதிப் போட்டுக்கொண் டிருந்தாள்.

லண்டனிலிருந்து சியாம் நியூயார்க் சென்று தன் பயிற்சியை முடித்துக்கொள் ளும் கட்டம் வந்து விட்டது. இனி வாஷிங் டன். அதன் பிறகு அமெரிக்காவிலேயே சில நகரங்களைப் பார்ப்பதற்காக ஒரு வார விடுமுறை. பிறகு சென்னை திரும்ப வேண்டியதுதான்.

ஒவ்வொரு கடிதத்திலும் ரூபாவைப் பற்றியும் பானுவைப் பற்றியும் விசாரித்து எழுதுவான். அவர்களுக்குத் தான் வாங்கி வைத்திருக்கும் விளையாட்டுச் சாமான்கள் பற்றியும் துணி மணிகள் பற்றியும் எழுதுவான். ரூபாவுக்கும் பானுவுக்கும் ஒரு தனிக் கடிதம் ஒரு தடவை எழுதி யிருந்தான். அதற்கு ரூபாவே தன் கைப் படப் பதில் எழுதுவேன் என்று அடம் பிடித்துப் பானு எழுதிக் கொடுத்ததைப் பார்த்து அப்படியே காப்பியடித்து எழுதி யனுப்பினாள்.

முதலாமவர் : செத்துப் போனவங்க ஆவியா அலைவாங்கன்னு சொல்றாங்களே அது உண் மையா?

இரண்டாமவர் : நிச்சயமா உண்மைதான்,

முதலாமவர் : அதெப்படி உறுதியாச் சொல் றீங்க?

இரண்டாமவர் : உதாரணத்துக்கு என்னையே எடுத்துக்குங்க... நான் செத்துப் போயி நாலு நாளாச்சு!

- பாபநாசம் நாகராஜன்



சியாம் திரும்பி வருவதற்கு இன்னும் ஒரு மாதம்தான் மிஞ்சி இருந்தது. பானு நாட்களை எண்ணத் தொடங்கிவிட்டாள். இரண்டு மாதங்களை எப்படியோ கழித்து விட்டவளுக்கு மீதி யிருந்த ஒரு மாசத்தைக் கழிப்பது பெரும் பாடாக இருந்தது. பொழுது போவதே கஷ்டமாக இருந்தது. இரவுகள் விடியவே விடியாதோ என்பது போலத் தோன்றி வதைக்கத் தொடங்கின. சியாம் நாளைக்கே வந்து விடக் கூடாதா என்று அவளுக்குச் சில சமயங்களில் ஒரு தத்தளிப்புத் தோன்றிவிடும். பல்லைக் கடித் துக்கொண்டு சமாளித்துக் கொள்வாள்.

இந்த நிலையில்தான் ஒரு நாள் சற்றும் எதிர்பாராத விதமாகப் பானு மகேஷைச் சந்தித்தாள்.

ரூபாவும் பானுவும் தொந்தரவு செய் தார்கள் என்பதற்காக அவர்களை அழைத் துக்கொண்டு பானு மயிலாப்பூர் கடற் கரைக்குச் சென்றிருந்தாள். கடற்கரை மணலில் உட்கார்ந்து குழந்தைகளுடன் மணல் குவியலில் கிளிஞ்சலை ஒளித்து வைத்து விளையாடிக் கொண்டிருந்தபோது யாரோ தங்களுக்கு வெகு அருகில் வந்து நிற்கவே பானு தலை நிமிர்ந்து பார்த்தாள்.

லைட் பிரௌன் வண்ண சஃபாரி சூட் அணிந்து கொண்டு, வலது கையில் கைக் கடிகாரம் கட்டியபடி, டிரிம் செய்யப்பட்டுப் பளபளவென்று நல்ல கறுப்பு நிறத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்த கறுந்தாடிக் கிடையே மின்னல் போல் பளிச்சிட்ட புன்னகையுடன் தன்னையே பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருந்தவனைப் புரிந்து கொள்ளப் பானுவுக்குச் சில விநாடிகள் பிடித் தன.

''பானுதானே? என்னை அடையாளம் தெரியலையா?'' என்று கேட்டான் அவன்.

''மகேஷா? வாங்கோ. பார்த்து ரொம்ப நாளானதால சட்டுனு அடையாளம் தெரி யலே. தாடி வேறே வளர்த்துண்டிருக்கேள்'' என்று மகிழ்ச்சியுடன் வரவேற்றாள் பானு.

''உன் குழந்தைகளா?''

''ஆமா. இவ பேரு ரூபா. இவன் பேரு பானு. உட்காருங்களேன்.''

மகேஷ் உட்கார்ந்து கொண்டான். உட் காரும்போதே கோட்டுப் பையிலிருந்து இரண்டு காட்பரீஸ் சாக்லெட்டுகளை எடுத்து ரூபாவிடமும் பானுவிடமும் நீட்டினான். பானு உடனே வாங்கிக் கொண்டு விட்டான். ரூபா தயங்கியபடி வெட்கத்துடன் பானுவின் முகத் தைப் பார்த்தாள்.

''வாங்கிக்கோ. மகேஷ் அங்கிள் அவர்'' என்று பானு அனுமதி வழங்கினாள்.

''தாங்க்ஸ்'' என்று கூறியபடியே ரூபா வாங்கிக் கொண்டாள்.

''சாக்லெட் சாப்பிடறதுலே நானும் ஒரு குழந்தை. ஸ்டேட்ஸ் போனதிலேந்து இந்தப் பழக்கம். எப்போதும் பாக்கெட்ல ரெண்டு ஸ்லாப் இருந்துண்டே இருக்கும். அப்படி இருந்தது நல்லதாப் போச்சு. குழந் தைகளுக்குக் கொடுக்க முடிஞ்சது'' என்றான் மகேஷ்.


"ஈகிள் ப்ரின்ஸஸ் பற்றி சொல்லவும் வேண்டுமா?"



"இது அழகானது..."
கவர்ச்சியான ஒரு விருந்தோம்பி.



"இது அரியது..."
தூசு உட்செல்லாது மூடுகிறது...24 மணி நேரத்திற்குமேல் சூடு குறையாது காக்கிறது.



"என்ன இருந்தாலும் இது ஈகிள் வாக்கும் ஃப்ளாஸ்க் அல்லவா"

ஈகிள் வரிசையிலே 123 வேறுவேறு தினுசுகள்.

CASE-113-182 TAM

''ஸ்டேட்ஸ்லேயா இருக்கேன்? இப்ப என் ஹஸ்பண்டும் அங்கேதான் போயிருக்கார் டிரெயினுங்குக்காக. இப்ப வாஷிங்டன்ல இருக்கார். நீங்க எங்க இருக்கீங்க?''

''நான் மியான்னு ஒரு ஊர்ல இருக்கேன். ஓஹையோ டிஸ்ட்ரிக்ட்லே இருக்கு. கென்னடி ஹாஸ்பிட்டல்ல டாக்டரா இருக்கேன். வாட் இஸ் யுவர் ஹஸ்பண்ட்?''

''அவர் சிண்டிகேட் பாங்கிலே சீனியர் ஆபீஸரா இருக்கார். அவாதான் மூணு மாசம் ஃபாரின் எக்ஸ்சேஞ்ஜ் டிரெய்னிங்குக்காக அனுப்பிச்சிருக்கா. லண்டன், நியூயார்க்கெல்லாம் முடிச்சுட்டு இப்ப வாஷிங்டன் போயிருக்கார். இன்னும் ஒரு மாசத்துலெ வந்துடுவார்.''

''லவ்லி. ஈரோட்ல உங்காத்துலே எல்லோரும் சௌக்கியமா?''

''ஆமா, நீங்க ஈரோட்டுக்குப் போகலியா?''

''போயிருந்தேன். ஆனா உங்காத்துக்குப் போக முடியல்லே. ஸாரி.''

''பரவாயில்லே. இங்கே எங்கே தங்கி இருக்கேள்?''

''வுட்லண்ட்ஸ்.''

''ஏன், ஹோட்டல்ல போய்த் தங்கணும்? எங்க வீட்டுக்கு வந்து தங்கியிருக்கலாமே? இன்னும் எத்தனை நாள் இங்கே இருப்பீங்க?''

''இன்னும் மூணு நாள் இருப்பேன். நான் வந்தது ஒரு காஞ்பரன்ஸுக்காக. நாளைக்கு முடியறது. அதுக்கப்புறம் ரெண்டு நாள் ஃப்ரீ. உங்காத்துல உங்க வீட்டுக்காரர் கூட இல்லியே, நான் எப்படி வந்து தங்கறது?''

''அதனுலென்ன? அவ்ரும் தப்பா எடுத்துக்க மாட்டார். எனக்கும் அப்ஜக்ஷன் இல்லே.''

''எனிவே, தாங்க்ஸ் ஃபார் யூ இன்விடேஷன். நான் உங்க வீட்டுக்கு வர்றேன். சாப்பிடறேன். வீட்டுச் சாப்பாடு சாப்பிடணும்னு ரொம்ப ஆசையா இருக்கு.''

''கல்யாணம் பண்ணிக்கலியா?''

''உனக்குத்தான் தெரியுமே? நான் பிரம்மச்சாரியாகத்தானே ஊரை விட்டுப் போனேன்?''

''அது தெரியும். அங்கே யாரையாவது பண்ணிண்டிருப்பேளோன்னு கேட்டேன்.''

''இல்லே. ஐம் சிங்கிள்'' என்று கூறிச் சிரித்தான்.

பானுவுக்குப் பழைய நினைவுகள் ஒரு விநாடியில் கண் முன்னுல் தோன்றி மறைந்தன.

மகேஷின் வீடு ஈரோட்டில் அவர்கள் வீடு இருந்த அதே தெருவில் எதிர் சாரியில் பத்து வீடுகள் தள்ளி இருந்தது. மகேஷ் பானுவை விட இரண்டே வயது மூத்தவன். சிறு வயதில் பாண்டியும், கண்ணுமூச்சியும் சேர்ந்து விளையாடியது உண்டு. ஐந்தாவது வகுப்பு வரையில் இருவரும் ஒரே பள்ளியில் தான் படித்தார்கள். இரண்டு வயது பெரியவனுனுலும் அவளை விட ஒரு வகுப்புத் தான் மேலே படித்து வந்த மகேஷ். பி.யூ.சி. படித்த பிறகு அவன் மெடிகல் காலேஜில் சேர்ந்து டாக்டருக்குப் படிக்கப் போய் விட்டான் சென்னைக்கு. பானு ஈரோட்டிலேயே தொடர்ந்து பி. ஏ. படித்தாள்.

மகேஷுக்கு அவளைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அவர்களிடையே காதல் போக்குவரத்து என்றெல்லாம் ஒன்றும் இருக்கவில்லை சாதாரணமாக சந்திக்கும்போதெல்லாம் நண்பர்களைப் போல் பேசிக் கொள்வது உண்டு. ஆனுல் மகேஷுக்குத் தன்னைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்கிற எண்ணம் இருப்பதாகத் தெரிந்த பிறகு அவளுக்கும் அவன் பேரில் ஒரு பிடிப்பு இருப்பது போல அவளுக்குத் தோன்றியது.

ஆனுல் இருவருடைய விருப்பமும் நிறைவேறுதபடி அவர்களுடைய ஜாதகங்கள் குறுக்கே நின்றன. பானுவின் தகப்பனுருக்கு ஜாதகங்களிலும், ஜோசியங்களிலும் அசைக்க முடியாத நம்பிக்கை. மகேஷின் ஜாதகத்தில் களத்ர தோஷம் என்னும் பயங்கரமான குறை இருப்பதை இரண்டு மூன்று ஜோசியர்கள் சுட்டிக் காட்டியதால் தம் பெண்ணை அவனுக்குக் கொடுத்து அவனை உயிரோடு பலி கொடுக்க அவள் தகப்பனுர் தயாராக இருக்கவில்லை.

இது மகேஷுக்குப் பெரிய ஏமாற்றமாக இருந்ததோடு கூட ஜாதகங்களில் நம்பிக்கை யற்ற அவன் தகப்பனுருக்கும் பானுவின்



லயோலா கல்லூரி முதல்வர் ஃபாதர் ஜெரோம் டிசௌஸா கல்லூரி மாணவர்கள் அனைவரையும் அவர் பெயர் என் வகுப்பு வாரியாகத் தெரிந்து வைத்திருக்கும் அற்புத ஞாபகசக்தி படைத்தவர். அவருக்கே உரிய சில ஜோக்குகள் உண்டு. முதல் நாளன்று அடெண்டன்ஸ் எடுக்கும் முன்னர், ''உங்கள் எண்ணைக் கூப்பிட்டவுடன் வகுப்புக்கு வந்திருப்பவர்கள் 'பிரசண்ட்' என்றும் வராதவர்கள் 'ஆப்சண்ட்' என்றும் குரல் கொடுங்க'' என்று சொல்லிவிட்டுப் பெரிதாகச் சிரித்தார். மாணவர்களுக்கு ஹாஸ்யம் புரிய இரண்டு நிமிடங்கள் ஆயின. பிறகு ஒவ்வொரு எண்ணுகக் கூப்பிடும்போது மாணவர் முறையே 'பிரசண்ட்' என்று கூறியவாறு இருந்தனர். கடைசியில் ஒரு மாணவர் என்னைக் கூப்பிடும் போது ''ஆப்சண்ட் ஃபாதர்'' என்றார். வகுப்பு முழுவதும் கலகலத்தது. முதல்வர் அந்த மாணவனை நோக்கி ''நீ ஏன் ஆப்செண்ட் என்று கூறினுய்?'' என்று வினவ அவர் "I was absent minded father" என்றாரே பார்க்கலாம். சிரிப்பொலி எழ அதில் முதல்வரும் பங்கேற்றுக் கொண்டார். இன்று அந்த மாணவர் ஒரு சிறந்த வழக்கறிஞராகத் திகழ்கிறார்.

-வசந்தன்

தகப்பனுருக்கும் மனஸ்தாபத்திலும் முடிந்தது.

பானுவுக்கும் சிறிது ஏமாற்றம்தான். என்ருலும், இந்த ஏமாற்றம் ஏற்பட்ட சில மாதங்களுக்குள்ளாக அவனுக்கும் சியாமுக்கும் திருமணம் நிச்சயமாகி விட்டதாலும், சியாமிடம் அவன் தன் மனத்தை முழுக்க முழுக்கப் பறி கொடுத்து விட்டதாலும் மகேஷ் விஷயமாக ஏற்பட்ட ஏமாற்றம் அவளைப் பெரிதாகப் பாதிக்கவில்லை.

சியாமுடன் அவள் கல்யாணம் நடக்கும் பொழுது மகேஷ் ஊரில் இல்லை. அப்பொழுதே அவன் வெளி நாடு போய்விட்டானு, அல்லது பிறகு எப்போதாவது போனுனு என்பதெல்லாம் அவளுக்குத் தெரியாது. ஆனுல் அப்பொழுது போனவன் எட்டு வருடங்களுக்குப் பிறகு இப்போதுதான் தாய் நாடு திரும்பி வந்திருக்கிருன்.

''ஏன் கல்யாணம் பண்ணிக்கலே?''

''என்னமோ, ச்சு... பிடிக்கலே'' என்று கூறி விரக்தியாகச் சிரித்தான்.

''எவ்வளவு நாள் இப்படியே இருக்க முடியும்?''

''முடிஞ்ச வரையிலும்.''

''அப்பா, அம்மா கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி வற்புறுத்தலேயா?''

''அவா கம்பெல் பண்ணத்தான் பன்ரு. ஆனு எனக்கு அந்த எண்ணம் இல்லேயே?''

மேற்கொண்டு என்ன பேசுவது என்று பானுவுக்குத் தோன்றவில்லை.

'இன்னும் என்னையே நினைச்சுண்டிருக்கேளா?'ன்னு கேட்கலாமா? அது தவருகாதா? மேலும் இது போன்ற நெருக்கம் காட்டுவது போன்ற கேள்விகளைத் தான் இப்போது கேட்பது அவன் மனத்தில் வேறு ஏதாவது எண்ணங்களைத் தோற்றுவித்து விட்டால்?

ஆகவே பேச்சை மாற்றுவதற்காக, ''எப்போ சாப்பிட வரீங்க எங்க வீட்டுக்கு?'' என்று கேட்டாள்.

''எப்ப வேணு. இன்னிக்கு ராத்திரியே வேணுமானுலும் வரேன். ஆனு நீ சமைச்சிருக்கணுமே?''

''அது என்ன பிரமாதம்? குக்கர் வெச்சா அரை மணி நேரத்துல ஆயிடறது. பேசிண்டே இருந்தோம்னு அதுக்குள்ளே சமையல் முடிஞ்சுடும். இன்னிக்கு ராத்திரியே வாங்கோ. ஆர். எஸ். வி. பி. வெல்கம்.''

''தாங்க் யூ.''

மகேஷ் ரூபாவுடனும் பானுவுடனும் பேசினுன். விளையாடினுன். வெகு சீக்கிரம் அவர்களுக்கு ஒரு நண்பனைப் போல் ஆகிவிட்டான்.

ஒரு அரை மணி நேரம் கழித்த பிறகு ''போகலாமா?'' என்று கூறியபடி பானு எழுந்து கொண்டாள்.

''வீடு எங்கே? டாக்ஸி வேணுமா? நீங்க எப்படி வந்தீங்க?'' என்று மகேஷ் கேட்டான்.

''வீடு இங்கே கற்பகாம்பாள் நகர்லே. லஸ்லுக்குப் பக்கத்திலே. நடந்தே கூடப் போயிடலாம். நாங்க வர்றப்ப பஸ்லே வந்தோம்'' என்று அவன் கேள்விக்குப் பதில் சொன்னுள் பானு.

''சரி, அப்ப டாக்ஸியிலே போயிடலாம். குழந்தைகளை அழைச்சுண்டு ஏன் நடந்து போகணும்?''

''வேண்டாம்'' என்று பானு மறுத்தாள்.

''அம்மா டாக்ஸி, அம்மா டாக்ஸி'' என்று பாலுவும் ரூபாவும் கோரஸ் பாடினுர்கள்.

ரமேஷும் பானுவும் ஒருவரை யொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

''அவங்க 'டிசைட்' பண்ணிட்டாங்க'' என்றுன் மகேஷ்.

மணல் பரப்பைத் தாண்டி, படிக்கட்டுகள் ஏறிச் சாலைக்கு வந்ததும் நல்ல வேளையாக அங்கே ஒரு டாக்ஸி நின்றது.

ஐந்தே நிமிடங்களில் அவர்கள் வீடு வந்து சேர்ந்தனர்.

''சாப்பிடறதுக்கு முன்னுடி உங்களுக்கு இப்போ காப்பி, டீ ஏதாவது வேணுமா?''

''நோ, தாங்க்ஸ். ஆனு குளிச்சாப் பரவாயில்லேன்னு பார்க்கிறேன்.''

''ஓ யெஸ். குளிங்களேன். பாத் ரூம்ல கெய்சர் இருக்கு. வேற டிரஸ் வேணும்னு சியாம்து எடுத்துக் குடுக்கறேன்.''

''தாங்க்ஸ்'' என்று கூறி மகேஷ் தன் கோட்டைக் கழற்றினுன். அதை எங்கே மாட்டுவதென்பது போலச் சுற்று முற்றும்



''கத்தர் யோசம் சார் இந்த ஜனங்கள், இப்படி வேகாத வெயிலில் க்யூவில் நின்றுவது சினிமாவை இனிமே பார்த்து விட வேண்டுமா என்ன?''

''வாஸ்தவம்தான். இந்த ஜனங்கள் ஏன் தான் இப்படி சினிமாப் பைத்தியம் பிடித்து அலைகிறுர்களோ?''


''பெண்களைப் பாருங்கள் கையில் பச்சைக் குழந்தையுடன் காலை பத்து மணியிலிருந்தே காத்துக் கிடக்கிறுர்கள் மாட்னிக்கு.''

''ஆமாம் சோறு தண்ணீர் இல்லாவிட்டாலும் சினிமா பார்க்காமல் இருக்க முடியவில்லை இவர்களுக்கு.''


''எல்லாம் காலம் செய்யும் கோலம்.''

''ம்ம் நகருங்கள் க்யூ நகர்கிறது பாருங்கள் ம் மாரப்பா அது க்யூ நடுவில் நுழைவது. மனிதன் காலையிலிருந்து காத்துக் கிடக்கிறுன். இப்படி ராஜா மாதிரி இடையில் நுழைந்தால்...''

- பிரியா பானு


ஓ லைலா... லைலா... எங்கேயிருக்கிறாய் எனதருமை லைலா...
அடுத்த அறையில்தான் அன்பே, கொசுக்களின் முத்த மழைக்கிடையே இருக்கிறேன்.
உங்கள் வாழ்வில் காதல் மலரட்டும். கொசுக்கள் மறையட்டும்.
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
எல்லாப் "பொருள்" விலைகளும் உயர்வு?! நல்லவேளை
எல்லாப் பொருள் விலைகளும் உயர்வு
கொசுக்களை விரட்ட சிக்கனமான வழி
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
காணவில்லை
அன்பு மகனே. வீட்டிற்கு திரும்பிவா கண்ணே! வீட்டிலிருந்து கொசுக்களையெல்லாம் இப்போது விரட்டியடித்துவிட்டோம்.
உன் அன்புத்தாய்
டார்ட்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள் கொசுக்களை விரட்டுகிறது, மனிதர்களை அல்ல.
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
போர்ட், பம்பாய்-400 023. போன்: 273831

உங்கள் மகளின் வாழ்விலோர் பொன்னாள் காண சிந்தித்து சேமிக்கத் தொடங்கிடுவீர் லக்ஷ்மி விலாஸ் பாங்கில்!



உங்கள் அருமை மகள் இன்று மாசற்ற குழந்தையாயினும் அவள் வளர, வளர, திருமண நாளின் எண்ணமும் உங்கள் மனதில் வளர்கிறது. அவள் வாழ்வில் ஓர் பொன்னாளான அத்திருமணத்திற்காக திட்டமிட்டு, எங்களது சுழல்முதலீட்டுத் திட்டம்/மறு முதலீட்டுத் திட்டம் ஒன்றை தேர்ந்தெடுத்து இன்றே சேமிக்கத் தொடங்கிடுவீர். உங்கள் சேமிப்பு பன்மடங்காக பெருகி, உங்கள் மகளின் திருமணம் இனிதே நடைபெற வழி

லக்ஷ்மி விலாஸ் பாங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம் :
கரூர்-639 001.
நிர்வாக அலுவலகம் :
சென்னை-600 086.

என்.வி. ஸ்ரீனிவாசன்
சேர்மன்

பார்த்தான். அதைக் கவனித்த பானு, 'வார்ட்ரோபை'த் திறந்து ஒரு 'ஹாங்கரை'க் கொண்டு வந்து அவன் கையில் கொடுத்தாள்.

அப்படிக் கொடுக்கும்போது முண்டா பனியன் அணிந்திருந்த அவனது 'பாடி'யை அவளால் பார்க்காமல் இருக்க முடியவில்லை. பனியன் அவனது பரந்த மார்பைக் கவ்விக் கொண்டிருந்தது. உருண்டு திரண்ட புஜங்களும் கைகளும் கர்லாக் கட்டையை நினைவு படுத்துவது போல் திண் திண்ணென்றிருந்தன. மகேஷ் இவ்வளவு வெள்ளையாகவா இருந்தான் அப்போதெல்லாம்? அவன் உடம்பை யார் பார்த்திருக்கிறார்கள்? ஒரு சமயம் நீண்ட வெளி நாட்டு வாசத்தினால் பெற்றதாகவும் இருக்கலாம்.

''இன்னொரு பெட்ரூம் இருக்கு. அங்கே ஹாங்கரை மாட்டறதுக்கெல்லாம் வசதி இருக்கு. நான் சோமோட லுங்கி குடுக்கறேன். டவலும் தர்றேன். வேறெதாவது வேணுமா?''

''அது போறும். தாங்க்ஸ்.''

பானுவுக்குச் சிரிப்பு வந்து விட்டது.

''இதென்ன ஸ்டேட்ஸ்ல கத்துண்டதா? வார்த்தைக்கு வார்த்தை தாங்க்ஸ் சொல்றது?'' என்று கேட்டுச் சிரித்தாள்.

மகேஷும் சிரித்தபடியே மற்றொரு பெட்ரூமை நோக்கிச் சென்றான்.

பானு குளியலறைக்குச் சென்று கெய்சரின் விசையைப் போட்டுவிட்டுச் சமையலறைக்குச் சென்றாள்.

லுங்கியை அணிந்து கொண்டு துண்டைத் தோள் மீது போட்டுக் கொண்டு வெளியே வந்த மகேஷ், ''நான் குளிக்கப் போகட்டுமா?'' என்று சமையல் அறையைப் பார்த்துக் குரல் கொடுத்தான்.

''ஊம். போங்கோ. கெய்சர் ஸ்விட்ச் போட்டிருக்கேன். சூடாயிருக்கும்'' என்று சொல்லிக் கொண்டே வெளியே வந்தவள் லுங்கியும் துண்டுமாக நின்ற மகேஷைப் பார்த்துச் சில விநாடிகள் அசந்துவிட்டாள். மார்பிலும் வயிற்றிலும் படர்ந்திருந்த ரோமங்கள் வெண்மையான அவனது உடலின் பின்னணியில் அவனது குறுந்தாடியை விடக் கறுப்பாகப் பிரகாசித்தன. உடம்பு இருந்த வெண்மை அவன் முகத்தில் இருக்கவில்லை. Tanned Skin என்று சொல்வார்களே அந்த நிறமாக இருந்தது முகம்.

சில விநாடிகள்தான். உடனே அவள் நினைவு பெற்றாள். 'சீ என்ன இது? பிற புருஷன் ஒருவனின் உடலைப் பார்த்து ஆச்சரியப்பட்டு நிக்கறது மெண்டாக இல்லையே ஏன் எனக்கு இப்படித் தோணித்து?' என்று நினைத்து வெட்கப்பட்டுக் கொண்டாள்.

''சோப் வேணுமா?''

''இருந்தாத் தேவலே.''

''தரேன்'' என்று கூறிப் பீரோவைத் திறந்து ஒரு புது சோப்பை எடுத்து உறையைப் பிரித்துக் கொடுத்தாள்.

மகேஷ் குளிக்கப் போனதும் பானு ரூபாவுக்கும் பானுவுக்கும் சாப்பாடு போட்டாள். அவர்களுக்கு மத்தியானச் சாப்பாடே கூட வைத்ததுதான். இல்லாவிட்டால் அவர்களுக்குத் தூக்கம் வந்துவிடும்.

அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது மகேஷ் குளித்துவிட்டு வந்தான். சோப்பின் மணம் 'கம்'மென்று அவன் உடலிலிருந்து வீசியதைப் பானு உணர்ந்தாள். A freshly bathed man is irresistable to any woman.

ஏதோ ஓர் ஆங்கில நாவலில் (அதன் ஆசிரியை டெனிஸ் ராபின்ஸ் என்பது மட்டும் ஞாபகமிருந்தது. வேறு யாருக்கு இந்த மாதிரி கற்பனை தோன்றும்?) படித்த வாக்கியம் அவள் நினைவுக்கு வந்தது.

ஏன் இன்றும் தனக்கு இப்படித் தவறான எண்ணங்களாகவே தோன்றிக் கொண்டிருக்கின்றன என்று தன்னையே கடிந்துகொண்டாள். மகேஷை அழைத்திருக்கக் கூடாதோ என்று அவளுக்குத் தோன்றியது. கொஞ்சம் கொஞ்சமாகத் தன் எண்ணங்கள் தறிகெட்டுப்போய் இப்படியே ஓடத் தொடங்கி விட்டால்? எண்ணங்கள் செயலில் ஈடுபடச் செய்வதற்குத் தூண்டாதென்பது என்ன நிச்சயம்? அவளுக்குத் திடீரென்று ஏதோ



மனுநீதிச் சோழனை விட ஒரு படி உயர்ந்த மனிதர் எங்கள் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கலைக் கல்லூரி முதல்வர் திரு கே. எம். வேங்கடராமையா அவர்கள்.

தன் மைந்தன் தவறிழைத்தமைக்குத் தேர்க் காலில் இட்டுக் கொன்றான் மனுநீதிச் சோழன். எங்கள் முதல்வருடைய மைந்தனும் நாங்கள் படித்தபோது முறை தவறி நடந்தான் என்பதற்காகக் கல்லூரியை விட்டே நீக்கிவிட்டார்.

அந்தக் கல்லூரியில் மாணவர்க்கு இலவச உணவு, மற்றும் பல சலுகைகள். ஆனால் மாணவர்கள் திரைப் படம் பார்க்கச் செல்லக் கூடாது என்பது நிபந்தனை. ஒரு முறை முதல்வருக்குத் தெரியாது என்று இறுதி ஆண்டு மாணவர்கள் படம் பார்க்கச் சென்று வந்தனர். அவருக்கு எப்படியோ தெரிந்து விட்டது. மறுநாள் வகுப்பறையில் கேட்டார். யாரும் உண்மையைச் சொல்லவில்லை. உங்களைச் சிறந்த மாணவர்களாக உருவாக்காத நானே தண்டனை அனுபவிக்க வேண்டும் எனக் கால் கடுக்க நின்றார்!

தமிழகமெங்கும் அவர்தம் மாணவர் பரவியுள்ளனர். அவரால் இன்று நாங்கள் உயர்ந்தோம் என்று எண்ணி ஒவ்வொருவரும் பெருமைப்படுகிறோம். ம. மணி, எம்.ஏ.

பயம் தோன்றியது. முட்டாள் தனம் செய்து விட்டோமோ என்று நினைத்தாள். நல்லபடியாக மகேஷ் சாப்பிட்டு விட்டுச் சீக்கிரம் போய்விட்டால் தேவலை என்று இருந்தது அவளுக்கு.

மகேஷ் பானுவுக்கும் ரூபாவுக்கும் கதை சொன்னான்.

''அம்மா, அப்பாவை' விட அங்கிள் நல்ல கதையாச் சொல்றாரம்மா'' என்றாள் ரூபா.

பானுவுக்குச் 'சுருக்'கென்றது. தன் பெண் சியாமையும் மகேஷையும் ஒப்பிட்டுப் பார்க்கிறாளே. ரூபா அவ்வாறு செய்வது தவறாகாது. தான் அப்படி இருவரையும் 'கம்பேர்' செய்வது தப்பு.

கதை கேட்டபடியே குழந்தைகள் தூங்கி விட்டார்கள்.

பானு மகேஷுக்குப் பரிமாறினாள்.

''நீயும் உட்கார்ந்து சாப்பிடேன் பானு'' என்றான் மகேஷ்.

''இல்லே. நான் அப்புறம் சாப்பிட்டுக் கறேன்'' என்று அவள் எவ்வளவு சொல்லியும் அவன் கேட்காமல் வற்புறுத்தி அவளையும் அவனுடன் உட்கார்ந்து சாப்பிடச் செய்தான்.

வெங்காய சாம்பார், பச்சடி, உருளைக் கிழங்கு பொடிமாஸ், அப்பளம், தக்காளி ரசம்.

''சமையல் ரொம்ப ஜோர்'' என்று ரசித்துச் சாப்பிட்டான் மகேஷ்.

''எல்லாம் காலையிலே செஞ்சதுதான்.' பொடிமாஸும் அப்பளமும்தான் இப்போ செஞ்ச பிரிபரேஷன்.''

கேட்டுக் கேட்டு வாங்கிச் சங்கோசமில்லாமல் சாப்பிட்டான். சியாம் அப்படியில்லே. தானைப் பார்த்து அவள் பரிமாறினால்தான் உண்டு. வாய் திறந்து இது வேணும், அது வேணும் என்று கேட்க மாட்டான்.

தானும் தன் கணவனையும் மகேஷையும் ஒப்பிடுவதை உணர்ந்து அவள் துணுக்குற்றாள்.

கேகிச நிருபர்: உங்களோட வயதை நான் தெரிஞ்சுக்கலாமா? நடிகை: ஓ! என் வேலைக்காரியோட வயசுல மூணு தள்ளி ஆறுலே பெருக்கி எட்டால வகுத்து ரெண்டு வயசைக் கழிச்சா அதான் என்னோட வயது!

கேகிசநிருபர்: அதுசரி உங்க வேலைக்காரியுடைய வயசை நீங்க சொல்லவேயில்லியே?

நடிகை: நீங்க என்னோட வயசைத்தானே கேட்டீங்க! என் வேலைக்காரியுடைய வயசு பரம ரகசியம்! — ஜே. எஸ்ரா சைமன்



பேசிக் கொண்டே சாப்பிட்டார்கள். மகேஷ் சியாமைப் பற்றிப் பல கேள்விகள் கேட்டான். தன்னுடைய ஸ்டேட்ஸ் வாழ்க்கையைப் பற்றிக் கதை கதையாகச் சொன்னான். அங்கே அவன் மனோ தத்துவ வைத்தியனாகப் பணியாற்றுவதாகவும், தன்னிடம் வருகின்ற பெரும்பாலான நோயாளிகள், தாம்பத்ய உறவில், உடலளவிலும் மனத்தளவிலும் இன்பம் காண முடியாமல் பரிகாரம் தேடி வருபவர்கள்தான் என்றும் உதாரணங்களுடன் எடுத்துச் சொன்னான். ஆண்-பெண் உறவுகளைப் பற்றிக் கணவனில்லாத ஓர் ஆடவனுடன் தனித்துப் பேசுவதற்கு அவளுக்குக் கூச்சமாக இருந்த போதிலும் அவன் சொன்ன விஷயங்கள் சுவாரஸ்யமாக இருந்ததாலும், அவன் கூச்சமில்லாமல் பேசும்போது ,தான் கூச்சப்பட்டுக் கொண்டு அதில் சிரத்தை காட்டாமல் இருப்பது நாகரிகமாகாது என்ற ஏதோ ஒரு நினைப்பிலும் தன் கூச்சத்தை மறைத்துக் கொண்டு சகஜமாக அவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

சாப்பிட்டு முடிந்த பிறகும் மகேஷ் வெகு நேரம் பேசிக் கொண்டே இருந்தான். ஸ்டேட்ஸில் சியாம் தங்கியிருக்கும் விலாசத்தைப் பானுவிடமிருந்து கேட்டு வாங்கிக் கொண்டான். முடிந்தால் அவனைச் சந்திப்பதாகச் சொன்னான்.

மணி பத்தடித்த பிறகும் மகேஷ் புறப்படுவதற்கான அவசரம் எதையும் காண்பிக்காமல் இருக்கவே பானுவுக்கு லேசாக ஒரு பீதி தோன்றத் தொடங்கியது.

'ராத்திரி இங்கேயே படுத்துண்டுடலாமான்னு பார்க்கறேன்' என்று மகேஷ் எங்கே சொல்லி விடுவானோ என்று பயந்தாள். இன்னொரு பெட் ரூம் இருக்கிறது என்று வேறு சொல்லிவிட்டோம். படுத்துக்கொள்கிறேன் என்று அவன் சொன்னால் என்ன செய்வது என்று பயந்தாள்.

நல்ல வேளையாக அதிக நேரம் அவளைத் தவிக்க விடாமல் மகேஷ் எழுந்தான்.

''அப்ப நான் வரட்டுமா? முடிஞ்சா மறுபடியும் வரேன்'' என்று கூறித் தன்னுடைய உடைகளை அணிந்து கொள்வதற்காக மற்ற படுக்கை அறைக்குச் சென்றான்.

அவன் அவளிடம் விடை பெற்றுக் கொண்டு சென்ற பிறகு அவளுக்கு ஏதோ ஒரு ஆபத்திலிருந்து தப்பியது போலவே தோன்றியது.


'என்ன இருந்தாலும் அவன் ஓர் ஆண். எக்கச்சக்கமாக ஏதாவது நடந்து கொண்டிருக்க மாட்டான் என்பது என்ன நிச்சயம்? கல்யாணமாகாத பிரம்மச்சாரி வேறு. ஒரு காலத்தில் என் காதலுக்காக ஏங்கியவனும்கூட' என்று ஏதேதோ நினைத்துக் கொண்டு படுக்கையில் புரண்டாள்.

திடீரென்று இவளுக்கு இன்னொரு எண்ணம் தோன்றியது. மகேஷ் கூறிய பலவித மனோ வக்ரங்களைப் போலத் தன் மனமும் ஒரு வக்கிர புத்தியின் காரணமாகத்தான் இப்படியெல்லாம் நினைக்கிறதோ? அவன் அப்படிச் செய்து விடுவான் இப்படிச் செய்து

1978-79ம் ஆண்டு. நான் தஞ்சைக்கு அருகில் உள்ள அ. வீரையா வாண்டையார் நினைவு திரு புட்பம் கல்லூரியில் புகுமுக வகுப்பு மாணவன். ஒரு நாள் மாலை வகுப்புகள் நடந்து கொண்டிருந்தன. வானம் மேக மூட்டத்தோடு விளங்கக் குளிர் காற்று சிலு சிலுவென்று வீச நாங்கள் இரண்டாவது மாடியில் அமர்ந்திருந்தோம். வகுப்பை நடத்திக் கொண்டிருந்தார் தமிழாசிரியர் திரு அன்பழகன் அவர்கள். தமிழில் சுவைபடப் பேசுவதோடு நீண்டாலும் கேலியும் வழிந்தோடும் அவர் பேச்சில். பாடத்தின் இடையே ஒரு நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிட்டார்.

"ஒரு முறை 'ஐயா' (பெரியார்) பகுத்தறிவுக் கூட்டமொன்றில் பேசும்போது "இங்குள்ள கற்புடைய பெண்கள் எல்லாம் கையை உயர்த்துங்கள்!" என்றாராம். கூட்டத்திலிருந்த பெருந் திரளான பெண்கள் அனைவரும் கையைத் தூக்கினாராம். உடனே ஐயா கூறினாராம், "உங்கள் தெய்வப் புலவர்கள் 'கற்புடைய பெண்கள் வேண்டிக் கொண்டால் மழை பொழியும்' என்று கூறியிருக்கிறார்கள் எங்கே உங்களில் ஒருவர் கூறுங்கள் மழை பெய்கிறதா எனப் பார்ப்போம்!" என்றாராம். ஒருவரும் கையை உயர்த்தி அவ்வாறு கூறத் துணியவில்லையாம்."

இதைக் குறிப்பிட்ட திரு அன்பழகன் அவர்கள், "அந்தப் பெண்களுக்குச் சந்தேகம் புலவர்களின் கூற்றிலா இல்லை தங்கள் மேலேயா?" என்றார். அவர் கூற்றிலிருந்த வேடிக்கையையும் வினையையும் ரசித்து மாணவர்கள் சிரித்துக் கொண்டிருந்த பொழுது திடீரென மழை பெய்ய ஆரம்பித்தது. உடனே அவர், "நமது கல்லூரி



வட்டத்திற்குள் யாரோ கற்புடைய பெண் இருக்கிறாள் போலிருக்கிறது. அவள் சொல்லித் தான் மழை வந்துள்ளது" என்றார். 'ஓ' வென்ற சத்தம் வகுப்பறையில் எழுந்தது. ஏனெனில் எங்களது ஆண்கள் கல்லூரி! உடனே அவர் ஒரு படி மேலே சென்று, "அந்தப் பெண்ணும் இந்த வகுப்பறைக்குள் தான் இருக்கிறாள் போலிருக்கிறது, ஆகா!" என்றார். எங்களது சிரிப்பொலி வலுப் பெறும் முன் ஒரு குறும்புக்கார மாணவன் எழுந்து, "அது வேறு: யாருமல்ல, நீங்கள்தான் சார்!" என்றானே பார்க்கலாம். எங்களது களிப்பு இடிச் சிரிப்பென எழுந்தது. மழை ஒரு விநாடி நின்று கவனித்துவிட்டு மீண்டும் பெய்தது என்றால் பாருங்களேன்!

வரகூர் தா. வள்ளுவன்

விடுவான் என்று தான் பயப்படுவதெல்லாம் அவன் அப்படி ஏதாவது செய்யட்டும் என்ற தன் உள் மனத்தின் ஆசையின் ஒரு திரிந்த உருவமோ? சே, அப்படி யெல்லாம் ஒன்றும் இருக்காது என்று உடனே அந்தஎண்ணத்தை விரட்டினாள்.

எதிர்பாராத விதமாக மகேஷ் மறுநாள் மாலையிலும் வந்தான். பானுவுக்கும், ரூபாவுக்கும் நிறைய இனிப்புகளும், விளையாட்டுச் சாமான்களும் வாங்கிக் கொண்டு வந்தான்.

"வேண்டாம். இதெல்லாம் எதுக்கு?" என்று பானு மறுத்தாள்.

"இருக்கட்டும். அதனாலென்ன? நான் இந்த ஜன்மத்துலெ இனிமேல் கல்யாணம் பண்ணிண்டு என் குழந்தைகளுக்கு இப்படி வாங்கிக் கொடுக்கப் போறதில்லே. உன் குழந்தைகளுக்குக் கொடுக்கிறதிலே எனக்கு சந்தோஷம். வை டு யூ டினை மீ தட் ப்ளெஷர்?" என்றான்.

அதன் பிறகு பானுவால் ஆட்சேபிக்க முடியவில்லை. சரி போகட்டும். தினம் தினமா வாங்கிக் கொடுக்கப் போகிறான்! என்று விட்டு விட்டாள்.

அன்றைக்கும் மரியாதைக்காகச் சாப்பிடச் சொன்னாள். மரியாதைக்காகக் கூட வேண்டாம் என்று சொல்லாமல் மகேஷ் சரி என்று சொல்லி விட்டான்.

"உண்மையில் நான் வந்தது உன் சாப்பாட்டை எதிர்பார்த்துத்தான். உன் சமையல் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. இனி மறுபடியும் இந்த மாதிரிச் சாப்பாட்டைச் சாப்பிடறதுக்கு எத்தனை வருஷம் காத்திருக்கணுமோ?" என்றான்.

எந்தப் பெண்ணுக்குமே உள்ள பலவீனம் பானுவுக்கும் இல்லாமல் போகுமா? தன் சமையலை ஒருவர்புகழ்ந்து சொல்லி விட்டால் உச்சி குளிர்ந்து போகாத பெண் யார்?

சாப்பிட்டுவிட்டு வெகு நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு முதல் நாளைப்போலவே பத்து மணிக்கு மேல் விடைபெற்றுக் கொண்டு போனான் மகேஷ்.

"என்னிக்கு உங்களுக்கு ஃப்ளைட்?" என்று அவன் புறப்படுவதற்கு முன்னால் பானு கேட்டாள்.

"ஆஸ் இட் இஸ் நாளன்னிக்குக்காத்தாலே போகணும். ஆனா இன்னொரு பத்து நாள் போஸ்ட்-போன் பண்ணலாமான்னு யோசிச்சுண்டிருக்கேன். ஒண்ணும் தீர்மானம் பண்ணலே. நாளன்னிக்குப் போறதா இருந்தா நாளைக்கு மறுபடியும் வர்றேன்" என்று சொல்லிவிட்டுப் போனான்.

மறுநாள் சொன்னது போலவே வந்தான். ஆனால், "நாளைக்கு ஃப்ளைட்ல போகலே மெட்ராஸை விட்டுப்போறதுக்கே என்னமோ மனசு வரமாட்டேங்குது. இன்னும் பதினைந்து நாளைக்கு இங்கேயே 'ஸ்டே' பண்றதா தீர்மானம் பண்ணிட்டேன்" என்றான்.

"பதினைந்து நாள் போஸ்ட்போன் பண்றவர் இன்னும் ஒரு பதினைந்து நாள் போஸ்ட்போன் பண்ணிங்கன்னு சியாம் வந்துடுவார்.

அவளையும் பார்த்துட்டுப் பேசிட்டுப் போகலாமே. சந்தோஷப்படுவார்'' என்றாள் பானு.

''ஐயோ, அது முடியாதம்மா. இதுவே ஜாஸ்தி. இதுக்கே ஒத்துக்கறுங்களோ இல்லையோ. முடியாது. புறப்பட்டு வான்னு கேபிள் வந்துட்டுதுன்னு உடனே புறப்பட்டுப் போக வேண்டியது தான்'' என்றான்.

அன்றைக்கு அதிக நேரம் தங்கவில்லை. யாரையோ பார்க்க வேண்டும் என்று சொல்லிப் போய்விட்டான். சாப்பிடக் கூட இல்லை.

அதன் பிறகு இரண்டு மூன்று நாட்கள் வரவில்லை.

நான்காவது நாள் மத்தியானம் இரண்டு மணி சுமாருக்கு வந்தான் திடுதிப்பென்று.

பிஸ்கட்டு, சாக்லெட் என்று குழந்தைகளுக்காகத் தான் கொண்டு வந்திருந்தவைகளையெல்லாம் கையில் எடுத்து வைத்துக் கொண்டு, ''எங்கே ரூபாவும் பாநுவும்?'' என்று கேட்டான்.

''ரெண்டு பேரும் எக்ஸிபிஷனுக்குப் போயிருக்கா. பக்கத்து வீட்லெ எல்லாரும் போயிருக்கா. இவங்களும் போவோம்னு அடம் பிடிச்சா. எனக்கு என்னமோ ஒரே தலை வலியா இருந்தது. நான் வரலேன்னு சொல்லிட்டேன். அவா ரெண்டு பேரையும் அழைச்சுண்டு போறேன்னு பக்கத்தாத்துக் காரா கூட்டிண்டு போயிருக்கா'' என்றாள்.

''அடடா, அவங்களைப் பார்க்க முடியலியே. நான் இப்பவே சஷ்னிங் ஃப்ளைட்லே பாம்பே போறேன். இன்னிக்கு ராத்திரியே ரெண்டு மணிக்கு அலிடாலியா ஃப்ளைட் ஒண்ணிருக்கு. அதிலே போறேன்'' என்றான்.

''வந்துடுவா. ஆறு மணிக்குள்ள வந்துடுவா'' என்றாள் பானு.

''ஆறு மணிக்கு நான் ஏர்போர்ட்ல இருந்தாகணும். அஞ்சு மணி வரையிலும் பார்க்கிறேன். வந்தாங்கன்னு என்னுடைய அதிர்ஷ்டம்.'' என்று புஷ் சர்ட்டைக் கழற்றினான்.

''ஒரு லுங்கி இருந்தாக் கொடு பானு. அன்னிக்கி மாதிரி கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கறேன்'' என்றான்.

''டிபன் ஏதாவது பண்ணட்டுமா?'' என்று கேட்டாள் பானு, லுங்கியை அவன் கையில் கொடுத்துக் கொண்டே.

''வேண்டாம். உனக்கு வேறே தலைவலின்னு சொன்னே. ஒரு கப் காப்பி மாத்திரம் குடு போதும்'' என்றான்.

காப்பியைக் கொடுத்துவிட்டுப் பானு படுக்கை அறைக்கு வந்தாள். படுத்துக் கொண்டால் தேவலை போல் இருந்தது. ஆனால் மகேஷ் வந்து ஹாலில் உட்கார்ந்திருக்கும்போது தான் படுக்கையறையில் படுத்துக்கொள்வது மரியாதை யல்லவே என்று தயங்கி யோசித்தாள்.

மேற்கொண்டு அவள் ஏதும் யோசிப்பதற்குள் அவனே உள்ளே வந்துவிட்டான்.

''நீ படுத்துக்கறதானா படுத்துக்க பானு. நான் இங்கேயே உட்கார்ந்துக்கறேன். பேசிண்டிருப்போம்'' என்றான்.

''இல்லே, இப்ப தலைவலி அவ்வளவா இல்லே'' என்றாள்.

''குட்'' என்றான் மகேஷ்.

லோகாபிராமமாக ஐந்து நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

மகேஷ் உட்கார்ந்திருந்த இடத்திலேயே திடீரென்று எழுந்து நின்று கொண்டான்.

''என்ன ஏதாவது வேணுமா?'' என்று கேட்டாள் பானு.

''ஆமா பானு. ஐ வாண்ட் யூ. ஐ வாண்ட் யூ வெரி பேட்லி'' என்று கூறியபடியே ஒரேபாய்ச்சலாகப் பாய்ந்து பானுவைத் தன் கை வளையங்களுக்குள் இறுகப் பற்றிக் கொண்டான்.

''என்ன இது? மகேஷ். நோ ப்ளீஸ். நோ. இஸ் இஸ் வெரி பேட். லீவ் மீ. சொன்னாக் கேளுங்கோ'' என்று பானு அவனை விலக்க முயன்றாள்.

''என்னைத் தள்ளாதே பானு. ஹோல்ட் ஆன் மீ. நான் எவ்வளவோ என் மனசைக் கட்டுப்படுத்திப் பார்த்தேன். என்னாலே முடியலை பானு. இதுதான் முதல் தடவையும் கடைசித் தடவையும். இனி நான் மறுபடியும் உன் வாழ்க்கையிலே குறுக்கிடவே மாட்டேன்.'' என்று கெஞ்சியபடியே தன் அதரங்களை அவள் கன்னத்தில் பதிக்க முற்பட்டான்.

பானுவுக்குத் தன் உடலிலிருந்த சக்தியெல்லாம் வற்றிப் போய் விட்டதுபோல் தோன்றிய அதே சமயத்தில் பல நாட்களாகக் கணவனின் ஸ்பரிசம் படாதிருந்த உடம்பில் இன்று ஓர் ஆணின் ஸ்பரிசம் பட்டதும் அதை உதறித் தள்ள வேண்டும் என்று மனத்தில் தோன்றியபோதிலும் உடல் அதை வரவேற்பதை அவள் உணர்ந்தாள். அவள் உடல் நடுங்கியது. சிலிர்த்தது. செயலிழந்து அவன் கைப்பாவையாக அவன் இழுத்த இழுப்புக்கெல்லாம் வளைந்து கொடுக்கத் தயாராகி விட்டாள்.

அந்தக் கணத்தில் டெலிஃபோன் மணி அடித்தது. ''டிரிங்... டிரிங்....''

பானு ஒரு உறக்கத்திலிருந்து விடுபட்டவள் போலத் திடுக்கிட்டாள். மனத்தில் ஒரு விழிப்புணர்வு. சட்டென்று உடல் விறைத்



லண்டனில் ஒரு மணமாகாத பெண் கர்ப்பமாகி விட்டாள். அதற்கு அவள் மின்சார இலாகாவைக் குற்றம் சாட்டுகிறாள்! ''அவர்கள் மிக அதிகமான தொகைக்கு 'பில்' அனுப்பினார்கள். அதைப் பார்த்து நான் ரொம்ப அதிர்ச்சியடைந்து விட்டதால் நான் சாப்பிட்ட 'பில்' வேலை செய்யவில்லை''என்கிறாள்! இப்போது மின்சார இலாகா கலப்பு தவணைகளில் பணம் வாங்கிக் கொள்ள முன் வந்திருக்கிறது!

'சண்டே எக்ஸ்பிரஸ்'

- அர்ஜுனன்

துக்கொண்டது.

''டிரிங்... டிரிங்!....'' ஏதோ அபாய அறிவிப்புப் போல மணி விடாமல் அடித்துக் கொண்டிருந்தது. அவளுக்கு எச்சரிக்கை மணியா அது!

''சனியன்! அடிக்கட்டும் விடு. ரிசீவரைக் கீழே எடுத்து வைத்துவிடுகிறேன்'' என்றான் மகேஷ்.

பானு வெகுண்டெழுந்தாள். தான் மோசம் போய்விட இருந்ததை உணர்ந்தாள். வெறி பிடித்தவள் போல் மகேஷின் மீது பாய்ந்து ''ராஸ்கல்! ஸ்கௌண்ட்ரல்'' என்று திட்டியபடியே அவன் கன்னங்கள் இரண்டிலும் வலது கையாலும் இடது கையாலும் மாற்றி மாற்றி அறைந்தாள்.

''ஐ எம் வெரி ஸாரி பானு. நான் ஒரு நிமிஷத்துலே மிருகமா மாறிக் காட்டுத்தனமா நடந்துண்டுட்டேன். என்னை மன்னிச்சுடு'' என்றான் மகேஷ்.

''கோ டு ஹெல். டோண்ட் ஷோ யுவர் டர்ட்டி ஃபேஸ் டு மி எனிமோர். நன்றி கெட்டவர் நீங்கள். உங்களுக்கு மன்னிப்பே கிடையாது. இந்த இடத்தை விட்டுப்போய்த் தொலையுங்கோ முதல்லே'' என்று பேய் போலக் கத்தினாள்.

''டிரிங்....டிரிங்....''

டெலிஃபோன் மணி விடாமல் அடித்தது. பானு ஏதோ ஒரு பற்றுக்கோலைத் தேடுபவள் போல் பாய்ந்து சென்று ரிசீவரைக் கையில் எடுத்துக் காதருகே வைத்துக் கொண்டு அழுகைக் குரலிலேயே ''ஹலோ'' என்றாள்.

''என்ன பானு, ஒன்னும் பேசவே மாட்டேங்கறே? உடம்புக்கு ஒன்னும் இல்லியே? ஏன் ஃபோனை எடுக்க இவ்வளவு நேரம்?''

அந்தக் குரலைக் கேட்டுக் துள்ளிக் குதிக்க வேண்டிய பானு பதறிப் போனாள்.

''ஒண்ணும் இல்லே. தலைவலி தான். தூங்கிண்டிருந்தேன். உங்க ஃபோன் வரும்னு எதிர்பார்க்காததுனாலே கொஞ்சம் தடுமாற்றமாப் போயிடுத்து. உங்க உடம்புக்கு ஒண்ணுமில்லியே?''

''இல்லே. ரூபாவும் பாநூவும் எப்படி இருக்கா? என்ன பண்ணிண்டிருக்கா? பேசச் சொல்லேன் என்னோடே.''

''அவா ரெண்டு பேரும் எக்ஸிபிஷனுக்குப் போயிருக்கா.''

''நீ போகல்லியா? வீட்லே தனியாவா இருக்கே? என்ன பண்ணிண்டிருக்கே? உன் குரலே என்னமோ மாதிரி இருக்கே? எதுக்காவது அழுதியா?''

பானுவுக்கு அவன் கேட்ட கேள்விகளினால் உண்மையிலேயே அழுகை வந்து விட்டது. ரிஸீவரின் வாயை மூடிக் கொண்டாள். எங்கே அவனுக்குத் தன்னுடைய விம்மல் கேட்டுவிடப் போகிறதோ என்கிற பயத்தில்.

''தனியாத்தான் இருக்கேன். நீங்க எப்ப வரப்போறீங்க?'' என்று கேட்கும்போது அவ விடம் போய் சொல்லிடுவோமே என்று அவள் நெஞ்சு வெடித்து விடும்போலிருந்தது. அவன் எப்பொழுது வருகிறான் என்பதை எப்படி ஆவலும் ஏக்கமும் பொங்கக் கேட்க வேண்டும்? ஆனால் இப்போது தான் ஏதோ

1958ம் ஆண்டு. கல்லூரியில் புகுமுக வகுப்பில் நான் சேர வேண்டும்.

வட ஆர்க்காடு மாவட்டம் திருப்பத்தூரில் இருப்பது ஒரே ஒரு கல்லூரி - தூய நெஞ்சக் கல்லூரி.

பிரின்ஸிபால் மிகவும் கண்டிப்புடன் கருணையும் நிறைந்தவர் என்று கேள்வி. அவர் மனம் வைத்தால்தான் அட்மிஷன் அவர் வேண்டாம் என்று நினைத்தால் எந்தச் செல்வாக்கை வைத்தும் கல்லூரியில் சேர முடியாது.

நான் மட்டும் அட்மிஷனுக்காகப் போனேன். பதினாறே வயது முடிந்த பையன்.

பிரின்ஸிபால் அறையின் ஹாஃப் டோரைத் திறந்து உள்ளே சென்றேன்.

எனக்கு ஆங்கிலம் தெரிந்தும் பேச முடியவில்லை. பேசாமல் நின்றேன்.

''என்ன வேண்டும்?'' என்று ஆங்கிலத்தில் கேட்டார் பிரின்ஸிபால்.

நான் ஒன்றும் சொல்லாமல் எஸ். எஸ். எல் ஸி. சர்ட்டிபிகேட்டை நீட்டினேன்.

என்னைச் சிறிது நேரம் பார்த்தவர், சட்டென்று எழுந்து என் தோள் மேல் கை போட்டுக் கொண்டு, ''கம் ஆன்'' என்று அறைக்கு வெளியே என்னை அழைத்து வந்து ஹாஃப் டோர் அருகில் நிறுத்தினார். எனக்கு ஒன்றும் புரியவில்லை.

''நீ இப்படித் தட்ட வேண்டும்'' என்று ஆங்கிலத்தில் சொன்னவர், வலது ஆள் காட்டி விரலைக் கொக்கி போல் வளைத்து, வளைவின் பின்புறத்தால் ஹாஃப் டோரின் மேல் 'டக் டக்' என்று தட்டினார். ''நான் கூப்பிடுவேன். அப்போது வா'' என்று நான் வெளியே நின்று கொண்டிருக்கையிலேயே, அவர் அறைக்குள் சென்றுவிட்டார்.


தப்பு செய்துவிட்டேன். என்னைக் கல்லூரியில் சேர்க்க மாட்டார் என்று நம்பினேன். இரண்டு நிமிடங்களுக்குப் பின் நான் அவர் கூறியபடி கதவைத் தட்டிவிட்டு, அனுமதி பெற்று உள்ளே சென்றேன்.

''நான் உன்னைச் சேர்த்துக் கொள்கிறேன். அப்ளிகேஷனைப் பூர்த்தி செய்து கொண்டு வா. நல்ல மார்க்ஸ்'' என்றார்.

ஒழுக்கம் என்பது மிகச் சிறிய நிகழ்ச்சிகள் மூலம் கட்டிக் காட்டப்படும் என்று அன்றுதான் தெரிந்து கொண்டேன்.

இந்த பிரின்ஸிபால் யார் என்கிறீர்கள்? புகழ் வாய்ந்த சலீஷியன் ஃபாதர் ஜே. மர்பி அவர்கள்தான்.

-செல்விகாந்த்



கடமைக்காகக் கேட்பதைப் போல் கேட்க வேண்டியிருக்கிறதே? அவன் வந்தால் எப்படி அவனுக்குத் தன் முகத்தைக் காட்டுவாள்? எப்படி அவனோடு முன்பு போல் நெஞ்சம் கலந்து உறவாடுவாள்? மனச்சாட்சியின் குத்தல்களை எப்படிச் சகித்துக் கொள்ளப் போகிறாள்?

சியாமுடன் பேசிக் கொண்டிருந்தன அவள் உதடுகள். அவள் மனமோ நூறு கேள்விகளைக் கேட்டு அவள் உடல் முழுவதையும் ஊசியால் குத்திக் கொண்டிருந்தது.

எப்படியோ பேசி முடித்து ரிஸீவரைக் கீழே வைத்தாள்.

மகேஷைப் பார்த்துச் சீறினாள். ''இன்னும் எதுக்காக இங்கே நிக்கறேள்? போய்த் தொலையக் கூடாதா?''

''போறேன் பானு. கடைசியா இன்னொரு தடவை உங்கிட்ட மன்னிப்புக் கேக்கக்கறதுக்காத்தான் நின்னுண்டிருந்தேன். போறேன். உன்கிட்டேயிருந்து எனக்கு மன்னிப்புக் கிடைக்காதுன்னு—தெரிஞ்சு போச்சு. பரவாயில்லே. பட் ஐ விஷ் யூ ஆல் தி பெஸ்ட்'' என்று கூறிவிட்டு அவள் பதிலுக்காகக் காத்திராமல் விடுவிடுவென்று வெளியேறிவிட்டான்.

பானு படுக்கையில் மல்லாந்து படுத்துக் கொண்டு மேலே சுற்றிக் கொண்டிருந்த மின் விசிறியைப் பார்த்தாள்.

ஊருக்குப் புறப்படுவதற்கு முதல் நாள் சியாம் கூறியது அவளது ஞாபகத்துக்கு வந்தது. 'ஆக்ஸிடெண்ட் பிளேன்லதான் ஆகணுமான்னு? இந்தப் படுக்கையிலேயே படுத்துண்டிருக்கச்சேயே கூட ஆகலாம். மேலே சுத்திண்டிருக்கிற ஃபேன் திடீர்னு கழன்டு தலை மேலே விழக் கூடாதா?'ன்னு சியாம் கேட்டான்.

நிம்மதி! நிம்மதி!!

ஆப்ரஹாம் லிங்கனிடம் அவரது நெருங்கிய நண்பர் ஒருவர் ஒரு வழக்கைக் கொண்டு வந்து நீதி மன்றத்தில் வெற்றி தேடிக் கொடுக்கும்படி வேண்டினார். ஒரு ஏழை நேர்மையாக வாழ்ந்தும், வாங்கிய கடனை உரிய காலத்தில் திருப்பிக் கொடுக்காமல் இருந்தது பற்றிய வழக்கு.

லிங்கன் நண்பரைப் பார்த்து, ''உங்கள் வழக்கை வெற்றியடைச் செய்ய என்னால் முடியும். ஆனால் ஒரு நேர்மையான ஏழையின் குடும்பத்தை அது கெடுத்ததாக இருக்கும். உனக்குச் சேர வேண்டிய அந்தப் பணத்தை வேறு வழியில் சுலபமாய்ச் சம்பாதித்து விடும் ஆற்றல் உனக்கு உண்டு. கொடுத்த கடனை மறந்து விடு. உனக்கும் நிம்மதி எனக்கும் நிம்மதி, அந்த ஏழைக்கும் நிம்மதி. இதைவிட உலகில் பணம் பெரிதா?'' என்றார். நண்பர் லிங்கனின் அறிவுரையை ஏற்றார்.

-ஆதாரம்: மிர்ரர்

தகவல்: ''சங்கரி புத்திரன்''



'ஆமா சியாம். நீங்க சொன்னபடியே இந்த அறையிலேயே இந்தப் படுக்கையிலேயே ஆக்ஸிடெண்ட் ஆயிட்டுது. ஆனா நீங்க சொன்னபடி ஃபேன் கழன்டு என் தலை மேல் விழல்லே. அப்படி விழுந்திருந்தா அது சின்ன ஆக்ஸிடெண்டாத்தான் இருந்திருக்கும். மிஞ்சி மிஞ்சிப் போயிருந்தா என் உயிர் போயிருக்கும். இப்ப என் தலையிலே கழன்டு விழுந்தது இந்தக் குடும்பத்தோட கௌரவம். இதனாலே என் உயிர் ஒரேயடியாப் போகல்லே. ஆனா அணு அணுவாப் போகும். இப்ப எனக்கு ஏற்பட்டது பயங்கரமான ஆக்ஸிடெண்ட்' என்று நினைத்துக் கொண்டாள்.

ஆனால் அடுத்த விநாடியே அவளுக்குள்ளேயே எதிர்க் குரல் ஒன்று கிளம்பியது. 'இதை ஆக்ஸிடெண்ட் என்று சொல்லி நான் என் பொறுப்பு ஒண்ணுமே இதுல இல்லாதது போலத் தட்டிக் கழிக்கப் பார்க்கறேன். இது ஆக்ஸிடெண்ட் எப்படி ஆகும்? நானே தண்டவாளத்துலே தலையைக் கொண்டு போய்க் கொடுத்துட்டு, நானே ப்ளக் பாயிண்ட்லே விரலை நுழைச்சுண்டு ஆக்ஸிடெண்டுன்னு கத்தறது என்ன நியாயம்? மகேஷை வீட்டுக்கு அழைச்சது என்னோட தப்புத் தானே? சியாம் வீட்டுலே இல்லாதப்போ நான் அவனை அழைக்காம இருந்தா அவன் ஏன் என்னைத் தப்புதலா நினைச்சுண்டிருக்கப் போறான்? அவர் இல்லாதப்ப அவனை நான் அழைச்சதுனாலேயும், ராத்திரி பத்து மணி வரையிலும் பேசிண்டிருந்ததனாலேயும், தூங்கியும் துண்டுமா அவன் நின்னப்ப அசந்து போய் அவனை வெறிச்சுப் பார்த்துண்டு நின்னதையும் தான் அவன் தப்பா நினைச்சுண்டுட்டான். அவனைத் திட்டியும் அடிச்சும் உதைச்சும் வெளியே துரத்திட்டேனே? தப்பு முழுக்க அவனது தானா?

'வேண்டாம் மகேஷ். நோ ப்ளீஸ். இட் இஸ் பேட்' என்று வாய்தான் சொன்னதே தவிர வேறே எந்த விதத்திலே நான் அவனோட செய்கையை எதிர்த்தேன்? அந்த விநாடியிலே டெலிஃபோன் மணி அடித்து சியாம் என்னைக் காப்பாத்தி இருக்கலேன்னு என் கதி என்ன ஆயிருக்கும்? மகேஷைக் கன்னத்துலே அறைஞ்சேனே அதை முதல்லேயே ஏன் செய்யலே? ஏன் நகத்தாலே அவன் மூஞ்சியிலே கீறியிருக்கக் கூடாது? ஏன் அவன் கையைப் பிடிச்சுக் கடிச்சிருக்கக் கூடாது? ஏன் என் உடல் பலவீனப்பட்டது? தன்னோட இணைஞ்சது தன் கணவர் கௌதமர்தான்னு அகல்யை முதல்லே நினைச்சுண்டிருந்தாளாம். ஆனா பாதியிலே அது கணவர் இல்லே, இந்திரன்னு தெரிஞ்சுட்டதாம். அப்படித் தெரிஞ்சதுக்கப்பறமும் பேசாம இருந்துட்டாளாமே அதனாலேதான் கல்லாப் போன்னு சபிச்சுட்டாராம் கௌதமர். என் விஷயம் அதை விட மோசமில்லையோ? எனக்கு முதலிருந்தே தெரியுமே, என்னைத் தொட்டவன் கணவனில்லேன்னு. அப்ப எனக்கு என்ன சாபம் கொடுக்கணும்? கல்லானு போறுமோ கான்கிரீட்டாவோ இன்னும் அதைவிட

கெட்டியா ஏதாவது இருந்தா அதுவாவே நான் ஆகணும்.

பானுவால் இந்த மாதிரி எண்ணமிலும் இருக்க முடியவில்லை. இந்த எண்ணங்களை ஜீரணித்துக் கொள்ளவும் முடியவில்லை. படுக்கையை விட்டு எழுந்திருந்து குளியலறைக்குப் போய் ஜில்லென்று தண்ணீர் விட்டு முகத்தைக் கழுவிக் கொண்டாள்.— உடலில் ஏற்பட்டுவிட்ட களங்கத்தையே கழுவித் துடைத்து விட முடியும் போல முகத்தைத் தேய்த்துத் தேய்த்துக் கழுவிக் கொண்டாள்.

திரும்பி ஹாலுக்கு வந்தபோது டீபாயின் மீது மகேஷ் வைத்துவிட்டுப் போயிருந்த பிஸ்கட் பொட்டலங்களும் சாக்லேட்டுகளும் அவள் கண்களில் பட்டன. உடனே அவைகளை எடுத்துச் சாக்கடையில் எறிந்துவிட வேண்டும் என்று அவளுக்கு ஆத்திரமாக வந்தது.

'நீ செய்த தவறுக்குக் குழந்தைகள் என்ன பாவம் செய்தன? மகேஷ் அவர்களுக்காகத் தானே ஆசையோடு வாங்கிக்கொண்டு வந்தான்? அவர்கள் வீட்டில் இருந்திருந்தால் இந்த அசம்பாவிதம் நடக்காமலே இருந்திருக்கலாம். குழந்தைகளின் எதிரில் அவனுக்கும் அவ்வளவு துணிச்சல் இருந்திருக்காது. நானும் சபலத்துக்கு இடம் கொடுத்திருக்க மாட்டேன். இவைகளைத் தூக்கிச் சாக்கடையில் எறிந்து விடுவதனால் எனக்கு ஏற்பட்டுவிட்ட களங்கத்தைக் கழற்றி எறிந்துவிட முடியுமா? நானே அல்லவா இப்பொழுது சாக்கடையில் விழுந்து விட்டேன்? எனக்கு வேண்டியிருந்ததை நான் அடைந்தேனா இல்லையோ, அதற்காகக் கை நீட்டி விட்டேனா இல்லையா? இப்போ குழந்தைகளின் மகிழ்ச்சியைக் கெடுப்பானேன்? இருந்துவிட்டுப் போகட்டும்' என்று நினைத்த படி அவைகளை அப்படியே விட்டு விட்டாள்.

சியாம் திரும்பி வர இன்னும் பதினைந்தே நாட்கள் இருந்தபோது இந்தச் சம்பவம் நடந்துவிட்டதை எண்ணி எண்ணி அவள் நெஞ்சுக்குள் புழு அரிப்பது போன்ற வேதனை உண்டாயிற்று. இதுமட்டும் நேராமலிருந்தால் இன்னும் பதினான்கு நாட்கள் தான், இன்னும் பதின்மூன்று நாட்கள் தான் என்று ஆர்வமுடன் நாட்களை எண்ணிக்கொண்டிருந்திருப்பாள். ஆனால் இப்போதோ ஐயோ இன்னும் பதினான்கு நாட்கள்தானே, ஐயோ இன்னும் பதின்மூன்று நாட்கள்தானே என்று அவன் திரும்பி வரப்போகும் நாளை பீதியுடன் எண்ணத் தொடங்கினாள்.

இந்தத் துர்ச் சம்பவத்தை சியாமிடம் சொல்லாமல் மறைக்க முடியாது என்று அவளுக்குத் தோன்றியது. ஏனென்றால் அவர்களிடையே இதுவரை எந்தவிதமான ரகசியமும் இருந்ததில்லை. ஆனால் இது மற்ற விஷயங்களைப் போல் அல்லவே? இதைக் கேட்டு சியாமால் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்? உடைந்து போய்விட மாட்டானா? அவனுடைய 'ரியாக்ஷன்' என்னவாக இருக்கும்? தன்னை அடித்து நொறுக்கி விடுவானா? விவாகரத்து செய்து விடுவானா? அப்படி ஏதாவது நேர்ந்துவிட்டால் ரூபா, பானுவின் கதி என்ன? அவர்கள் யாரிடம் வளர்வார்கள்? கோர்ட் என்ன தீர்ப்பளிக்கும்? அவர்களைப் பிரிந்து என்னாலும் இருக்க முடியாது. சியாமாலும் இருக்க முடியாதே! குழந்தைகளுக்காகவாவது தாங்கள் சேர்ந்து இருந்துதான் ஆக வேண்டும். ஆனால் அது எப்படி முடியும்? தங்கள் இருவருக்குமிடையே மகேஷின் நினைவு. சியாமுக்குத் தான் செய்துவிட்ட துரோகம் கம்பளிப் பூச்சியைப் போல் தன் உடலில் ஊறிக் கொண்டிருக்குமே? ஐயோ, இதென்ன நரக வேதனையை விலை கொடுத்து வாங்கிக் கொண்டு விட்டேன் என்று பானுவுக்குத் தோன்றியது.



''நான் ஒரு மர்ம ஜோக் எழுதியிருக்கேன்...''
''ஜோக்கில் என்ன மர்மம் இருக்கு?''
''ஜோக்கா இல்லேங்கிறது தான் மர்மம்...!''
-இணைத்துக்கடவு ரவி

அன்று ஏர்போர்ட்டில் சியாம் சொன்னது அவள் நினைவில் தோன்றியது: மனசைக் கட்டுப்படுத்திக்கறதுலே இருக்கிற சுகம் மனசைத் தளர விடறதுலெ இல்லே என்று சொன்னான். அப்போ அவளுக்கு அது புரிந்திருக்கவில்லை. இப்பொழுது புரிந்தது. மகேஷிடம் தான் மனசைத் தளர விட்டதனால்தானே இப்போது தனக்கு இந்த நரக வேதனை? தான் மட்டும் மன உறுதியோடு இருந்திருந்தால்? வாழ்க்கை முழுவதும் மனச் சாந்தி இருந்திருக்கும். இப்போதோ? வாழ்க்கை முழுவதும் நிம்மதி இல்லாமல் கழிக்கவேண்டும்.

பானுவால் இந்த உள்ளத்தின் குரலுக்குப் பதில் கூற முடியவில்லை. எப்படி முடியும்? அது சத்தியத்தின் குரலாயிற்றே.

பல மணி நேரப் போராட்டங்களுக்குப் பிறகு பானு ஒரு முடிவுக்கு வந்தாள். என்ன ஆனாலும் சரி. இந்தக் கேவலம் என் மனத்துக்குள்ளேயே மடிந்து ஒழியட்டும். இதை சியாமிடம் சொல்லி அவன் மன உறுதியைப் பரிசோதிக்க வேண்டாம். தன் பேரில் அவனுக்குள்ள அன்பை இந்த ரகசியத்தை அம்பலமாக்கி எடை போட வேண்டாம். குழந்தைகளின் எதிர்கால நன்மையை உத்தேசித்து இந்த விஷயத்தை என் நெஞ்சுக்குள்ளேயே பூட்டி வைத்துக் கொண்டுவிட வேண்டியதுதான். நான் நரக வேதனை அனுபவித்தாலும் சியாமும் குழந்தைகளுமாவது சௌக்கியமாக, சந்தோஷமாக இருக்கட்டும்.

இந்த முடிவுக்கு அவள் வந்த பின் சிறிது தெளிவு ஏற்பட்டாற் போல இருந்தது.

மனப்பாரம் சற்றுக் குறைந்தாற் போல் இருந்தது. சியாமின் வரவை எதிர்கொள்ள அவள் தயாரானாள்.

சியாம் திரும்பி வந்து பத்து நாட்கள் ஓடிவிட்டன.

அன்று இரவு குழந்தைகள் தூங்கிய பிறகு சியாம் பானுவை அணைத்துக்கொண்டபடியே கேட்டான்: "பானு, நீ ஏன் முந்தி மாதிரி இல்லவே இல்லே? உங்கிட்ட ஒரு பெரிய 'சேன்ஜ்' ஏற்பட்டிருக்கே, என்னத்துனாலே?"

"அப்படியா? என்ன சேன்ஜ்? எனக்கு ஒண்ணும் தெரியலையே?" என்றாள். பொய் சொல்லுகிறோமே என்று அவள் நெஞ்சம் அழுதது நல்ல வேளையாக யாருக்கும் தெரிய முடியாது.

"ஆமா. முந்தி போல் உங்கிட்ட ஆர்வம் இல்லேன்னு எனக்குத் தோன்றது. உனக்காக இல்லாம எனக்காக, கடமைக்காக, நீ சந்தோஷப்படறாப்பலே நடிக்கிறதாக எனக்குத் தோன்றது. நாலு நாள் டூர் போயிட்டு வந்தேன்னா அஞ்சாவது நாள் திரும்பி வந்ததும் வராததுமா ஏதோ பத்து வருஷம் என்னைப் பிரிஞ்சிருந்தாப்பலே ஓடி வந்து கட்டிக்குவே. மூஞ்சி யெல்லாம் சிவந்து போறாப்பலே 'கிஸ்' பண்ணுவே. நான்கூட வேடிக்கையா நான் பொம்பளையாவும் நீ ஆம்பிளையாவும் பிறந்திருக்கணும்னு சொல்வேன். அந்த வேகமெல்லாம் எங்கே போச்சு? இந்த வயசுலேயே உனக்கு ஃப்ரிஜிடிடி வந்துடுத்தோன்னு எனக்குச் சந்தேகம் வறது. உன் மனசுலெ ஏதாவது கவலை இருக்காம்மா, பானு. ஏன் இப்படி இருக்கே?"

"என்னமோ எனக்கே தெரியலையே?" என்றாள் பானு. ஜாஸ்தி பேசினால் அழுது விடுவோமோ என்று அவளுக்கே பயமாக இருந்தது.

"ஏதுவாயிருந்தாலும் என்கிட்டச் சொல் பானு. மனசுலேயே வெச்சிண்டு புழுங்காதே. அப்புறம் ஏதாவது சீரியஸா ஆயிடும். உடம்புக்கு ஏதாவது சொல்ல முடியாதபடி இருக்கா? லேடி டாக்டர் கிட்டவேணா நாளைக்குப் போவோமா?" அன்புடன் கேட்டுக்கொண்டே அவள் நெற்றியில் தன் உதடுகளைப் பதித்தான்.

சொல்லிவிடலாமா என்று பானுவுக்குத் தோன்றியது. சொல்லிவிட்டு அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு நன்றாக அழுதுவிட்டால் தான் அனுபவித்துக்கொண்டிருக்கும் நரக வேதனைக்கு ஒரு முடிவு ஏற்பட்டுவிடும் என்று அவளுக்குத் தோன்றியது. ஆனால் தைரியம் வரவில்லை. தலைவலி போய் திருகு வலி வந்தது என்பது போலக் குற்ற உணர்ச்சியின் வேதனை போய், கணவனின் வெறுப்பு, குழந்தைகளின் பிரிவு போன்ற புது வேதனைகள் தோன்றி விடுமோ என்று பயந்தாள்.

"ஒண்ணும் வேண்டாம். எனக்கு ஒண்ணும் இல்லே. உங்களுக்கு அப்படித் தோணறது அவ்வளவுதான்" என்றாள் இதயத்தைப் பிசைகிற வேதனையை உள்ளேயே அழுத்தி வைத்துக் கொண்டு.

உடல் வேறு, மனம் வேறு என்றும் தன் உடல்தான் பலவீனப்பட்டதே யொழிய மனம் அந்தத் தவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் அன்று தான் செய்த தவறுக்கு நியாயம் கற்பிக்க அவள் நினைத்தாள். கூடவே அதை எண்ணி வெட்கமும் அடைந்தாள். இன்று மனமும் உடலும் ஒன்றையொன்று சார்ந்து இயங்குபவைதான் என்பதை அவளுடைய நிலை அவளுக்கு நன்கு உணர்த்தி விட்டது. மனத்தில் நிலவிய குற்ற உணர்ச்சி, அவளை முழு உடலின்பத்தையும் அடைய முடியாமல் தடுப்புச் சுவராக நிற்பதை உணர்ந்தாள். கீழே விழாமல் கணவனால் தக்க சமயத்தில் தாங்கப்பட்டு விட்டாலும் சறுக்கி விட்டதென்னவோ உண்மைதானே? அதுவே துரோகம் தானே? கணவனுக்குத் தான் செய்த மோசம்தானே?

"பானு, உனக்கு ஒண்ணு சொல்ல மறந்துட்டேனே" என்று திடீரென்று சியாம் பேச்சை வேறு திசையில் மாற்றினான்.

"என்ன?"

"உங்க ஊர் மகேஷ் இங்கே வந்திருந்தானாமே. நாலஞ்சு நாள் நம்ம வீட்லெ சாப்பிட்டானாமே?"

சியாமின் கேள்வி அவள் தலையில் இடி விழுந்தாற்போல் இறங்கியது அவள் காதுகளில்.

"நீங்க பார்த்தீங்களா அவனை? எங்கே?"

"நயாகாரா ஃபால்ஸ் பார்க்கப் போயிருந்தேன். அங்கே அவனும் வந்திருந்தான் போலிருக்கு. அகஸ்மாத்தாக என்னைப் பார்த்திருக்கான். எனக்கு அவனைத் தெரியாதே. அவன் என் ஃபோட்டோவை இங்கே நம்ம வீட்லெ பார்த்தானாம். என்னை அடையாளம் கண்டு பிடிச்சுண்டு அவனே வந்து பேச வந்தான். ரொம்ப நேரம் பேசிண்டிருந்தோம்."

பானுவின் நெஞ்சு படபடவென்று அடித்துக்கொள்ளத் தொடங்கியது. ரொம்ப

ஒயர் இல்லாமல் ஃபோன்!

அறைக்குள் இங்குமங்குமாக நடந்துகொண்டே ஃபோன் பேசினால் தேவலாம் போலிருக்கிறதா? அதற்கும் வழி வகுத்திருக்கிறார்கள் மேற்கு ஜெர்மனியிலே - ஒயர்களை இழுத்துக்கொண்டே நடக்கவேண்டாம்! ஃபோனைத் தூக்கிக்கொண்டு அலையவேண்டாம். ரிஸீவரை ஃபோன் ரெஸ்ட்டுடன் (சுவரில் உள்ள வட்ட வடிவம்) இணைப்பது இன்ஃப்ரா ரெட் கதிர்கள், ஒயர்கள் அல்ல! சுவரில் உள்ள ஃபோன்ரெஸ்டுக்கு வழக்கமான ஒயர் கனெக்ஷன் உண்டு. ஸீமென்ஸ் தயாரிப்பு!

ஆதாரம்: ஸ்காலா.



நேரம் இருவரும் என்ன பேசியிருப்பார்கள்? மகேஷ் இங்கே நடந்ததைச் சொல்லியிருப்பானோ? ஐயோ கடவுளே! சியாம் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டே தன்னைச் சோதித்துப் பார்க்கிறாரோ? நானாகச் சொல்லாததால் என்னைக் குத்துகிறாரோ? என்ன விபரீதம் இப்போது நடக்கப் போகிறது?

சே, இருக்காது. மகேஷ் எப்படித் தான் செய்த அவலத்தைத் தன் கணவனிடமே போய்ச் சொல்வான்? அப்படியே அவன் சொல்லியிருந்தானானால் சியாமால் எப்படி இவ்வளவு அமைதியாகப் பதற்றமில்லாமல் அவனைப் பற்றிப் பேச முடியும்?

''என்ன சொன்னான்?''

''நிறையச் சொன்னான். முக்கியமா நம்ம ரூபாவைப் பத்தியும், பானுவைப் பத்தியும்தான். ரெண்டு பேருமே ரொம்ப இன்டலிஜெண்டாம். நல்லா முன்னுக்கு வந்து மேன்மையா இருப்பாங்களாம். ஒரே புகழ்ச்சிதான் போயேன்.''

சியாம் தன்னை ஆழம் பார்க்கிறானா?

''வேறொன்னும் சொல்லலையா?''

''இல்லையே. வேறென்ன சொல்லணும். வேற ஏதாவது இருந்தா நீதான் சொல்லேன்.''

''அவன் ஏன் கல்யாணம் பண்ணிக்கலேங்கறதைப் பத்திச் சொல்லலையா?''

''ஊம், சொன்னான். உன்னைப் பண்ணிக்கணும்னு அவனுக்கு ஆசையாம். ஆனால் உங்க ஜாதகங்கள் இரண்டும் பொருந்தலேங்கறதுனாலே உங்கப்பா உன்னை அவனுக்குக் கொடுக்க மாட்டேன்னு சொல்லிட்டாராமே. 'நான் பானுவை லவ் பண்ண மாதிரி அவ என்னை லவ் பண்ணலே. பண்ணியிருந்தா ஜாதகமாவது ஒன்னாவது என்று இரண்டு பேருமே முரண்டு பிடிச்சுக் கல்யாணம் பண்ணிண்டிருக்கலாம்' என்று சொன்னான். ஆனால் நாம சந்தோஷமா இருக்கிறதைப்பார்த்து அவனுக்கு ரொம்பச் சந்தோஷம்னு சொன்னான். அவங்க ஊருக்கு வரும்படி என்னைக் கூப்பிட்டான். எனக்கு டைம் இல்லே. போகலே.''

அதன் பிறகு பேச்சு வேறு ஏதோ விஷயங்களுக்குப் போய் விட்டது. பானுவும் ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். சியாமுக்கு அந்த விஷயம் தெரிந்திருக்காது என்று அவளுக்கு உறுதி தோன்றி விட்டது.

கொஞ்சம் கொஞ்சமாகப் பானு தன்னுடைய குற்ற உணர்ச்சியை மறக்க முயன்று கொண்டிருந்தபோது சியாம் ஒரு நாள் சொன்ன விஷயம் ஆறிக்கொண்டிருந்த புண்ணைக் கிளறுவது போல ஆகிவிட்டது அவளுக்கு.

லண்டனில் அவன் பேயிங் கெஸ்டாகத் தங்கியிருந்த குடும்பத்தில் குடும்பத் தலைவியான ரூபி என்கிற ஆங்கில மாதைப் பற்றிய செய்தி அது. ''அவள், அவன் கணவன், இரண்டு பெண் குழந்தைகள் இவ்வளவுதான் அவர்கள் குடும்பம். ரூபிக்கு முப்பது வயதிருக்கும். நல்ல அழகி. ஆரோக்கியமும் யௌவனமும் நிறைந்த உடல். வீட்டில் வேறு வேலைக்காரிகளெல்லாம் கிடையாது. கணவன் ஜானுக்கு ஒரு கார் ஓர்க்ஷாப்பில் வேலை. ரூபி ஏதோ ஒரு கம்



ஒரு சிங்கள் டீ...

ஏணிப்படிகள் படத்தில் ஷோபாவின் தந்தையாக நடிக்கும் ஸ்ரீ. சீனிவாசன் படத்தில் அடிக்கடி 'ஒரு ஸ்பெஷல் சிங்கிள் டீ போடு' என்பார். இந்தப் படம் தஞ்சாவூரில் திரையிடப்பட்ட பொழுது, படத்தை ரசிகர்கள் எப்படி ரசிக்கிறார்கள் என்று அறிந்து கொள்வதற்காகத் தியேட்டருக்குச் சென்றிருந்தார்.

இடைவேளையின் பொழுது வெளியே வந்ததும் ஒரு பெரிய ரசிகர் கூட்டம் இவரைச் சூழ்ந்து கொண்டது. ஒவ்வொருவருடைய கையிலும் ஒரு கப் 'டீ' வைத்திருந்தார்கள். இந்தாங்க 'டீ' சாப்பிடுங்க என்று எல்லோரும் ஏககாலத்தில் கூறவே யாருடைய டீயை வாங்கிச் சாப்பிடுவது என்று தெரியாமல் திணறி - திண்டாடி கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தார். ''நான் டீயே சாப்பிடுவது இல்லையே'' என்று கூறித் தப்பித்தோம்-பிழைத்தோம் என்று வந்தாராம்! — அன்பு

பெனியில் டெலிபோன் ஆபரேட்டராக வேலை செய்தாள். சியாமுக்குக் காலையில் 'பெட் டீ' (Bed Tea) அப்புறம் 'பிரேக்ஃபாஸ்ட்' இதெல்லாம் ரூபியேதான் கொண்டு வந்து கொடுப்பாள். அவன் அறையிலேயே. ராத்திரி டின்னர் மட்டும் எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து சாப்பிடுவார்கள். பத்தே நாட்களில் சியாம் ரூபியை அக்காவைப் போல நேசிக்கத் தொடங்கிவிட்டான். ஆனால் ரூபி அவனைத் தம்பியைப் போலப் பாவிக்கவில்லை என்பது சீக்கிரத்திலேயே தெரிந்தது. ஒரு நாள் அவள் சியாமுக்கு ஃபோன் செய்து ஒரு அவசர காரியமாக வீட்டுக்கு வரச் சொல்லி அவன் வந்ததும் அவனைத் தன் படுக்கை அறைக்கு அழைத்துக் கொண்டு போய், சியாம் சற்றும் எதிர்பாராத விதமாக அவனைக் கட்டி அணைத்துக் கொண்டு தன் இச்சைக்கு அவனை இணங்க வைக்க முயன்றாள். சியாம் மன உறுதியுடன் அவளை நிராகரித்து விட்டு வெளியே சென்று விட்டதோடு அன்றைக்கே அந்த வீட்டிலிருந்தும் காலி செய்துகொண்டு ஒரு ஹோட்டலுக்குப் போய்விட்டான்.

''ரூபியின் புருஷன் ஜான் நல்ல கட்டுமஸ்தான ஆணழகன்தான். அவனிடமிருந்து அவளுக்கு வேண்டிய உடலுறவு இன்பம் கிடைக்கவில்லை என்று சொல்ல முடியாது. அழகான இரண்டு குழந்தைகள். இவ்வளவிருந்தும் ரூபி ஏன் இப்படிச் செய்ய வேண்டும்? சாதாரணமாக இந்த விஷயங்களில் ஆண்கள்தான் முன்னடி எடுத்து வைத்துக் குற்றம் செய்வார்கள் என்று சொல்வார்கள். ஆனால் இங்கோ ரூபி போன்ற ஒரு பெண் இப்படிச் செய்வதும் [illegible] அவளை

நிராகரித்துவிட்டு வெளியே போனதும் ஆச்சரியமா இருக்கு'' என்றான் ஸியாம்.

பானுவுக்கு மறுபடியும் சந்தேகம் தலை தூக்கியது. தன் குற்றத்தைத் தெரிந்து கொண்ட ஸியாம் தன்னைச் சித்ரவதை செய்வதற்காகவே இப்படி ஒரு கதையைக் கற்பனை செய்து சொல்கிறானா? அல்லது உண்மையிலேயே அப்படி நடந்திருக்குமா? எப்படியானாலும், பெண் அடக்கமாக இருக்க வேண்டும், தவறு செய்யக் கூடாது ஆண் தப்பித் தவறி ஏதாவது எக்கச்சக்கமாக நடந்துகொண்டு விட்டாலும் சமூகம் அவனை மன்னித்துவிடும் என்ற கருத்தைத்தானே ஸியாம் சொல்கிறான். இதெல்லாம் இல்லாமல் உண்மையிலேயே ஸியாமுக்குத் தன் விஷயம் தெரியாமலும், அவன் விஷயத்தில் லண்டனில் நடந்த சம்பவம் உண்மையாகவும் இருந்தால் தான் ஸியாமின் மனைவியாக மட்டும் யோக்கியதை இல்லாதவள் அல்ல அவன் கால் செருப்பாகவும் இருக்க அருகதையற்றவள் என்று தோன்றியது.

'ஸியாம், ரூபி லண்டனில் மட்டும் இல்லை. இங்கே சென்னையிலும் ரூபிகள் உண்டு. மயிலாப்பூரில் உண்டு. நம் வீட்டிலேயே உன் முன்னால் நிற்பவளும் ஒரு ரூபிதான். ஆனால் ஆண்கள் எல்லாம் ஸியாம்கள் இல்லையே. எவ்வளவோ மகேஷ்களும் இருக்கிறார்களே. எல்லா ஆண்களும் ஸியாம்களாக இருந்துவிட்டால் ரூபிகளும் தானே இல்லாமல் போய் விடுவார்கள்' என்று கத்த வேண்டும் போலத் தோன்றியது.

''பானு!''

''ஊம்?''

''நான் ஒண்ணு கேட்கிறேன். நீ உண்மையா பதில் சொல்லணும்.''

பானுவுக்குச் 'சொரேர்' என்றது. 'அவன் என்ன கேட்கப் போகிறான்? அப்படி ஆடி இப்படி ஆடிக்கடைசியில் அந்த விஷயத்துக்கு வந்து விடுவானோ?'

''கேளுங்களேன்'' என்றாள் வந்தது வரட்டும் என்று துணிந்து விட்டவளாக.

''நான் ரூபியின் வற்புறுத்தலுக்கு இணங்கி, அவ இச்சையை நிறைவேத்தியிருந்தேன்னு வைச்சுக்கோ. நீ என்னை மன்னிப்பியா பானு?''

அவன் இருந்த நிலையில் ஸியாமின் கேள்வி அவளுக்கு ஏதோ ஒரு வித ஆறுதலை அளித்தது. அப்படிமட்டும் நடந்திருந்தால் தன் தவறு அவ்வளவு பெரிதாகத் தோன்றியிருக்காது. அவர் மட்டும் தப்புச்செய்யலாம், நான் செய்யக் கூடாதா என்று பெண்ணுரிமைவாதிகள் கேட்பது போல் அவளும் கேட்டுத் தன் தவற்றை நியாயப் படுத்திக் கொண்டிருக்கலாம்.

''கண்டிப்பா ஸியாம். அது ஒரு ஆக்ஸிடெண்ட்னு நினைச்சு, அதுக்குப் பொறுப்பு நீங்க இல்லேன்னு உங்களை மன்னிச்சுடுவேன்'' என்றாள்.

'அதே மாதிரி நீங்களும் என்னை மன்னிப்பீங்களா ஸியாம்?' என்று கேட்க வேண்டும் என்று அவள் உள்ளம் படபடத்தது. ஆனால் கேட்கத் துணிச்சல் வரவில்லை.

ஸியாம் கேட்டது ஒரு கற்பனைக் கேள்வி. தான் கேட்டால் அது நிஜமான கேள்வியாகிவிடுமே!

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு யுகமாகக் கழிவது போலிருந்தது பானுவுக்கு.

பானு பைத்தியம் பிடித்தவள் போலானாள். இதற்கெல்லாம் முடிவு காண வேண்டுமானால் அது ஒரே முடிவாகத்தான் இருக்க முடியும். அவள் வாழ்க்கையையே முடித்துக் கொள்வதுதான் அந்த முடிவு.

அன்று ஸியாம் ஆபீஸ் புறப்பட்டுப் போன பிறகு தன் முடிவை நிறைவேற்றுவதற்கான ஆயத்தங்களில் பானு ஈடுபட்டாள்.

ரூபாவையும் பாலுவையும் பல முறை முத்தமிட்டாள். அவர்களுக்குப் பிடித்தமான தேங்காய் பர்பியை நிறையச் செய்து இருவருக்கும் கை நிறையக் கொடுத்துவிட்டு ஒரு டப்பா நிறைய அடைத்து வைத்தாள்.

பிறகு மேஜை முன்னால் உட்கார்ந்து, ஸியாமுக்குக் கடிதம் எழுதத் தொடங்கினாள். மகேஷைக் கடற் கரையில் பார்த்தது முதற் கொண்டு நடந்தவைகளை யெல்லாம் ஒன்று விடாமல் எழுதினாள். எதையும் மறைக்கவில்லை. தன் மனத்தில் அவனது உடலமைப்பைப் பற்றித் தோன்றிய எண்ணங்களையும் மறைக்காமல் எழுதினாள். தான் செய்துவிட்ட தவற்றை ஸியாமிடம் சொல்லிவிடவேண்டும் என்று அவள் துடித்ததையும் சொல்லிவிட்டால் விளைவுகள் என்னவாக இருக்குமோ என்று தெரியாததால் தயங்கியதையும், முக்கியமாக ரூபா, பாலு இவர்களின் வாழ்க்கை பாழாகிவிடக் கூடாதே என்கிற தன் கவலையையும், ஸியாம் திரும்பி வந்ததிலிருந்து அவனோடு நெஞ்சம் கலந்து உறவாட முடியாமல் தான் படுகிற நரக வேதனையையும் எல்லாவற்றையும் விவரித்து எழுதினாள்.

கடிதத்தை முடிக்கப் போகும் தறுவாயில் பின்னால் ஏதோ நிழல் தட்டுவதை உணர்ந்து திரும்பிப் பார்த்தாள். ஸியாம் நின்றிருந்ததைக் கண்டு திடுக்கிட்டாள்.

''யாருக்கு இவ்வளவு பெரிய லெட்டர் எழுதறே பானு?''

''யாருக்கும் இல்லே'' என்று உளறினாள்.


''என்ன சொல்றே பானு? அப்ப என்ன அது கதையா?''

''நீங்க ஏன் இவ்வளவு சீக்கிரம் வந்துட்டீங்க? எப்படி உள்ளே வந்தீங்க? கதவு சாத்தியிருக்கலே?''

நிருபர்: உங்க படம் இவ்வளவு நாள் ஓடறதுக்கு என்ன காரணமாயிருக்கு முன்னு நினைக்கிறீங்க...

தயாரிப்பாளர்: ஒரு ஓட்டப்பந்தய வீரரை ஹீரோவாப் போட்டதுதான்.

-பாபநாசம் நாகராஜன்



"இல்லியே! என்னமோ தலையை வலிக்கறாப்பலே இருந்தது. ஆர். எம். கிட்டச் சொல்லிட்டு வந்துட்டேன்." என்று கூறிய படியே அவள் கையிலிருந்த அந்தக் காகிதக் கற்றைகளை வாங்கிப் படிக்கத் தொடங்கினான்.

கடிதம் ஆங்கிலத்தில் எழுதியிருந்தாள்.

My dear Shyam,

By the time this letter falls into your hands I would have departed from this world.

என்ற வரிகளைப் படித்ததும் சியாம் திடுக்கிட்டான்.

"பானு, வாட் இஸ் ஆல் திஸ் நான்சென்ஸ்?" என்று கேட்டான்.

அவன் கேள்விக்கு அவள் பதில் சொல்லவில்லை. படுக்கையில் குப்புற விழுந்து உடல் குலுங்க அழுதாள்.

ஹாலில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள் இருவரும் சியாமின் கத்தலையும் பானுவின் அழுகைச் சத்தத்தையும் கேட்டு உள்ளே வந்து பயத்துடன் சியாமின் முகத்தையும் உடல் குலுங்கப் படுத்திருக்கும் பானுவையும் பார்த்தபடி நின்றனர்.

எழுதி முடிக்கப்படாத கடிதத்தை சியாம் படித்து முடித்து விட்டான். இனி அதில் அவள் சொல்ல வேண்டியது ஒன்றும் பாக்கி இருந்ததாக அவனுக்குத் தோன்றவில்லை.

"பானு, ஏய் பானு, எழுந்து உட்காரு" என்றான். அவன் குரலில் இதுவரை கேட்டறியாத ஒரு கடுமை இருந்தது.

பானு எழுந்து உட்கார்ந்தாள். சாகத் துணிந்து விட்டவள் இனி எதற்காகப் பயப்பட வேண்டும்.?

அவள் எழுந்து உட்கார்ந்த அடுத்த விநாடி பளீர் என்று அவள் கன்னத்தில் சியாம் ஓர் அறை விட்டான்.

"கழுதை. இத்தனை நாளா இந்த விஷயத்தை என்கிட்டேயிருந்து மறைச்சியே, எதுக்காக? எனக்குத் தெரிஞ்சா குடும்பம் பிளவு பட்டுப் போகும், குழந்தைகள் என்கிட்ட இருந்தாலும் உன்கிட்ட இருந்தாலும் மத்தவருக்காக ஏங்கிப் போகும்னுதானே? இப்ப இந்த முட்டாள்தனமான முடிவுக்கு வந்திருக்கியே. நீ போயிட்டேன்னா அப்ப குழந்தைகள் கதி என்ன? உன்னை விட்டு அதுகள் எப்படி இருக்கும்னு யோசிச்சியா?" என்று கேட்கும்போதே சியாமின் தொண்டை தழுதழுப்பதையும் அவன் கண்களில் கண்ணீர் பெருகுவதையும் கண்ட பானுவுக்கு உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கியது. சியாம் தன்னை அறைந்தது தன்னுடைய தற்கொலை முயற்சிக்காக. மகேஷ் சம்பவத்துக்காக அல்ல.

ஆச்சரியத்துடன் சியாமையே பார்த்தாள். தான் இவ்வளவு அதிர்ஷ்டக்காரியா? தன் கணவன் இவ்வளவு உயர்ந்த உள்ளம் படைத்தவனா?

"பைத்தியக்காரி, ரூபி இன்ஸிடென்ட்லே நான் தவறு செய்திருந்தாலும்-உனக்கு நிஜமாவே துரோகம் செஞ்சிருந்தாலும்-என்னை மன்னிச்சுடுவேன்னு சொன்னியே, நினைவிருக்கா? அவ்வாறிருக்க நீ செய்ய நினைச்சு ஆனா செய்யாமல் தப்பிவிட்ட ஒரு குற்றத்துக்கு நானும் உன்னை மன்னிக்க முடியும்னு உனக்கு ஏன் தோணாமப் போச்சு? இது அதை விடவும் சுலபமில்லையா?"



"வேலைக்காரி என்ன செய்யணுங்கறாள்?"
'வேலைக்காரி கும்பம்மாவால் தேக்கப் பட்டது'ன்னு பேர் வெட்டணுமாம்!"
அ. இராமதாஸ்

"சியாம். ஐம் ஸோ ஹாப்பி சியாம்" என்று பானு எழுந்து வந்து குழந்தைகள் அங்கே இருப்பதையும் பொருட்படுத்தாமல் கணவனைக் கட்டி அணைத்துக் கொண்டாள்.

சியாம் அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தான். அடித்தகை அணைப்பதைப் பார்த்துக் குழந்தைகள் சிரித்தன.

"அப்படின்னு நான் செய்த தப்பு உங்களைப் புண்படுத்தலியா சியாம்?"

"நீ தப்பு செஞ்சிருக்கே. வாஸ்தவம்தான். ஆனா இவ்வளவு பெரிய தண்டனையை நீ ஏத்துக்கறதுக்கோ அதனாலே என் வாழ்க்கையையும் குழந்தைகளோட வாழ்க்கையையும் பாழடிக்கிறதுக்கோ உண்டான அவ்வளவு பெரிய தப்பு அல்ல. நீயே லெட்டர்ல சொல்லியிருக்கிற மாதிரி ஒரு பெரிய ஆக்ஸிடென்ட் நடக்க இருந்தது. தப்பிச்சுட்டே. ரோடைக் கடக்கும்போது டஸ் ஆக்ஸிடென்ட்லே சிக்க இருந்த உன்னை சரேலென்று பிடிச்சு பின்னுக்கு இழுப்பதுபோல் நான் அமெரிக்காவிலிருந்தே இழுத்துட்டேன். அங்கேதான் தெய்வச் செயல் என்கிறதை உணர்கிறோம். இல்லேன்னு நடுத் தூக்கத்திலே திடீர்னு எழுந்ததும் அப்பவே உன்னோட பேசணும், உடனே உனக்கு ஃபோன் போடணும்னு எனக்கு ஏன் தோணணும்? விபத்திலிருந்து உன்னைக் காப்பாத்தறதுக்காகவே நான் ஃபோன் பண்ணின மாதிரி தானே இருக்கு? அஃப்கோர்ஸ், நீ கொஞ்சம் ஜாக்கிரதையா இருந்திருந்தா அந்த ஆக்ஸிடென்டை எதிர் கொண்டே இருந்திருக்க வேண்டாம். நீ காப்பாற்றப்பட அவசியமும் இருந்திருக்காது. அப்படி ஜாக்கிரதையா இல்லாம இருந்ததுதான் நீ செஞ்ச தப்பு. அந்தத் தப்புக்கு நீ இந்த மூணு மாசமா வேணுங்கற அளவு தண்டனையை அனுபவிச்சுட்டே. அது போதும். இனி இதைப்பத்தி நீயும் நினைக்கக் கூடாது நானும் நினைக்க மாட்டேன். ஓ. கே?" என்று அவள் கன்னத்தைக் கிள்ளினான்.

அன்று இரவு அவர்களுக்கு இரண்டாவது முதலிரவாக இருந்தது! (முற்றும்)

இரண்டே வார்த்தைகள் கற்ற பிரதமர்!


யூ. எப். லிஸோலோ (Lizolo) ஜாம்பியா நாட்டின் பிரதமர். அவர் சென்ற ஆண்டு தம் இந்திய சுற்றுப் பயணத்தின் போது தாம் படித்து-பட்டம் பெற்ற லயோலா கல்லூரிக்கு வருகை தந்தார். அவருக்கு ஒரு விழா நடத்தப்பட்டது. விழாவில் பிரதமர் பேசுகையில் ''நாங்கள் படிக்கும்போது எதாவது வி.ஐ.பி.க்கள் வந்தால் அரை நாள் விடுமுறை அளிப்பது வழக்கம். இப்பொழுது நான் வந்திருக்கிறேன்'' என்று கூறிவிட்டு முதல்வரை நோக்கினார். உடனே முதல்வரும் விடுமுறை அறிவிக்க மாணவர்கள் கரவொலியினால் அரங்கமே அதிர்ந்தது.

பிரதமர் லிஸோலோ இங்கு தங்கிப் படித்த நான்கு வருடங்களில் கற்றுக் கொண்ட இரண்டே தமிழ் வார்த்தைகள் ''வணக்கம்,'' ''தண்ணி கொண்டா.''

—எஸ். சுவாமிநாதன்



பலம் எது, பலவீனம் எது?



⌘ எஸ். வாசுதேவன் டென்னிஸ் வீரர் II பி. காம்

லயோலா உருவாக்கிய ராமநாதன் கிருஷ்ணன், ஆனந்த் அமிர்தராஜ், விஜய் அமிர்தராஜ், அசோக் அமிர்தராஜ் என்ற வீரர்கள் வரிசையில் தற்போது சேர்ந்திருப்பவர் வாசுதேவன். பல புகழ்பெற்ற டென்னிஸ் வீரர்களை இந்தக் கல்லூரியால் எப்படி உருவாக்க முடிகிறது என்றால், இங்கு இருக்கின்ற வசதிகள்தான் காரணம். பத்து டென்னிஸ் கோர்ட்டுகள் உள்ளன. காலையிலும் மாலையிலும் பல மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள்.

வாசுதேவனுக்குச் சிறு வயது முதலே டென்னிஸில் ஆர்வம். தந்தையின் ஊக்கத்தால் இன்று இந்த அளவுக்கு உயர்ந்துள்ளார். படிப்பது: இரண்டாவது வருடம் பி.காம்.

ஹாலந்து, பெல்ஜியம், இங்கிலாந்து, அமெரிக்கா இங்கெல்லாம் நான்கு மாத காலம் சுற்றுப் பயணம் செய்து அண்மையில் இந்தியா திரும்பினார். அவரது வெளி நாட்டுப் பயணம் பற்றிக் கேட்டபோது, ''என்னுடைய பலம் எது? பலவீனம் எது? என்பதையெல்லாம் பல நாடுகளையும்சேர்ந்த பெரிய டென்னிஸ் ஆட்டக்காரர்களுடன் விளையாடுகையில் தெரிந்து கொண்டேன். இது என் பலவீனங்களைத் தவிர்த்து என்னைச் செம்மைப் படுத்திக் கொள்ள உதவும்! இனி நான் முன்னிலும் அதிக தன்னம்பிக்கையுடன் ஆடுவேன்'' என்றார்.


நன்றாய்ப் படித்து நல்ல மதிப்பெண்களும் வாங்கிவிடுகிறார் வாசுதேவன். கல்லூரி நிர்வாகம் இவரை எப்படி ஊக்குவிக்கிறது? ''கல்லூரியின் நெம்பர்-ஒன் கோர்ட்டில் எப்போது வேண்டுமானாலும், எந்த டென்னிஸ் ஆட்டக்காரரையும் அழைத்து வந்து நான் ஆட அனுமதி தந்திருக்கிறார்கள்'' என்று கூறும் வாசுதேவன் விரைவில் சில டோர்னமெண்டுகளில் கலந்துகொள்ள ஆஸ்திரேலியாவுக்குச் செல்கிறார்.

பேட்டி: எஸ். சந்திரமௌலி

தன்னாட்சி பெற்ற (autonomus) லயோலா கல்லூரியில் புகைப்படக்கலை, பத்திரிகைத்தொழில் ரேடியோ கம்யுனிகேஷன், கம்ப்யூட்டர் புரோகிராமிங், ஒர்க்ஷாப், அக்கௌண்டன்ஸி போன்ற தொழில் சம்பந்தப்பட்ட விருப்பப் பாடங்களை அளிக்கிறார்கள்.


-ரமேஷ்பாபு

லயோலா கல்லூரி



⌘ போட்டோ: ரமேஷ்பாபு III B.Sc., கணிதம்

பாலசந்தருடன் ஒரு பேட்டி!




''உங்கள் இளமைப் பருவம்?''
''நினைத்தாலே இனிக்கும்.''
''உங்கள் நண்பர்?''
''மேஜர் சந்திரகாந்த்.''
''உங்கள் லட்சியம்?''
''அனுபவி ராஜா அனுபவி.''
''உங்களுக்குப் பிடித்த கதை?''
''அவள் ஒரு தொடர்கதை.''
''பிடித்த ராகம்?''
''அபூர்வ ராகங்கள்.''
''நீங்கள் போட்டது?''
''மூன்று முடிச்சு.''
''வாங்க நினைப்பது?''
''நூற்றுக்கு நூறு.''
''வரைய விரும்புவது?''
''இரு கோடுகள்.''
''நீங்கள் விரும்பாதது?''
''மன்மத லீலை.''
''உங்கள் மனம்?''
''தாமரை நெஞ்சம்.''
''நீங்கள் வணங்குவது?''
''தெய்வத் தாய்.''
''நீங்கள் போடுவது?''
''எதிர் நீச்சல்.''
''போட விரும்பாதது?''
''தப்புத் தாளங்கள்.''
''படைத்த சரித்திரம்?''
''மரோ சரித்திரா.''
''ரசிகர்களுக்கு ஏதாவது...?''
''சொல்லத்தான் நினைக்கிறேன்.''

-ச. நரேந்திர பொம்மண்ணன்




⌘ கனவில் ஒரு பயணம் என். எஸ். வள்ளுவன் இறுதி ஆண்டு B.Sc.,

⌘ சிரசாசனம் - டி. உதயகுமார்



தொகுப்பு: நாயகன்




போயிங் 737 மூலம் இரண்டே மணி நேரத்தில் மதராஸையும் போர்ட் ப்ளேயரையும் இணைக்கிறது ஒரு புதிய விமானவழி....கூடிய விரைவில். வாரத்திற்கு இரு முறை. மதராஸ் வழியாக இதர நகரங்களுக்கும் தொடர்பு வசதிகளை வழங்குகிறது. மேற்கொண்டு விவரங்களுக்கு அருகாமையிலுள்ள எங்கள் அலுவலகத்துடனோ அல்லது உங்கள் டிராவல் ஏஜென்ட்டுடனோ தொடர்பு கொள்க :

பல இடங்களுக்கும் செல்லுங்கள் IA மூலம் பறந்து

இந்தியன் ஏர்லைன்ஸ்

தெற்காசியாவின் மாபெரும் பிராந்திய ஏர்லைன்



ஜூலியஸ் சீசரின் படுகொலைக்குப் பிறகு அவனது நண்பன் 'ஆண்டனி'யின் வீரமான விவேகமான பிரசங்கத்தைப் போல், 'ஜனநாயகப் படுகொலையான' மாருதி விவகாரத்தை நன்ருக எழுதியுள்ளீர்கள்.

சென்னை-19 கே. சங்கரகலாதரன்

சாமான்ய மனிதனின் நிலங்களை ஆக்கிரமித்துக்கொள்ளும் அரசு அவனுக்கு ''காம்பன்சேஷன்'' வழங்கக் குறைந்தபட்சம் மூன்று ஆண்டு தவணை போடுகிறது. ஆனால் இந்த ''ராட்சஸ'' ஆட்சியில் முப்பது நாள் தவணை போட்டு மாருதிக்கு ''வாய்க்கரிசி''யாக ஆறு கோடி ரூபாயைத் தூக்கிக் கொடுத்திருப்பதைப் படிக்கும்போது நெஞ்சு வெடித்து விடும்போலிருக்கிறது.

சிதம்பரம் சிவ. ராஜகுமார்

'மாருதி கார்' அரசுடைமையாக்கப்பட்டதைப் பற்றிய தங்களது தலையங்க நகல் ஒன்றை ராஜீவ் காந்திக்கு அனுப்பினால் நன்ருய் இருக்கும். ஏனென்ருல், அவர்தான் சொன்னர், ''இந்திய அரசியல்வாதிகள் எல்லோரும் சுயநலவாதிகள் ஆனால், தன் 'அம்மா' மட்டும் அதற்கு விதிவிலக்கு'' என்று!

சிந்தாதிரிப்பேட்டை பா. உதயா

ஆறு கோடி அரசுக்கு லாபம் கிடைக்கும் பொழுது நாலு கோடி செலவு செய்வது கசப்பாக இருக்கிறதா? மாருதியில் முதல் செய்தவர்கள் எல்லோருமே உறவினர்கள் அல்லது நண்பர்கள் என்ருல் முன்பு மாருதியில் முதலீடு செய்தவர்களுக்காகக் கண்ணீர் விட்டீர்களே ஏன்?

மேலப்பாலையூர் சுமாலி

புலவர் கீரன் அவர்களின் பதில்கள் ஒவ்வொன்றிலும் அவரது ஒவ்வொரு சொற்பொழிவிலும் இருக்கும் அளவு இனிமையும் பொருட் செறிவும் குவிந்திருக்க, ஏ.வி.எம். கணேஷ் அவர்களின் கேள்விகள் ஒவ்வொன்றிலும் கீரன் அவர்களின் ஆழ்ந்த அறிவினைத் தூண்டித் துருவி எடுக்கும் தனித் திறமை நிறைந்திருக்கிறது.

காந்திகிராமம் கௌசல்யா

நோயறிந்து தடுத்திடவே கீரன் வந்தார்
செயலறிந்து பாராட்டும் தாயினைப்போல்
திறனறிந்து வெள்ளத்தை தடுத்து ஆங்கே
அரணெனவே அணைகட்டித் தமிழைக்
காப்போம்

திருநெல்வேலி தி.வை. சங்கரகுமாரு

'புதுக் கவிதை கவிதையே அல்ல. அது வெறும் சொல்கூத்து' என்கிருர் கீரன். இன்றைய பிரபல வாரப் பத்திரிகைகளில் புதுக் கவிதை என்ற பெயரில் வெளிவரும் அலங்காரமான சொல்லடுக்குகளைப் படித்ததன் விளைவே மேற்கூறியுள்ள அபிப்பிராயத்துக்கான காரணம் என நினைக்கிறேன். யாப்பிலக்கணப்படி எழுதுவதெல்லாம் எப்படிக் கவிதையாகிவிடாதோ அதே போலத்தான் யாப்பை மீறி எழுதப்படும் அனைத்துமே புதுக் கவிதையாகவும் ஆகிவிடாது. நல்ல புதுக் கவிதைத் தொகுதிகள் தமிழில் வெளிவந்துள்ளன. தரமான புதுக் கவிதைகளை வெளியிடும் இலக்கியப் பத்திரிகைகளும் தமிழில் உள்ளன. அவற்றைத் திரு கீரன் படித்திருப்பாரேயானல் இவ்வாறு கூறியிருக்க மாட்டார்.

இடையன்விளை அ. இராஜமார்த்தாண்டன்

புது விஷயத்தைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு 'நார்ஸிஸ்டிக் லிபிடினல் டைப் என்ருல் என்ன' என்ற உபயோகமான கேள்வியை வாசகர் ஒருவர் கேட்டிருக்கிருர். கடுகு அதற்குப் பரிசு தராவிட்டாலும் பரவாயில்லை; 'இனி இம்மாதிரியான கேள்விகளைக் கேட்காதீர்கள்' எனச் சொல்லாமல் இருக்கக் கூடாதா?

600035 சி. பூபால் சிங்

பார்த்தீனியம் செடியைப் பற்றி நான் அளித்த பேட்டியில் ஒவ்வொரு செடியிலிருந்தும் 200 முதல் 300 கனிகள் (விதைகள்) தோன்றுவதாகக் கூறினேன். ஆனால் கல்கி இதழில் (19-10-80) ஒவ்வொரு மலரிலிருந்தும் 200 முதல் 300 கனிகள் (விதைகள்) தோன்றுவதாகத் தவருகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை-5 டாக்டர் இ. கோவிந்தராஜுலு

'மனுஷி' கதை மனத்தை உருக்கும்படியாக இருந்தது. சில பெண்கள் சாக்கடைப் புழுக்களாய் ஆவதற்குச் சமூகங்களின் நிர்ப்பந்தங்கள்தான் காரணம் என்பதைத் தெள்ளத் தெளிவாகக் கூறியிருக்கிருர் ஆசிரியர்.


மன்னர்குடி-2 சரஸ்வதி ராஜேந்திரன்

'மனுஷி'யில் தன்னை மனுஷின்னு தெரிஞ்சாப் போதும் என்று விரக்தியாகக் கூறும் அந்த மனுஷியின் கருத்துக்களை இந்த உலகம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளும். அதோடு சரி. இவளை விட்டால் அடுத்தவள் என்று செல்லும்.

மேட்டுப்பாளையம் பி.ஏ. வஹாத்

மறதி தந்த பரிசு நல்ல கதை. தற்சமயம் நக்சலைட்டுகள் பற்றிய பத்திரிகைச் செய்திகளின் நடுவில் இக்கதை அவர்களும் மாறுவார்கள்; மனிதன் ஆவார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

கும்பகோணம் வெங்கடசுப்பிரமணியன்



மோடியின் குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிய பாலு, தன்னை சுதாரித்துக் கொண்டு......
பாலு 007
பகல் கொள்ளைக்குப் பிறகு பகல் கனவு! நீ இங்கிருந்து தப்பினால் தானே என்னைச் சிறைக்கு அனுப்ப.....?
நான் தப்பி ஓடப் போவதில்லை, மோடி! உன்னை வெற்றி கொள்ளப் போகிறேன்!
நாட்டையே அடகு வைக்கும் தேசத் துரோகிகளைச் சிறைக்கு அனுப்ப இந்த பகல் கொள்ளை அவசியம் தான், மோடி! இதோ, முழு விவரங்கள், சாட்சியங்கள் விலாசங்கள்!
கதை: குமரன்
படம்: விஜு
15
என்னை யாருன்னு நீ சரியா புரிஞ்சுக்கலே! டோனி பொன்னையா சிஷ்யன் 007 பாலு நான்!
சாட்சியம் கிடைக்குமுன் சாணக்கியத் துடன் சிறைப் பட்ட பாலு, இப்போது சாட்சியம் அகப்பட்டு விட்டதால் மோதுகிறான்!
ஹீ ஹா!
அடி பட்ட புலியாகப் பதுங்கும் மோடியின் கண்கள் மேஜையின் திறந்திருக்கும் இழுப்பறை பக்கம் மேய்வதைக் கவனிக் கிறான் பாலு. இழுப்பறைக்குள்.....
பாலு! என்னைப் பகைச் சுக்கிட்டவன் எவனும் வாழ்ந்ததில்லை.....
மோடி! தேசத் துரோகி எவனும் என்னிடம் தப்பியதில்லை...


சரேலெனத் தாவி மோடி இழுப்பறைக்குள் கைவிட, மின்னலெனப் பாய்ந்து பாலு இழுப்பறையை ஓர் உதைவிட்டு மூட........
மோடி வலி தாங்காது கையை உதறும் கணத்தில் இழுப்பறையிலிருந்த துப்பாக்கி பாலுவின் கரத்தை அலங்கரிக்கிறது
ஆ! ஐயோ! ஐயோ!
மோடி! உன் கதை முடிஞ்சு போச்சு! போலீஸுக்கு ஃபோன் போடுடா கண்ணு! சமர்த் தோல்லியோ!
பாலு சொல்லிக்கொடுக்கிறபடி மோடி பேசுகிறான்........
ஹலோ! போலீஸ்? மோடி பேசறேன்... ..நான் ஒரு தேசத் துரோகி... சீக்கிரமா வந்து என்னைக் கைது பண்ணிக்கிட்டுப் போறீங்களா?... பெரிய பட்டாளமா நீங்க வரணும்னு பாலு சொல்லச் சொல்கிறான்...
...ஏன்னு வாசல்லே என் ஆளுங்க எதிர்ப்புத் தெரிவிக்கலாம்.... ஆமாம், 007 பாலு தான் ...என்னைக் கவர் பண்ணியிருக்கான். .. யெஸ், யெஸ், சென்னையிலிருந்து வந்தவன்தான்..... என் விலாசம் குறிச்சுக்கிடுங்க.....
சில நாட்கள் பம்பாயில் தங்கி நகரைச் சுற்றிப்பார்த்தபின் பாலுவுக்கு விமான நிலையத்தில் வழியனுப்பு உபசாரம்....
தேசமே உனக்குக் கடமைப் பட்டிருக்கு பாலு!
சென்னைக்கு உன் விமான டிக்கெட்!
உனக்கு மகாராஷ்டிர அரசின் சின்னப் பரிசு... பத்தாயிரத்துக்கு ஒரு செக்....



தாங்கியூ ஸார்! இந்தப் பணத்தை ஃபிக்ஸட் டிபாஸிட்டில் போட்டு வட்டிப் பணத்தை என் கல்விக்குப் பயன்படுத்திக் கொள்வேன்... வரட்டுமா? ...டாடா!..
DEPARTURE
இதற்கிடையில்... பசவப்பா பாலு வீட்டைக் கண்காணிக்க, ஸி. ஐ. டி வாக்கி டாக்கியில் மேலதிகாரியுடன் தொடர்பு கொள்கிறான்.
ஸார்! இங்கே ஒரு ஆசாமி பாலு வீட்டை நோட்டம் விடறான் அரெஸ்ட் பண்ணவா?
வேண்டாம் அவசரப்படாதே! அவன் என்ன பண்ணுகிறான், கவனி... ஃபாலோ பண்ணு.
பாலுவின் தகப்பனார் காரியாலயம் கிளம்பிச் சென்றதும்...
யெஸ் இப்பத்தான் பாலுவின் தாயாரை மடக்கணும்....
இந்தப் பயலால் பாலுவின் அம்மாவுக்கு ஆபத்து நேராமலும் காக்கணும். அவசரப்பட்டு இவனை அரெஸ்ட் பண்ணவும் கூடாது... இவன் நோக்கம் புரியணும்... சாட்சியத்தோடு பிடிக்கணும்....
பாலுவின் வீட்டுக்குள் நுழைந்த பசவப்பா சற்றைக்கெல்லாம் பாலுவின் தாயாருடன் வெளியே வந்து....
பாங்க் ஸேஃப்டி லாக்கரில் உள்ள மினி காமிராவை பத்திரமாக என்னிடம் சேர்ப்பிச்சுடு. பாங்கில் ஏதாவது கூச்சல் கீச்சல் போட்டே.. பாலுவை உசிரோடு பார்க்க முடியாது!
மீண்டும் வாக்கி டாக்கி இயங்கு.
ஸார்! பாலுவோட தாயாரை அந்த ஆசாமி மிரட்டி பாங்குக்கு அழைச்சுப் போறான்.. இண்டியன் பாங்க்...எக்மோர் பிராஞ்சு... சீக்கிரம் ஆக்ஷன் எடுங்க.....


பாங்க் வாசலில் மினிகாமிரா கைமாறும் தருணத்தில் பசுவப்பாலை போலீஸ் சூழ்கிறது.
BANK WITH IN
சூரப்புலிகள்தான்! என்னை அரெஸ்ட் பண்ணலாம்... ஆனா பாலுவின் கதியை யோசிச்சுப் பாருங்க!
ஐயோ, பாலு!
மோடி சிறைப்பட்டதை ரகசியமாக வைத்திருந்தது அரசு. திக்கெட்டும் போலீஸ் தொடர்பு கொண்டு அவன் கூட்டாளிகள் அனைவரையும் வளைத்துப் பிடித்த பின்னரே மோகீந்தர் மோடி கைதான விவரங்களை அறிவித்தது. பத்திரிகைகளில் பாலுவுக்குப் புகழ் மாலை.
அன்றைக்குத்தான் பாலுவும் சென்னை திரும்புகிறான்...
அம்மா! எனக்கு என்ன நேருமோன்னு பயந்து பாங்க் வாசல்லே மயங்கி விழுந்துட்டியா? தைரியம் வேண்டாமோ?
நீ பக்கத்தில் இருந்தா எனக்கும் தைரியம் தான், பாலு! என்னை விட்டுட்டு எங்கும் போகாதே!
அது சரி, டைகர் என்னை விட்டுட்டுப் போயிடுச்சே, அம்மா!
விட்டுட்டுப் போனா என்ன? திரும்பி வரத் தெரியாதா கண்ணு!
MORNING S
SPYRING SMASHED
007 BALU HONOUR
007 பாலு சாகசம்!
EVENING EXPR
007 BALU HONOUR
அடடேட! டைகர்! நூறு ஆயுசு! நீ எப்படி தப்பி வந்தே?
நீ மோகீந்தர் மோடிகிட்டே யிருந்தே தப்பி வர முடியும்னு நான் கேவலம் சிங்காரம் — காத்தவராயன் கிட்டே — யிருந்து தப்பி வர முடியாதா என்ன?
முற்றும்

A TRUCKLOAD OF GREETINGS

to all our faithful friends on financial highways !

Like depositors who have shown tremendous faith in us.
Like commercial-vehicle operators whose vehicles we finance...

We shall keep up their faith in us—with our experience, expertise and integrity.
Backed by our veteran Directors with decades of sound experience!

SHRIRAM TRANSPORT FINANCE COMPANY LTD.

Admn. Office: 145, Linghi Chetty St., Madras 600 001. Phone: 34699
Regd. Office: 123, Angappa-Naicken St., Madras 600 001., Phones: 37890, 28545



மனவாசம்



முன்னுரை

வனவாசத்தில் எல்லா உண்மைகளையும் நான் பகிரங்கமாகச் சொல்லிவிட்டதுபோல் பலபேருக்கு ஒரு பிரமை.

உண்மையில் சிலவிஷயங்களை நான் மறைத்திருக்கிறேன். மனிதன் மானம் வெட்கத்துக்கு அஞ்சி மறைத்தே தீர வேண்டிய சில விஷயங்களும் உள்ளன அல்லவா? ''சுய சரிதம்'' எழுதும்போது அதில் நான் கற்பனைகளைக் கலப்பதில்லை. கூடுமானவரை சொல்லவேண்டியவை அனைத்தையும் சொல்லிவிடுவேன்.

உண்மைகள் நிர்வாணமானவை. ஆனால் மனிதன் எப்போது நிர்வாணமாக இருக்கலாமோ அப்போதுதான் இருக்கலாம். சந்நியாசியின் நிர்வாணத்தில் கூட குறைந்த பட்சம் ஒரு கோவணம் உண்டு. அதுவும் இல்லாதவர்கள் தமிழ்நாட்டில் இல்லை.

என் வாழ்க்கையின் முதற் பகுதியில் நடைபெற்ற கவலைக்குரிய சம்பவங்கள் பலவற்றை நான் வனவாசத்தில் விவரிக்கவில்லை.

இந்த வானம்பாடிக்கு முதலில் அறிமுகமானது ஒரே ஒரு ராகம்தான். அந்த ராகத்தில் நான் பாட முடியாது என்று தெரிந்தும், பாடம் செய்துகொண்டேன்.

அது என் ஜீவராகம். சிறு வயதில் கற்றுக்கொண்டதால் அது தெவிட்டாத ராகம்.

முதிர்ச்சி யில்லாத அந்தப் பருவத்தின் கனவுகள் ஒன்றிரண்டல்ல.

ஆனால் பிஞ்சு காயாவதற்கு முன்பே மரத்திலிருந்து உதிர்ந்து விட்டது. அந்த ராகத்தை என்னால் மறக்கத்தான் முடியவில்லை. அதற்காக எதையுமே பாடுவதில்லை என்று சங்கீதத்தையே வெறுத்துவிடும் பருவம் அல்ல எனக்கு.


வாழ்க்கையைத் துவங்கவே ஆசைப்பட்டேன். அதற்காக நான் தேர்ந்தெடுத்துக் கட்டிக் காட்டிய தெய்வீக ராகம் எதுவும் எனக்குக் கிடைக்கவில்லை. இதில் பெரும் பங்கு கொண்டவர்கள் பங்காளிகள் என்று சொல்லப்படும் பகையாளிகளும் உடன் பிறந்தே கொல்லும் வியாதிகளுமே.

அதிலேயே எனது வாழ்க்கையின் குழப்பம் ஆரம்பமாயிற்று.

தெளிவாக ஒரே சாலையில் சென்று, எல்லோருக்கும் இலக்கணமாக வாழ விரும்பிய என்னைப் பல்வேறு சாலைகளில் செலுத்தியது இந்த முதற் குழப்பம்.

ஆயினும் வாழ்க்கைத் தாகத்தில் நான் எதையும் உன்னதமாகவே கருதத் தயாராக இருந்தேன். அடுத்தடுத்து நிம்மதியற்ற சூழ்நிலைகளே தொடர ஆரம்பித்தன. ஆத்திரம், கோபம், தாகம் இவற்றால் நான் மேலும் மேலும் தவறுகளையே செய்தேன். அதனால் ஒரு குறிப்பிட்ட லட்சியம் என்பது சிதறிப்போய்க் கண்டபடி வாழ்வது என்பதே வாழ்க்கையாகி விட்டது.

என் தந்தை மதுப் பழக்கமோ, வேறொரு பெண்ணின் சகவாசமோ இல்லாதவர். இந்த இரண்டு பழக்கங்களும் அவருக்கு அறவே பிடிக்காது. ஆனால் நான் இவற்றைச் சரணடைந்தேன். ஏராளமாக எழுதினேன் என் பதைத்துவிர வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும் 'சவனமிக்கவன்' என்ற பட்டத்தையே பெற்றேன்.



கண்ணதாசன்

பிர்லாவைப் போல் சம்பாதித்து, சுஜதாரியைப் போல் செலவழித்து, பல நேரங்களில் பிச்சைக்காரனைப் போல் ஏங்கி நிற்கும் வாழ்க்கையே என் வாழ்க்கையாயிற்று.

என் கைகளில் இருந்து பயனில்லாமல் சிதறிப்போன பொருள்களை மட்டும் சேமித்து இருந்தால் இரண்டு தலைமுறைகள் நிம்மதியாகக் கழிந்திருக்கும்.

1949ல் என் பெற்றோர் பிறருக்கு என்னைச் 'சுவீகாரம்' தராமல் தன்னிடமே வைத்திருந்தார்களென்றால் என் வாழ்க்கைப் பாதை வேறு விதமாக அமைந்திருக்கும்.

நேரம் தவறிப் பிறந்திருந்தால் ராஜாவாகப் பிறந்திருப்பேன் என்ற கதைதான்.

முற்றிலும் பிரக்ஞையற்ற ஒரு வாழ்க்கையையே 1950ல் இருந்து நான் மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

நிர்ப்பந்தமான உறவுகள் — அவற்றில் விளைந்த தவிர்க்க முடியாத பந்தங்கள் — அவற்றில் விளைந்த பெருத்த ஏமாற்றங்கள்— சேர்க்கையால்ஏற்பட்ட அரசியல் போக்குகள் —அவற்றால் வந்த காலக் கேடுகள், பண விரயங்கள், எழுத்திலே முரண்பாடுகள் — இத்தனைக்கும் இடையிலே பேனா ஒன்றுதான் நிமிர்ந்து நின்றது.

மனத்தின் ஆதங்கங்களை எழுதி எழுதித் தீர்த்துக் கொண்டேன்.

ஒரு நாள் உற்சாகமாக இருக்கும்போது இதல்லவா வாழ்க்கை என்றெழுதுவேன். மறுநாள் புலம்புவேன்.

போற்றியவர்களைத் தூற்றுவேன், தூற்றியவர்களைப் போற்றுவேன்.

நிலையான புத்தியோ, நிரந்தரமான நியாயமோ இல்லாது போயிற்று.

ஒவ்வொரு கட்டத்திலும் அந்தராத்மா மட்டும் உறுத்திக் கொண்டே இருந்தது. அப்போதெல்லாம் காரில் இருந்தாலும், குளிக்கும் அறையில் இருந்தாலும் கற்பனை வெள்ளம் பொங்கிப் பாயும். எதையும் எழுத முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை கம்பீரமாக எழுந்து நிற்கும்.

தோன்றுவ தெல்லாம் பாடலாகவே தோன்றும். ஆங்கிலத்தில் கூட கவிதைகள் தோன்றும்.

'உடோபியா'வைப் போல் ''தோமான்'' என்றொரு நாட்டை சிருஷ்டிக்கத் திட்டமிட்டிருந்தேன்.

அப்பொழுது அதை எழுதியிருந்தால் உலக மொழிகள் முழுவதிலும் வெளி வந்திருக்கும்.

எழுதிக் கொண்டே இருக்கும்போது நெஞ்சை உலுக்கிக் கண் கலங்க வைக்கும் செய்திகள் வரும். எழுத்தும் அத்துடன் நின்றுவிடும்.

என் ஒருவனுக்குத்தான் வாழ்க்கையில் எல்லாமே மோசமாக வாய்த்தது.

என் வாழ்க்கை நீண்ட காலச் சித்திரவதை.

என்னென்ன எப்படி, எப்படி என்பதை இப்போதுகூட நான் முழுமையாக உணரவில்லை. இப்போதுதான் நான் நினைக்கிறேன் ஒவ்வொரு பெரியவர்களும் தங்களின் சுய சரித்திரத்தில் எவ்வளவோ விஷயங்களை மறைத்திருப்பார்கள் என்று.

எல்லோரும் என்னை வஞ்சித்தது போலவே நான் யாரையாவது வஞ்சித்தேனா? இல்லை.

ஆனால் பயத்தின் காரணமாக என்னிடம் அன்பு காட்டிய சில உள்ளங்களை ஒதுக்கிவேன். துரதிர்ஷ்டம் இதுதான்.

நாயையும் நரியையும் நேசித்த நான், 1960ல் ஒரு ஜீவனைப் புறக்கணித்தேன். இன்று பெரிய சொத்துக்களுக்கு அதிபதியாக விளங்கும் அந்த ஜீவன் இன்னும்கூட என்னிடம் அன்பு காட்டுகிறது. ஆனால் நான் அதற்குத் தகுதியற்றவனாகிவிடுகிறேன்.

இப்போதும் பாருங்கள் ஊமையின் பரிபாஷையிலேயே பேசுகிறேன். இதையாவது என்றால் விவரிக்க முடிகிறதா? விவரிப்பேன். ஆனால் நான் சொல்லும் உண்மை மற்றவர்கள் வாழ்க்கையைப் பாதிக்கக் கூடும்.

எப்போது அனைத்தையும் துறந்து ஒரு ஆசிரமத்தில் நான் குடிபுக முடிகிறதோ அப்போதுதான் முழு உண்மைகளையும் சொல்ல முடியும் போலிருக்கிறது.

இந்த 'மனவாசம்' 1961ல் ஏப்ரல் 10ந் தேதியிலிருந்து ஆரம்பமாகிறது.

இதில் கடந்த காலத்தைத் திரும்பிப் பார்க்க வேண்டிய நேரம் வரும்போதெல்லாம் வனவாசத்தில் விட்டுப் போன விஷயங்களைச் சொல்லிவிடுவேன்.

நான் பட்ட அனுபவங்களைச் சபை நடுவில் வைப்பது ஒன்றுதான் எனக்கு ஏற்படும் ஆறுதல். நான் யார் யாருக்கு உதவி செய்தேனோ அவர்களை மறந்து விட்டேன்.

யார் யார் என் வாழ்க்கையைச் சீரழித்தார்களோ அவர்களே என் நினைவில் நின்று கொண்டிருக்கிறார்கள்.

ஓய்வாக உட்காரும்போதெல்லாம் அவர்களே என் நினைவுக்கு வருகிறார்கள்.

என்னைப் பிறரும் கெடுத்து, நானும் கெடுத்துக் கொண்ட பிறகு, மிச்சமிருக்கும் கண்ணதாசனையே இப்போது சந்திக்கிறீர்கள்.

இந்த மிச்சமே இவ்வளவு பிரகாசமாக இருக்குமானால் எல்லாம் சரியாக இருந்திருந்தால் எப்படி இருந்திருக்கும்?

சிலர் சொல்லக்கூடும். இவ்வளவு கஷ்டப் பட்டதால்தான் இவ்வளவு எழுதுகிறீர்கள் என்று. என் வரையில் அது பொய்.

இளமைப் பருவத்திலேயே எடுத்த எடுப்பில் எனக்குச் சரியான வாழ்க்கை அமைந்திருக்குமேயானால் நானும் ஒரு கம்ப காவியம் பாடியிருப்பேன்.

வாழ்க்கைத் தாகம் எழுத்துக்கு ஆதாரமல்ல.

ஒன்று சொல்லுங்கள், அவ்வப்போது எனக்குக் கைகொடுத்து வந்த உத்தம நண்பர்களால் என் எழுத்துக்கள் வளம் பெற்றிருக்கும் என்று சொல்லுங்கள், ஒப்புக் கொள்கிறேன்.

ஆம்; அப்படியும் சில பேர் இருந்தார்கள்.

நல்லவர்கள், கெட்டவர்கள் இருபாலரையும் மறந்துவிடாமல் என் வாழ்க்கையின் இரண்டாம்பாகத்தை எவ்வளவு தூரம் சுவைபடச் சொல்வேனோ எனக்குத் தெரியாது.

இந்த முன்னுரையை நான் திருப்பதியில் இருந்துகொண்டு எழுதுகிறேன்.

ஸ்ரீ வெங்கடேசப் பிரபு என்னோடு எவ்வளவு தூரம் ஒத்துழைக்கப் போகிறாரோ அவ்வளவு தூரம் இது சுவையாக இருக்கும்.

எழுத்தாளனின் தமிழ் நடை வருஷங்கள் ஆக ஆக மாறி வரும்.

என்னுடைய நடையிலும் சிறிது மாற்றத்தை நான் காணுகிறேன்.

மாற்றம் இருக்கிறதே தவிர தளர்ச்சி இல்லை.

எழுத்திலே தளர்ச்சி வந்து விட்டதுபோல் தோன்றினால் மரணத்தையே நேசிப்பேன்.

இந்த மனவாசத்தை முன்பு இரண்டு தினசரிப் பத்திரிகைகளில் துவக்கினேன். நன்கு திட்டமிட்டுக் கொள்ளாததால் அவை வளரவில்லை.

கடந்த காலச் சம்பவங்களைக் குறித்துக் கொண்டு கல்கி ஆசிரியரின் வேண்டுகோளின்படி இதை நான் துவக்குகிறேன். இது முடியும்வரை என் ஆவியையும் ஆரோக்கியத்தையும் காப்பாற்றும் பொறுப்பு கண்ணனுடையது.

1961 முதல் 1976 வரை மனவாசம். 76க்குப் பிறகு ''அஞ்சாத வாசம்.'' ''நான்'' என்பதை ''அவன்'' என்று ஆக்கிக்கொண்டு மனவாசத்தைத் தொடங்குகிறேன்.

முகாம்: திருப்பதி
தேதி: 30-10-80

அன்பன்
கண்ணதாசன்



திருப்பூர் K. சுப்பிரமணியம் நூல் & ஜவுளி வியாபார உரிமையாளரான ஸ்ரீ K. சுப்பிரமணியம் அவர்களின் குமாரர் சிரஞ்சீவி S. குமாரவேலுக்கும் திருப்பூர் புகையிலை வியாபாரம் ஸ்ரீ M. பழனிச்சாமி முதலியார் அவர்களின் குமாரத்தி சௌபாக்கியவதி M. P. ராஜேஸ்வரிக்கும் திருப்பூர் வெங்கடேஸ்வரா கல்யாண மண்டபத்தில் 14-9-80 அன்று மிகச் சிறப்பாக நடந்த திருமணத்திற்கு வந்திருந்த பந்துக்களுக்கும் நண்பர்களுக்கும் வாழ்த்துத் தந்தி அனுப்பியவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வாழ்க மணமக்கள்

கல்கி

சந்தா விவரம்

★

	ஓராண்டு	ஆறுமாதம்
இந்தியா	ரூ. 46	ரூ. 23
இலங்கை (இந்திய நாணயப்படி)	ரூ. 64	ரூ. 32
இதர வெளிநாடுகள்	ரூ. 100	ரூ: 50

மானேஜர்

கல்கி, சென்னை - 600 032

அத்தியாயம் 67

பூர்ணகட்

பூர்ணகட் *துறைமுகம் பெரும் போர்களுக்கான வசதிகளைக் கொண்ட துறைமுகமல்லவென்றாலும், அரபிக் கடலின் அழகிய துறைமுகங்களில் அதுவும் ஒன்று என்பதை அனைவரும் ஒப்புக் கொண்டார்கள். 1538 வது ஆண்டில் போர்ச்சுக்கீசிய கடலோடியாயிருந்த டோமா டி காஸ்ட்ரோ என்பவர் அந்தத் துறைமுகத்தைப் பெரிதும் பாராட்டினார். மச்கண்டி (மத்ஸ்ய கந்தி) நதியை அவர் வெற்றிலை ஆறு என்று அழைத்தார், மத்ஸ்ய கந்தியின் கரையோரங்களில் வெற்றிலைக் கொடிகள் ஏராளமாகப் படர்ந்ததன் காரணமாக. அந்த வெற்றிலை ஆற்றின் முகத்துவாரத்தில் மலை மீதிருந்த சிறு கோட்டையிலிருந்து வெளிப்புறக் கிராமங்களுக்குச் செல்லும் பாதை பீரங்கிக் குண்டு வீச்சுத் தூரத்தில் இருந்தது என்றும் குறிப்பிடுகிறார்.

மத்ஸ்யகந்தி ஆற்றின் முகத்வாரத்தில் வெற்றிலை அதிகமாகப் படராத இடத்தில் ஸஹ்யாத்ரி மலைச் சரிவில் கட்டப்பட்டிருந்த பூர்ணகட் சிறு கோட்டை. கோட்டையிருந்த இடம் 22 ஏக்கர் விஸ்தீரணமென்றாலும் கோட்டை மிகச் சிறியதுதான். அதிகம் பேர் தங்க வசதி இல்லாதது. ஆனால் கோட்டையில் இருந்த 'கட்காரிகள்' (கோட்டை நிர்வாகிகள்) அந்த இருபத்திரண்டு ஏக்கர் நிலத்தைப் பாழாகச் செய்யாமல் விவசாயத்துக்கு உபயோகப்படுத்தி வந்ததாலும், அவர்கள் கோட்டை நிர்வாகத்துக்கு மகாராஷ்டிர அரசிடமிருந்து பணம் ஏதும் வாங்காததாலும், பேஷ்வா கோட்டை விவசாய நிலங்களுக்கு வரி ஏதும் போடாததால், கட்காரிகள் நல்ல வெற்றிலை வியாபாரம் நடத்திக் கொழுத்த பணக்காரர்களாயிருந்தார்கள். தங்கள் பணத்தைக் கொண்டே கோட்டையின் பீரங்கிகளையும் இதர ஆயுத வசதிகளையும் பெருக்கியிருந்ததால் அந்தக் கோட்டையை நெருங்க முடியாத நிலையிருந்து வந்தது.

இத்தகைய கோட்டையின் சமீபத்தை இரண்டு நாட்கள் கழித்து மூன்றாவது நாள்

---

* Maharashtra State Gazetteer-Ratnagiri Dt., Page 782 - 783



காலை காஸண்ட்ரா அடைந்து நங்கூரம் பாய்ச்சியபோது கோட்டையின் பீரங்கிகள் அதை நோக்கித் திருப்பப்பட்டன. அணுகுவது அபாயம் என்பதைக் குறிக்கச் சிவப்புக் கொடி ஒன்றும் கோட்டையின் மீது உயர்த்தப்பட்டது. இந்த நிலையைக் கண்ட டெய்லர் பெரும் சீற்றம் கொண்டானானாலும் அவன் உடனடியாக எந்த நடவடிக்கைகளிலும் இறங்காமல் பின்னால் வந்து கொண்டிருந்த கடல் ராணி என்ன செய்யும் என்பதைப் பார்த்துத் தளத்தின் மீது நின்றான்.

வெகு சீக்கிரம் காஸண்ட்ராவை அடைந்துவிட்ட கடல் ராணியும் நங்கூரம் பாய்ச்சியது காஸண்ட்ராவிலிருந்து சிறிது தூரத்தில். பிறகு அதன் மீது ஒரு மஞ்சள் கொடி பறந்தது. சற்று நேரத்துக்கெல்லாம் ஒரு படகு கடல் ராணியிலிருந்து இறக்கப்பட்டு இங்கலண்டும் அனந்தும் ஸில்வரும் ஏறிக்கொண்டு காஸண்ட்ராவுக்கு வந்து சேர்ந்தார்கள். காஸண்ட்ராவின் தளத்தில் டெய்லரைச் சந்தித்த அனந்த் ''காப்டன் டெய்லர்! நான் உனது நண்பன் என்பதைக் குறிப்பிடதேவ்கட்டில் கொடுத்த வாக்குப்படி உனது நண்பர்கள் இருவரையும் அழைத்து வந்துவிட்டேன்'' என்று இங்கலண்டையும் ஸில்வரையும் கட்டிக்காட்டினான்.

டெய்லரின் கொடிய விழிகள் அனந்தின் முகத்தை ஆராய்ந்தன. முகத்தில் மகிழ்ச்சிக் குறி மட்டுமே தெரிந்ததால் டெய்லரும் தனது இதழ்களில் புன்முறுவலைப் படர விட்டுக்கொண்டு ''குட்! தட் ஈஸ் வெரிகுட் (நல்லது, மிக நல்லது)''என்று கூறினான். ஆனால் அவன் குரலில் மகிழ்ச்சி இல்லை ஆழ்ந்த சந்தேகம் ஒலித்தது.

இந்திரஜித். டெய்லரை உற்று நோக்கினான், "டெய்லர்! யூ வர் ஆல்வேஸ் எ ஸஸ்பெக்டிங் கஸ், அண்ட் யூ நௌ ஆர் (டெய்லர்! நீ எப்பொழுதும் சந்தேகப் பிராணி. இப்பொழுதும் அப்படித்தான்)'' என்று கூறிய அனந்த் ''யூ பூல் ஐ ஹாவ் ப்ராட் த டு மென் ஹூ கான் கமாண்ட் திஸ் ஷிப் வித் யூ. ஐ ஹாவ் கம் அலோன். காண்ட் யூ அப்ரிஷியேட் திஸ் (அட முட்டாள்! உனக்குத் துணையாக இந்தக் கப்பலை நடத்தவல்ல இரண்டு பேரை அழைத்து வந்திருக்கிறேன். தவிர நான் தனியாக வந்திருக்கிறேன். இதை உணர உன்னால் முடியவில்லையா)'' என்றும் வினவினான்.

டெய்லரின் சந்தேகம் அப்பொழுதும் தீராததால் இங்கலண்டையும் ஸில்வரையும் நோக்கினான் ஒரு விநாடி. ''நாம் அனந்தைச் சிறை செய்து இங்கேயே வைத்துக் கொண்டால் என்ன ஆகும்?'' என்று வினவினான். அதைத் தொடர்ந்து பெரிதாக நகைத்தான்.

ஸில்வரும் நகைத்தான். ''டெய்லர் உன்னை நான் சிறந்த காப்டனாகவும் போர்வீரனாகவும் அறிவேன். ஆனால் மூளை உள்ளவன் என்று எப்போதும் கருதியதில்லை'' என்று கூறினான் நகைப்பின் ஊடே. அது மட்டுமல்ல. ''நீ அனந்தைத் தொட்ட மாத்திரத்தில் காஸண்ட்ரா பற்றி எரிந்து கொண்டே கடலில் அமிழ்ந்து விடும். கடல் ராணியுடன் வந்த ஐந்து கப்பல்களும் காஸண்ட்ராவைச் சுற்றி நிற்கின்றன. அதோ அந்த சிறு கோட்டைக்கு அனந்த் என்ன செய்தி சொல்லியிருக்கிறானோ தெரியாது. அனந்தை அல்பமாக நினைக்காதே. கடல் ராணியின் மீது மஞ்சள் கொடி பறக்கிறது பார்'' என்றும் கூறினான்.


ஸில்வர் இப்படிப் பேசிக் கொண்டிருந்த சமயத்தில் பூர்ணகட் கோட்டையிலிருந்து பெரியதாக வெடித்த பீரங்கியின் குண்டு காஸண்ட்ராவுக்கு வெகு அருகில் வீழ்ந்தது. அது வெறும் எச்சரிக்கைக் குண்டுதான் என்பதும் சிறிது தாமதித்தால் கூட வேறு குண்டுகள் காஸண்ட்ரா மீது விழும் என்பதையும் டெய்லர் உணர்ந்திருந்தாலும், அதைப்பற்றி லட்சியம் செய்யவில்லை அவன். தவிர காஸண்ட்ராவின் இணையற்ற பீரங்கி பலத்தால் அந்தச் சிறு கோட்டையைத் தன்னால் அழித்துவிட முடியும் என்பதையும் அவன் அறிந்திருந்தான்.

அதனால் ஸில்வர் பேச்சுக்கும் எச்சரிக்கைக்கும் அவன் செவி சாய்க்கவில்லை. ''டெய்லர்' கோழையல்ல. போரைக் கண்டு அஞ்சுகபவனல்ல'' என்றான் ஸில்வரை நோக்கி உறுதியான குரலில்.

ஸில்வரின் முகத்தில் வெறுப்பு படர்ந்தது. வீரம் வேறு முட்டாள்தனம் வேறு'' என்றான் டெய்லரை நோக்கி.

டெய்லர் அப்பொழுதும் அசைந்தானில்லை. ''கடல் ராணியுடன் வந்திருக்கும் ஐந்து கப்பல்களைப் பற்றி நான் அஞ்சவில்லை. ஒரு முறை காஸண்ட்ரா சுழன்றால் அவை பஸ்மீகரமாகிவிடும். கடல் ராணி? ஹா! நான் அஞ்சவில்லை. அதோ மேலே இருக்கும் அந்தக் கோட்டையையும் நொறுக்கி விடுவேன்.'' என்று கூறிக் கையை முஷ்டியாகப் பிடித்து நொறுக்குவதற்கு அடையாளமாகக் காட்டினான்.

இத்தனைக்கும் அனந்த் பேசாமல் இடித்தபுளி போல் நின்



றான். ''நீ ஏன் பேசவில்லை?'' என்று டெய்லர் கேட்டான்.

அனந்த் நகைத்தான் பெரிதாக. ''பேசுவதற்கு ஏதுமில்லை. வீண் வீராப்பு எனக்குப் பிடிப்பதும் இல்லை'' என்ற அனந்தை நோக்கி மிகுந்த கோபத்துடன் டெய்லர் ஓர் அடி எடுத்து வைத்தான். அனந்த் நன்றாகத் தளத்தின் பலகையில் சாய்ந்து கொண்டான். அவன் கண்கள் அரைவாசி மூடியிருந்தன. கைகள் செயலற்றுத் தொங்கிக் கொண்டிருந்தன. டெய்லர் அதிகமாக என்னை நெருங்காதே'' என்ற சொற்களை அனந்தின் வாய் முணு முணுத்தது.

டெய்லரின் கோபம் உச்ச நிலையை அடையவே அவன் பெல்டிலிருந்து தனது கைத் துப்பாக்கியை மிகத் துரிதமாக எடுத்தான். அனந்தின் கைத்துப்பாக்கி அவன் இடையிலிருந்தே இயங்கியது மின்னல் வேகத்தில். டெய்லரின் கையில் ரத்தம் சொட்டியது. அவன் துப்பாக்கி எட்ட வெகு தூரத்தில் சென்று விழுந்தது. அதே சமயத்தில் அனந்தின் குரல் கடுமையாக ஒலித்தது. ''எனது இன்னொரு கைத்துப்பாக்கி இடைக்குக் கீழ் உன் உயிர்நிலையை நோக்கிக் கொண்டிருக்கிறது. நான் இப்போது உன்னைக் கொல்லவில்லை. காரணம் உன்னிடத்தில் உள்ள அன்பல்ல. அடுத்து வரும் போரில் மாக்ரேயைச் சமாளிக்க, காஸண்ட்ராவைத் திறமையுடன் நடத்த ஒரு காப்டன் வேண்டியிருக்கிறது'' என்றான்.

டெய்லர் திக்பிரமை பிடித்து நின்றான். கையிலிருந்த ரத்தத்தைக்கூட அவன் லட்சியம் செய்யவில்லை. ''அனந்த்! யூ ஷாட் வெரி பாஸ்ட்'' என்று பாராட்டினான்.

அந்தப் பாராட்டுதலைத் தலையசைப்பினால் ஏற்றுக்கொண்டான் அனந்த். ''வில்வர்! காஸண்ட்ரா மீது வெள்ளைக் கொடியை ஏற்றிவிடு. கோட்டையில் இருப்பவர்கள் நாம் நண்பர்கள் என்பதைப் புரிந்துகொள்ளட்டும். இங்கலண்ட் காஸண்ட்ராவைச் சற்று வடக்கில் நகர்த்து. டெய்லர்! கீப் காஸண்ட்ரா ரெடிபார் ஆக்ஷன்'' என்று மடமடவென்று உத்தரவுகள் பிறப்பித்தான். கடைசியாக டெய்லரைப் பார்த்துச் சொன்னான்: ''டெய்லர்! எதிரி வருகிறான். நண்பர்களுக்குள் விரோதத்தைக் காட்ட இது சமயமல்ல. இந்தப் போர் முடியட்டும். உன்னுடன் போரிடுகிறேன்.''

டெய்லர் ஏதும் பேசவில்லை. இங்கலண்டும் வில்வரும் அனந்தின் கட்டளைகளை நிறைவேற்றினார்கள். வெள்ளைக் கொடி காஸண்ட்ரா மீது பறந்தது. காஸண்ட்ராவும் நங்கூரமெடுத்து மத்ஸ்யகந்தியின் முகத்துவாரத்திலிருந்து சிறிது வடக்கே சென்று நங்கூரம் பாய்ச்சியது.

அனந்த் திருப்திக்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான். பிறகு டெய்லரை நோக்கி ''டெய்லர்! ஐ எக்ஸ்பெக்ட் மாக்ரே எனி டைம் நௌ'' என்று சொன்னான்.

டெய்லர் கையிலிருந்து கொட்டிய ரத்தத்தை அலட்சியமாகத் தனது நிஜாரில் துடைத்துவிட்டுச் சொன்னான்: ''மாக்ரேயா! அந்தக் கோழையா? அவன் என்னைக் கண்டதும் ஒரு முறை ஓடினான். இம் முறையும் ஓட முயல்வான். ஆனால் நான் அனுமதிக்கப் போவதில்லை!'' தொடர்ந்து, ''மாக்ரே! மாக்ரே!'' என்று அவன் பெயரைச் சொல்லிப் பெரிதாக நகைத்தான்.

அனந்த் அவனை நோக்கினான் தீவிர சிந்தனையுடன். ''எதிரியைக் குறைவாக மதிப்பிடாதே'' என்றும் சொன்னான். பிறகு சிவப்பு, மஞ்சள், வெளுப்பு மூன்று கொடிகளையும் நோக்கினான். ''அபாயம், கபம், சமாதானம் மூன்றுஅம்சங்களை மூன்று கொடிகளும் குறிக்கின்றன. இவற்றில் வெற்றி எதற்கு என்பதை இப்போது சொல்ல முடியாது'' என்று கூறிவிட்டுத் தனக்குப் பின்னால் தொங்கிய நூலேணியில் இறங்கித் தனது படகை அடைந்தான். அங்கிருந்த படகில் அவன் நேராகக் கடல் ராணிக்குச் செல்லவில்லை. கோட்டையை நோக்கிச் சென்றான். கோட்டையை அடைந்ததும் அங்கிருந்த கட்காரிகள் அவனைக் குதூகலத்துடன் வரவேற்றனர். அனந்த் ''துலாஜி எங்கே?'' என்று வினவினான்.

துலாஜி உள்ளேயிருந்து வெளி வந்து ''அனந்த்! இட்டப்படி வந்து விட்டேன்'' என்றான்.

''நமது நண்பர்கள்?'' என்று கேட்டான் அனந்த்.

''இட்டப்படி போய்விட்டார்கள்.''

''நீ தயாரா?''

''இந்தக் கோட்டையே தயார்!''

''மாக்ரேயை எப்போது எதிர்பார்க்கிறாய்?''

''நாளை மாலையில்.''

''அப்படியானால் இரவில் போரிட வேண்டும்?''

''ஆம்.''

பிறகு இருவரும் பேசவில்லை. உணவருந்தச் சென்றார்கள். துலாஜியின் கணக்கு சரியாயிருந்தது. மறுநாள் மாலை மாக்ரே பூரணகட்டுக்குச் சிறிது தூரத்தில் தோன்றினான்.

அடுத்து நடந்தது சரித்திரப் பிரசித்தி பெற்ற போர். விளைவு யாரும் எதிர்பாராதது. சிவப்பு, மஞ்சள், வெளுப்பு மூன்றுக்கும் அதில் இடமிருந்தது. (தொடரும்)

கணவன்: ''தீபாவளிக்கு அல்வா பண்ணித் தாணும்னு கேட்டியே என்ன அல்வா வேணும்?

மனைவி: ''என்னத்தைப் பண்ணுவீங்களோ, வாயிலே போட்டா பல் செனெதிகள் வாயை சீல் பண்ணற மாதிரி இருக்கணும்!

- ஸ்ரீ. நடராஜன்



சாந்தாவின் சபதம்

வானதி திருநாவுக்கரசு

சபாபதி முதலியாரின் செல்லப் பெண் சாந்தா. செல்லப் பெண் மட்டுமல்ல. அவருக்குச் செல்வப் பெண்ணும் கூட. ஆமாம். சபாபதி முதலியார் செல்வச் சீமான். தவமிருந்து பிறந்தவள் சாந்தா. அதுவும் ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு என்றால் அவரது ஆசைக்கு அளவேது!

சபாபதி முதலியாரின் அன்பும் ஆசையும் குழந்தை சாந்தாவைத் தவறான முறையில் உருவாக்கியது. எதிலும் பிடிவாதம். அவள் விருப்பத்துக்கு மாறாக எது நடந்தாலும் அழுகைதான். அடமும் ஆர்ப்பாட்டமும்தான் அவள் ஆயுதங்கள். முதலியாருக்கோ சாந்தாவின் முகம் கொஞ்சம் வாடினாலும் பொறுக்காது. அவள் எது கேட்டாலும் அட்டியில்லாது வாங்கிக் கொடுத்து விடுவார்.


இப்போது அவளுக்கு வயது பத்து. கான்வென்டில் சேர்த்திருக்கிறார், அவளை சபாபதி முதலியார். ஆனாலும் கூட சாந்தாவுக்குத் தங்க நகைகள் என்றால் கொள்ளை ஆசைதான். விதம் விதமான நகைகளை அணிந்துகொண்டு அழகு பார்ப்பாள். ஆனந்தத்தில் குதிப்பாள். இரட்டை வடம் சங்கிலி, முத்து மாலை, புது மோஸ்தர் செயின், தங்க வளையல்கள், காதுக்கு ஜிமிக்கி, கல் அட்டிகை என்று அவளுக்கு நிறையவே செய்து போட்டிருந்தார் . செல்வச் சீமான் சபாப்பதி முதலியார்.

எல்லா நகைகளையும் அள்ளி அணிந்து கொண்டு நாலு பேர் பார்த்துப் பிரமிக்கும்படி பள்ளிக்கும் விளையாடவும் போக ஆசைப்படுவாள் சாந்தா.

'பெண் கழுத்துச் சங்கிலிகளை இழுத்து அறுத்துக் கொண்டு ஓடிவிட்டார்கள்' என்ற செய்திகள் அடிக்கடி பேப்பரில் பார்த்தும் பலர் சொல்லக் கேட்டும் அன்னை கோமதியின் கவலை அதிகமாகியது.

சாந்தாவின் பள்ளியில் சுதந்திர தின விழாவுக்கு நாடகம் போடுவதாக இருந்தார்கள். சாந்தாவுக்கு அதில் சுதந்திர தேவியின் வேஷம். அவள் அடிக்கடி தங்க நகைகளையும் பட்டாடைகளையும் அணிந்து வருவதைக் கண்ட டீச்சரம்மா பணக்காரப் பெண்ணான , அவளுக்கு அலங்காரத்தோடு காட்சியளிக்கவேண்டிய அந்த வேஷத்தைக் கொடுத்து விட்டாள்.

காதில் குடை ஜிமிக்கி, கழுத்தில் இரட்டை வடம் செயின், கைகளில் கைக்கு ஆறு வளையல்கள், கெட்டி ஜரிகை போட்ட பட்டுப் பாவாடை. இத்தனை அலங்காரங்களுடன் அன்று பள்ளிக்குச் சென்றாள் சாந்தா.. அன்று மதியம்தான் நாடக ஒத்திகை. சாப்



பாட்டு வேளைக்குப் பிறகு பகல் வகுப்புகள் கிடையாது.

சாந்தா தன் அலங்காரத்தையும், அணிகளையும் ஸ்கூல் பக்கத்தில் உள்ள வேப்ப மரத்தடியில் தன் தோழிகளுக்குக் காட்டிப் பெருமையடித்துக் கொண்டிருந்தாள்.

இரண்டு ஜோடிக் கண்கள் சாந்தாவையே கவனித்துக் கொண்டிருந்தன, வேப்ப மரத்துக்குப் பக்கத்திலிருந்த வேலிக்குப் பின்னலிருந்தபடி. சாந்தாவையல்ல! அவள் அணிந்திருந்த பளபளப்பான நகைகளைத்தான்!

''பாத்தாப் பணக்கார வீட்டுப் பொண்ணு போலத் தெரியுது. கூட்டிட்டுப் போக யாராச்சும் ஆளுகளோ அல்லது வண்டி வாகனமோ வந்திருச்சின்னு?'' — என்றான் ஒருவன்.

''அதெல்லாமில்லே. நான் கொஞ்ச நாளாக்கவனிச்சிக்கிட்டுத்தான் வரேன். தேரடி வீதியிலே இருக்கே ஒரு பெரிய பங்களா, அந்த வீட்டுப் பொண்ணுதான் இது. தினம் தனியாத்தான் வீட்டுக்குப் போகும். அதுவும் அந்தக் கொய்யாத் தோப்பிலே நுழைஞ்சுதான் குறுக்காலே போகும் — சுருக்கு வழின்னு. நமக்கு வேலே ரொம்பச் சுலபம்'' என்றான் இன்னொருவன்.

அன்று பள்ளி நாடக ஒத்திகை முடிய ரொம்ப நேரமாகி விட்டது. கொய்யாத் தோப்புக்குள் சாந்தா நுழையும்போது இருட்டவே தொடங்கி விட்டது. அவள் வருகைக்காகவே தயாராகக் காத்திருந்த இரு திருடர்களும் கழுகு கோழிக் குஞ்சைக் 'கப்' என்று கவ்வுவது போல் அப்படியே 'லபக்' என்று சாந்தாவைப் பிடித்துக் கொண்டார்கள். ஒரு திருடனின் முரட்டுக் கை அவள் வாயை அழுத்திக் கொண்டிருந்தது. ஒருவன் அவள் கழுத்து, காது, கைகளிலிருந்த நகைகளை கபகபவென்று கழற்றினன்.

பிறகு விடுபட்ட சாந்தா தடுமாறியபடி ஓடினள். வீட்டை நெருங்கியதும்தான் அவளால் கோவென்றுகதறிஅழமுடிந்தது.

அழுதபடி ஓடிவரும் சாந்தாவைக் கண்டதும் பதறிப் போனாள் அன்னை.

அதே சமயத்தில் சபாபதி முதலியாரும் ஆபீசிலிருந்து உள்ளே நுழைந்தார். ''ஏம்மா என்ன ஆச்சு? ஏன் இப்படித் தேம்பித் தேம்பி அழறே?'' என்று பதறினர். கோமதியம்மாள் அவருக்கு நிலைமையை விளக்கினாள்.

''வேண்டாம்னு சொன்னா உங்க அருமைப் பெண் கேட்டால் தானே? இப்போ நகைகளைப் பறி கொடுத்துட்டு வந்து நிக்குது.'' என்று அலட்சியமாக முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

சபாபதி முதலியார் அடிபட்ட புலியானர்.

''ஏய், ஏச்சுக்காட்ட இதுவா சமயம்? அவதான் குழந்தை அறியாமக் கேட்டா உன்னை யார் அத்தனை நகைகளையும் ஸ்கூலுக்குப் போட்டு அனுப்பச் சொன்னது? கொஞ்சமாச்சும் ஒரு ''இது''இருந்தா நீ இப்பிடிச் செய்வியா?''

கராத்தே பயிற்சி (13)

பயிற்சி: டோஷி பொன்னையா

சித்திரம்: ... படம்: உத்ரா தயாரிப்பு: குன்றுமனை



UPPER BLOCK

உடலின் முகப்புப் பகுதிக்கு வரும் எவ்வித குத்துக்களையும் இந்த UPPER BLOCK முறையில் தடுத்து விடலாம். இதைச் சரிவர செய்ய இல்லையென்றல் வேகமாக வரும் குத்துக்களைத் தடுக்க இயலாது. ஆகவே பயிற்சியாளர்கள் இம்முறையை மிகுந்த கவனத்துடன் பயிலவும். முன்புறப் பார்வையிலிருந்து கூர்மையாக இருந்தாலொழிய இந்தத் தடுப்பு முறை வெற்றிகரமாக அமையாது.

தவறான முறைகள்



தடுக்கும் போது கைகள் தலைக்கு மேலாகச் செல்லக்கூடாது. நெற்றிக்கு நேர் முன்புறமாகவும், அந்த சமயத்தில் நமது பார்வையை மறைக்காமலும் இம்முறைத் தடுத்தலை நிகழ்த்தவும்.

''அப்படி ஒரு 'இது' இருந்ததனுல் தான் உங்களோட பொருளை என்னுல் காப்பாத்த முடிஞ்சுது! அவனுக்குப் போட்டு அனுப்பிச்ச நகைகள் அத்தனை யும் போலி. டுப்ளிகேட்! கவரிங் நகைகள்!''

சபாபதி முதலியார் தம் மனைவியின் புத்திசாலித்தனத்தை நினைத்து நினைத் துப் பெருமிதப்பட்டார்.

''இனிமே எனக்கு நகையே வேண் டாம்மா! நீ சொல்றபடி கேட்கிறேன். பிடிவாதத்தை விட்டுடுவேன். இனிமே எதிலும் அதிக ஆசைப்பட மாட்டேன். இது நிஜம்'' என்று சத்தியச் சபத மிட்டாள் சாந்தா.

''இந்தாப் பாரும்மா! பெண் குழந் தைங்க நகையே வேண்டாம்னு சொல் லக் கூடாது. ஒண்ணு ரெண்டு போட் டுக்கோ. எந்த ஆசைக்கும் ஓர் அளவு வேண்டும்.'' என்ருள் கோமதி சபாபதி முதலியாரைப் பார்த்துச் சிரித்தபடியே.

''என்ன சிரிக்கிறே!''

''ஒண்ணுமில்லே. அந்தத் திருடங்க அத்தனை நகைகளையும் அசல் தங் கம்னு நினைச்சு அடகுக் கடைக்குக் கொண்டு போகப் போருனுங்க; அங்கே அத்தனையும் போலின்னு தெரிஞ்சா...? உடனே போலீஸுக்கு அழைப்புப் போகும். அதை நினைச்சதும் சிரிப்பு வந்தது.''

''கம்பி எண்ணட்டும், திருட்டுப் பயல்கள். நம்ம பொண்ணு திருந் தினளே அதைப் பாரு'' என்ருர் சபா பதி முதலியார்.

சாதிக் அலி

தமிழகத்தின் புதிய ஆளுனர் திரு சாதிக் அலி யைப் பற்றிய சில சுவையான தகவல்களைத் தரு கிருர் 1968ம் ஆண்டிலிருந்து இந்த வருடம்ஏப்ரல் மாதம் வரை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த திரு காஜா மொஹிதீன்.

''**நா**ன் சாதிக் அலியுடன் மூன்று வரு டங்கள் பழகியிருக்கிறேன். பரந்த நோக் குடையவர். பண்பாளர். எதையுமே நாட் டின் நலம் கருதிச் செய்ய வேண்டுமென்று கூறுவார். பதவியைப் பற்றிக் கவலைப் படாதவர். அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி கூடி, இந்திரா காந்தியும் ஒப்புக் கொண்டு ஜனதிபதி பதவிக்கு சஞ்சீவி ரெட்டி நிற்பதென்று முடிவு. அந்த முடிவை எல் லோரும் ஏற்றுக் கொண்டார்கள். அப் பொழுது வி.வி. கிரிஅதே ஜனதிபதி பதவிக்கு சுயேச்சையாகப்போட்டியிட்டார். காங்கிரஸ் கமிட்டியின் கூட்டத்தில் ஏகமனதாக சஞ்சீவி ரெட்டிக்கு வாக்களிப்பது என்று தீர்மானிக் கப்பட்ட பிறகு இந்திரா காந்தி வி.வி. கிரிக்கு எல்லோரும் வோட்டுப் போடுங்கள் என்று கூறிவிட்டார். இப்படி இந்திரா காந்தி கூறியது தவறு என்ருர் சாதிக் அலி. 'நீங்கள் ஏன் தவறு என்று கூறுகிறீர்கள்? எல்லோரை யும் போல நீங்களும் சரி என்று கூறினல் பதவி கிடைக்குமே' என்று பலர் சொன் ஞர்கள். 'யாருக்கய்யா வேணும் பதவி? சொன்னதை காப்பாத்தணும்' என்று தைரிய மாக அன்றே கூறியவர் சாதிக் அலிதான்.

''பாராளு மன்றத்தில் அதிகம் பேசாத சாதிக் அலி ஒரு நாள் பேச எழுந்தார். வெளியே போக ஆரம்பித்த பிரதமர் இந் திரா காந்தி சாதிக் அலி பேச எழுந்திருக் கிருர் என்று தெரிந்தவுடன் திரும்பவும் இருக் கையில் அமர்ந்தார்! அதிகம் பேசாதவராக இருந்தாலும் எடுத்துக்கொண்ட தலைப்பைப் பற்றி விஷய ஞானத்துடன் சுருக்கமாக, சிறப் பாகப் பேசுவார்.

''எங்களை யெல்லாம் பார்த்து சாதிக் அலி பெருமைப்படுவார். 'நீங்கள் எல்லோரும் ராஜாஜி பிறந்த தமிழ் நாட்டிலிருந்து அல் லவா வந்திருக்கிறீர்கள். எப்பேர்ப்பட்ட தலைவர் அவர்!' என்பார். அனுபவம் வாய்ந்த பழைய நாடாளு மன்ற உறுப் பினர்கள் புதிய உறுப்பினர்களுடன் அவ் வளவாகப் பேசிப் பழக மாட்டார்கள். ஆனல் இவர் அதற்கு நேர் மாருனவர். எல்லோருடனும் அன்பாகப் பழகுவார்.


''நாடாளு மன்றக் கமிட்டிகளில் உறுப் பினராக எல்லா எம். பிக்களும் விரும்பு வார்கள். இதற்காகப் பலர், நாடாளு மன்ற விவகாரங்கள் மந்திரியைப் பார்த்துவிட்டு வருவார்கள். தூது விடுவதும் உண்டு. அப் பொழுது நாடாளு மன்ற விவகாரங்கள் மந்திரியாக இருந்த ஓம் மேத்தா ஒரு முறை சாதிக் அலியைப் பார்த்து, 'உங்களை ஒரு கமிட்டியில் போடலா மென்றிருக்கிறேன்' என்ருர். 'கமிட்டிப் பதவி வேண்டாம்' என்று மறுத்து ஒதுங்கிவிட்டார் சாதிக் அலி.

''நாடாளு மன்றம் நடக்கும் நாட்களில் தவருமல் வந்து தம் கடமையைச் செய்தவர்.

''சைவ உணவென்ருல் இவருக்கு அதிகம் பிடிக்கும். மாமிசம் சாப்பிடுவார் என்ருலும் எண்ணெய் பதார்த்தங்களை நீக்கி விடுவார். பச்சைக் காய்கறிகளை ஆவலோடு உண்பார்.

''வல்லவர் மட்டுமல்ல: நல்லவரும்கூட.''

பேட்டி: **சலன்**



✕ திரு சாதிக் அலி



பாட்டுக்கொரு புலவன்

ம.பொ.சி

உடையாலும், உணவாலும் பேசிய மொழியாலும்—ஏன் சிந்தனையாலும் கூட, நம் நாட்டுப் படிப்பாளிகள் தங்களுக்கென ஒரு கலாசாரப் பாரம்பரியம் இருப்பதை மறந்து, ஐரோப்பிய மொழிக்கு — கலைக்கு -கலாச்சாரத்துக்கு அடிமைப்பட்டிருந்தனர். இந்த அவலச் சூழ்நிலையிலிருந்து இந்திய மக்களை — குறிப்பாக, தமிழ் நாட்டு மக்களை விடுவிக்க, பாரதியாரைத் தந்தது தெய்வத்தின் திருவருள். ஆம்; பாரதி ''காலம் தந்த கவிஞன்'' என்பதனாலேயே அவன் கடவுள் தந்த கவிஞனுமாகிறான்.

நாட்டில் தேச பக்தி என்னும் புதிய மார்க்கம் தோன்றியது பற்றி பாரதியார் கூறுகின்றார். கேளுங்கள்:

''நாட்டில் ஒரு புதிய ஆதங்கம் — கிளர்ச்சி —ஓர் தர்மம் — ஓர் மார்க்கம் தோன்றுமேயானால், மேன்மக்களின் நெஞ்சனைத்தும் இரவியை நோக்கித் திரும்பும் சூரிய காந்த மலர் போல் அவ்வாதர்சத்தை நோக்கித் திரும்புகின்றன.

''சென்ற சுபகிருது வருஷத்திலே பாரத நாட்டில் சர்வ சுபங்களுக்கும் மூலாதாரமாகிய ''தேச பக்தி'' என்ற நவீன மார்க்கம் : தோன்றியது. நல்லோர்களின் சித்தையெல்லாம் உடனே புளகிதமாயின. நல்லோருடைய குணங்களிலே குறையுடைவனாகிய யானும் தேவியினது கிருபையால் அப்புதிய கடவுளிடத்து அன்பு பூண்டேன். அவ்வன்பு காரணமாகச் சென்ற வருஷம் சில கவிதை மலர் புனைந்து மாதாவின் திருவடிக்குப் புனைந்தேன்.''

பாரதியின் கருத்துப்படி இந்தியாவில் தேச பக்தி என்னும் புதிய மார்க்கம் பிறந்தது சுபகிருது ஆண்டில்தான்! எல்லா சுபங்களுக்கும் ஆதாரமான சுபகிருது ஆண்டு என்கிறார் பாரதி. என்ன சுவையான வாசகம்! சுபகிருதுக்குச் சரியான ஆங்கில ஆண்டு 1906 ஆகும். அந்த ஆண்டில்தான் பாரதியின் கருத்துப்படி தேச பக்தி எனும் மதம் பிறந்தது. அந்த ஆண்டில்தான் நானும் பிறந்தேன் என்பதை இங்கு அடக்கத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பங்கிம் சந்திர சட்டர்ஜி படைத்த ''வந்தே மாதரம்'' கீதத்தை மொழிபெயர்க்கத் தொடங்குகிறான் பாரதி. வங்க மொழியில் உள்ள அந்த 'வந்தே மாதரம்' பாரதம் முழுவதையும் வருணிக்கும் தேசிய கீதமல்ல. பங்கிம் சந்திரர் காலத்திலிருந்த பெரிய வங்காளம் முழுவதையும் வருணிக்கும் மாநில கீதம்தான்.

அதிலே ஏழு கோடி மக்களின் தாய் என்று வங்க மாதா வருணிக்கப்படுவதால், அதனை ''முப்பது கோடி மக்களுடைய தாய்'' என்று திருத்திப் பாடினார். ஆம், பங்கிம் சந்திரர் கற்பித்த வங்க மாதாவை பாரத மாதாவாக மாற்றிவிட்டார் பாரதியார்!

இன்று நாட்டின் தேசிய கீதமாக உள்ள 'ஜனகணமன' பாடல் ரவீந்திரர் இயற்றியது. அதை அவர் இயற்றிய காலம் 1911ம் ஆண்டாகும். அந்த ஆண்டிலே டில்லி மாநகரில்பிரிட்டிஷ் மன்னரான ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்திக்கு முடிசூட்டு விழா நடந்தது. அந்த விழாவுக்குத் தாகூரும் போயிருந்தார். ஆம்; திலகர் ஆறாண்டு காலம் தண்டனை பெற்று பர்மாவில் உள்ள மாண்டலே சிறையிலிருந்தபோது — வங்கத் தலைவர் அரவிந்தர் புதுவையில் அடைக்கலம் புகுந்திருந்த போது, வ. உ. சிதம்பரனார் இரண்டாண்டு தண்டனை பெற்றுக் கண்ணனூர் சிறையிருந்த போது — மகா கவி பாரதியார் பாண்டிச் சேரியில் வனவாசம் செய்தபோது டில்லி மாநகரில் நம்மை அடிமை கொண்ட அரச பெருமானுக்கு முடிசூட்டு விழா நடைபெற்றது. அந்த விழாவிலே பிரிட்டிஷ் மன்னரை வாழ்த்துவதற்கெனப் பாடப்பட்டதுதான் ஜனகணமன பாடல்.. அந்தப் பாடலிலே வரும் 'ராசா' என்பது 'மாதா' என மாற்றிப் பாடப்பட்டது. இதற்கு அரசியல் நிர்ணய மன்றத்திலே எதிர்ப்பு ஏற்பட்டது என்பதை இங்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

வங்க மாதாவுக்கான வந்தே மாதரம் பாடலை பாரத மாதாவுக்கான பாடலாகத் திருத்தியதையும் ஐந்தாம் ஜார்ஜை வாழ்த்திய பாடலை அன்னை பாரத தேவிக்கான தேசியப் பாடலாக மாற்றியதையும் நினைவில் கொண்டு பார்த்தால் இந்தியாவிலேயே முதன் முதலில் தோன்றிய தேசியக் கவிஞன் பாரதிதான் என்று சொல்ல வேண்டியிருக்கிறது. இந்தியா முழுவதையும் வாழ்த்தியும் வணங்கியும் அவன் பாடியுள்ள பாடல்கள் இருபதுக்கு மேற்பட்டவை. இவ்வளவு தேசியப் பாடல்களைப் பாடியும் அவற்றில் ஒன்று கூட வேங்கடத்துக்கு வடக்கே விலை போகவில்லை. இது நமது தேசியத்தில் உள்ள குறைபாடாகும். பாரதி நூற்றாண்டில் இதற்குப் பரிகாரம் தேடியாக வேண்டும்.

(பாரதீய வித்யா பவன்—மயிலை இலக்கிய வட்டம் நடத்தும் சொற்பொழிவிலிருந்து)

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543) Editor: K. Rajendran



ஹை பவர் ஸர்ஃப் சலவை: ஒப்பற்ற வெள்ளைவெளேர் சல வை—
அது வெட்டவெள ச்சம்.

உங்கள் மகள் துணிகளை அழுக்காக்கிக் கொள்வதில் சூரப்புலியா ? அப்படியானும் உங்களுக்குத் தேவை அழுக்கை அகற்றிட ஒரு பலே சூரப்புலி: ஹை பவர் ஸர்ஃப்.

அதிக வலுவுடைய பொருள்கள் அடங்கியது ஹை பவர் ஸர்ஃப், அதிக சலவைச் சக்தி : தூசி, அழுக்கு, எதனையும் சுவடு தெரியாமல் அகற்றிடும். படு அழுக்கான துணிகளையும் கூடப் பளிச்சிட வைக்கும். வர்ணத் துணிகளுக்கும் உகந்தது ஸர்ஃப். தூய்மை ஒளி மிளிர வைக்கிறது.

குடும்பத்தில் உள்ள அனைவரின் துணிகளுக்கும் அதிக வெண்மை, அதிக ஒளி—அளிப்பது ஹை பவர் ஸர்ஃப். கேட்பானேன், வேறெந்த சலவைப் பவுடரையும் விட ஸர்ஃப் உபயோகிக்கும் தாய்மார்களே அதிகம்.



வேறெந்த சலவைப் பவுடரையும் விட ஸர்ஃப் உபயோகிக்கும் தாய்மார்களே அதிகம்.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

REGISTERED No. M. 4202
Registered as a Newspaper in Sri Lanka